# வீரசங்கிலி

## முத்தமிழ் விழா மலர்

JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION
THOUGHT WORD DEED



தமிழ் மன்றம்

வெளியீடு :
தமிழ் மன்றம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்

2017

# வீரசங்கிலி
# முத்தமிழ் விழா மலர்


**மலராசிரியர்கள்**

**முருகேசு கௌரிகாந்தன்**
முதுநிலை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

**பாலசிங்கம் பாலகணேசன்**
இணைப்பாளரும், தமிழ்மன்றக் காப்பாளரும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



வெளியீடு

**தமிழ் மன்றம்**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**கோப்பாய்**

**2017**

# மலர் விபரம்

| | |
|---|---|
| **மலரின் பெயர் :** | **வீரசங்கிலி<br>முத்தமிழ் விழா மலர்** |
| **ஆண்டு:** | 2017, செப்ரெம்பர், 11 |
| **ஆலோசனையும் வழிகாட்டலும்:** | திரு. சதாசிவம் அமிர்தலிங்கம்<br>(பீடாதிபதி) |
| **மலராசிரியர்கள்:** | முருகேசு கௌரிகாந்தன்<br>முதுநிலை விரிவுரையாளர்,<br>யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.<br><br>பாலசிங்கம் பாலகணேசன்,<br>இணைப்பாளரும், தமிழ்மன்றக் காப்பாளரும்,<br>யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. |
| **வெளியீடு:** | தமிழ்மன்றம்,<br>யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய். |
| **அச்சுப்பதிப்பு:** | கரிகணன் (தனியார்) நிறுவனம்<br>இல.681, கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம். |

**வீரசங்கிலி முத்தமிழ் விழா மலரில் வெளிவந்துள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே முழுப்பொறுப்புடையவர்களாவர்.**

- மலராசிரியர்கள்

**"முத்தமிழ்த்துணைவர்"**

**எம் கல்லூரியின் மதிப்புமிகு பீடாதிபதி**

## திரு. சதாசிவம் அமிர்தலிங்கம்




வித்தக யாழ்மண் வீர சங்கிலியின்
முத்தமிழ் விழாக்காண் முதலே!
உத்தமா அமிர்தமெம் உயர் அதிபதியை
சித்தத்துள் வைத்தோம் சீர் தூக்கி.

# தமிழ் மன்றம் - 2017



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

செல்வன் கி. டெரிக் (தலைவர்), கலாநிதி.பா.தனபாலன் (உப பீடாதிபதி), திரு.மு.கௌரிகாந்தன் (மலராசிரியர்), திரு.எஸ்.அமிர்தலிங்கம் (பீடாதிபதி), திரு.பா.பாலகணேசன்(காப்பாளாரும் மலராசிரியரும்), திருமதி சு. அன்ரனி தவச்செல்வம் (தற்காலிக உப பீடாதிபதி), திருமதி.வி.நரேந்திரா (விரிவுரையாளர்), திருமதி.செ.சிவபாதம் (உப பீடாதிபதி)

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

செல்வன் சி. நடேஸ், செல்வன் சி. கோபிநாத், செல்வன் கி. திசாந், செல்வி ரா. பவித்திரா, செல்வி ஶ்ரீ. கௌசிகா, செல்வி ஜெ. நர்மதா, செல்வி கா. சுஜாத்தா, செல்வி இ. சாமந்தி, செல்வி ஜோ. ஜென்சி, செல்வி றி. றிவ்னாஸ், செல்வி ஶ்ரீ. தினேசிகா, செல்வி நா. கம்ஷிகா, செல்வன் ஏ. சரத்குமார், செல்வன் ச. லக்ஷாந், செல்வன் போ. பிரஷாந்

## மலரின் உள்ளே .....

1. வாழ்த்துச்செய்திகள் v - ix

2. இலங்கைத் தமிழர் வரலாறு, பண்பாட்டை அர்த்தப்படுத்துவோம் x - xii

3. அரங்கத்தறிஞரிருவர் 01

4. ஈழவேந்தன் வீரசங்கிலியும் வரலாற்றாசிரியர்களும் ஒரு பார்வை 07

5. முத்தமிழ் – மூலக் கருத்துப் பற்றிய ஒரு குறிப்பு 17

6. சங்கிலி மன்னன் 21

7. மாமன்னன் வீரசங்கிலியன் மீதான ஆய்வுத் தேடலுக்கு.... 25

8. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியா? சங்கிலிகுமாரனா? 32

9. ஆரியச் சக்கரவர்த்திகள் 38

10. TAMIL-HINDU KING SANKILI OF JAFFNA IN GOA 46

11. கோப்பாய்ப் பழைய கோட்டையின் கோலம்! 49

12. தமிழக அரசரும் தேவியரும் நீராடி மகிழ்ந்த ஜமுனாரி 51

13. 15 ஆம் நூற்றாண்டில் தமிழ் மன்னர்... 54

14. வீர சங்கிலியனின் அரும்பணிகள் 59

15. வீரசங்கிலி மன்னன் 60

16. வெற்றியாளனாய் வீரம் நிகழ்த்தினாய்! 62

17. சங்கிலி மாமன்னனின் வரலாற்றுப் பாடம் 65

18. நம் வீர மன்னன் சங்கிலியன் 66

19. நம் வீர சங்கிலியன் 67

20. வீரா! நம் சங்கிலியனே! 68

21. வீர சங்கிலி செகராசசேகரன் 69

22. சங்கிலி – நாடகம் 77

23. முத்தமிழ் விழாவின் பிரதமவிருந்தினர்கள் 127

24. முத்தமிழ் விழாச் சிறப்பு விருந்தினர் – செல்வி சவுந்தராம்பிகை கணபதிப்பிள்ளை 129

25. முத்தமிழ் விழா சிறப்பு விருந்தினர் – திரு. தம்பு சிவசுப்பிரமணியம் 130

26. முத்தமிழ் விழாவில் கௌரவிக்கப்பெறுபவர் – பேராசிரியர் முனைவர் துரை. மனோகரன் அவர்கள் 131

27. முத்தமிழ் விழாவில் கௌரவிக்கப் பெறுபவர் – பேராசிரியர் முனைவர் சி. சிவலிங்கராஜா அவர்கள் 133

# வாழ்த்துச்செய்தி



## தமிழும் வரலாறும் வளம்பெறுக

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தமிழ் மன்றம் சிறப்பாக இயங்கி வருவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

“தமிழைப்போல் உயர்ந்தமொழி
தரணியெங்கும் கண்டதில்லை
தமிழரைப்போல் மொழிக்கொலையில்
தலைசிறந்தோர் எவருளரே”

என்று திரு. வி. க. பாடியதை எமது தமிழ் மன்றத்தினர் கேள்விப்பட்டார்களோ, கேள்விப்படவில்லையோ தெரியவில்லை. அப்பெரியாரின் சிந்தனை அலைகள் இங்கும் செல்வாக்குச் செலுத்தியிருப்பதனைப் போன்று, தமிழ் மொழியின் செம்மொழித்தன்மையைப் புரிந்து கொண்டு அதனைச் சரியாகப் பயன்படுத்தி, உச்சப்பயன்பாட்டைப் பெறுவதற்கான பல செயற்றிட்டங்களைத் தமது மன்றத்தின் மூலமாக மேற்கொண்டு அவற்றில் வெற்றிகண்டு வருகின்றார்கள். சிறப்பாகச் சொன்னால் இயல், இசை, நாடகத்தினூடு சிறந்த கற்பித்தல் முறைகளைப் பிரயோகித்து நல்லாசிரியர்களாக மாணவர்களுக்கு வழிகாட்டும் திறன்களைத் தமிழ் மன்றத்தினர் வளர்த்து வருகின்றனர்.

தமிழ் மன்றத்தின் செயற்பாட்டுத்திறனின் சிறந்த பதிவேடாக அம்மன்றம் சென்ற ஆண்டிலிருந்து வெளியிடும் ‘வீரசங்கிலி முத்தமிழ்விழா’ மலரைப் பார்க்கின்றேன். இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றோம். இலங்கைத்திருநாட்டின் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் “வீரசங்கிலியன்” எமது நாட்டு வரலாற்றில் ஒப்பற்ற அடையாளம். எமது கல்லூரி வளாகமும் வீரசங்கிலியன் விளையாட்டு மைதானமும் அம்மன்னன் உலாவிய இடங்கள். அருகிலுள்ள இராசபாதை அவன் உலாவந்த வீதி, 42 ஆண்டுகள் (1519 - 1561) சங்கிலி செகராசசேகரன் எமது பிரதேசத்திலே கல்வி, மொழி, சமயம், கலை, பண்பாடு, பொருளாதாரம் சிறக்கப் பாடுபட்ட மன்னன். இம்மன்னன் பற்றிய சரியானதும் முழுமையானதுமான வரலாறு வெளிவரவேண்டும். இவன் வரலாற்றில் கரிபூசப்படுவதனையோ, இம்மன்னனின் வரலாறு இருட்டடிப்புச் செய்யப்படுவதனையோ ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது வரலாற்றுப் பதிவுகளை எமது அடுத்த சந்ததியினர் அறியத்துணையாக விளங்கும் இம்மலராக்கம் மிக முக்கிய செயன்முறையாகும். தமிழ் மன்றத்தின் காப்பாளர் திரு. பாலசிங்கம் பாலகணேசன் இம்மன்றத்தை ஏனைய விரிவுரையாளர்களின் ஆதரவுடன் சிறப்பாக இயக்கி வருகின்றார். அவரைப் பாராட்டுகின்றேன்.


அவருடன் தோள்கொடுத்துத் தமிழுக்காகத் தம்மையே அர்ப்பணித்து வரும் எமது கல்லூரியின் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், முருகேசு கௌரிகாந்தன் அவர்கள் இம்மலராக்கத்திலும்

முத்தமிழ் விழா ஏற்பாடுகளிலும் அரும்பாடுபட்டு வருபவர். அவருடைய தமிழ்த்தொண்டைப் போற்றுகின்றேன். அவருடைய தமிழ்ப்பணி தொடர என்றும் உறுதுணையாக நிற்போம்.

இம்மலரிலே எம்மை வளப்படுத்தும் தரமான ஆக்கங்கள் பல வெளி வந்துள்ளன. அவற்றை எல்லோரும் வாசித்துப் பயன்பெறவேண்டும். எமது பண்பாடு, பாரம்பரியம், கலாசாரம் என்பவற்றைப் பேணித் தமிழ் மொழியை வளர்க்கும் அரிய சந்தர்ப்பமாக முத்தமிழ் விழாவையும் சங்கிலி மலர் வெளியீட்டையும் கொள்வோமாக. இவ்விழா சிறப்புற அமைய ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சதாசிவம் அமிர்தலிங்கம்**
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரித் தமிழ் மன்றம் சங்கிலியன் பெயரால் இவ்வாண்டு மலர் வெளியிட்டுச் சிறப்பிக்கின்றமை மகிழ்ச்சிக்குரியது.

யாழ்ப்பாண மன்னர்களில் இருவர் சங்கிலி என்னும் பெயர் உடையோர். முதலாம் சங்கிலி (1519 - 1561) வலி படைத்த அரசன். துப்பாக்கி, பீரங்கி முதலிய நவீன ஆயுதங்களை யாழ்ப்பாணப் படைகளுக்கு முதன்முதலாக வழங்கியவன். சாதுரியமானவன்; தந்திரசாலி. கோவையிலுள்ள அரசப் பிரதிநிதியின் தலைமையிலே படையெடுத்து வந்த போர்த்துக்கேயரின் பலமான சேனையினை வெளியேற்றியமை சங்கிலியின் சிறப்பு மிக்க சாதனை.

போர்த்துக்கேயருக்கு எதிரான போர்கள் இடையறாது நடைபெற வேண்டும் என்பது சங்கிலியின் நிலைப்பாடு. புத்தசமயத்தைப் பாதுகாப்பதற்குப் போர்த்துக்கேயருக்கெதிரான போரைத் தொடங்குமாறு அவன் மாயாதுன்னையை வலியுறுத்தினான். படையுதவி தருவதாகவும் சொன்னான். இரண்டாம் சங்கிலி 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சில வருடங்கள் அதிகாரஞ் செய்தவன். அரசகேசரி என்னும் அறிஞரைப் படுகொலை செய்தவன். 1691 இலே போர்த்துக்கேயர் போரிலே சங்கிலி குமாரனைக் கைப்பற்றிச் சென்றனர். யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ந்தது.

இவர்களைக் காட்டிலும் மிகச் சிறந்த மன்னர்கள் முற்காலங்களில் யாழ்ப்பாணத்தில் அரசு புரிந்தனர். பலமான கடற்படையினைக் கொண்டிருந்தனர். ஆரியச்சக்கரவர்த்தியின் 100 வணிகக் கப்பல்கள் யெமென் நாட்டிற்குப் பிரயாணஞ் செய்வதைக் கண்டதாக இபுன் பத்தூத்தா சொல்வார். தமிழரின் தேசிய அடையாளமான தேசவளமைக்கு அவர்களே வடிவங் கொடுத்தனர். மருத்துவ நூற் களஞ்சியமான பரராசசேகரம் போன்ற தொகுதிகளும் தக்ஷிணகைலாச புராணம் முதலான அருந்தமிழ் நூல்களும் அவர்கள் உருவாக்கிய அருஞ்செல்வங்கள்.

சென்ற காலச் சிறப்பினையும் நிகழ்கால மாண்பினையும் இலங்கைத் தமிழர்கள் நினைத்துப் பெருமை கொள்ளும் நாள் வருங்காலத்தில் வரும். இவ்வாண்டு இக்கல்லூரித் தமிழ்மன்றம் ஏற்பாடு செய்துள்ள விழா கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சிறப்பாக நடைபெற்று நிறைவுகாண வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

**கலாநிதி சி. பத்மநாதன்**
தகைசார் பேராசிரியர்,
வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச்செய்தி



எமது கல்லூரியின் 2017 ஆம் ஆண்டுக்குரிய முத்தமிழ் விழா மற்றும் "வீரசங்கிலியன்" என்பன பன்முகச் சிறப்புக்களை உள்ளடக்கியதாக மதிப்பிற்குரிய பீடாதிபதி திரு.ச.அமிர்தலிங்கம் அவர்களின் சிறப்பான வழிநடாத்தலில் நடைபெறுவதையிட்டு மிகுந்த மகிழ்வடைவதுடன் விழா சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

தமிழ் மன்றத்தின் காப்பாளராக இருந்து தனது அர்ப்பணிப்பான செயற்பாடுகளினூடாக முத்தமிழ் விழா நிகழ்வுகளையும் "வீரசங்கிலியன்" மலரையும் சிறப்புற உருவாக்கும் திரு. பா. பாலகணேசன் அவர்களையும் அவருக்கு உறுதுணையாக இருந்து முத்தமிழ் விழா மற்றும் வீரசங்கிலியன் இதழ் என்பன சிறப்பாக அமைய அர்ப்பணிப்புடன் பணியாற்றிவரும் திரு. மு. கௌரிகாந்தன் அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

முத்தமிழ் விழா நிகழ்வுகள் சிறப்புடன் அமைய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பல்வேறு நிகழ்வுகளையும் சிறப்புற அரங்கேற்றும் சகல கல்வியியலாளர்களுக்கும் சகல முகிழ்நிலை ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது கல்லூரியில் ஒவ்வொரு முத்தமிழ் விழாவும் தமிழ் மொழியையும் தமிழ் பண்பாட்டையும் வளர்ப்பதிலும் ஒவ்வொரு வளர்ச்சிப்படியை எட்டி நிற்கிறது. தமிழ் மொழித் திறன்கள், மற்றும் தமிழர் பண்பாட்டு அம்சங்கள் சார்ந்த விடயங்களில் முகிழ்நிலை ஆசிரியர்களின் மத்தியில் தெளிவையும் அனுபவங்களையும் ஏற்படுத்தி, அவர்களை வலுவூட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் பாடசாலைகளிலும் சமூகத்திலும் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளை நடைமுறைப்படுத்தி, தமிழ் மொழியின் மேன்மைகளை நிலைபெறச் செய்வதில் முகிழ்நிலை ஆசிரியர்களை முக்கிய பங்காளிகளாக உருவாக்க முடியும்.

எமது தமிழ் மொழி உலகின் மிகத்தொன்மையான மொழியாகும். தமிழர் பண்பாடு மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது. உலகின் எல்லாப் பிரதேசங்களிலும் தமிழர்கள் வாழ்கின்ற போதிலும் முறையான அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்களினூடாகத் தமிழ் மொழியை வளர்ப்பதிலும் அதன் அந்தஸ்தைப் பேணுவதிலும் தமிழ் மொழி மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்படுகின்றது. இந்தநிலைமையில் எமது தமிழ் மன்றம் மிக உச்ச இயலுமையில் செயற்பட்டு தமிழ் மொழி அபிவிருத்திக்கு மிகச் சிறந்த பங்களிப்புக்களை வழங்கி வருவது மிகவும் பாராட்டத்தக்கது.

முத்தமிழ் விழா சிறப்பு மலராக வெளியிடப்படும் "வீரசங்கிலியன்" மலர் மிகப் பெறுமதி மிக்க ஆவணமாக அமைகிறது. தமிழ் அறிஞர்களின் கருத்துக்களின் தொகுப்பாகவும் முகிழ்நிலை ஆசிரியர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் ஓர் களமாக இம்மலர் அமைகிறது. இப்படி ஓர் மலரை உருவாக்க வேண்டும் என்று சிந்தித்து அதற்கு செயல் வடிவம் கொடுத்தவர்களும் மலர் ஆசிரியர்களாகச் செயற்படுபவர்களும் மிகுந்த பாராட்டுக்குரியவர்களாவர். மேலும் 'தமிழ் மொழி ஆவணக் காப்பகம்' ஒன்றைப் பேணுவது நீண்ட கால நோக்கில் மிகப் பயனுடைய நிகழ்வாக அமையும்.

100 ஆண்டுகளுக்கு மேல் நீடித்து நிலை பெறவேண்டும் என்ற சமூகத்தின் நல்லாசிகளினூடாக 2000 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது கல்லூரியின் தூரநோக்கில் தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாட்டு விருத்தி என்பன மிக முக்கியமானதாகும். இந்த வகையில் மிகவும் பாடுபட்டு பரதம், கர்நாடக சங்கீதம், சித்திரம், நாடகவியல் ஆகிய பாட நெறிகள் உருவாக்கப்பட்டன. இப்பாட நெறிகளினூடாக, தமிழ் பண்பாட்டு அம்சங்களை விருத்தியடையச் செய்வதில் கல்வியியலாளர்களும் முகிழ்நிலை ஆசிரியர்களும் உச்சப்பங்களிப்புக்களை வழங்கி வருவது பாராட்டுதற்குரியது.

தமிழின் மூத்தவர், திரு. முருகேசு கௌரிகாந்தன் அவர்கள்.

- தமிழ் மொழிப் பற்றாளன்
- தமிழ் மொழியின் காவலன்
- தமிழ் மொழிவளர்ச்சியில் தணியாத தாகம் உடையவர்
- தமிழ் மொழிச் சிந்தனைகளை எழுத்துருவில் ஆவணப்படுத்துவதில் அலாதிப் பிரியம் உடையவர்.
- தமிழ் மொழிச் சிந்தனையாளர்களை சமூகத்தின் முன் நிறுத்தி பெருமைப்படுத்துவதில் தனித்துவமானவர்.

எமது கல்லூரி முத்தமிழ் விழாக்களுக்கு அவரது பங்களிப்பு மிக உயர்வானது. அல்லும் பகலும் தமிழ் மொழியைப் பற்றியே சிந்திக்கும் ஒரு மொழிச் சிந்தனை வாதியுடன் பழகக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தனது சேவைக் காலத்தின் இறுதிக் காலத்தில் இருக்கும் போது கூட மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் பணியில் அவருக்கு இருக்கும் ஈடுபாடு அர்ப்பணிப்பு என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

"சேர் நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ, Relief எத்தனை பாட வேளை என்றாலும் எனக்குப் போடுங்கோ நான் படிப்பிப்பேன்"


அவர் அடிக்கடி எனக்குக் கூறும் இவ்வார்த்தைகள் எனக்கு அமிர்தமாகத் தெரியும். சுயநலம் இல்லாமல் அவரது அடிமனதில் இருந்து வரும் இவ்வார்த்தைகள் அவரது மிக உயர்ந்த பண்பையும் தான் சார்ந்த நிறுவனத்தின் செயற்பாடுகளிற்கு அவர் வழங்கும் ஒத்துழைப்பையும் அவரது நேர் மனப்பாங்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மொழிக்காகவும், மாணவர்களுக்காகவும், கல்லூரிக்காகவும் அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் அவருக்கு இறைவனின் ஆசிகளைக் கொடுக்கும். முத்தமிழ் விழா நிகழ்வுகள் சிறப்பாக அமையப் பாடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் விழா சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். மேலும் நான் தற்போது சென்னையில் இருந்த போதும் சிரமம் பாராது என்னுடன் தொடர்பு கொண்டு எனது வாழ்த்துச்செய்தியைப் பெற்றுப் பிரசுரித்த மன்ற உபகாப்பாளர் திரு. பா. பாலகணேசன் அவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. இ. சத்தியேந்திரம்பிள்ளை,**
**உபபீடாதிபதி**
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
தற்போது – சென்னை.

# இலங்கைத் தமிழர் வரலாறு, பண்பாட்டை அர்த்தப்படுத்துவோம்

முருகேசு கௌரிகாந்தன்
பாலசிங்கம் பாலகணேசன்



‘சரித்திரம் அல்லது ‘வரலாறு’ என்பதற்கும் ‘இதிகாசம்’ என்பதற்கும் இடையில் நுணுக்கமான வேறுபாடுண்டு. சரித்திரம் பிறமொழிச்சொல். சரிதை, சரிதம் என்பதிலிருந்து அச்சொல் வந்திருக்கிறது. சரியானதை ஒழுங்குமுறைப்படி கூறுவது சரித்திரம், வரலாறு, தமிழ்ச்சொல் 1972 ஆம் ஆண்டின் பின்னர் தான் நாங்கள் பாடசாலைகளில் இதனைக் கேள்விப்பட்டது. ‘சம்பவம் வந்த ஒழுங்கு’ என்பதுதான் இதன்பொருள் ‘வரன்முறை’ எனலுமாம். வரலாற்றில் கதைகள் இருக்கும். History இல் ‘Story’ இருப்பது போல. ஆனால் கட்டுக் கதைகள் இருக்கக்கூடாது. ‘இதிகாச’ என்பது ‘ஐதிகம்’ என்பதிலிருந்து பிறந்தது. ஐதிகம் என்றால் ‘நம்பிக்கை’ என்பது பொருள். இன்றைய சம்பவம் நாளைய வரலாறு. சம்பவம் உண்மையாக இருக்கும். ஆனால் வரலாறு தான் பொய்மை கலந்து காணப்படுகின்றது. எனவே அறிவியல் சார்ந்த இந்தப்பாடத்தில் உண்மையைத்தேட வேண்டிய பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. எமது ‘வீரசங்கிலி முத்தமிழ் விழாமலர்’ இத்தகைய செயற்பாட்டின் குறியீடே “உண்மை, நேர்மை, திண்மை, நன்மை” அதன் தாரக மந்திரம்.



பரராசசேகரன், செகராசசேகரன் ஆகிய மன்னர்களின் பெயர்களைத் தாங்கி பரராசசேகரம் செகராசசேகரம், செகராசசேகரமாலை என்று வைத்திய சோதிட நூல்கள் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்திலே தோன்றியதை நாம் அறிவோம். அது போன்றே ‘வீரசங்கிலி’ எனும் பெயர்களைத் தாங்கி முதன்முதலாக வெளிவந்த மலரில் இம்மலரின் இணை ஆசிரியர்களில் ஒருவரான திரு. பா. பாலகணேசன் அவர்களால் ‘மாவீரன் சங்கிலியன்’ எனும் கட்டுரை எழுதப்பட்டது. ஏனையவை பெரிதும் இயற்றமிழ் சார்ந்த ஆக்கங்கள் அடுத்தமலர் பெரிதும் வீரசங்கிலி மன்னன் தொடர்பான ஆக்கங்களாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று அறிஞர் சிலர் கூறிய ஆலோசனையினை ஏற்று, அவ்வாறே இந்த ஆண்டுக்கான மலரை வெளியிடத்துணிந்தோம்.

எமது கல்லூரியில் பயிலும் முகிழ்நிலை ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்த்த அளவுக்கு ஆக்கங்கள் கிடைக்கவில்லை. எழுதித் தருவதாகக் கூறிய பெரியவர்களும் கடைசியில் கைவிரித்து விட்டனர். மூதறிஞர் ஒருவர், “கத்தோலிக்க ஏடுகளும் நூல்களும் ‘சங்கிலி’ இரக்கமற்ற கொடுங்கோலன் என்று கூறுவதனாலும் தமிழ் அறிஞர்கள், மன்னார்ப் படுகொலைகளுக்கு நியாயமான காரணங்கள் இருந்தன என்று கூறுவதனாலும் தமிழ் அறிஞர்களினாலும் கத்தோலிக்கத் திருச்சபையினாலும் தாம் கடுமையாக விமர்சிக்கப்படக்கூடும்” என்றும் தம்மால் குறிப்பிடப்படும் வரலாற்றறிஞர் எழுதினால் பிரச்சினை இருக்காது என்றும் குறிப்பிட்டு எழுதித்தருவதிலிருந்து விலகிக் கொண்டார். வரலாற்றுத்துறை சார்ந்த பொறுப்பு வாய்ந்த பெண்மணி ஒருவர், சங்கிலியன் வரலாறு

எழுதினால் தம்மீது கரிபூசுவார்களென்றபடியால் தாம் எழுதவில்லையென்று கூறுகின்றார். இப்படிப்போனால் சங்கிலி மன்னனது சரியான பூரணமான வரலாற்றை யார்தான் எழுதுவது? எக்காலம் எழுதுவது? இந்த வினாக்களுக்குப் பின்னராவது யாருக்காவது அசுரத்துணிவொன்று ஏற்பட்டு எழுதி வெளிவந்தால் அந்தப் பாராட்டு எழுதியவரையும் எழுதத்தூண்டிய யாழ் தேசிய கல்வியியற் கல்லூரித் தமிழ் மன்ற வீரசங்கிலி மலரையுமே சாரும்.

இஃது இவ்வாறிருக்க, இம் மலராக்க வேலையில் யாம் ஈடுபட்டிருந்த வேளையில் இருபெரும் அறிஞர்களினால் ஒவ்வொரு வினாத் தொடுக்கப்பட்டிருந்தது. ஒன்று சங்கிலியன் என்பது; அம்மன்னனுக்குரிய இயற்பெயரா? மற்றவரது வினா 'முத்தமிழ்' என்று ஒன்றிருக்கிறதா என்பது சங்கிலியன் உரையாடலின் போது கேட்டிருந்தாலும் அந்த வினாக்களைத் தற்செயலானது என்று வாளாவிருக்க முடியவில்லை. பேராசிரியர் வ. மகேஸ்வரன் 'சங்கிலிக் கறுப்பன்' எனும் கிராமியக் காவல் தெய்வத்தின் செல்வாக்கினால் இப்பெயர் சங்கிலி மன்னனுக்கு ஏற்பட்டிருக்குமோவென்று ஐயுறுகின்றார். வரலாற்றுப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் "சங்கிலியன் எனும் பெயர் அம்மன்னனது இயற்பெயர் என்றும் இவனைச் "செகராசசேகரன்" என்றது, பரராசசேகரன், செகராசசேகரன் எனமாறி, மாறி வரும் பட்டப்பெயர்களினாலென்றும், ஒரிசாவின் பழைய மன்னர்களின் பெயர் 'சங்கிலி' என்றிருந்ததாகவும், டச்சுக்காரரும் சங்கிலி மன்னனைத் தங்கள் மொழியில் 'சியங்கெரி' என்றுதான் அழைத்தார்கள்" என்றும் அருமையான விளக்கத்தைத் தந்தார்.

அடுத்து 'முத்தமிழ்' பற்றியும் சிறிது நோக்குவோம் இது பற்றிக் கடந்த மலரிலும் குறிப்புண்டு. இயல், இசை, நாடகம் முத்தமிழ். நாடகத்தமிழில் இயல், இசை என்பவற்றின் கூறுகளுண்டு. தமிழ் என்ற சொல்லில் மூன்று வகையான (வல்லினம், மெல்லினம், இடையினம்) தன்மைகள் இருப்பதால் அதன் சிறப்புக்கருதி யாராவது இடைக் காலத்தில் அழைக்க அதைப்பின்பற்றி இவ்வழக்கு ஏற்பட்டதாவென்றும் தெரியவில்லை. 'முச்சங்கம்' என்பதைப் போல இதுவும் ஆய்வுக்குரியதாகிவிட்டது. சமஸ்கிருத பாஷையில் கூறப்பட்ட 'திரயீவித்யா', 'பிரஸ்தானத் திரயம்' என்பதன் செல்வாக்குத் தமிழையும் பாதித்ததாவென்று தெரியவில்லை. முத்தமிழ் பற்றிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் தனியான நூல் இல்லை. இலங்கைப் பல்கலைக்கழக இளங்கதிர் சஞ்சிகையின் (1950 - 51) ஆசிரியத்தலையங்கமே 'முத்தமிழ்' என்ற தலைப்பில் எழுதப்பட்டதுதான் இக்கட்டுரை. விரிவாக எழுதப்பட்டாலும் திருப்திப்படுவதற்கானது அல்ல. எவ்வாறாயினும் இம்மலர் முத்தமிழ் விழா என்பதினை உள்ளடக்கியதால் அது தொடர்பாக எவராவது ஏமாற்றங் கொள்ளக்கூடாது என்பதற்காக பேராசிரியர் சிவத்தம்பி (1932 - 2011) அவர்கள் எழுதிய "முத்தமிழ் - மூலக்கருத்துப் பற்றிய ஒரு குறிப்பு" (இளந்தென்றல் 1947 - 72) என்ற கட்டுரையினைச் சேர்த்திருக்கின்றோம். நாடகம், கவிதை என்பனவும் இம்மலரில் உண்டு. மாவீரன் சங்கிலியனது வரலாற்றோடு தொடர்புடையனவாகப் பெரும்பாலான ஆக்கங்கள் உள்ளன. காலத்தின் தேவையாக இருப்பதால் வரலாற்று ஆக்கங்களைக் கூடுதலாக பிரசுரிக்க நேரிட்டது.

இவ்வகையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1903 - 1968) அவர்களின் 'சங்கிலி (1964) எனும் நாடகத்தினை அரிதின் முயன்று இம்மலரில் பிரசுரித்திருக்கின்றோம். பிரசுரிப்பதற்கான வாய்மொழி மூலமான அனுமதியும் பேராசிரியரின் அருமைப் புதல்வியான ஆசிரியை செல்வி சவுந்தராம்பிகை கணபதிப்பிள்ளை அவர்களிடமிருந்து பெறப்பட்டது. அவருக்கு எமது நன்றிகள். இதனைவிட மாதகல் க. மயில்வாகனப் புலவர் (1875 - 1918) எழுதிய "சங்கிலிமன்னன்" (மருணீக்கியார் தொகுத்த, ஈழநாட்டுத் தமிழ் விருந்து, 1960) சொல்லேருழவன் ம.க.அ. அந்தனிசில்

(1934 - 2005) அவர்கள் எழுதிய, "யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியா? சங்கிலிகுமாரனா? "(வீரகேசரி வார வெளியீடு, 20.04.1980), வ.ந.கிரிதரன் எழுதிய, "கோப்பாய்ப் பழைய கோட்டையின் கோலம் " (வீரகேசரி வார வெளியீடு, 15.03.1981), "15ஆம் நூற்றாண்டில் தமிழ் மன்னர் இராசதானியாக விளங்கிய நல்லூர்க் கோட்டையும் அதன் அமைப்புமுறையும்" (ஈழநாடு வாரமலர், 12.10.1980), திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த ச. சபாரத்தினம் எழுதிய, "தமிழக அரசரும் தேவியரும் நீராடி மகிழ்ந்த ஜமுனாரி (ஈழநாடு வார மலர், 06.01.1980) என்பன ஆய்வாளர்களினதும் ஏனையோரினதும் நன்மை கருதி இங்கே பிரசுரிக்கப்பெற்றுள்ளன. இவற்றை ஏலவே பிரசுரித்த நூலாசிரியருக்கும், பத்திரிகை நிறுவனங்களுக்கும் எமது நன்றிகள்.

மலரின் கனங் காத்திரம் கருதி அரங்கப் பெரியோர்கள் பற்றிய அரிய குறிப்புக்களை எமது பீடாதிபதி திரு. சதாசிவம் அவர்களிடமிருந்து பெற்றுப் பிரசுரித்துள்ளோம். இத்துடன் பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள், கௌரவிக்கப்பெறுவோர் பற்றிய பயனுள்ள குறிப்புக்களையும் தந்திருக்கின்றோம்.


இம்மலருக்கான வாழ்த்துரைகளை உரிய காலத்தில் வழங்கிய கல்லூரியின் பீடாதிபதி, திரு. சதாசிவம் அமிர்தலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்றுத்துறையின் மூதறிஞருமான பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன், கல்லூரியின் உபபீடாதிபதி திரு. எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள். அத்துடன் கடைசிநேரத்தில் இம்மலருக்கென சிறப்பான கவிதையொன்றினை விரைவாக எழுதிக்கொடுத்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை. மனோகரன் அவர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய எமது முகிழ்நிலை ஆசிரியர்களுக்கும் அவற்றைப் பெற்றுத்தந்த தமிழ்மன்றத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோருக்கும் மலருக்கான அனுசரணையாளர்களுக்கும், குறுகிய காலத்தில் அழகான முறையில் அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் மலரின் நயப்புரையினை வழங்கவிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளர் திருமதி செல்வஅம்பிகை நந்தகுமார் அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

**நன்றி**

**வீரசங்கிலி முத்தமிழ் விழா மலரின் பிரதம அனுசரணையாளர்கள்**

**திரு. மயில்வாகனம் ஜெயராஜா, திருமதி கலாறஜனி ஜெயராஜா ஆகியோர்க்கு எமது நன்றிகள்**


**– தமிழ்மன்றம்**



# அரங்கத்தறிஞரிருவர்

திரு. சதாசிவம் அமிர்தலிங்கம்

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ்மன்றத்தினர் இந்த ஆண்டு எடுக்கின்ற முழுநாள் முத்தமிழ் விழாவின் இரண்டு அரங்கிற்குமான பெயர்கள், 'பேரறிஞர் அழகசுந்தர தேசிகர் அரங்கு 'பேராசிரியர் கணபதிப்பிள்ளை அரங்கு' என்பன. இந்த அறிஞர்களிருவரும் இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவமுடையவர்கள். இவர்கள் பெயரிலான அரங்குகளிலே முத்தமிழ் விழாவினை நடாத்துவதன் மூலம் தமிழ் மன்றமும் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியும் மிகுந்த பெருமையினைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இப்பெருமகனார்களது வரலாற்றினையும் பணிகளையும் நினைவுகூர்வதானது தவிர்க்கவியலாததும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.



இவரின் மறுபெயர், பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி (Rev. Francis Kingsbury) என்பது. இவர் தமிழ் தந்த இராவ் பகதூர் சி.வை தாமோதரம்பிள்ளை (1832 - 1901) நாகமுத்தம்மாள் தம்பதியினரின் நான்காவது புத்திரராக 1873ஆம் ஆண்டு ஆவணி எட்டாம் நாள் சென்னை தண்டையார்ப்பேட்டையில் பிறந்தார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்றவர். கலைமாணிப்பட்டதாரி. தாம் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியராகவும் பணியாற்றியவர். சிறந்த பேச்சாளர், அகராதித் தொகுப்பாசிரியர், நூலாசிரியர், நாடகாசிரியர், கவிஞர், பல்கலைக்கழக விரிவுரையாளர் எனப்பன்முக ஆளுமை கொண்டவர்.

இலங்கை வானொலியிலே பல தடவைகள் உரை நிகழ்த்தியுள்ளார். 1924 - 1926 கால கட்டத்திலே சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழகராதியின் தொகுப்பாசிரியருள் ஒருவர். 'இராமன் கதை', பாண்டவர் கதை பண்டாரவன்னியன் கதை (1939) 'ஏசு வரலாறு' எனும் வசனநடை நூல்களையும் 'சந்திரகாசம்' மனோன்மணி நாடகம்' எனும் வசன நாடக நூல்களையும் அகப்பொருட்குறள், கடவுள் வாழ்த்துப்பா ஆகிய செய்யுள் நூல்களையும் இயற்றித் தந்துள்ளார். இவரது பாண்டவர் கதை இதுவரை பதின்மூன்று பதிப்புக்களைக் கண்டது. எளிமையானதும் தெளிவானதுமான இவரது எழுத்து நடை இதற்கொரு காரணமென்று தெரிகிறது.


இவரது 'ஏசுவரலாறு' எனும் நூலின் கடவுள் வாழ்த்தாக அப்பர் பெருமானது 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்று தொடங்கும் தேவாரத்தை இவர் பொறித்துள்ளமையினைப் பார்க்கையில், 'உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்' எனும் தேவார அடிதான் சிந்தனைக்கு வருகிறது. 1953ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் உள்ள பாடசாலைகளில் எப்.ஏ.பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் 'சூளாமணி' எனும் வசன நூல் பாடநூலாக அமைந்துள்ளது போன்று அக்காலத்தில் இலங்கையில் உள்ள எஸ்.எஸ்.சி மாணவர்களுக்கு அவர்களது தமிழ் இலக்கிய பாடத்துக்கான பாடப்பகுதியாக அழகசுந்தர தேசிகரது மனோன்மணி நாடகம் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1903 - 1968) அவர்களும் இவரது மாணவரென்று தெரிய வருகிறது. இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் 1926 - 1936 கலைப்பகுதியில் வண. பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி - அழக சுந்தர தேசிகர் அவர்கள் விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்தார். அக்காலத்தில் கணபதிப்பிள்ளையவர்கள்

இவரிடம் கற்றிருக்கிறார். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் இன்றும் காணப்படும். பிரான்சிஸ் கிங்ஸ்பரி அவர்களது பெரியளவிலான அழகான நிழற்படம் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வரலாற்றில் இவருக்குள்ள அழியாத இடத்தை எடுத்துக்காட்டுவதாகும்.


இப்பேரறிஞர் தெல்லிப்பழையைச் சேர்ந்த வைத்தியர் ச. வை. சிதம்பரப்பிள்ளை அவர்களின் இளைய புதல்வியான மேரி இரத்தினம் சமாதானம் அவர்களை மணம்முடித்து வாழ்ந்து, தியாகராஜன் பொப்பி, கமலா, கார்த்தி ஆகிய நன்மக்களைப் பெற்றார். ராஜன் கதிர்காமர், வண. நேசன் கதிர்காமர் ஆகியோர் இவரது பேரமக்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இப்பேரறிஞர் 1941ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் பன்னிரண்டாம் நாள் கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் இறைபதம் அடைந்தார். இவர் நினைவாக அக்காலத்தில் கனதி மிக்க நினைவு மலர் ஒன்றும் வெளிவந்திருக்கிறது. அதனை எமது தமிழ் மன்றத்தினர்அரிதின் முயன்றாயினும் பெற்று மறுபதிப்பு செய்வார்களாயின் அரும்பணியொன்றினைச் செய்த பெருமை அவர்களைச் சாரும்.

**அழகசுந்தரதேசிகரின் அரியநூல்கள் சில**










**பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை**

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வரலாற்றிலும் அண்மைக்காலத்திலிருந்து எமது கல்லூரித் தமிழ்மன்ற வரலாற்றிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெற்றவர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையவர்கள்.

இலங்கைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட முன்னர் கொழும்பிலிருந்த பல்கலைக் கழகக் கல்லூரியிலேயே விரிவுரையாளராகப் பணியாற்றிய பேராசிரியர் 1942ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காலத்திலேயே அங்கே சேர்ந்து 26 ஆண்டுகள் துறைத்தலைவராகவும் சுவாமி விபுலானந்தர் அவர்களின் மறைவுக்குப் (19.07.1947) பின்னர் பேராசிரியராகவும் பணியாற்றியவர். பேராசிரியர் தமிழியல் பண்பாட்டியல், சாசனவியல், வரலாறு போன்ற துறைகளுக்கு அரிய பணியாற்றியவர். இத்துறைகளின் விருத்திக்குப் பிற்காலத்தில் பணியாற்றிய பல சிந்தனையாளர்கள் பேராசிரியரின் மாணவர்கள். இது பேராசிரியருக் குரிய தனிச்சிறப்பென்று சொல்ல வேண்டும்.


பேராசிரியர்களான விநாசித்தம்பி செல்வநாயகம் (1907 - 1973) சபாரெட்ணசிங்கம் தனஞ்சயராச சிங்கம் (01.01.1933 - 26.10.1977), கனகசபாபதி கைலாசபதி (05.04.1933 - 06.12.1982) ஆறுமுகம் சதாசிவம் (15.02.1926 - 01.07.1988) சுப்பிரமணியம் வித்தியானந்தன் (08.05.1924 - 22.01.1989), ம. முஹம்மது உவைஸ் (15.01.1922- 26.03.1996), கார்த்திகேசு சிவத்தம்பி (10.05.1932 - 06.07.2011), விநாயகமூர்த்தி சிவசாமி (1933 - 08.11.2014), ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை (21.11.1936 - 02.11.2015) என்போரும் தற்போது எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டு நமக்குப் பல வழிகளில் வழிகாட்டிக் கொண்டிருக்கும் மூத்த பேராசிரியர்களான பொன்னையா பூலோகசிங்கம் (1936), சின்னத்தம்பி தில்லைநாதன் (1937), அருணாசலம் சண்முகதாஸ் (1940, ஜனவரி), சிவசுப்பிரமணியம் பத்மநாதன் (1940, மார்ச்) ஆகியோரும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

எமது முத்தமிழ் விழா மலர் கடந்த ஆண்டிலிருந்து 'வீரசங்கிலி' எனும் பெயருடன் வெளிவருவதற்கு பேராசிரியரால் எழுதப் பெற்ற 'சங்கிலி' எனும் நாடகநூல் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கின்றது என்பதினை 2016 இல் வெளிவந்த மலரினைப் பார்வையிடுவோர் அறிந்துகொள்வர். இவ்வாண்டு வெளிவருகின்றதான இம்மலரில் 'சங்கிலி' நாடகம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றமையும் அந்த நன்றிக்கானதொரு வெளிப்பாடே எனலாம்.



பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்கள் யாழ். துன்னாலையைச் சேர்ந்த வைத்தியர் கந்தசாமிப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் தவப் புதல்வனாக யாழ்ப்பாணம் தும்பளையில் 1903 ஆடி 02 ஆம் திகதி பிறந்தார். இளமையில் உடுப்பிட்டிச்சிவசம்புப் புலவரின் மாணவராகிய முத்துக்குமார சுவாமிக் குருக்களிடமும் முறைசார் கல்வியை ஹார்ட்லிக்கல்லூரியிலும் கற்றார். இவர் முதலில் பணியாற்றிய கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் உயர்கல்வி பயின்று சித்திபெற்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று, அதன் பின் இலண்டன் பல்கலைக்கழகம் சென்று தமிழ்ச் சாசனங்கள் தொடர்பாக ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.

**பேராசிரியர் குடும்பப் படம்**



பேராசிரியர், அப்புக் காத்து தர்மலிங்கமும் அவர்களின் மகள் மனோன் மணி (1923) அவர் களைத் திருமணம் செய்தவர். இவரின் துணைவியார் தற்போதும் கொழும்பு டேவிற்சன் வீதியில் உள்ள தமது இல்லத்தில் தமது பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார். பேராசிரியருக்கு ஏழு பிள்ளைகள். முதலாவது மகன் கந்தசாமிப்பிள்ளை ஒரு வைத்தியர். இரண்டாமவர் செல்வி சவுந்தராம்பிகை கணபதிப்பிள்ளை ஓய்வு நிலை ஆசிரியை. மூன்றாமவர் திருமதி பாலாம்பிகை சொக்கலிங்கம் கலைப்பட்டதாரி, பட்டயக்கணக்காளர், நான்காமவரான மங்களாம்பிகை தற்போது இங்கிலாந்தில் சட்டத்தரணியாக உள்ளார். ஐந்தாமவரான ஒப்பிலாமணிப்பிள்ளை இலண்டனில் வைத்தியராக இருக்கிறார். ஆறாமவரான திருமதி ஆளுடை நங்கை ரம்புக்வெல்ல அவர்கள் வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் பயின்று அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றியவர். தற்போது பேர்மிங்காம் திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். கடைசிப்பிள்ளை கலாநிதி திருமதி வள்ளிநாச்சியார் கணபதிப்பிள்ளை டிவ்ரீஸ் (Devries) அவர்கள் களனிப் பல்கலைக்கழகத்தில் பயின்று கலாநிதிப் பட்டம் பெற்றவர். இதனைப் பார்க்கும்போது பேராசிரியர் தமது கற்பித்தற்பணி, தமிழ்ப்பணி என்பவற்றிற்கு மத்தியில் தமது குடும்பத்தையும் வளர்த்துவிட்டமை தெரிகின்றது.

பேராசிரியர் பெயரை எக்காலமும் நினைவுபடுத்தும் எழுத்தாக்கங்கள், நூல்களாகவும், கட்டுரைகளாகவும் கையெழுத்துப் பிரதிகளாகவும் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை பேராசிரியரின் மாணவராகிய தமிழருவி த. சண்முகசுந்தரம் (1925 - 1986) அவர்களின் "கலையருவி கணபதிப்பிள்ளை சில நினைவுகள்" (1974) எனும் நூலின் பின்னிணைப்பில் காணப்படுகின்றன. அவற்றை உள்ளவாறே கீழே தருகின்றோம்.

**அச்சில் வந்த நூல்கள்**

1. நானாடகம்
2. காதலி ஆற்றுப்படை
3. வாழ்க்கையின் வினோதங்கள்
4. பூஞ்சோலை
5. இரு நாடகம்
6. சங்கிலி
7. மாணிக்கமாலை
8. தூவுதும் மலரே
9. ஈழத்து வாழ்வும் வளமும்
10. நீரரமங்கையர்

**இளங்கதிரில்**

1. தூவுதும் மலரே - *1949*
2. ஊருக்கொரு பேச்சு - *1950*
3. தேசிகர் நினைவுகள் - *1950*
4. ஆறுமுகநாவலர் - *1953*
5. தமிழினமே - *1945*
6. கோயிலிற் சிற்பக்கலை - *1954*
7. என் இன்பமான நாட்கள் - *1957*
8. சக்தி வழிபாடு - *1960*
9. வானயாத்திரை - *1962*
10. தமிழும் பிற மொழியும் - *1962*
11. இசைத் தமிழ் முனிவன் - *1963*
12. கணபதி - *1965*
13. அன்றும் இன்றும் - *1968*

**ஏனையவை**

1. ஈழத்துக் கிராமிய தெய்வ வழிபாடு - Young Hindu: 1955
2. வெருகலம்பதிச் செவிவழிச் செய்தி - கலைப்பூங்கா : மலர் 1, இதழ் 1
3. முருக வழிபாடு - தினகரன் தமிழ்விழா மலர் : *1960*
4. முகமது நபி (ஸல்) அவர்களும் அவர் காட்டிய வழியும் - இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் *1956*
5. விந்தை முதியோன் - ஈழமணி *1948*
6. தமிழர் பெருந்தகை - *1958*
7. இலங்கையில் கண்ணகி வழிபாடு - மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைத் திறப்புவிழா மலர் : *1953*
8. யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் - மகாஜனக் கல்லூரிக் களியாட்ட விழா மலர் - *1954*
9. இலங்கை இந்திய நட்புத் தொடர் - ஈழகேசரி: *29.8.43*
10. தாயிழந்த பன்றிக்குட்டி - ஈழகேசரி *12.2.40*
11. தமிழ் வளர்ச்சிக்கு ஈழநாடு ஆற்றிய தொண்டு - தினகரன்: *13.5.43*
12. சென்னைப் பல்கலைக்கழகத்தைத் துயில் எழச்செய்த விபுலாநந்தர் - சுதந்திரன் *13.4.52*
13. முருகனைப் பாடித் தமிழ்ப்பணியாற்றிய அருணகிரிநாதர் சிறப்பு - தினகரன்
14. நாச்சிமார் வழிபாட்டின் வரலாறு - தினகரன்
15. The Tamil Language in Ceylon and its Future - Hindu Organ
16. பாரத நாடும் ஈழத்து தமிழ்ப்புலவரும் - ஈழகேசரி
17. கற்பகதரு - Young Hindu - *1954*
18. தாமோதரம்பிள்ளை - இலங்கைப் பல்கலைக்கழகச் சஞ்சிகை - *1939*
19. ஈழத்திற் சிற்ப ஓவியக்கலை - ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிக் கழகம் : *1962*
20. பண்டைத் தமிழ்நாட்டின் பழம்பெரும் கலைஞன் - சுதந்திரன் : *1947*
21. நான் கண்ட அழகசுந்தர தேசிகர் - தினகரன் (மறுபிரசுரம்) *14.1/51*
22. ஈழநாடு அளித்த இணையற்ற தமிழ்ப் பெரியார் - வீரகேசரி : *19.12.49*
23. யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்விமுறை - கொக்குவில் இந்துக் கல்லூரிக் களியாட்ட விழா மலர் : *1950*
24. முசலிம்களும் தமிழும் - அல்சகிரா *1951*
25. The Story of Kannaki - A Ceyonese Version - Hindu Organ - Diamond Jubilee Numbers : 1949
26. பல்லவர் காலச் சிற்பம் - தினகரன் தீபாவளி மலர் : *1963*
27. தமிழர் பெருந்தகை - நாவலர் நினைவு மலர்

    நாவலர் - சைவாசிரிய கலாசாலை மலர்: *1947-48*

28. ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம் - ஈழகேசரி ஆண்டுமலர் : *1939 - 40*
29. நாளுக்குநாள் உருக்குலைந்து வரும் தமிழ் - தினகரன் *29.4.51*
30. சீதனக் காதை- (தொடர்ச்சியாக வந்தது) தினகரன்
31. தமிழில் முதல்முதலாக வெளிவந்த அபிதான சோகம் - யாழ்ப்பாணத்து நாவலர் கோட்டம் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை பற்றியது - தினகரன்
32. Mankanai inscription of Gajabahu II - University of Ceylon Review - Vol. xx. No.1
33. Verbs in the Jaffna Dialect of Tamil - Universiy of ceylon Review - Vol, xxiii, No.1&2
34. The Enunciative Vowel in Dravida Same as above - Vol 1, No.1
35. The Hill God of the Tamils Glorious Deepavali Universal Printin Works, Durban, S.Africa

**கை எழுத்துப் பிரதி**

1. இலங்கையில் கண்ணகி வழிபாட்டு வரலாறு
2. உண்மை அமைதியின் வாஞ்சை (செய்யுள்)
3. தேவியர் பாட்டு - பாளி மொழிபெயர்ப்பு
4. இயற்கையமைப்பும் பாரதியாரும்
5. பண்டை நாட்களில் இலங்கையும் சீனாவும்
6. செருமனிய நாட்டுச் சிறுவர் கதைகள்
7. நம்பிக்கையுள்ள நாகன்
8. சங்குபதி - Little Red Riding Hood
9. தீத்தட்டிக குழுக்கை - மொழி பெயர்ப்பு
10. அரச பரம்பரை
11. துரோகிகள் (நாடகம்)
12. சுந்தரம் எங்கே? (நாடகம்)
13. "கண்ணகி வழக்குரை" - மட்டக்களப்பு ஏட்டிலிருந்து தொகுத்தது. ஒருபகுதி வெளிவந்தது - சுதந்திரன் : 1953

இப்பட்டியலில் இல்லாத மூன்று கட்டுரைகள் எம்மிடம் உள்ளன. அவற்றைக் கீழே தருகின்றோம்.

1. மேல் நாட்டவரோடு பண்டைக்காலத்தில் தமிழர் செய்த கடல் வாணிகம்" ஈழகேசரி *1938.*
2. ஆன்மாவின் ஈடேற்றத்தில் ஆணவமலம்" சிவசக்தி, *1964 - 1965.*
3. "பண்டைக்காலத்து இலங்கையின் பிறநாட்டு வணிகம்" கலாநிதி, *1942.*

பேராசிரியர் இறைபதமெய்தியது *12.05.1968* அன்று அந்த ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனையின் தமிழ்ச்சங்கத்திலிருந்து வெளிவரும் "இளங்கதிர்" *1967 - 68* இதழ் பேராசிரியரின் நிழற்பட முகப்பு அட்டையுடன் வெளிவந்தது. இம்மலரிலே பேராசிரியரின் மாணவராக கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களால் எழுதப்பெற்ற "பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையும் இலங்கைப் பல்கலைக்கழகமும்" எனும் கட்டுரை பின்னர் பல கட்டுரைகள், நூல்கள் எழுதப்படுவதற்கான அரிய கட்டுரையாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் காலத்தையும் கருத்தையும் மேலும் அறிவதற்குப் பின்வரும் நூலும் கட்டுரைகளும் துணைசெய்யும்.

**நூல்**

- பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை (அவரது புலமைப்பாரம்பரியம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வு), குமரன் புத்தக இல்லம், *1997*
- பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு

**கட்டுரைகள்**

1. சொக்கன், "பேராசிரியர் கணபதிப்பிள்ளை" பைந்தமிழ் வளர்த்த பதின்மர், *1972*
2. ஆ. சிவநேசச்செல்வன், "பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை வாழ்க்கையும் பணியும்", சங்கமம், *1947*, ஆகஸ்ட் இதழ்


3. திருமதி மனோன்மணி சண்முகதாஸ், "ஈழத்து நாடக வளர்ச்சியும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தினகரன் வார மஞ்சரி, *09.08.1981"*
4. பேராசிரியர் சி. தில்லைநாதன், "பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தமிழ்ப்பணி", இலங்கைத் தமிழ் இலக்கியம், *1997*
5. அ. சண்முகதாஸ், "பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை, இலங்கைப் பேராசிரியர்களின் தமிழியற் பணிகள், *1998*
6. கலாநிதி க. சொக்கலிங்கம் "கவிஞர் நாடகாசிரியர், சமூகவியல் முன்னோடி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை" மாருதம், சித்திரை, *2002*

**உசாவியவை**

- அழலாடி, "சுவாமி விபுலாநந்தர் காலத்தவர்", அடிகளார் படிவமலர், *1969*
- இராசரத்தினம், T.A. *(1902)* சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் சரித்திரம், சென்னை கிறிஸ்தவக்கல்லூரி.
- முத்துச்சாமி, நா. (1977) முதற்பதிப்பு ஏழாலை ஆத்ம ஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.
- ஜெபநேசன், எஸ். *(1994)*, யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ கவிஞர்களும் கீர்த்தனைகளும், தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்.

**பேராசிரியரின் நூல்களில் இரண்டு**







# ஈழவேந்தன் வீரசங்கிலியும் வரலாற்றாசிரியர்களும் ஒரு பார்வை

**பா. பாலகணேசன்,**
விரிவுரை இணைப்பாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

ஈழத்தின் இறுதிமன்னன் வீரசங்கிலியும் அவனின் அரசும் அவன் தொடர்பான வரலாற்று செய்திகளும் தொடர்பாக தமிழ் வரலாற்று ஆசிரியர்களால் தங்களது முழுமையான ஒரு பார்வையை முன்வைக்க முடியாமல் போனமை, இருட்டடிப்பு செய்தமை, அல்லது வேண்டுமென்றே தவிர்த்திருந்தமையும், அவ்வாறு தவிர்க்க முடியாதவிடத்து முழுமையாக கூறமுனையாமையும் யாழ்ப்பாண வரலாற்றில் காணக்கூடியதாய் இருக்கின்றது. ஆசிரியர்கள் அவ்வாறு சங்கிலியன் வரலாற்றை கூறினால் தாங்கள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகலாம் என்ற அச்ச உணர்வு, அவர்களை முழுமையான வரலாற்றை கூறமுடியாது செய்திருக்கலாம். யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் ஆட்சிக்காலத்தில் குறித்த மதப்பிரிவினருக்கெதிரான நடவடிக்கைகள் அம்மதப்பிரிவினரை திருப்திப்படுத்த முடியாமல் போய்விடுமொ என்ற எண்ணம் வரலாற்று ஆசிரியரிடையே தோன்றியிருக்கக் கூடும். இவ்வாறான பின்புலங்களில் இருந்து ஈழவேந்தன் சங்கிலியின் முழுமையான வரலாறு எவ்வாறு வெளிக்கொணரப்பட வேண்டும், சங்கிலியின் வாழ்வியல், அக்காலத்தில் அவன் செயற்பாடுகள், எவ்வாறு சிற்சில இடங்களில் அமைந்திருக்க முடியும், சங்கிலியன் உண்மையான வரலாறு எப்படிப்பட்டது என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். இந்த நிலையில் தமிழகத்தை பிறப்பிடமாக கொண்ட வரலாற்றாசிரியர்கள் பார்வையில் சங்கிலி மன்னன், ஏனைய உலகத்தமிழ் வரலாற்று ஆசிரியர் பார்வையில் வீரசங்கிலியின் ஆட்சி, மற்றும் அவனின் வீரதீரசெயல்கள் போன்றவற்றையும் ஆராய்வது இக்கட்டுரையின் மற்றறொரு நோக்கமாகும். ஆரியசக்கரவர்த்திகள் காலத்தில் ஈழத்தில் ஆட்சிப்பரப்பு பின்வருமாறு காணப்படுவதாக ஈழ வரலாற்று ஆசிரியர் ஏகநாயகவல்லி சிவராசசிங்கம் பின்வரமாறு குறிப்பிடுவார்

யாழ்ப்பாண இராச்சிய எல்லைகள்




**சங்கிலியனின் காலமும் பிறப்பும்**

கி.பி 1519ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி1561ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண இராச்சியத்தை

ஆண்ட பலம் மிக்க தமிழ் மன்னன் ஆவான். இவன்தந்தையார்பெயர்ஆறாம்பரராஜசேகரன். தாயார் பெயர் மங்கத்தம்மாள். சங்கிலி ஏழாம் செகராஜசேகரன் எனவும் அழைக்கப்பட்டான். இவன் ஆரியசக்கரவர்த்தி வம்சத்தவன் ஆவான். சங்கிலி பரராஜ சேகரனின் பட்டத்து அரசிக்கு புதல்வனாக பிறக்கவில்லை ஆயினும் தனது அண்ணன்மார்களை சூழ்ச்சியால் கொன்றும் வென்றும் ஆட்சிகட்டில் ஏறினான் என வரலாற்று ஆசிரியர்கள் பலர் தமது ஆய்வில் கூறியுள்ளனர். அத்துடன் அரசாட்சியில் அவன் யாருக்குப்பின் யாழ்ப்பாண அரசை ஆண்டான் என்பதற்கு வரலாற்று ஆசிரியர் முத்துத்தம்பிபிள்ளை தனது யாழ்ப்பான சரித்திரத்தில் பின்வருமாறு குறித்துள்ளார்.



1 2 3 4

1. பரராரசேகரராசா
2. பண்டாரம்
3. பரநிருபசிங்கன்
4. சங்கிலி

**கட்டுரைக்கான வரலாற்று ஆசிரியரின் மூலாதாரங்கள்**

யாழ்ப்பாணத்தின் இறுதி மன்னன் சங்கிலி என்றும் ஒரு பலமான அரசு ஒன்றை யாழ்ப்பாணத்தில் பேணினான் என்பதையும், வலிமையான கடல்படையை தமிழ் மன்னன் ஒருவன் வைத்திருந்தான் எனவும் அவன் பெயர் சங்கிலி எனவும் அவன் 7ஆம் பரராஜசேகரன் என் அறிய முடிகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாண வரலாற்று ஆசிரியர்களான திரு க. குணராசா, பேராசிரியர் புஸ்பரட்ணம், பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா, பேராசிரியர் சி.க சிற்றம்பலம், ஏகநாயகவல்லி சிவராசசிங்கம், இந்திய வரலாற்று நாவலாசிரியர் திரு கௌதம நீலாம்பரன், திரு க.சச்சிதானந்தன், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், மாதகல் மயில்வாகணப்புலவர் முத்துதம்பிப்பிள்ளை, கோப்பாய் சிவம்,திரு க.இ. குமாரசாமி இணையத்தளங்களில் இன்று செல்வாக்கு செலுத்தும் விக்கிபீடியா, ஏனைய சில இணையதளங்களிலும் இருந்து கட்டுரைக்கான ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு சங்கிலியன் வரலாற்றை ஆராய்கின்ற போது சங்கிலியன் தொடர்பான வரலாற்று மூலதாரமாக இன்றும் கொள்ளப்படுவர் பிரான்சிஸ் சவேரியார் பாதிரியாரின் குறிப்புக்களும், குவோறொஸ் பாதிரியாரின் குறிப்புக்களும் ஆகும். ஏற்கனவே இவர்கள் சங்கிலியனின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மதம் சார்ந்த ஆட்சிசார்ந்த நடவடிக்கைகள் சங்கிலிய மன்னனால் தடைப்படுத்தப்படும் போது அவர்களுக்கு சங்கிலியன் மீது எதிர்ப்பு வருவது இயற்கை. அந்த எதிர்ப்பின் நிமிர்த்தம் அவர்களுக்கு உண்மையான வரலாற்றை சரியாகத் தரமுடியாமல் போய் இருக்கலாம்,

அதுவும் தமது ஆட்சிக்கனவைத் தகர்த்த ஒருவர் மீது அவர்கள் நல்ல எண்ணம் கொண்டிருக்க வாய்ப்பில்லை. எனவே பிற்பட்ட போத்துக் கேயராட்சியில் அவர்களின் கடுமையான போக்கு தமிழ் மக்களுக்கும் சைவ மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இதனால் வரலாற்று ஆசிரியர்கள் அவர்கள் எண்ணம் போலவே வரலாற்றை திரிபு படுத்தியிருப்பார்கள். ஏனைய வரலாற்று ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் மாதகல் மயில்வாகனப்புலவர். இவர் யாழ்ப்பாண வைபவமாலை எழுதிய காலம் கி.பி 1736 ஆம் ஆண்டு எனக் கொள்ளப்படுகின்றது. இந்த நிலையில் சங்கிலியின் காலத்தில் அல்லாமல் இரண்டு நுற்றாண்டுகளுக்குப் பிற்பட்டுப் தோன்றிய மாதகல் மயில்வாகனப்புலவரால் எப்படி ஒரு சரியான வரலாற்றைத் தந்திருக்க முடியும், என்ற வினா எழுகின்றது. அடுத்து அவர் தனது வரலாற்று மூலாதாரமாகக் கொண்டது என்ன என்ற கேள்வி எழும் போது அங்கே தான் பிரச்சினை தோன்று கின்றது. அவரும் பிரான்சிஸ் சவேரியார் பாதிரியாரையும், குவோறஸ் பாதிரியாரையும் கருத்தில் எடுத்திருப்பாரானால் வரலாறு திரிவு படுத்தப்பட்டிருக்கும், தவிர பின்வந்த சுவாமி ஞானப்பிரகாசர் கி.பி 1928 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண வைபவமாலை விமர்சனம் எழுதியபோது மாதகல் மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலையை மையப்படுத்தியே வரலாற்றை கூற முற்பட்டுள்ளார். அத்துடன் எஸ் ஜோன்சனின் யாழ்ப்பாணச்சரித்திரமும் யாழ்ப்பாண வைபவமாலை என்ற வட்டத்துக்குள்ளே இருந்தே கருத்துக்கள் கண்டுகொள்ளப் பெற்றதை முடிகின்றது. இந்தநிலையில் யாழ்ப்பான சரித்திரம் எழுதிய முத்துத்தம்பிப் பிள்ளை சில முற்போக்கான கருத்துக்களை முன்வைத்த போதும் அறுதியும் உறுதியுமாக சொல்ல வேண்டிய பல செய்திகளை தவிர்த்து விடுகின்றார் போலத் தெரிகிறது. யாழ்ப்பாண வரலாறு தொடர்பாக பலவரலாற்று நூல் களை நாவல்களை, ஆக்க இலக்கியங்களை வெளியிட்ட கலாநிதி குணராசாவும் மாதகல் மயில் வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலை என்னும் எல்லையை விட்டுச் செல்லவில்லை. பின்வந்த பேராசிரியர்களில் க.கணபதிப்பிள்ளை தனது முற்போக்கான சில ஆய்வுகளில் உறுதிப்படுத்த முடியாத நில செய்திகளில் நழுவல் போக்கை கையாண்டு இருப்பதை அறிய முடிகின்றது. உண்மையை சொல்ல முனையும் சந்தர்ப்பத்தில் சில தரப்பினரை திருப்பிப் படுத்த முடியாமல் சென்று விடுமோ? என்ற அச்ச உணர்வு அவரது சங்கிலி நாடக வரலாற்றுக் குறிப்பில் புலப்படுவது போலத் தென்படுகின்றது. உதாரணத்திற்காக மன்னார் மதமாற்றம் பற்றிய செய்தி பேராசிரியர் அவர்களால் கீழ் வருமாறு தரப்படுகின்றது.

போர்த்துக்கேய அரசின் கீழ் அடங்கியிருக்கும் வண்ணம் அவனைப் பணித்தான். கி.பி. 1544ஆம் ஆண்டிற்கு முற்பட்ட சில காலங்களில் போர்த்துக்கேயரின் முயற்சியினால் மன்னாரில் வாழ்ந்த மக்களிற் சிலர் கத்தோலிக்கராய் மதம்மாறி வாழ்ந்தனர். கி.பி. 1544ஆம் ஆண்டு மட்டில் அர்ச்.பிரான்சிஸ் சவேரியாரின் தூண்டுதலினால் மன்னார் மக்களுட் பெருந் தொகையானோர் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டனர். இதையறிந்த சங்கிலி மன்னருக்குப் படையனுப்பி மதம் மாறிய யாவரையும் தண்டித்தான். இக்காலந்தொடக்கம் யாழ்ப்பாணத்தரசு போர்த்துக்கேயருக்கு எதிராகவே இருந்து வந்தது. சிங்கள நாட்டில் போர்த்துக்கேயருக்கு மாறான எழுச்சிகளின் முன்னணியில் நின்றவன் மாயாதுன்னை என்னும் சிங்கள அரசகுமாரன். இவனும் சங்கிலியும் போர்த்துக்கேயரை எதிர்ப்பதில் ஒன்று சேர்ந்து கொண்டனர்.

இதே போன்றே தற்கால வரலாற்றாசிரியரும் வராலாற்று மூலதாரங்களை பெற்றுக் கொள்வதில் சிரமப்பட்டுள்ளார்கள் போல் உள்ளது. ஏனெனில் யாழ்ப்பாண வைபவமாலையை கருத்தில் கொண்டு ஆங்காங்கே தமது கருத்தில் சங்கிலிய மன்னன் உண்மை வரலாற்றைக் கூற சிரமப்பட்டுள்ளனர் இந்நிலையில் சங்கிலியன் பற்றிய உண்மைவரலாறு

வெளிக்கொணரப்படுமிடத்து சங்கிலியன் பற்றிய பல முரண்பாடான செய்திகள் முடிவுக்கு வரும்.

**சங்கிலியின் ஆட்சிச்சிறப்பு**

இந்நிலையில் சங்கிலியன் தன்காலத்தில் பலம் மிக்க ஆட்சி ஒன்றை நிறுவி இருந்தான் என்பதை விக்கிபீடிய இணையதளம் பின்வருமாறு குறிப்பிடும்

> சங்கிலி மன்னன் காலத்தின் முற்பகுதியிலும், அதற்கு முன்னரும் யாழ்ப்பாண அரசு கடலில் குறிப்பிடத்தக்க பலம்கொண்டதாக இருந்ததுடன், கடல் கடந்த வணிகத்தின் மூலமும் பெருமளவு வருமானம் பெற்று வந்தது. இப்பகுதியில் போர்த்துக்கீசரின் வணிக முயற்சிகள் யாழ்ப்பாண நாட்டின் நலனுக்குப் பாதகமானது என்பதை உணர்ந்திருந்த சங்கிலி, 1540களில், போர்த்துக்கீச வணிகக் கப்பல்கள் முதன் முதலாக யாழ்ப்பாணத்துறைமுகங்களுக்கு வர முயன்றபோது தனது படைகளை அனுப்பிக் கப்பல்களையும் பொருட்களையும் பறிமுதல் செய்தான்.

**சிங்கள மன்னர்களை இணைத்து அந்நியருக் கெதிராக போராடியது**

எந் நேரத்திலும் யாழ்ப்பாண இராச்சியம் அந்நியர் கைகளில் வீழ்ந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான் என்பதை வரலாற்று ஆசிரியர் செ.முத்துதம்பிபிள்ளை தனது யாழ்ப்பான சரித்திரத்திலும் கலாநிதி க.குணராசா தனது யாழ்ப்பாண வைபவமாலை விமர்சனத்திலும் பின்வருமாறு குறிப்பிடுவார்கள்.

> சங்கிலி மன்னன், போர்த்துக்கேயர் எக்கட்டத்திலும் யாழ்ப்பாண இராச்சியத்தில் நிலை கொள்ளாது தடுப்பதில் முழுக்கவனத்துடன் இருந்தான். 1545ஆம் ஆண்டு சீதாவாக்கை, கண்டி அரசர்களுடன் சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராகப் படையனுப்பிச் செயற்பட்டுள்ளான். அதில் வெற்றி காணமுடியவில்லை. 1552 இல் விதியபண்டாரா என்பன் கோட்டை மன்னனுடனும் போர்த்துக்கேயருடனும் பகைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்தபோது அவனைச் சங்கிலி தன்னுடன் இணைத்துக் கொண்டான். வீரமாகாளியம்மன் கோயிலில் நிகழ்ந்த ஓர் கலவரத்தில் விதியபண்டாரா இறக்க நேர்ந்தது.

அதற்காக சிங்கள மன்னர்கள், தமிழ் நாட்டு மன்னர்களை விஜயநகர நாயக்க மன்னர்கள் போன்றோருடனும் நட்புரிமை பூண்டு ஆட்சியை நடாத்தினான். அந்தவகையில் அந்நியருக் கெதிரான போரில் சங்கிலியால் இணைக்கப்பட்ட சிங்கள மன்னர்களான விதியபண்டார, மயாதுன்னை போன்றோரும் தமிழ் நாட்டு பண்டிய அரசர்களையும் குறிப்பிடலாம்.

**சங்கிலிய மன்னனின் தோற்றப்பொலிவு**

சங்கிலி மன்னன் தனியே தமிழ் பற்றாளனாக மட்டும் இருக்கவில்லை. சிறந்த இந்து சமயப்பற்றாளனாகவும் காணப்பட்டான் என்பதை கவிஞர் அகளங்கள் பின்வருமாறு தனது கவியில் வடித்துள்ளார். யாழ்ப்பாண இறுதி மன்னன் கண்முன்னே கொண்டுவரும் காட்சி அற்புதமானது.

> நீறொடு துலங்கும் நெற்றி
> நீர்ந்திடும் வாள்கை பற்றி
> வீறொடு குதிரை மேலே
> வெற்றியைக் குறித்த தாலே
> ஏறொடு பொருதும் ஏற்றம்
> எதிரிகள் தமக்கோர் கூற்றம்
> மாறொரு வீரன் இல்லா
> மன்னன் சங்கிலியன் தோற்றம்

**மன்னார் படுகொலைகளும் காரணங்களும்**

வரலாற்றாசிரியர்களின் பார்வையில் மன்னார் மதமாற்றம் பற்றிய செய்திகளை குறிப்பிடுகையில் சங்கிலிய மன்னனின் மன்னார் படுகொலைகள் பற்றி பல்வேறு கருத்தாய்வுகள் இடம்பெற்று வருகின்றன. பலரால் வெவ்வேறு வடிவங்களில் இன்றைய வரலாற்று ஆசிரியர்களால் முன்வைக்கப் படுகின்றன. அந்தவகையில் இக் கொலைகள் மதமாற்றத்திற்காகவே இடம்பெற்றது. என சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகினறனர். அத்துடன் சில வரலாற்று ஆசிரியர்கள் அது மதம் பற்றியதல்ல அது அரசியல்

சம்பந்தமானதொன்று எனவும் காரணம் கற்பிக்கின்றார்கள். ஒரு சிலர் மதம் பற்றிய தென்றாலும் தமிழகத்தை ஆட்சி செய்த பாண்டிய மன்னன் பல்லாயிரம் சமணர்களை சைவத்தில் இருந்து மதம் மாற்றியதற்காக கொன்றார்கள். அதே போலவே சோழமன்னர்கள் கொன்றார்கள் உலகில் இவ்வாறு அரசர்கள் மதம் மாறியவர்களைக் கொன்ற சான்றுகள் உண்டு. அதனால் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியும் சைவத்தில் இருந்து கிறிஸ்து மதத்திற்கு பாதிரியார் சவேரியார் மூலம் மாறியவர்களை மீண்டும் சைவத்திற்கு மாறும்படி கூற மன்னன் கருத்தை அவமதித்து சத்திய வேதத்தையே பின்பற்றுவோம் என்ற கருத்தில் உறுதியாக இருந்த காரணத்தால் மதம் மாறிய மக்களை கொன்றான் எனவும் குறிப்பிடுவார்கள்.

பறங்கிகள் மெல்ல மெல்ல அநேகவிடங்களைக் கவர்ந்து தமதாக்கித் தம்மரசு செலுத்தினர். பறங்கிகள் 1543இல் மன்னாருக்கு ஒரு கிறிஸ்தவ குருவை அனுப்பி அங்குள்ள கடையர் சிலரைக் கிறிஸ்தவராக்கினர். மன்னார் யாழ்ப்பாணத்தரசுக்குட்பட்ட தாதலின் சங்கிலி மன்னாருக்குச் சென்று கிறிஸ்தவ குருவை அங்குநின்று மோட்டிக் கிறிஸ்தவர்களாயினோரையுந் தண்டித்து "இனி மன்னாரிலே கிறஸ்த குருமார் அடிவைத்தால் கொடியதண்டம் பெறுவர்" என்றும் ஆஞ்ஞை செய்தான். அவன் அங்கு நின்று மீண்ட பின்னர்த் தூற்றுக்குடியிலிருந்து கிறிஸ்தகுருவொருவர் வந்து கடையாளை வரையும் கிறிஸ்தவராக்கினார்.

மேலும் ஆட்சி விஸ்தரிப்புக்காகக போத்துகீச பாதிரியார்கள் தம்சார்ந்தவர்களை உருவாக்கும் நோக்கோடே சைவர்களை கிறிஸ்து சமயத்திற்கு மாற்றி உள்ளார்கள்; அதனால் தனது ஆட்சியைக் காக்கும் பொருட்டு பலதடவை எச்சரித்தும் பாதிரியார் மதம் மாற்றியதன் விளைவு தான் மன்னார் கொலைகள் எனவும் குறிப்பிடுவார்கள். அத்துடன் தமிழ் மக்களால் மன்னன் இன்றும் நினைவு கொள்ளப்படுவதற்கு காரணம் அவன் ( சங்கிலி ) போத்துக்கேயருக்கு எதிராக போராடியதே என கலாநிதி க.குணராசாவும் முத்துத்தம்பிபிள்ளையும் ஏகநாயகிவல்லி சிவராசசிங்கமும் பின்வருமாறு குறிப்பிடுவார்கள்.

மன்னாரில் மதம்மாறியவர்களையும் மதப்பிரசாரம் செய்த குருவையும், மன்னாரின் அரசியல் நிர்வாகியாகவிருந்த இளஞ்சிங்கம் என்பவரையும் சங்கிலி கொன்றமை மதம்பற்றியதன்று, அரசியல் பற்றியதே எனச்சில வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். மதம் மாறியவர்கள் போர்த்துக்கேயரின் ஊடுருவல்களுக்கு வழி செய்வார்கள் என எண்ணியே சங்கிலி அவ்வாறு செய்தான். சங்கிலியின் நடவடிக்கை ஆனது அரசியல் கண்ணோட்டத்திலும், சமகாலத்தில் போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களையும் கருத்திற்கொண்டு பார்க்குமிடத்து முற்றுமுழுதாக நியாயமற்றது எனக் கூறமுடியாது.

மன்னார்ப் படுகொலைகள்

தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்ற போர்த்துக்கேயர், யாழ்ப்பாண அரசைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரச் சந்தர்ப்பம் பார்த்திருந்தனர். கி.பி. 1542 ஆம் ஆண்டு பிரான்சிஸ் சவேரியர் என்ற போர்த்துக்கேய மதகுரு

முதலாம் சங்கிலி மன்னனைப் பற்றி நிறையவே இலக்கிய ஆக்கம் வெளிவந்துள்ளன. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் சங்கிலி நாடகம் சொக்கனின் துரோகம்தந்த பரிசு ( நாடகம்) செங்கை ஆழியனின் நந்திக்கரை (நாவல்) கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் சங்கிலியம் (நாவல்) குறிப்பிடத்தக்கன.

மன்னார்ப் படுகொலைகள் மதம் பற்றியதன்று இது அரசியல் ரீதியானது என்பதை இதற்கு ஆதாரமாக ஏகநாயகிவல்லி சிவராசசிங்கம் எழுதிய ஈழவரலாற்று பதிவு நூலில் இருந்து ஆதாரம் இங்கே முன்வைக்கப்படுகின்றது.

சங்கிலி மன்னன் எக்கட்டத்திலும் போர்த்துக்கேயரை யாழ்ப்பாண இராச்சியத்தில் நிலை கொள்ளாது தடுப்பதில் முழுக்கவனத்தோடு திட்டவட்டமான கொள்கையோடுமிருந்துள்ளான் என்பது அனது செயல்களிலிருந்து புலனாகின்றது. 1545 ஆம் ஆண்டு சீதாவாக்கை, கண்டி அரசர்களுடன் இணைந்து போர்த்துக்கேயருக்கு எதிராகக் கோட்டைக்குப் படையனுப்பிச் செயற்பட்டான். அதில் வெற்றி காண முடியவில்லை. 1552 இல் விதியபண்டார என்பவன் கோட்டை மன்னனுடனும் போர்த்துக்கேயருடனும் பகைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்தபோது அவனைச் சங்கிலி தன்னுடன் இணைத்துக் கொண்டான்.

சங்கிலி போத்துக்கேயரை யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக்குள் நுழைய விடாது தடுப்பதில் முனைப்புடன் செயலாற்ற சிங்கள்

மன்னர்கள், தமிழகமன்னர்களின் துணையையும் பெற்றிருந்தான். இவ்வாறு முனைந்தபோது கிறிஸ்தவர்களாக மதம் மாறிய மக்கள் அந்நியர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தினுள்ளே நுளைந்து விடுவார்களோ என்ற அச்சம் மதம் மாறிய மக்களை கொலை செய்ய நேரிட்டது எனவும் கூறுகிறவர்கள். இதற்கு ஆதாரமாக எகநாயகிவல்லி சிவராசசிங்கம் எழுதிய ஈழவரலாற்றுப் பதிவு நூலில் இருந்து ஆதாரம் இங்கே முன்வைக்கப்படுகின்றது.

மன்னாரரில் மதம் மாறியவர்களை சங்கிலிய மன்னன் கொடிய கொலைத்தண்டனை கொடுத்தது 1544 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் அல்லது மார்கழிமாதம் ஆதல் வேண்டும் எனவும் அவ்விடத்தில் ( 600 மதம் மாறிய கிறீஸ்தவமக்களை கொன்ற பேசாலை) புதிதாய் ஒரு சத்திய வேத ஆலயம் அமைக்கப்பட்டதையும் பின்வருமாறு முத்து தம்பி பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் எனப்படும் வரலாற்று நூலொன்று சான்றுபடுத்தும். மேலும் அது மதம் பற்றியது அல்ல எனவும் வரலாற்று ஆசிரியர் ( கௌதம நீலம்பரன்) தனது நூலின் அடிக்குறிப்பில் சான்று படுத்தியுள்ளார்.முத்தும்பிப்பிள்ளை.

மன்னார் 'வேதசாட்சி'களின் சம்மாரம் நடந்தது கரவருஷம் ஆடி மாதத்திலான வைபவமாலை கூறும். ஆயின் அக்காலத்து எழுத்துக்களால் நாம் இருக்கின்றபடி அது 1544ஆம் ஆண்டுக் கடைசியில் கார்த்திகை அல்லது கழியிலாதல் வேண்டும். கொலையுண்ட தலம் தோட்டவெளியாமென்பது பரம்பரை. அங்குப் போர்த்துக்கேயர் பிற்காலம் ஓராலயங் கட்டி வைத்தனர். இவ்வாலயத்தின் இடிகரை இற்றைக்குச் சில ஆண்டுகளின் முன் ஓர் கத்தோலிக்க குருவானவரால் கண்டுபிடிக்கப்பட்டு அவ்விடத்தில் புதிதாய் சத்தியவேத ஆலயம் இந்நாட்களில் நிருமாணிக்கப்பெற்று வருகின்றது.

**சங்கிலிய மன்னனின் சமுதாயப்பணிகள்**

மன்னன் சங்கிலியன் தனியே ஆட்சி மதம் சார்ந்த விடையத்தில் மட்டும் கவனம் செலுத்தவில்லை நாட்டுமக்கள் நலனிலும் செல்வாக்கு செலுத்தினான் வைத்தியசாலைகள், நூல்நிலையங்கள், நிர்ப்பாசன குளங்கள், மக்கள் வழிபாட்டு ஆலயங்கள் பலவற்றை ஆக்கியுள்ளான் என்பது பின்வரும் இணையதளத்தின் அடிகளுடாக புலப்படும்

யாழ்ப்பாண அரசின் கட்டுப்பாட்டிலே நிர்வகிக்கப்பட்டு வந்த வைத்தியசாலையாக விளங்கியது நாயன்மார்கட்டு வைத்தியசாலை. ஆங்கிலேயர் காலத்தின் தான் நோயாளிகள் தங்கி வைத்தியம் பெற்றுக் கொள்ளும் வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன என்பது பொதுவான கருத்து. யாழ்ப்பாண அரசர் காலத்திலே அரச வைத்தியசாலையாக விளங்கிய நாயன்மார்கட்டு வைத்தியசாலை நோயாளர்கள் தங்கி வைத்தியம் பெறும் வைத்தியசாலையாக விளங்கியுள்ளது. இந்து சமய குருமாருக்கென்றும், போர் வீரர்களுக்கென்றும் தனியான வைத்திய விடுதிகள் இருந்துள்ளன. பொது மக்களும் தங்கி ரிதியம் செய்ய வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

அது மட்டுமல்ல சத்திர சிகிச்சைகளும் இடம் பெற்றுள்ளன. அவ்வைத்தியசாலையில் கிருமிநாசினியாக வெங்காயம் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்த வைத்தியசால சங்கிலியன் ஆட்சிக் காலத்தில் சிறப்பாக இயங்கியுள்ளது.

சிலையாக வீற்றிருக்கும் சங்கிலியன், மொழிக்கும், சமயத்திற்கும், ஆற்றிய பெரும் பணிகளுடன் வைத்தியத்துறைக்கும் ஏனைய அரசுகளுடனான நட்புக்கும், நம்பி வந்தவர்களை வாழ வைப்பதற்கும் ஆற்றிய பணிகள் போன்றே கல்விப் பணியையும் விவசாயப் பணியையும் போற்றியுள்ளான். குளங்கள் பராமரிப்பு இதில் சிறப்பிடம் பெறுகின்றது.

அதேபோல் நல்லூரை அண்டிய நாயன்மார்கட்டில் சரஸ்வதி மஹால் என்ற அரசால் ஆதரிக்கப்பட்ட நூல் நிலையம் சிறப்புடன் இருந்துள்ளது. யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் சரஸ்வதி மஹால் என்ற சிறப்புடன் விளங்கிய நூல் நிலையத்தையும் சிதைத்து விட்டனர் என்பது வரலாற்றுப் பதிவாகவுள்ளது. வரலாற்றில் அசைக்க முடியாத மறுக்க முடியாத மன்னன்

**சங்கிலிய மன்னனின் சீர்மிகு பண்புகள்**

சீரியபணிகள் பலவற்றில் ஈடுபட்ட மன்னன் சிறந்தபண்பாளனாக கவிஞர் அகளங்கன் தனது கவியில் எடுத்துக்கூறுவார்

கூரிய பார்வை கொண்டோன்
குணமெனுங் குன்றாய் நின்றோன்
நேரிய வழியில் சென்றோன்
நெஞ்சுரந் தன்னால் வென்றோன்
பாரிய பெருமை மிக்க
பண்பாட்டு நிலையைக் காத்தோன்
சீரிய நெறியில் யாழைத்
திறம்பட அரசு செய்தோன்

**சங்கிலியின் வீரம்**

அவன் இந்துமதம் காக்கவும் அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்கவும் தமிழ் பண்பாட்டை மேலோங்கச் செய்யவும் அற்றிய அரும்பணி கவிஞர் அகளங்கன் கவிவரிகளில்

யாழினைக் காத்த மன்னன்
யாவரும் போற்ற வாழ்ந்தோன்
பாழினில் போகும் வண்ணம்
பகைத்த அன்னியரை வென்றோன்
வாளினை உயர்த்தி மண்ணில்
வண்தமிழ் சைவம் காத்தோன்
தோளினில் தமிழ்ப்பண் பாட்டைச்
சுமந்த சங்கிலியன் வாழ்க.

போரினில் சங்கிலியமன்னனின் வீரம் போர்த்துக்கீசப்படையுடன் நல்லூர் வீரகாளி அம்மன் கோயில் அருகில் உள்ள வயல் வெளியில் போரிட்ட போது பதினொருநாள் போரிலும் போத்துக்கேயர் தோற்றார்கள் எனவும் இறுதி நாள் போரில் 1700 பேர் போர்த்துக்கேயப்படையில் கொன்றொழிக்கப்பட்டார்கள் எனவும் வரலாற்று ஆசிரியர்கள் சான்று தருவார்கள்.

இப்படியே பத்துநாள் யுத்தம் நடந்தது. சங்கிலி பத்தாநாளில் 1700 பறங்கிகளைக் கொன்றான். பதினொராநாளிற் சங்கிலி சிறந்த போர்வீரர் 400 பேரைத்தலைப்படையாகத் திரட்டிக் கொண்டு மற்ற படைகள் பின்செல்ல முன்நடந்தான். பறங்கிகள் துப்பாக்கிப் போரிற் பயனில்லையென்று கண்டு வாட்போருக் காயத்தமாய் நின்றனர். இருதிறப்படைகளுங் கைகலந்தன. சங்கிலி படைவீரர் புலியெனப் பாய்ந்து வெட்டினர் பறங்கிகள் இனி நாம் சரண் புகுவதே தக்கதென்றெண்ணிப் பின்வாங்கத் தலைப்பட்டனர். அச்சமயம் தரங்கம்பாடியிலிருந்து பறங்கிகளுக்குத் துணைப்படையொன்று வந்து சேர்ந்தது. அதனால் பறங்கிகள் ஊக்கங்கொண்டு முன்னோக்கி நின்று பொருதனர். பறங்கிகள் போர்க்களத்துக்குப் பக்கத்தே இருமருங்குமுள்ள காட்டிலுள்ளே மறைந்திருந்து துப்பாக்கியால் பக்கப்படையைக்கொண்டு குண்டு மாரியும் பொழிவித்தார்.

**நயவஞ்சகத்தால் தோற்கடிக்கப்பட்ட சங்கிலி**

நயவஞ்சகத்தால் தமிழ் மன்னன் தோற்கடிக்கப்பட்டான். காக்கை வன்னியன் காட்டிக் கொடுத்து சங்கிலி சிறைப் பிடிக்கப்பட்டான் என்பதுவும் கலாநிதி க. குணராசா தனது யாழ்ப்பாண வைபவமாலை ஒரு மீள்வாசிப்பில் குறிப்பிட்டு இருப்பதை அறிய முடிகின்றது.

**சங்கிலியின் இறுதி நிலை**

அந்த வேளையில் பார்த்துத்தான் தமிழ் நிலத்தின் களைகளும் களங்களும் ஓருருவாய் வடிவெடுத்த காக்கையன் என்ற துரோகி, நட்பு பேசிக் கொண்டு வந்து நின்றான். சங்கிலி மன்னரின் பாசறை பாசலில், அந்தத் திடீர் வருகையைச் சற்றும் எதிர்பாராத மன்னர், பாசறைத் துகின் மனையின் நடுவே இருந்த தூணில் தொங்கவிடப் பட்டிருந்த ராஜ வாளை உறையுடன் எடுத்து இடுப்பில் அணிந்து கொள்ளலாமா என்று ஒரு கணம் எண்ணினார். மறுகணம், நட்பு பேச வருபவனை சந்தேகிப்பது அறத்திற்கு அழகல்ல என்றெண்ணி, இதய சுத்தியுடன் இனித்த முகத்துடன் இருகை நீட்டி அவனை வரவேற்றார்.
அந்தத் துரோகி, சிரித்த முகம் காட்டி செய்த தவறுகளுக்கெல்லாம் வருந்துவதாக நீலிக் கண்ணீர் வடித்து, மாயமான வார்த்தைகள் சொரிந்த வண்ணம் நெருங்கி வந்து பாதம் பணிந்தான் விலை மதிக்க முடியாத ரத்தினக் கற்கள் பதித்த தங்கச் சங்கிலி...

சிறைப்பிடிக்கப்பட்ட சங்கிலி பின்னர் கோவா கொண்டு செல்லப்பட்டு அங்கு போர்த்துக்கீசரால் விசாரணை செய்யப் பட்டு தூக்கிலிடப்பட்டான் என்பது வரலாற்றாசிரியர்களின் முடிவு.

அதன்பின்னர்ப் பறங்கிகள் சங்கிலியை நீதாசனத்தர் சபைமுன்னேயிட்டு
1. 'நீ முடிசூட்டப்படாது இராசாதிகாரஞ் செய்தது முதற்குற்றம்.
2. தந்தைக்குரிய அரசைக் கிரமந் தவறிக் கவர்ந்தது இரண்டாங்குற்றம்.
3. இராசகுமாரர்களைக் கொலைபுரிந்தது மூன்றாங் குற்றம்
4. சனங்களை வருத்தியதும் அறுநூறுபேரை வன்கொலைபுரிந்ததும் நான்காங்குற்றம்

எனக் குற்றநிருபணஞ்செய்வித்து அவனைச் சிரசேதஞ்செய்து கொல்லுமாறு தீர்ப்பிட்டனர். அவ்வாறே காளிகோயிற் சந்நிதியில் பறங்கிகள் அவனைச் சிரச்சேதஞ் செய்து கொன்றனர். அது கேட்டுச் சங்கிலிதேவி தீ வளர்த்து அதிற்பாய்ந்துயிர்விட்டாள். சங்கிலியினதுதேவி, தீப்பாயுமுன் இத்தீவினை யிழைத்த காக்கைவன்னியன் மனைவியும் தன்னைப்போலத் துயரடைதல்

வேண்டுமென்றெண்ணி, ஒரு தூதனையனுப்பிச் சங்கிலியோடு காக்கைவன்னியனும் பறங்கிகளால் மடிந்தான் என்றவனுக்கு அறிவித்தான்

**சங்கிலிபற்றிய ஆவணப்படுத்தல்கள்**

இவ்வாறு அமைகின்ற சங்கிலியன் பற்றிய பல முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் மறைக்கப்பட்டுவிட்டன. மன்னார்க் கொலைகள் இடம் பெறாது விட்டிருப்பின் எதையும் வரலாற்று முலாதாரங்கள் ஆக்குவோரான போத்துகீசர் சங்கிலிய மன்னன் வரலாற்றை ஆதாரப்படுத்தியிருப்பார்கள், ஆனால் போர்த்துகீசருக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்ததன் காரணத்தாலும் அவர்கள் சமயத்தை எதிர்த்த காரணத்தாலும் வெளிவரவேண்டிய சங்கிலியன் பற்றிய பல செய்திகள் போர்த்துகீசரிடம் காணப்பட்டாலும் விருப்பமின்மை காரணமாக இன்னும் வெளிவராமல் இருப்பது கவலைக்குரிய தொன்றாகும். இக்கால அட்சிக்காலத்தில் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் தமிழ்மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தாலும் ஈழத்தின் இறுதிதமிழ் மன்னன் வரலாற்றை வெளிக் கொண்டுவருவதில் ஆர்வமற்று இருக்கின்றனர். ஆனால் தமிழரசுக் கட்சியின் மேனாள் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஈழ மன்னன் சங்கிலியின் உண்மை வரலாற்றை வெளிக்கொணர முயன்று இருப்பதைஅறிய முடிகின்றது. இதன் உண்மைத்தன்மை தமிழக வரலாற்று ஆசிரியர் திரு கௌதம நீலம்பரன் அவர்கள் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு அ.அமிர்தலிங்கத்தின் ஆதரவையும் தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் துணையுடன் சங்கிலியன் பற்றிய உண்மை வரலாற்றை வெளிக்கொணர முயற்சி மேற்கொண்டு இருந்தார் என்பதை பின்வருமாறு தனது ஈழவேந்தன் வீர சங்கிலி என்னும் நூலில் குறிப்படுவார்கள்.

அடுத்த சில நாட்களில் நாடக ஒத்திகை திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது. மேடையேற்றமும் இல்லை என்று அறிந்து, மிகவும் வருத்தப்பட்டு, ஒரு சில நாட்கள் நான் அலுவலகத்திற்கே செல்லாமலிருந்துவிட்டேன். ஆசிரியர் மணியன் ஒரு நாள் என்னை அழைத்து, 'உன் வருத்தம் எனக்குப் புரிகிறது. நான் சி.எம்.மைச் சந்தித்த போது அவர் உன் கதையைப் பற்றி விபரம் கேட்டார். சொன்னேன். அவர், 'இந்தக் கதையை இப்போது நாடகமாகப் போடவேண்டாம். பிரச்சனை வரும். மத்திய அரசு ஒரு வேளை இதைத் தடை செய்யச்சொல்லலாம். முதலில் இதை உங்கள் வார இதழில் பிரசுரியுங்கள். மக்கள் கவனத்துக்கு வந்த பிறகு இதை மேடையேற்றலாம். இயலுமானால் இதை நாம் திரைப்படமாகவும் எடுக்கலாம்' என்றார். சி.எம். (எம்.ஜி.ஆர்)

தமிழகத்தில் சங்கிலி நாடகம் தமிழரசுக் கட்சி முன்னாள் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் காலத்தில் நாடகமாக்கப்பட்டு சிறப்பாக மேடையேற்றப்பட்டு வந்ததை திரு. கௌதம நீலம்பரன் தனது ஈழவேந்தன் சங்கிலி எனும் நாவலின் முன்னுரையில் ஆதாரப்படுத்துவார்.

இவ்வேளை பேரசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் சங்கிலி நாடகம் எழுதப்பட்டு அது பலதடவை ஈழத்தில் மேடை ஏற்றப்பட்டது. இந்நாடகம் இந்நூலின் பின்னிணைப்பாகத் தரப்படுகிறது.

**சங்கிலிய மன்னனும் கோப்பாயும்**

சங்கிலிய மன்னன் கோட்டை ஒன்றின் இடிபாடுகள் கோப்பாயில் தற்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிவளாகத்தில் உள்ளதாக வரலாற்று ஆசிரியர் க.இ. குமாரசமி குறிப்பிடுவார். மேலும் கல்வியியற் கல்லூரிக்கு செல்லும் பாதை இராசபாதை எனக்குறிப்பிடப்படுகின்றது. இது சங்கிலிய மன்னன் செல்வதால் இப்பெயர் பெற்றது எனக் குறிப்பிடுவார். கல்லூரி விளையாட்டு மைதானமும் வீரசங்கிலியன் மைதானம் என அழைக்கப்படுகின்றது. அப்பிரதேசக்காணிகள் இன்றும் கோட்டையும் கோட்டை வாய்க்காலும் என காணி உறுதிகளில் காணிகளின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றது.

நல்லூரில் யமுனா ஏரி போல் அரசமகளிர் நீராட கோப்பாயில் குதியடி குளம் இன்றும் கோப்பய் சந்தியை அண்டி வயல் பிரதேசங்களில் உள்ளது எனவும் திரு க.இ. குமாரசாமி தனது கோப்பாய் வரலாற்றில் குறிப்பிடுவார். இக்கருத்துக்கு ஏனைய வரலாற்று ஆசிரியர்களும் உடன்படுவதை அவதானிக்கமுடிகிறது. நல்லூரைப் போத்து கேயரிடம் இழந்த சங்கிலியன் நல்லூர் கோட்டையை தீயினுக்கு இரையாக்கிவிட்டு சுரங்கப்பாதை வழியாக கோப்பாய் கோட்டைக்குத் தப்பிச் சென்றான் என்பதில் மயில்வாகப்பபுலவர் உட்பட ஏனைய வரலாற்று அறிஞர்களும் உடன் பட்டு இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. கோப்பாயில் பழைய கோட்டை வாசல் 2000 ஆண்டு வரை காணப்பட்டது எனவும் பின்னர் வரலாறு தெரியாதவர்களால் இடித்தழிக்கப்பட்டது எனவும் இவ்விடிபாடுகளை அகழும்போது செங்கற்கள் காணப்படுவது ஆகவும், குதியடிக் குளத்தை ஆய்வு செய்தபோது சாம்பல் மாதிரியான பொருள் காணப்பட்டதாயும் அது குளம் கட்டும் போது சம்பிரதாயமாக மன்னர்களால் இடப்படுவது எனவும் திரு க.இ. குமாரசாமி திரு. ந. கிரிதரன் ஆகியோர் அவரின் நூலில் குறிப்பிடுவார். இச்செய்தி பின்வருமாறு அவரது நூலில் காணப்படுகின்றது.

கோப்பாய் கோட்டை

ஈழவள நாட்டின் வடபகுதியிலிருந்து தமிழரசுக்கு நல்லூர் இராசதானியாகவிருந்து, சிங்கைபுரம், நல்லைநகர், யாழ்நகர் என்ற பெயர்களும் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்டன. தலைநகரில் பலமான கோட்டையிருந்தது. பாதுகாப்பிற்காக கோப்பாயிலும் வன்னிப் பிரதேசங்களிலும் கட்டப்பட்ட கோட்டைகளிலிருந்தன. கோ - அரசன் பாய் - இருப்பிடம் கோப்பாய் என்று அரசன் இருப்பிடம் எனவும் நல்லூர் மந்திரி மனையருகே தூர்ந்து காணப்படும் சுரங்கப்பாதை இங்கிருந்து உப தலைநரான கோப்பாய்க்குச் செல்ல உதவியாகவும் ஆபத்துக் காலங்களில் தலைநகரிலிருந்து அரசர் இதன் மூலம் தப்பிக் கோப்பாய் சென்றதாகவும் யாழ்ப்பாண இராச்சியம்எனும் நூலில் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் அரசின் கூழைக்கைக் சர்ச்சை செய்த விபரங்களை இலங்கைச் சரித்திரம் கூறுகிறது. சிங்கள அரசினால் காலத்துக்குக் காலம் எடுத்த படையெழுச்சிகள் முறியடிக்கப்பட்டு தமிழரசு நிலைத்து நின்றது. 1550 இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கீசர் தென்னிலங்கையில் கரைநாடுகளை வசப்பத்தி...

பற்ற எடுத்த படையெழுச்சிகள் பல தோற்கடிக்கப்பட்டன. மீண்டும் 1624இல் புரட்டாதியில் காக்கைவன்னியன் என்பான் சூழ்ச்சியுடன் பறங்கிப் படை வழமைபோல் கொழும்புத்துறையில் இறங்காது பண்ணையில் இறங்கி நல்லூரை நோக்கி நகர்ந்தது. அன்று விஜயதசமி. ஆயுத பூசையில் தமது ஆயுதங்களை படையினர் வைத்து வழிபாடு செய்து கொண்டிருந்த நேரம். திடீரென நுழைந்த பறங்கிப் படைகளின் குண்டுமாரிக்கு எதிர்கொள்ள தமிழ் வீரர் ஆயத்தமான போது காக்கைவன்னியன் தோன்றிச் செய்த சூழ்நிலையினால் சங்கிலியனை அகப்படுத்திச் சிறையிலிட்டனர். சங்கிலி சிறைக் கூடத்திலிருந்து சுரங்கப் பாதை வழியாக வெளியேறி தப்பி கோப்பாய்க் கோட்டைக்குப் பின்வாங்கினான். பறங்கியர் நல்லூர்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு கோப்பாய்க் கோட்டையை நோக்கி வந்தனர். பறங்கியர் வருகையை அறிந்த சங்கிலியன் இரவோடிரவாய் வன்னிக்கோட்டையை நோக்கிச் செல்லும் வழியில் காக்கை வன்னியன் உதவியுடன் பறங்கியர். ஆனையிறவுப் பூசந்தியில் வைத்துச் சங்கிலியனை இலேசாக அகப்படுத்தியதாகச் சரித்திரம் கூறுகிறது.
பறங்கியர் நல்லூர்க் கோட்டையைப் பிடித்துப் பண்ணையில் கோட்டை கட்டினர். கோப்பாய்க் கோட்டையயம் முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கினர். குறித்த தரைமட்டமாக்கப்பட்ட கோட்டையின் மேற்குப் புறமாய் வீதியருகிலிருந்த நுழைவாயிலின் பழைய கோட்டை (OLD CASTLE) என்று எழுதப்பட்டிருந்த கட்டிடம் சில காலத்தின் முன்னரே இடித்தழிக்கப்பட்டது தெரியும். குறித்த கோட்டை வளைவில் செங்கற்களாலான உறுதியான சுவர்களையுடைய விசாலமான பழைமையான வீடு ஒன்று இன்றுமுண்டு. தற்போது பல வீடுகள் கட்டப்பட்டுள்ளபோதும் சில இடங்களில் நிலத்தை அகழும் போது செங்கற் குவியல்கள் வெளிப்படுகின்றன. குறித்த கோட்டையிலிருந்த இடத்திலுள்ள குடியிருப்பாளர் உறுதிகளிலும் கோட்டை வாய்க்காலும் பழைய கோட்டையும் என்றே எழுதப்பட்டிருப்பதுவும், அகழும் போது காணப்படும் செங்கற் குவியல்களும், நல்லூர்க் கோட்டைக்கு யமுனா ஏரி போன கோப்பாய்க் கோட்டைக்குக் குதியடிக்குளம் நீச்சல் தடாகமாக அமைந்திருந்ததும், குறித்த கோட்டை வளவிற்கு தெற்கு எல்லையில் செல்லும் கோட்டை வாய்க்காலும் கோப்பாய்க் கோட்டையை நினைவுபடுத்தும் சின்னங்களாக இன்றும் உள்ளன.

சுவர்கள் இடிக்கப்பட்டபோது தென்மேற்கு மூலையில் 6 ஓ 2 அடி வரையுள்ள ஓர் குழி காணப்பட்டது. அதற்குள் சாம்பல் போன்ற உக்கிய அசேதனப் பொருள்கள் காணப்பட்டன. பண்டைய வழக்கப்படி தடாகம் பூரணமாக்கப்பட்டவேளை கொடுக்கப்பட்ட நரபலியின் சேதனப் பொருட்களாகயிருக்கலாம் என்ற அபிப்பிராயம் பல அனுபவத்தவர்களினாலும் கூறப்பெற்றது.

இவ்வாறு ஈழத்தின் இறுதிமன்னன்


சங்கிலியின் வரலாறு கோப்பாய் கிராமத்துடன் பின்னிப்பிணைந்து இருப்பது காரணமாக கோப்பாயில் மன்னன் வாழ்ந்த பூமியில் அவனுக்கு ஒர் நினைவாலயம் ஒன்று அமைக்கப்பட வேன்டிய நேரத்தில் யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரித் தமிழ் மன்றம் தமிழ் தொண்டு ஆர்வலர்கள் பலரின் துணையுடன் தனிக்கருங்கல்லினால் ஆன மிகப்பெரிய சிலையை கைதேர்ந்த இந்திய சிற்பாசிரியரைக் கொண்டு ஸ்தாபிக்கமுனைகையில் அச்சிலை ஸ்தாபகம் தொடர்பான அனுமதி துரதுஷ்டவசமாக கல்வி அமைச்சினால் தாமதிக்கப்படுவது கவலைக்குரிய தொன்றாகும்.

**உசாத்துணை**


- கணபதிப்பிள்ளை, க., *(2008)*, இலங்கைவாழ் தமிழர் வரலாறு யாழ்ப்பாணவரலாறு கி.பி *1619* வரை, குமரன் புத்தக இல்லம் கொழும்பு.
- முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., *(2008)* யாழ்ப்பாணச்சரித்திரம், சேமமடு பதிப்பகம் கொழும்பு.
- சிற்றம்பலம், சி.க., *(1993)*, யாழ்ப்பாணம் தொன்மைவரலாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு திருநெல்வேலி இலங்கை.
- சச்சிதானந்தன், ச., *(1998)*, யாழ்ப்பாணக் காவியம், நவயோக பிறிண்டேர்ஸ் யாழ்ப்பாணம்.
- ஞானப்பிரகாசர் சுவாமி, *(1928)*, யாழ்ப்பாண வைபவமாலை, விமர்சனம் சுவாமி ஞானப்பிரகாசர் யந்திரசாலை அச்சுவேலி.
- குணராசா, க., *(2000)*, ஈழத்தமிழர் வரலாறு பூபாலசிங்கம் வெளியீடு, யாழ்ப்பாணம்
- குணராசா, க., *(2000)*, ஏஸ் ஜோன்சனின் யாழ்ப்பாணச் சரித்திரம் ஒரு மீள்பார்வை, *(1978)*, பூபாலசிங்கம் பதிப்பகம் யாழ்ப்பாணம்.
- குணராசா, க., *(2004)*, சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவமாலை விமர்சனம் தமிழர் உலகம், கமகம் பதிப்பகம், யாழ்ப்பணம் இலங்கை
- குணராசா, க., *(2008)*, யயாழ்ப்பாணச்சரித்திரம் வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், இலங்கை.
- மயில்வாகனப்புலவர், மாதகல் *(2008)*, யாழ்ப்பாண வைபவமாலை, மாதகல் கல்வி அபிவிருத்திசங்க வெளியீடு, யாழ்ப்பாணம் இலங்கை
- நீலாம்பரன், கௌதம. *(2002)*, ஈழவேந்தன் சங்கிலி, சாரதா பதிப்பகம் சென்னை.
- ஏகநாயகவல்லி, சிவராஜசிங்கம், *(2003)*, ஈழவரலாற்றுப் பதிவுகள் அறோவெல் பப்பிளிசர், ரொறான்ரோ.
- குமாராசாமி .க.இ., *(1998)*, கோப்பாய் வரலாறு கூட்டுறவு அரவிந்த வாசம் கோப்பாய், இலங்கை
- குணராசா, க. *(2001)*, யாழ்ப்பாண வைபவமாலை ஒரு மீள்வாசிப்பு கமலம் பதிப்பகம்
- குணராச,க., *(2002)*, மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம் கமலம் ,பதிப்பகம் இலங்கை .
- ஜெகந்நாதன். பொ., *(1987)*, யாழ்ப்பாணத்தமிழரசர் வரலாறும் காலமும், யாழ் இலக்கிய வட்ட வெளியீடு, யாழ்ப்பாணம் ,இலங்கை.

# முத்தமிழ் - மூலக் கருத்துப் பற்றிய ஒரு குறிப்பு

பேராசிரியர்,
கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி



தமிழ் மொழியின் சிறப்பம்சங்களில் ஒன்று முத்தமிழ்க் கோட்பாடு என்பர். இயல், இசை, நாடகம் என்ற ஒவ்வொன்றும் அநாதி காலந் தொட்டே தனித்தனியே சிறப்புடன் வளர்ந்திருந்ததாலேயே இக் கோட்பாடு தோன்றிற்று என்ற ஊகம் பொதுப்படையாக நிலவுவதுண்மை. அழிந்து போனவையாகக் கொள்ளப்படும் நூல்களின் பெயர்கள் சான்றாதாரமாக எடுத்துக் கூறப்படுவதும் வழக்கம்.

இக் கோட்பாடு தோற்றுவதற்கான சூழ் நிலைகள் யாவை? எவ்வாறு வளர்ந்தது? சங்க இலக்கியங்களில் இக்கருத்துக் காணப்படுகின்றதா? இவ் வினாக்கள் பற்றிச் சிந்திப்பதற்குதவியாக இச்சிறு குறிப்பு எழுதப் பெறுகின்றது.

முத்தமிழ்ப் பாகுபாடு தமிழில் அநாதி காலம் தொட்டுக் காணப்படும் பண்பு என்று கொள்ளப்படுவதுண்டு. மொழிகள் அமைப்பாலும் உறுப்பாலும் வேறுபடினும் அவற்றின் தோற்றம், ஆரம்ப கால வளர்ச்சி முதலியன சில பொது விதிகட்கு உட்பட்டனவே என்பது எல்லாரும் அறிந்ததே. ஒரு மொழியின் பூர்வீக, தொடக்க நிலையில் இத்தகைய பாகுபாடுகள் தோன்ற முடியாது என்பது மொழியியல் உண்மை. "நடனம், இசை, கவிதை ஆகிய மூன்று கலைகளும் முதலில் ஒரே கலையாகவே தோன்றின. கூட்டுத் தொழில் ஈடுபட்டிருந்தோரின் ஒத்திசை அசைவின் அடியாகவே இவை தோன்றின. இவ் அசைவு இரண்டு அம்சங்களைக் கொண்டதாய் இருந்தது. ஒன்று உடலசைவு, இதன் அடியாகவே நடனம் தோன்றிற்று. மற்றது வாயசைவுச் சப்தம், இதுவே மொழியின் கருவாகும்." இவ்வாறு கலைகளின் மூலத்தை எடுத்துக் காட்டுவர் பேராசிரியர் தொம்சன்[1]. பேராசிரியர் கூறும் தோற்ற நிலைக்கு எழுத்திலக்கியச் சான்று காட்டுதல் முடியாதது. மனிதவியற்றுறை ஆராய்ச்சிகள் கொண்டே இவ்வுண்மை நிறுவப்படும். புய்கர் என்பார் "தொழிற் பாடல்" களைக் கொண்டு செய்த ஆராய்ச்சிகள் இம் முடிபுக்கு முன்னோடியாயமைந்தன.[2]

தமிழிலுள்ள மிகப் புராதனமான இலக்கியம் சங்க இலக்கியமாகும். அவ்விலக்கியத் தொகுதியில் முத்தமிழ்ப் பாகுபாடு காணப் படுகின்றதா என்று பார்த்தல் வேண்டும்.

இயலையும் இசையையும் தனித் தனிப் பிரிவுகளாகக் கொள்ளும் பண்பு சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. இயல் எனும் இலக்கியம் அக்காலத்தில் முற்றிலும் இசை வழிப்பட்டே நின்றது. அக்காலத்திற் பெரிதும் போற்றப்பட்ட அகவல் யாப்பு இசை பற்றியதே. அகவல் என்ற சொல் அகவு என்ற வினையடியாகப் பிறந்தது; அகவு என்ற சொல்லுக்கு "மயில் போல் சப்தமிடல், பாடுதல், மயில் போல் ஆடுதல், அழைத்தல்" எனும் பொருட்கள் உள என்று திராவிடச் சொல் வரலாற்றகராதி கூறும். இலக்கியப் படைப் புக்கள் 'பாடல்' கள் என்றே கொள்ளப்பட்டன. பாடல், பாடு என்னும் வினையடியாகப் பிறந்தது.

கலி யாப்பின் அடிப்படை அம்சங்களையும் கலித் தொகையிற் காணப்பெறும் உரையாடற்

பாக்களையும் ஆராய்ந்து கலியில் பாடலும் நடனமும் இணைந்தே காணப்படுகின்றன என்பது நிறுவப்பட்டுள்ளது.[3]

யாப்பமைதியை விட்டு இலக்கிய அகச் சான்றுகளைக் கொண்டு பார்க்குமிடத்தும் இவ்வுண்மை புலனாகின்றது. அவைக்கு வந்த புலவன் தன் ஆக்கத்தைப் பாடியே காண்பித் தான். பரிசில் பெறுவோர் நடைமுறையை விளக்கமாகக்கூறும் மலைபடுகடாம் புதிய பாடல்களை "விருத்திற்பாணி" என்றே கூறும். இவ்வாறு பாடப்பெற்ற பாடல்கள் சிலவற்றுக்கு விறலி நடனமாடியதாகக் கொள்ள இடமுண்டு. கூத்தர்கள் ஆடிய கூத்தின் கதை, பாடல்கள் பற்றிய தெளிவான குறிப்புக்கள் பத்துப்பாட்டு எட்டுத் தொகையில் இல்லையெனினும், கூத்தாடிகள் பாடல்களாகப் பாடி பரிசில் பெற்றனர் என்பதை நிரூபித்து நிற்கின்றன கண்ணுனர், கோடியர், வயிரியர் பற்றி வரும் குறிப்புக்கள்.

இவற்றைச் சான்றாகக் கொண்டு பார்க்கும் பொழுது அக்காலத்திலே செய்யுள், இசை, கூத்து என்பனவற்றைத் தனிப்பட்ட கலைப்பிரி வுகளாகக் கொள்ளவில்லை என்பது புலனாகும். அக்காலத்து இலக்கிய கர்த்தர்களையும் அவர்கள் தோற்றுவித்த படைப்புக்களையும் நோக்கும் பொழுது இத்தகைய ஒரு பாகு பாடு தோன்றியிருக்க முடியாதென்பது தெரியவரு கின்றது.

எனினும், முத்தமிழ் கோட்பாட்டின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த காலஞ் சென்ற பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இக் கோட்பாடு பற்றிய முதற் குறிப்புப் பரிபாடலிற் காணப்படுகின்றது எனக்கூறியுள்ளனர்.[4]

பரிபாடல் சங்க இலக்கிய நூலன்று. இலங் கையில் பெருவழக்கிலிருக்கும் கால வரையறை நாமாவளிப்படி, அது சங்கமருவிய காலத்தைச் சேர்ந்தது. வையாபுரிப்பிள்ளை அவர்களே அது மிகப் பிந்திய நூலென்பர்.

முத்தமிழ் பற்றிக் குறிப்பிடுவதாகக் கூறப் படும் பரிபாடற்பகுதி திருக்குறள் பரிமேலழகர் உரையில் வரும் ஒரு மேற் கோளாகும். 23 ஆம் குறளுக்கு விளக்கம் கூறியவிடத்து மை ஈற்றுப் பெயர் எண்ணுப் பொருளில் நிற்பதற்கு உதாரணங் காட்டுவதற்கு,

"தெரிமாண் தமிழ் மும்மைத்தென்னம் பொருப்பன் பரிமா நிறையின் பரந்தன்று வையை"

எனும் பரிபாடற் பகுதியைச் சான்றாக எடுத்துக் காட்டுகின்றார். 'பாண்டியனது குதிரைப்படை நிரையிலும் பார்க்க நீண்டதன்று வையை' என்பது இதன் பொருள். இதில் வரும் மும்மை எண்ணுப் பொருளில் நின்றது என்றார் பரிமேலழகர். பொதுப்படையாக எண்ணுப் பொருள் என்றனரேயொழிய, இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவினையும் அவர் திட்டவட்டமாகக் கூறவில்லை. இருப்பினும் "மும்மைத் தமிழ்" - மூன்று தமிழ் - இயல் இசை நாடகம் பற்றிய குறிப்பாகவே இருத்தல் வேண்டுமெனக் கொண்டார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. அவ்வாறு கொள்ளும் பொழுது, "தமிழ்" என்ற சொல் தமிழாகிய மொழியையும் இலக்கியச் செல்வத்தையுமே குறிக்கும் என்று கொண்டுள்ளார்." என்பது வெள் ளிடைமலை, ஆனால் "தமிழ்" என்ற சொல் பரிபாடலில் பிறிதோரிடத்தில் தமிழ் நாடு முழுவதையுமே குறித்து நிற்பதைக் காணலாம்.

"தமிழ் வையைத் தண்ணம் புனல்" (6:60)

இங்கு தமிழ் என்பது நாட்டைக் குறித்ததாதல் வேண்டும். தமிழ் என்ற சொல் தமிழ் நாட்டைக் குறித்தல் சங்க இலக்கியத்திற் பெருவழக்கு. (புறநானூறு 35, 50, 51, அகநானூறு 22, 31 ஆகியன), பதிற்றுப்பத்து 62 - ஆம் பாடலில் தமிழ் என்ற சொல் தமிழ்ப் படையைக் குறித்து நின்றது.

மேற்கோள்வரிகள் பாண்டியன் போர்ச் சிறப்பைக் கூறுவன. எனவே இங்கும், தமிழ் என்ற சொல் நிலத்தைக் குறிப்பதாக இருக்கலாம். அவ்வாறாயின் 'மும்மை' - மூன்று என்பதன் பொருள் யாதாக இருக்கலாம்"?

பண்டைத் தமிழகத்தில் மூவேந்தர் பெற்றிருந்த சிறப்பையும் அவர்கட்கிருந்த புகழையும் வலியுறுத்த வேண்டிய அவசியமேயில்லை. சங்கப் பாடல்கள் சில, (புறநானூறு 109, அகநானூறு 31, பதிற்றுப்பத்து 20) இவர்களை "மூவர்" என்று மாத்திரமே குறிப்பிடுகின்றன. எனவே 'தமிழ் மும்மை என்பது இயல், இசை, நாடகத்தைக் குறியாது, "தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என நின்று, மூன்று தமிழ் இராச்சியங்களையும் ஆளுகின்ற ஒரு பாண்டியனைக் குறித்து நிற்றல் முடியும்.

இவை யாவற்றுக்கும் மேலாக, இம் மேற்கோள், பூரணமாகக் கிடைத்துள்ள ஒரு பாடலின் பகுதியன்று; ஒரு பாடலில் கிடைத்துள்ள ஒரேயொரு பகுதி இவ்விரு வரிகள் மட்டுமே. எனவே இத்தகைய பூரணமற்ற இரு வரிகளை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு, அதுவும் பிறவிளக்கங்கள் கூறப்படத்தக்க நிலையில், மும்மைத் தமிழுக்கு ஒரேயொரு கருத்தே இருத்தல் முடியுமெனக் கொள்ளுதல் பொருந்தாது.

மூவேந்தர் மூவர் எனும் சொற்றொடர்களுக்குள்ள முக்கியத்துவத்தை நோக்கும் பொழுது, முத்தமிழ் எனும் கோட்பாடு சங்ககாலத்திலே தோன்றியிருக்குமேல் இந்த அரசியல் நிலைப்பாட்டை உணர்த்துவதாகவே இருத்தல் வேண்டும்.

மேலும், இயல், இசை, நாடகம் என்பன தனித்தனிக் கலைகளாக வளரும் நிலை பரிபாடல் தோன்றிய காலத்தில் நிலவியிருக்க முடியுமா என்றும் பார்த்தல் வேண்டும். பரிபாடலே இசையும், இயலும் கூட்டுக் கலையாக விளங்குவதற்குச் சிறந்த உதாரணமாகும். சங்க இலக்கியங்கள் யாவற்றுள்ளும் இசையமைப்புக் குறிப்புடைய தொகுதி பரிபாடலே. எனவே முத்தமிழ் என்னும் கலை வகுப்பு முறைக் கோட்பாடு பரிபாடலில் குறிப்பிடப்படுதல் சாத்தியமன்று.

இயல், இசை, நாடகம் என மூன்றாக வகுக்கும் இம் முறைமை இம் மூன்று கலைகளும் ஒன்றுடன் ஒன்று இணையாது, தனித்தனி, பல்லாண்டு காலம் வளர்ந்த பின்னரே ஏற்படக்கூடிய ஒன்றாகும். சங்ககாலத்தின் முற் கூற்றில் அதற்கான சூழ்நிலைகள் இருக்கவில்லை என்பதற்குச் சான்று பகருகின்றன. புறநானூறு, அகநானூறு போன்ற நூல்கள் பௌத்த, சமண மதங்களின் செல்வாக்குப் பெருக்கம், நகர நாகரிகத்தின் வளர்ச்சியால் ஏற்படும் தொழிற்பிரிவு, சமூகப்பிரிவுகள், வைதிக மதக் கருத்துக்களினால் ஏற்பட்ட சமஸ்கிருத நெறிப்படுகை ஆகிய காரணங்களினாலேயே ஆடற்கலைஞரும், பாடற்கலைஞரும், இலக்கியப்புலவரும் தனிப்பட்ட குழுவினராகவும், தனிப்பட்ட கர்த்தாக் களாகவும் பரிணமித்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை.

பரிபாடலுக்குப் பின் வந்த சிலப்பதிகாரத்திலேயே முதன் முதலில் இத்தகைய பிரிவு முதன் முதலிற் காணப்படுகின்றது. மாதவியின் ஆடற்குழுவில் அங்கம் வகித்த நன்னூற் புலவன் பற்றிக் குறிப்பிடும் பொழுது, இளங்கோ (iii : 37 - 44)

"தமிழ் முழுதறிந்த தன்மையனாகி" எனக் கூறுகின்றார். சிலப்பதிகார உரையாசிரியர்கள் இதற்கு "முத்தமிழும் அறிந்த புலவன்" என விளக்கம் கொடுக்கின்றனர். இளங்கோ குறிப்பிடும் நன்னூற் புலவன் ஆடற்கலையில் ஈடுபட்டவனே; அவனை இலக்கிய கர்த்தாவாகக் கொள்ளாது, நாடக ஆசிரியனாகவே கொள்ளுதல் பொருத்தமுடைத்து. அரங்கேற்று கதையை

ஆழமாக ஆராய்வோர் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்வர். சிலப்பதிகாரத்தில் "விலக்கு" என்பது பற்றி வரும் குறிப்பு முக்கியமானதாகும்.

"பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து" (iii : 13)

விலக்கு என்பது கூத்தில் வரும் பாடல்கள் எனச் சிலப்பதிகார உரைகாரர் கருத்துக்கூறுவர். இப்பாடல் முற்றிலும் இசைசார்ந்ததாகவும், அசைவு கட்கியைந்ததாகவும் இருந்திருக்கலாம். இலக்கியத்தில் வரும் பாடலிலிருந்து இதனை வேறுபடுத்தவே "விலக்கு" என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. நாடகத்தில் வரும் "பாடல்" இலக்கியத்தில் வரும் பாடலிலிருந்து வேறுபட்டதென்பதற்கு எம்மிடத்துள்ள முதலாவது திட்டவட்டமான சான்று இது. இப்பாகுபாடு இலக்கியம், இசை, நாடகம் என்பன வெவ்வேறு நிலையிலுள்ள வெவ்வேறு கர்த்தர்களின் பயில் நிலையினடியாகத் தோன்றியதே.

அவ்வாறாயின், இச்சிலப்பதிகாரக் குறிப் பினையே, முத்தமிழ் பற்றிய முதற் குறிப்பாகக் கொள்ளலாமா என்னும் வினா எழுதல் இயல்பே.

இயல், இசை, நாடகத்துறைகள் தனித்தனியே வளர்ந்துள்ளமையை ஏற்றுக்கொள்ளும் பொழுதே முத்தமிழ்க்கோட்பாடு, மொழி பற்றிய தத்துவார்த்தமான பகுப்பாகத் தோன்றும். இசைக்கும், நாடகத்துக்கும் ஒரு மேனிலைக் கணிப்பினைச் சங்கமருவிய காலத்து மேலோர் வழங்கியிருக்கமாட்டார் என்பது ஏலாதி போன்ற நூல்களால் (ஏலாதி 25, 42, 62) தெரியவரும் சமண, பௌத்த மதக் கோட்பாடுகள் ஆதிக்கஞ் செலுத்திய காலத்தில் அத்தகைய ஒரு கணிப்பு ஏற்பட்டிருத்தல் இயலாதென்றே கூறவேண்டும். இசைக்கலைக்கும், நாடகக்கலைக்கும் இலக்கியத்திற்களித்த அதே அளவு மதிப்பினை - சம அந்தஸ்தினை - வழங்குவோர் அக்கலைகளை முக்கியமானவையாகக் கொள்ளக்கூடியவர்களே.

அத்தகைய 'கலைச் சம அந்தஸ்து' பல்லவர் காலத்தில் காணப்பட்டது. பள்ளிகளுக்கும், விகாரங்களுக்கும் எதிராக மக்களாதரவுடன் புரட்சி செய்த பக்தி இயக்கத்தினர் காலத்தில் இலக்கியம் - தேவாரங்கள், பாசுரங்கள் முற்றிலும் இசைப்பண்பினதாகவே விளங்கிற்று. இக் காலத்திற்றான் முதற்தடவையாக ஆடற்பெண்கள், .........கோயில்களிலே இடம்பெற்றனர். சிவன் ஆடல் நாயகனாகவும், விஷ்ணு வேணுகோபாலனாகவும் போற்றப்பட்டனர்.

முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் பற்றியதே என்பது முதன்முதலில் தெளிவாகக் காணப்படுவது நாவுக்கரசர் தேவாரத்திலேயாம்.

"மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான்
கண்டாய்"


**உசாத்துணை நூல்கள்**

1. Thomson G.Stude's in Ancient Greek Society Vol I P . 451 - London 1961.
2. Bucher. Arbeit Und Rhythmus Leipzig 1919.
3. *சிவத்தம்பி. கா.* Drama in Ancient Tamil Society *(கலாநிதிப் பட்டத்திற்கான ஆராய்ச்சி)* Birmingham 1970.
4. வையாபுரிப்பிள்ளை, எஸ். இலக்கியச் சிந்தனைகள். *(தமிழ் நாடக வரலாறு பற்றிய கட்டுரை)*
5. Thaninayagam. X. S. Educational Thought in Ancient (Ph. D. Thesis) London 1957.

# சங்கிலி மன்னன்

**மயில்வாகனப்புலவர்,**
மாதகல்.

பறங்கிக்காரர் வியாபார முகாந்தரத்தில் வருபவர்கள் போலப் பண் ணைத்துறையில் வந்திறங்கிச் சங்கிலியிடத்திற் போய்த் தாங்கள் வியாபாரஞ் செய்ய உத்தரவு கேட்டார்கள். அதற்குச் சங்கிலி சம்மதியாதே போனான். அப்பொழுது பரநிருபசிங்கமும் மந்திரிமாரும் ஒருமித்து நின்று, "இப்படிப்பட்ட வியாபாரம் இந்த நாட்டுக் கவசரமாகத் தேவையாவேயிருக்கின்றது. இந்த வியாபாரம் நடந்தேறினால், இவ்விடத்திற் கிடையாத நூதனப் பொருள் அனேகம் நாங்கள் பெற்றுக்கொள்ளலாம்;" என்று மேன்மேலுஞ் சொல்லச் சங்கிலி ஒருவாறுடன்பட்டு, "இவர்கள் பகற்காலத்தில் நாட்டுக்குள் வந்து வியாபாரம் பண்ணிக்கொள்ளலாம். இராக்காலம் ஊருக்குள் நிற்கக்கூடாது. தோணிகளிலே போய்த் தங்கவேண்டும்;" என்று உத்தரவு கொடுத்தான். சிலநாளாக வியாபாரம் அப்படியே நடந்தேறி வந்தது. அப்படி நடந்து வருகையிற் சில பட்டுப் புடவைகளும் பல நூதன வஸ்துக்களுங் கொண்டு வந்து சங்கிலி இராசனுக்குக் கொடுத்து, நன்முகம் பெற்றுக் கொண்டு, "மகாராசனே! நாங்கள் தோணிகளிற் சமையற் போசனம் பண்ணுகிறதும் நித்திரை செய்கிறதும் மிகுந்த வருத்தமாயிருக்கின்றது. ஆதலால், நாங்கள் தங்கியிருக்கவும் வியாபாரப் பொருள்களைச் சேகரிக்கவும் கடலோரத்திலே ஒரு வீடு கட்டிக் கொள்ள உத்தரவு கிடைக்க வேண்டும்;" என்று கேட்டார்கள். அதற்குச் சங்கிலிராசன், "நாட்டுக்குள்ளே கட்டக்கூடாது; கடலோரத்திலே தான் கட்டிக் கொள்ளலாம்;" என்று உத்தரவு கொடுத்தான்.

**கோட்டை கட்டுதல்**

அவ்வுத்தரவைச் சாட்டாகக் கொண்டு பறங்கிகள் மண்ணால் ஒரு கோட்டையைக் கட்டி முடித்து, அதிலே படை சேனைகளையும் ஆயுதங்களையும் நிறைத்து வைத்தார்கள். அவ்விடத்திற்குத் தென்புறங் கடலும் மற்ற மூன்று புறமும் பெருங்காடுமாயிருந்ததனால், அங்கேமனிதப்போக்குவரவு இல்லாமலிருந்தது. அதனால், அந்தச் செய்தி அரசனுக்கு வெளிவராமற் போயிற்று. காரியம் இப்படி நிறைவேறிச் சில காலத்தின் பின் சங்கிலிராசன் வேட்டையாடுவதற்குக் காட்டினுட் புகுந்து அங்குமிங்குஞ் சுற்றிவருகையிற் கோட்டை கொத்தளத்தையுங் கொடிகளையுந் தூரத்தே கண்டு திகைத்தவனாகி, அவ்விடத்திற்போய், அங்குள்ள ஆயுதங்கள் அனைத்தையுங் கண்டு, "நீங்கள் இவ்விதமாகச் செய்ய உத்தரவு தந்தவன் ஆர்?" என்றான்; "அரசனே நீர் தான்!" என்றார்கள். "நீங்கள் தங்குதற்கு ஒரு சிறிய வீடு கட்டிக்கொள்ள உத்தரவு தந்தேனேயொழிய, இப்படிக் கோட்டை கட்ட நான் உத்தரவு தந்ததில்லை. இப்பொழுதே பிடுங்குங்கள்!" என்றான். அதற்குப் பறங்கிகள் உடன் படாததனால் யுத்தமுண்டாக ஏதுவாயிற்று.

**யுத்தம்**

யுத்தம் நடப்பதற்கு நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசற்புறத்தே வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்னாகவிருந்த வெளியையே இடமாக நியமித்துக் குறித்த நாளிலே யுத்தத்தை ஆரம்பித்துப் பதினொரு நாளாக நடத்தினார்கள். பறங்கிகள் துப்பாக்கிச் சூத்திரத்தைக் கையிற் கொண்டு, அணியணியாய்

நின்றார்கள். தமிழர் வாள் முதலான படைக்கலங்களைக் கொண்டு நின்றார்கள். இரு திறத்தவர்களுக்கும் படையொழுக்கங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் இருந்ததனால், ஒழுங்கான யுத்தம் நடந்ததில்லை. பறங்கிகள் ஒருவர் துப்பாக்கிச் சூத்திரத்தை நீட்டி இலக்குப் பிடிக்க, மற்றொருவர் பற்றுவாய்க்கு நெருப்பு வைக்கச் சிலமுறைகளிற் பற்றுவாய் புகைந்து வெடித்திராதிருக்க, சில முறைகளில் வெடிதீர்ந்து ஆட்களைக் காயப்படுத்தியும் கொலைசெய்தும் நெருங்க, தமிழர்வாள்முதலிய படைக்கலங்களுடன் அஞ்சாமல் மேல்விழுந்து வெட்டிவரச் சேனைகள் இளைத்துப் போன வேளைகளிற் சங்கிலி இராசனும் அவனுக்குத் துணைவீரராய் நின்ற நானூறு பராக்கிரமசாலிகளும் முன்னணியிற் பாய்ந்து கடும்போர் செய்து சேனையின் களைப்பை மாற்றப் பறங்கிகள் ஏழாம் நாளிற் போரிலே அபசெயப்பட்டு, "இனியென்செய்வோம்! சங்கிலிராசன் கையில் அகப்படுவதேயொழிய வேறுகதியில்லை;" என்று மனம் தத்தளித்துக் கொண்டு நின்ற சமயத்திலே, அந்தப் பறங்கிகள் தங்களுக்குத் தரங்கம் பாடியில் துணைச் சேனை வந்து சேர்ந்ததைக் கண்டு, மறுபடியும் மனத்தைத் தைரியங்கொண்டு, நெருங்கி யுத்தஞ் செய்தார்கள். துப்பாக்கிச் சூத்திரங்கள் பற்றுவாய்புகைந்து இடைக்கிடை தாமதங்கள் நேரிட்டதனால், அப்பறங்கிகளும் வாற்படைகொண்டே பெரும்பாலுஞ் யுத்தஞ் செய்ய வேண்டியதாயிருந்தது. வாள் யுத்தம் நடந்தேறிவருகையிற் பறங்கிகள் மறைவில் நின்று துப்பாக்கிச் சூத்திரங்களாற் சுட்டு அமடுபண்ண முயன்றார்கள். அதுகண்டு தமிழர் கவண், கல் முதலிய ஆயுதக் காவல்களை யேற்படுத்தி அந்த அபாயத்தை மாற்றினார்கள்.

பரநிருபசிங்கமும் மந்திரிமாரிற் பலரும் பெருமுயற்சி செய்யாதிருப்பதைக் கண்டு சங்கிலியிராசன் அவர்களைக் கோபித்துப் பரநிருபசிங்கத்தின் மேற் பெருங்குறை கூறினான். அதற்குப் பரநிருபசிங்கம், "இது நாம் பயின்றிராத புதுப்போராயிருப்பதனால், எங்கள் சமத்து இந்த விடத்திலே செல்லாது;" என்றான். அரசன் சிரித்துப் பரிகாசம்பண்ணி, "நானும் உங்களைப் போலவே இந்தப் போரை இதற்கும்முன் ஒருபோதும் கண்டறியாதவன். நான் பண்ணும் போரைப் பார்த்து நில்லுங்கள்!" என்று சொல்லித் துணைவீரவான்களுடனே பறங்கிச் சேனையிற் புலிகள் பாய்ந்தாற் போலப் பாய்ந்து, பத்தாம் நாளன்று 1700 பேருக்கதிகப்பட வெட்டி வீழ்த்தினான்.

### பறங்கியரின் தோல்வி

பதினோராம் நாளையிற் போரினன்று 1400 சனங்களுஞ் சேனைத்தலைவனும் விழ, பறங்கிகள் முறிந்துகொண்டோடினார்கள். சங்கிலியிராசன் திரும்பிப் போய்ப் பறங்கிக்காரர் கட்டுவித்த கோட்டைக்குள் நுழைந்து, காயப்பட்டவர்களும் போருக்கு அன்றையிற்றினம் வராமல் நின்றவர்களுமாகிய அனைவரையுங் கொன்று, கோட்டையையும் இடித்துப் பரவி விட்டுப் பறங்கிகளின் திரவியங்களையெல்லாம் கொள்ளையிட்டுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

### சங்கிலியன் புத்தியற்ற செய்கை

சேனைகள் தங்கள் போர் வெற்றிகொண்ட சந்தோஷத்துக் களியாட்டுக் கொண்டாட்ட மது வெறியில் மூர்க்கங்கொண்டு ஒருவரையொருவர் அடிக்கவும் வையவும் தலைப்பட்டதனால், பெரிய ஆரவாரம் உண்டாயிற்று. அதை அடக்கும்படி அரசன் ஆட்களை அனுப்பிப்பார்த்தும் அடக்க முடியாதேபோனதனால், அரசன் மிகுந்த கோப உக்கிரத்துடனே புறப்பட்டுப்போய், அவர்களுக்குச் சமைத்துவைத்த போசனங்களை எடுப்பித்து நிலத்துக்குள்ளே வெட்டிப் புதைப்பித்தான். இந்தச் செய்கை

சேனைகளுக்கெல்லாம் பெருவெறுப்பை உண்டாக்கிற்று. சேனைத் தலைவன் வீரமாகாளியம்மன் கோவிலிலே தன் நியமம் முடித்துக் கொண்டு நின்றதனால் அவ்விடத்திலில்லை.

### பறங்கிகள் மீண்டும் போருக்கெழுதல்

பறங்கிகள் அபசெயப் பட்டோடினதையுந் தாங்கள் அந்தரங்கத்திற் செய்தசகாயம் வாயாமற் போனதையுங் குறித்துப் பரநிருபசிங்கம் மிகுந்த விசனமடைந்து, காக்கைவன்னியனுக்கு ஓலையனுப்பி, இனிவெளியாய் நின்று பறங்கிகளுக்குத் துணைசெய்யத் தனக்குதவி செய்யும்படி கேட்டனுப்பினான். அந்த ஓலை காக்கைவன்னியன் கையிற் சேரமுன்னமே போரில் முறிந்தோடிய பறங்கிகள் ஊர்காவற்றுறையிற் போய்க் காக்கைவன்னியனைப் பிடித்து, "உன்னை நம்பி நாங்கள் போரில் ஏற்பட்டு 16000 சனத்திற்கு மேற்படச் சாகக்கொடுத்தோம். நீ எங்களை அழைத்து வந்து யாதொரு சகாயமுஞ் செய்யாமல் உன் பாட்டிலே திரிந்தபடியினாலேதான் இந்த நட்டம் எங்களுக்கு வந்தது. நீ எங்களுக்கு இந்த மோசஞ் செய்ததினால், இப்பொழுது உன்னைக் கொலை செய்வது எங்கள் தீர்மானம்;" என்று நெருங்கினார்கள். அப்படி நெருங்கிய சமயத்திற் பரநிருபசிங்கம் அனுப்பிய ஓலை வந்து சேர்ந்தது. அவ்வோலையை வாசித்த பொழுது பறங்கிகளுக்கு மனத்திருப்தி யுண்டாயிற்று.

### நகரை முற்றுகையிடல்

காக்கைவன்னியன் பரநிருபசிங்கம் எழுதியபடியே பறங்கிகளை மறுபடி போருக்கணிவகுத்து வரும்படி சொல்லி, நல்லூருக்குப் போனான். இவன் இரவிலே போய்ப் பரநிருபசிங்கத்தைக் கண்டு சகல ஆலோசனைகளையும் பண்ணிக்கொண்டு மறைந்திருக்க, மறுநாட் காலமே பறங்கிகள் பல அணிகளுடனேயும் மேற்கு வாசலை வளைந்து கொண்டார்கள். அந்தச் செய்தி அறிந்து, சங்கிலியிராசன் சடுதியிற் சேனைகளைத் திரட்டி மேற்கு வாசலிற் போனான். சேனைகள் அணியாய் நிற்கத் துணைச் சேனையுடனே அரசன் முன்னணியில் நின்றான்.

### நம்பிக்கைத் துரோகம்

அந்த வேளையிற் காக்கைவன்னியனும் சேனைகளுக்குள் நுழைந்து, சமீபத்தில் நின்றான். பரநிருபசிங்கம் தான் காக்கைவன்னியனுடன் சொல்லியிருந்தபடியே தூரத்தில் வாய்ச் சமர்த்துள்ள ஒருவனை நிற்க வைத்து வேறொருவனைச் சேனாதிபதியிடத்தில் அனுப்பி, "இந்தப் போரைக் குறித்து உமக்கோர் அந்தரங்கஞ் சொல்லும்படி உம்மை ஒருவன் தேடிக்கொண்டு நிற்கிறான்!" என்றறிவித்தான். சேனாதிபதி அந்தச் செய்தியறிய வெகு ஆவலுடன் விரைந்து போனான். அப்பொழுது அங்கே நின்றவன் சேனாதிபதியின் மனதைக் கவரத்தக்க பேச்சுகளை வருவித்துப் பேசிச் சேனாதிபதியைத்தன்வாய்ச்சாமர்த்தியத்தினால் தடுத்து நிற்க, காக்கைவன்னியன் தனது உடையை மாற்றிச் சுயகோலத்துடன் அரசன் முன் வெளிப்பட்டான். வன்னியனைக் கண்டவுடன் அரசன் எதிர்கொண்டோடி, "இப்பொழுது தான் உன் மனதில் என்மேற்றயவு பிறந்து எனக்கு உதவி செய்ய வந்தாயோ?" என்று சொல்லி அவனைக் கட்டி முத்தமிட்டான். வன்னியனும் அரசனைக் கட்டி முத்தமிட்டவன் போலக் கட்டிப் பிடித்த பிடி விடாமற் பிடித்துக் கொண்டான். வன்னியன் பிடித்த பிடி விடாமல் நிற்கப் பறங்கிப் படைகள் அரசன்மேல் ஓடி வந்தார்கள். பறங்கி வீரர்கள் ஓடி வருவதைக் கண்டு தமிழ்ச் சேனா வீரர் ஆயுதங்களை எடுத்துப் போராட முயன்றார்கள். அப்படி அவர்கள் முயல்வதைக் கண்டு, "சேனாதிபதியின் உத்தரவின்றி ஒருவரும் ஆயுதம் தொட வொண்ணாது!" என்று பரநிருபசிங்கம்

தடை பண்ணினான். அப்பொழுது சேனா வீரர்கள், "ஆயுதமெடுக்க உத்தரவில்லையே ! உத்தரவில்லையே! என்று சத்தமிட்டுக்கொண்டு அரசனையும் வன்னியனையும் அந்த நிலையில் விட்டு ஓடிப்போனார்கள். பறங்கியர்கள் யாதொரு தடையுமின்றிச் சங்கிலியிராசனைப் பிடித்து விலங்கிட்டுச் சேனாதிபதியைத் தொடர்ந்து பிடித்து வாளினாற் கொலை செய்து, கோட்டை கோபுரங்களையெல்லாம் ஒப்புக்கொண்டார்கள்.

("யாழ்ப்பாண வைபவமாலை" யிலிருந்து எடுக்கப்பட்டது. மேக்கறூன் என்ற உலாந்தேசு மன்னனின் கேள்விப்படி மயில்வாகனப்புலவர் அவர்களால் உரைநடையிற் வகுக்கப்பட்டதாகச் சிறப்புப்பாயிரம் தெரிவிக்கின்றது. இவர் காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி யென்றும் பிற்பகுதி யென்றும் இரு கொள்கை உண்டு. )

- இலக்கியம் அனுபவத்தின் கனி;
  அதில் பிழிந்தெடுத்த சாறே நாடகம்
  - மோலியர்

- அறிவாளிகள் எல்லோரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள்;
  ஆனால் அவர்கள் அதனைத் தங்களுக்குள்ளேயே
  வைத்துக்கொள்கின்றார்கள்

- படித்தவன் ஒருகுளம்,
  விவேகி ஓர் ஊற்று


- சாகாதிருக்கக் கற்கும் கல்வியே மெய்க்கல்வி

- விரோதியுடன் பழகலாம்; ஆனால் போலியுடன் பழகாதே

- ஈயாத உலோபி இருந்தென்ன; இறந்தென்ன?

# மாமன்னன் வீரசங்கிலியன் மீதான ஆய்வுத் தேடலுக்கு உறுதுணையாக இருந்த

## 'தீப்பொறி' ஆசிரியர் அந்தனிசில் அவர்களும் அவரின் பணிகளும் - சில குறிப்புக்கள்




**முருகேசு கௌரிகாந்தன்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி


"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்"

- பாரதியார்

ஐம்பது அறுபதுகளிலும் எழுபதுகளின் தொடக்கத்திலும், அடுக்குத் தமிழ் வெகுசனத் தொடர்பு சாதனங்களிலும், அரசியல் மேடைகளிலும், ஆய்வரங்குகளிலும் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியது. தமிழகத்தில் தி. மு. க. வினர் இதனைச் சிறப்பாகக் கையாண்டு தமிழையும் வளர்த்தனர். இலங்கையில் அனல் தெறிக்கும் அடுக்கு மொழியைப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தி ஏராளமானோரைத் தம்வசப்படுத்தியோரில் அந்தனிசில் அவர்களுக்கு முக்கியமான இடமிருக்கிறது.

1934 ஆம் ஆண்டு டிசம்பர் பன்னிரண்டாந் திகதி யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் உள்ள அவர்கள் மனையில் அந்தோனிப்பிள்ளை மரியம்மா தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்த ம. க. அ. (மரியாம்பிள்ளை, கதிர்காமர், அந்தோனிப்பிள்ளை) அந்தனிசில் அவர்கள் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் எஸ்.எஸ்.சி வரை கல்வி கற்றபின் 1953 ஆம் ஆண்டு தமிழகம் சென்று அங்கும் கல்வியைத் தொடர்ந்ததாக அறிகிறோம். கலைகளின் மீதான ஈடுபாடு அங்கே அவரைத் திரைப்படங்களிலும் நடிக்க வைத்தது. 1958 - 1959 காலகட்டத்தில் பெரியவர் ஈ. வே. ராமசாமி அவர்களின் 'நாத்திகம்' பத்திரிகையில் துணையாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். "படிப்பாளிகளால் சொல்லப்படாத ஏராளமான சிந்தனைகளை முன்வைத்திருக்கும் அந்தனிசில் அவர்கள் எதுவரை படித்தார்?" என்று அவரின் சகோதரி ஜசிந்தா பாலசுப்பிரமணியம் அவர்களிடம் கேட்டதற்கு "அண்ணாவிடம் மனிதருக்குச் சிறப்பாகவே இருக்கவேண்டிய பகுத்தறிவு இருந்தது. அது அவரை நிறையத் தேடிப்படிக்க வைத்திருக்கும். தமக்குத் தெரிந்ததைத் துணிச்சலுடனும், நேர்மையுடனும் அவர் வெளிப்படுத்தினார் அவ்வளவுதான்" என்று அருமையான பதிலைச் சொன்னார். இவரிடம் 'இடதுசாரிச் சிந்தனைகள்' மேலோங்கியிருப்பதற்கு 'நாத்திகம்', 'ஜனசக்தி', 'முரசொலி', 'விடுதலை', ஆகிய பத்திரிகைகளின் செல்வாக்கும் ஒரு காரணமாயிருக்க வேண்டும்.

### தீப்பொறி

இன்றைக்கும் இலங்கையில் ஏராளமானவர்களினால் அந்தனிசில் நினைக்கப்படுவதற்கு

முக்கியமான காரணம் அவரது 'தீப்பொறி' என்ற வார இதழாகும். இலங்கையில் இப்பத்திரிகை முதன்முதலாக எப்போது தொடங்கப்பட்டதென்று தெரியவில்லை. 'தீப்பொறி' பத்திரிகை 1967 இலும் 'ஒரு தீப்பொறி' பத்திரிகை 1972 இலும் தொடங்கப்பட்டதாக காவலூர் இ. விஜயேந்தரன் தமது மூன்றாவது கண் (2008) என்ற நூலில் எழுதியிருக்கிறார். 1967 இல் ஆரம்பிக்கப்பட்டதாகவே 'பாதுகாவலன் பத்திரிகையும் குறிப்பிட்டுள்ளது. ஆனால் 19 வயதில் தமிழ் நாடு சென்ற அவர் (அந்தனிசில்) 29 வது வயதில் யாழ்ப்பாணம் வந்து 'தீப்பொறி' ஏட்டினை ஆரம்பித்தார்" என்றும் நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமாக அந்தனிசில் எழுதிய இரண்டு கட்டுரைகள் தொடர்பாக அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு 1965 இல் ஒன்றரை ஆண்டுகள் சிறை சென்றதாகவும் க. வைரமுத்து எழுதியுள்ளார். (21.09.1997 தினகரன் வார மஞ்சரி, பக். 15). சிறை செல்ல முன் 'தீப்பொறி' என்றும் சிறையால் வந்தபின் 'ஒரு தீப்பொறி' என்பது மட்டும் தான் நாம் அறிந்தது. "அரசினால் தீப்பொறி பத்திரிகை நிறுத்தப்பட்ட போது ஒரு தீப்பொறி எனப் பெயர் மாற்றம் செய்து பத்திரிகையைத் தொடர்ந்தும் சட்டப்பிடிகளுக்கு உட்படாமல் வெளியிடப்பட்டது".என்று பாதுகாவலன் எழுதியது. 'பல்கலை' (1970) என்றும் ஒரு பத்திரிகையினை அந்தனிசில் நடத்தியிருந்தார். 'பல்லைக் கலைப்பது' என்பது அதன் பொருளாகும்.

"சிறுமை கண்டு பொங்குவாய் வா! வா! வா!" என்று பாரதி கூவியழைத்த அழைப்புக்கு வந்துதித்துத் தொண்டாற்றியவர் போன்று தான் அந்தனிசில் எமக்குத் தென்படுகின்றார். சமயம், அரசியல், சமூகக் கொடுமை எதுவானாலும் அவரது கண்ணில் படுவனவற்றை அங்கதச் சுவையும், கண்டனமும், ஆராய்ச்சித்திறனுங் கொண்டு அடுக்கு மொழியில் எழுதினார். மேடைகளிலும் முழங்கினார். அறுபதுகளிலிருந்து எழுபதுகளின் முற்பகுதிவரை தமிழரசுக்கட்சியினர் தமது அரசியற் பிரச்சாரத்திற்கு அந்தனிசிலைத் தாராளமாகப் பயன்படுத்தினர். அரசியற் கூட்டங்களில் மக்கள் கூட்டம் கலைந்து போகாதிருப்பதற்காக இவரைத்தான் கடைசியாகப் பேசவைப்பார்கள். ஆனால் அண்மையில் 2017 ஆகஸ்ட் 05 ஆம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13 வது சர்வதேச மாநாட்டுக்கு வருகைதந்த தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரிடம் அந்தனிசிலின் முகவரியைக் கேட்டபோது, தங்களின் மேடைகளில் பேசினவர்தான் என்றும் குருநகர்ப்பக்கமாக இருக்க வேண்டும் எனக்கூறி வேறுபக்கம் திரும்பிக் கொண்டார். எங்களது வரலாற்றைத் துணிச்சலுடனும் நிதானமாகவும் சரியான ஆதாரங்களுடனும் சொன்ன அந்தனிசில் அவர்களின் வரலாற்றையும் பணிகளையும் நமது வருங்காலச் சந்ததியினருக்குச் சொல்லிவைப்பது நன்றியுணர்வுக்குரியதுங்கூட.

எழுபதுகளின் தொடக்கம் எமது இடைநிலைக் கல்வியின் ஆரம்பம். பாடநூல்களை மட்டும் படித்துப் புத்தகப்பூச்சிகளைப் போல இருந்த என் போன்றவர்களைத் தமது ஆவேசங்கலந்த எழுத்துக்கள் மூலம் வேறு பத்திரிகைகளையும் புரட்டிப் பார்ப்பதற்கான உத்வேகத்தைத் தந்தவர் அந்தனிசில்.

'தீப்பொறி' வெளியூர்ப்பதிப்பு, மலையகப்பதிப்பு என இருபதிப்புகளாகவும் வாரப் பத்திரிகையாக வெளிவந்தது. ஹட்டனில் இருந்த மக்கள் அச்சகத்தில் இருந்தும் வெளிவந்தது, அந்தக் காலத்தில் (1967) அதன் விலை 20 சதம். 'ஒருதீப்பொறி'

யாழ் கத்தோலிக்க அச்சகத்தில் இருந்து வெளிவந்தது. 1977 இல் அதன் விலை 60 சதம். 15.07.1983 இல் தான் ஒருதீப்பொறியின் கடைசி இதழ் என்று க. வைரமுத்து குறிப்பிட்டுள்ளார்.

**தீப்பொறி, ஒருதீப்பொறியின் தலைப்புக்கள் சில**

1 - 3 - 9 - 1967 **தீப்பொறி**

"இலங்கைத் தமிழ் மக்களைத் தீண்டாமை
கருவறுத்து வருகிறது"
"தனித்தமிழ் நாடாம்!
பொன்னன் கட்சி டூப்பு"
"சிவசேனா கொலை வெறி!
தென்னிந்தியரை எதிர்த்து"!
"சமாதான நீதிவான் பட்டமும்
செனட்சபைப் பதவியும்
மனித உரிமைக்கு ஈடாகுமா?
சலுகைக்கும்பலின்
கழுத்தறுக்கும் சதி!"
"தமிழருக்குத் தமிழ் இரண்டாவது மொழி!
ஆங்கில அடிவருடி பொன்னன் ஓலம்!
தட்டிக்கேட்க ஆளில்லையா?"
"தேயிலை ஏற்றுமதி!
தொழிலாளியும் ஏற்றுமதியா?"

*15 - 05 - 1977* - **ஒருதீப்பொறி**

"உதிரத்தை வார்த்து
தேயிலை வளர்த்தவன்
உறைவிடம் இன்றி
தெருவில் நிற்பதா?"
"நண்டுக்கு ஒரு பொந்து
நரிக்கு ஒரு சந்து
நலிந்தவனுக்கு இல்லையா ஒரு குந்து!"
"அன்று உன் சரித்திரத்தை நீ அறியாய்
இன்று உன் சரித்திரத்தை நீ புரிவாய்!
**நினைவில் நிற்கும் ஒன்று"**
"செனட்டர் லூசே....
நீ காட்டிக் கொடுப்பதற்குக் காசா?
தன்மானம் உனக்குத் தூசா?"

**அந்தனிசிலின் சகோதரியின் நினைவிலிருந்து வெளிப்பட்டது**

"சொன்னார்கள் எட்டு
தந்தார்கள் வயிற்றில் குத்து!"
(எட்டு - எட்டு இறாத்தல் தானியம்)
"கறுவாக் காட்டு ராஜா!
கரையூர் மக்களைப் பண்ணாதே தாஜா!"

தமிழ் நாட்டில் அந்தனிசில் இருந்த காலத்தில் 'அண்ணாத்துரையும் அமெரிக்கத்துரையும்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை தி. மு. க. வினருக்கு அந்தனிசிலின் மீது விசனத்தை ஏற்படுத்தியது. இவ்வாறே "வத்திக்கான் போப் முதல் வடக்கன் பாதிரிவரையும்" (இது பின்னர் நூலாகவும் வந்ததாகவும் அறிகிறோம்) எனும் தொடர் கட்டுரையும் பெரும் பரபரப்பையும், சர்ச்சையினையும் ஏற்படுத்தியதாகப் பாதுகாவலன் எழுதியுள்ளது.

**கட்டுரை இலக்கியப் பணிகள்**

அந்தனிசில் அவர்கள் இலங்கையில் தாமே நடாத்திய இதழ்களில் மட்டுமன்றி இங்கு வெளிவரும் தினகரன், வீரகேசரி, சுடர் ஒளி போன்ற பத்திரிகைகளிலும் வரலாறு, இலக்கியம், மொழிவழக்காறுகள் தொடர்பாகப் பல பயனுள்ள கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது கட்டுரைகளைப் படித்துப் பார்க்கின்ற போது இவருக்கிருந்த தமிழ், ஆங்கில மொழிப்புலமையும் நன்கு தெரிகின்றது. தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் ஒப்பியல் அடிப்படையில் உணர்வும் அறிவும் கலந்த வகையில் இவரது எழுத்துக்கள் அமைந்துள்ளன. 'ரிஷிமூலம், நதிமூலம்' விடுத்து இவரது ஆய்வுகளைப் பார்த்தால்தான் இவரது ஆய்வின் பெறுமானம் தெரியும்.

**வரலாற்றுக் கட்டுரைகள்**

அந்தனிசில் அவர்கள் எழுதுந் தலைப்புக்கள் மிகவும் அர்த்தம் பொதிந்தவையாகும்.

உள்ளே என்னென்ன விடயங்களை அவர் ஆராய்ந்து சொல்லப்போகின்றார் என்பதினை அவர் எழுதுந் தலைப்புக்களே தெளிவாகக் காட்டிவிடும். 'யாழ்ப்பாணம் என்ற பெயர் தோன்றியது எவ்வாறு?' (09.12.1990, வீரகேசரி), 'யாழ்ப்பாணம் எனும் பெயர் பிறமொழிப்பெயரன்று'(17.09.1995, வீரகேசரி), 'யாழ்ப்பாணம் என்ற சாதிப்பெயரிலிருந்தே யாழ்ப்பாணம் தோன்றியது.' (31.05.1998, 07.06.1998, தினகரன்) 'காலத்தால் முந்திய யாழ்ப்பாண இராச்சியம்' , 'யாழ் அரசனைச் சந்தித்த மூர் யாத்திரிகர் இபின்பதூதா, 'இலங்கைத் தமிழர் வந்தேறுகுடிகளல்லர், 'ஈழம் என்பது தனித்தமிழ்ச்சொல்', 'இராவணன் இராட்சதனா?', 'திகவாவியும் தீர்த்த வாவியும்', சங்ககால இலக்கியங்களில் சுட்டப்படும் பழங்கால மாந்தைத் துறைமுகம், 'தமிழ் பௌத்தர்கள், 'யாழ் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் சுவாமி ஞானப்பிரகாசர்' என்பன வரலாறு சார்ந்த கட்டுரைகள்.

**அந்தனிசில் அவர்களின் கட்டுரை ஒன்றிற்கு பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் வழங்கிய நற்சான்று**

இன்றைக்கு யார் எதை எழுதினாலும், சரி பிழை ஆராயாமல் அவற்றை ஆமோதித்து, அவற்றை அடிக்குறிப்பாகவும் போட்டு எழுதும் நிலையிலேயே பெரும்பாலும் ஆய்வுலகம் காணப்படுகின்றமை பலரும் அறிந்ததொன்று. அந்தனிசில் வாழ்ந்த காலத்தில் வரலாற்றை யாராவது பிழையாக எழுதினால் விடமாட்டார். தக்க ஆதாரங்களுடன் மறுப்பெழுதுவார்', சரியானதைச் சொல்லுவார். 'சொல்லேருழவர்' அவர். இப்படியானதொன்றுதான் இவர் எழுதிய "யாழ்ப்பாணர் என்ற சாதிப்பெயரிலிருந்தே யாழ்ப்பாணம் தோன்றியது. !" எனும் கட்டுரை இக் கட்டுரையைப் படித்த பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் அவர்கள், அந்தனிசிலின் கட்டுரை வெளிவந்து இரு வாரங்கழித்து 26.07.1998 வெளிவந்த தினகரன் வார மஞ்சரியில் பின்வருமாறு நற்சான்றையும், ஊக்குவிப்பையும் வழங்கியிருந்தார்.

"வித்தகராயினோர் பலரும் கருத்துச் சொல்லத் தயங்கும் விடயமொன்று குறித்து, அதுவும் மிக மிக முக்கியமான ஒரு விடயங்குறித்துச் சொல்லேருழவர் ஆணித்தரமாகக் கூறுகின்றவை அறிவியல் நிலையில் அமைந்தவை. இடப்பெயர்கள் பற்றிய ஆராய்ச்சிகளின் அவசியத்தை உணர்த்த வல்லவை. அவர் கட்டுரைகளை விரிவாக்கி நூலொன்றினை வெளியிட வேண்டும் என்பது பலரின் எதிர்பார்ப்பாகும்."

**இலக்கியக் கட்டுரைகள்**

'கடைச்சங்கமிருந்த ஈழத்துப் பூதந்தேவன்', 'ஐம்பெருங்காப்பியங்களுள் சீவகசிந்தாமணி', பொற்கை பூண்ட கொற்கைப் பாண்டியன்', மட்டக்களப்பு வாவியின் அடியில் பாடும் மீன்களின் இன்னிசை ஓசை', 'சிலம்பின் முத்துக்கு உரைதந்த யாழ்நூல்' எனும் இவரது ஆக்கங்கள் இலக்கிய நயம் மிகுந்த கட்டுரைகளாகும்.

"சுவாமி விபுலானந்தர் அவர்களின் பிறப்புத் திகதி 29.03.1892 அல்ல". என ஒருவர் எழுதிய கருத்தை விமர்சித்து எழுதப்பெற்றதாக இவரின் துறவி விபுலானந்தரின் பிறப்புத் தேதி கேள்விக்குறியா? ஏறாவூர் காணியுறுதி சிறப்புறு மறுமொழியா?" (13.03.1994 தினகரன்) எனும் கட்டுரை காணப்படுகின்றது.

**மொழி வழக்காற்றுக் கட்டுரைகள்**

'தமிழின் முற்கால எழுத்து வடிவங்கள் (28.01.2001, தினக்குரல்), 'தொல்காப்பியமும் ஐந்திரமும்' "கன்னித்தமிழ் மொழியியல் வடமொழி புகுவதனை வன்மையாகச் சாடிய அமரர் கி. ஆ. பெ !" என்பன இவரது மொழியாய்வுக் கட்டுரைகள் முதலாவது கட்டுரை ஒன்பதாம் நுற்றாண்டிற்கு முன்னரான

பழந்தமிழ் வட்டெழுத்துக்களையும் அதன் செய்யுள் வாசகங்களையும் காட்டி இவை சிங்கள எழுத்து வடிவங்கள் அல்ல. தமிழின் முற்கால எழுத்து வடிவங்கள் என்று நிரூபிக்கின்றது.

இரண்டாவது கட்டுரை தொல்காப்பியப் பாயிரங்கூறும் 'ஐந்திரம்' எனும் இலக்கண நூல், சமஸ்கிருதநூல் அல்ல, இந்திரனால் செய்யப்பட்ட தமிழ்நூல் என்று ஆராய்ந்து கூறுவதாக அமைகின்றது. மூன்றாவது கட்டுரை எவ்வாறு சமஸ்கிருத மொழியாளர் தமிழ் வடிவ எழுத்துக்களிலிருந்து தமக்குத் தேவையான எழுத்துக்களை பெற்றார்கள் என்பதனையும் தமிழ் மொழியின் பல்வேறு சிறப்புக்கள் பற்றியும் தக்க ஆதாரங்களுடன் விளக்குகிறது.

**தலைசிறந்த கவிஞன்**

எம். கே. ஏ. அந்தனிசில் அவர்கள் சிறந்த கவிஞருங்கூட என்பதினை *31.10.1993* தினகரன் வார மஞ்சரியில் வெளிவந்த அவரது **ஓ.... காற்றே எனும் தலைப்பிலான கவிதை எடுத்துக் காட்டுகின்றது. நித்தம் முத்தம், நிலாவில் நீ, நறுமணம்!, பறக்க முடியுமா?, எத்தனை பெயர்!, நீயும் நெருப்பும்,! வானவீதியில், எல்லோருக்கும் நீ! எனும் பல்வேறு தலைப்புக்களில் எழுதப்பட்ட கவிதைகளில் நயத்துக்கு 'பறக்கமுடியுமா?' எனும் தலைப்பில் எழுதப்பெற்ற கவிதை வரிகளைப் பார்ப்போம்.**

**'ஓ..... காற்றே**
**நீதான் இன்றேல் விமானம் பறக்குமா?**
**பறவையும் தன்னிரு**
**இறக்கையை விசிறிப் பறக்க முடியுமா?**
**பறப்பதென்ன தரையில் நிற்கும் விமானம் கூட**
**அதன் சில்லிலிருந்து**
**'சூ' என்று சீறி நீ வெளியேறின**
**தரையில் நிற்காது படுத்துவிடும்.....**
**அதன் பின் விமானம்**
**மானம் 'பறந்த' விமானமாகும்**
**தள்ளித் திரியவும் முடியாது போகும்!'**

**வீரசங்கிலியன் வரலாறு எழுதிய முதல் மறத் தமிழன்**

அந்தனிசில் அவர்கள் எழுதிய ஆக்கங்களுக் குள்ளே எம்மை மிகவும் கவர்ந்தவை அல்லது ஆட்கொண்டவை அவர் சங்கிலி மன்னன் தொடர்பாக எழுதிய கட்டுரைகளாகும். உலகம் வாழ் முழுத்தமிழர்களும் பெருமை கொள்ளவேண்டிய கட்டுரைகள் என்று இப்போது தெரிகின்றது. முதலாவது கட்டுரை "வீரசங்கிலியன்" என்ற தலையங்கத்திலே ஈழநாடு பத்திரிகையில் *1979* ஆம் ஆண்டு அக்டோபர் *21* இல் இருந்து டிசம்பர் மாதம் வரையில் வாரந்தோறும் வெளிவந்த தொடர் கட்டுரை. இரண்டாவது கட்டுரை வீரகேசரி, *20.07.1980* வார வெளியீட்டில் வெளியாகிய "யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியா? சங்கிலி குமாரனா?" எனும் கட்டுரை.

"ஆனைவரும் பின்னே; மணியோசை வரும் முன்னே" என்றபடி கட்டுரை வெளிவருவதற்கு முதல் வாரம் (*14.10.1979*) ஈழநாடு பத்திரிகையில் கட்டுரையின் பெறுமானத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. 'வீரசங்கிலியன்' - அந்தனிசில் எழுதுகிறார் **"வியாபாரம் என்று வந்து நாடு பிடிக்கத் திட்டம் தீட்டிய வெள்ளைப் பறங்கியர் மீது பாய்ந்து செருக்களத்திலே தோற்கடித்த சங்கிலி மன்னனுக்கு எதிராக உருவாக்கப்பட்ட சூழ்ச்சிகளும் சதிகளும் இக்கட்டுரையில் அம்பலமாக்கப்படுகின்றன. சரித்திரம் என்ற போர்வையில் சங்கிலி மன்னனின் பெயருக்கு களங்கம் கற்பித்து எழுதிய சூத்திரதாரிகளையும் இனங்காண்பிக்கிறது இக்கட்டுரை.**

**தேசபக்தனும் அஞ்சா நெஞ்சனும் மாவீரனு மாகிய சங்கிலி மன்னன் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள களங்கத்தை இதுவரை யாரும் அலசி ஆராய்ந்து துடைத்தெறிய முயற்சிக்கவில்லை. இக்கட்டுரை அப்புனித பணியைச் செய்கிறது. சங்கிலி மன்னனைக் கொலைகாரனென்றும் பெண் கள்ளன் என்றும் பட்டாபிஷேகமின்றி ஆட்சிப் பீடமேறியவன் என்றும் குற்றம் சுமத்தினார்கள்**

**பறங்கியரும் அவர்களின் அடிவருடிகளும். அதாவது குற்றவாளிகளே நீதிபதிகளாக மாறினார்கள்** என்ற குறிப்புக்களுக்கும் இதனடிப்படையில் எழுதப்பெற்ற அந்தனிசில் அவர்களது கட்டுரைத் தொடருக்கும் எவ்விதமறுப்பும் எவராலும் எழுதப்படவில்லை. 1979 ஈழநாடு ஏட்டில் "வீரசங்கிலியன்" என்று எழுதினார் அந்தனிசில். முப்பத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் யாழோசையில்(2012) "மாமன்னன் சங்கிலியன்" (நாவல்)எனும் தலைப்பில் தொடர்கட்டுரையை எழுதினார் செங்கைஆழியான் அவர்கள். இது அவ்வாண்டே (2012) நூலாகவும் வெளியிவந்தது. இதற்கு முன்னர் சங்கிலி குறித்து வெளிவந்த 'வாழ்க நீ சங்கிலி மன்னன்', நந்திக்கடல், ஈழவேந்தன் சங்கிலியன் போன்ற நாவல்களையும் 'சங்கிலியம்' எனும் காவியம் பற்றியும் பல நாட்டுக் கூத்துக்கள் பற்றியும் செங்கை ஆழியான் கூறியுள்ளார். ஆனால் அந்தனிசிலின் முயற்சி பற்றி எதுவும் கூறவில்லை.

அந்தனிசில் அவர்களின் "வீரசங்கிலியன்" எனும் தொடர் கட்டுரையின் ஒரு பகுதியைப் பார்த்த போது, சங்கிலியனது தந்தையான சிங்கபரராஜசேகரனது பட்டத்துத் தேவியான இலட்சுமியம்மாளின் குமாரர்களான சிங்கவாகு, பண்டாரம் ஆகியோரின் கொலைகளுக்குச் சங்கிலி காரணமில்லை என்பதினையும் அக்கொலைக்குக் காரணமானவரையும் தெளிவாக அறியக்கூடிதாக இருந்தது. இதுபோன்ற 'பாவக்கொலைகளைச்' சங்கிலி செய்திருக்கவே மாட்டான் என்பதை அந்தனிசில் அவர்களின் பிறிதொரு கட்டுரையில் குறிப்பிடப்பட்ட பின்வரும் குறிப்புக்களின் மூலமும் உணர்ந்து கொள்ளலாம்.

**இரு சாராரும் (போர்த்துக்கேயரும் உள்ளூர் சதிகாரக்கூட்டமும்) சேர்ந்து சங்கிலி மன்னன் மீது சுமத்தாத குற்றங்களில்லை. அவனின் வீர நாமம் காலா காலமாக மக்கள் மனதினில் நிலைத்து நீடிக்கக்கூடாது என்பதற்காகவே இச்செயல்புரிந்தனர்.**

**நாடு பிடிக்க வந்தவர்களின் பாவக்குறிப் புக்களை பரிசுத்தமானவையாகிவிடமாட்டா. ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருப்பதால் சரித்திரத்திரிபுகள் உண்மையாகிவிடமாட்டா. பொய்ச்சரித்திரமானால் சரித்திரம் பொய்யாகி விடுமல்லவா?** (யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலி குமாரனா?, வீரகேசரி வாரவெளியீடு, 20.07.1980, பக்கம் 6)

சங்கிலியன் மீது சுதேசிகள் பற்றுவைக்காமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சதிவேலைகளில் ஒன்று யாழ்ப்பாணத் தையாண்ட கடைசி மன்னன் சங்கிலிகுமாரன் என்ற கதை. இதனையும் அந்தனிசில் அவர்கள் பகுத்தறிவுக்கண் கொண்டு பார்த்து, முன்னர் குறிப்பிட்டதான இரண்டாவது கட்டுரையில் மறுத்துள்ளார். "கோவாவுக்குக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட சங்கிலி மன்னனின் மகனைத்தான் "சங்கிலிகுமாரன்" என்ற இரண்டாவது சங்கிலி மன்னனாக்கினார்களோ என்பது போர்த்துக்கேயர்களுக்கே வெளிச்சம். மற்றப்படி போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்பு கொண்டது முதல் யாழ்ப்பாண இராச்சியம் அவர்களிடம் வீழ்ச்சியடையும் வரை "ஒரே ஒரு சங்கிலி மன்னன் தான் இருந்தான் அவனே தான் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்ன னாவான்". எனும் அவரின் குறிப்புக்கள் மூலம் அறியலாம்.

தலைசிறந்த தமிழ்ப்புலமையாளனை, வரலாற்றாசிரியனை, தமிழ்ப்பற்றாளனை தேசப் பற்றாளனை, நாம் 09.07.2005 இல் இழந்து விட்டோம். மட்டக்களப்பிலே அவரது பூதவுடல் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இம்மாமேதையை 1972 ஆம் ஆண்டு (மாதம், தேதி ஞாபகமில்லை) மல்லாகத்தில் நடைபெற்ற

தமிழரசுக்கட்சியின் பிராந்திய மாநாட்டில் தான் யாம் முதன்முதலாகக் கண்டது. பின்னர் காணவில்லை. சந்தித்திருந்தால் அவரிடமிருந்து நிறைய வரலாற்றுத்தகவல்களையும் பிற பயன்மிக்க தகவல்களையும் பெற்றிருக்க முடியும். அவர் மரணிக்கும் காலம் வரை எழுதிக்கொண்டேயிருந்தார் - என்பதனைப் பத்திரிகைகளிலே அவரால் எழுதப்பெற்ற கட்டுரைகளே சான்று. இவர் மரணிப்பதற்குச் சில நாட்களுக்கு முன் - எழுதிய கட்டுரை "யாழ் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் ஞானப்பிரகாசர்" என்பதாகும். கட்டுரை வடிவில் காணப்படும் இவரது ஆக்கங்களைத் தொகுத்து வெளியிடுவது பயன்மிக்க செயலாகும்.

**நன்றி :**

இக்கட்டுரையினை எழுதுவதற்கு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு கேட்ட நேரத்தில் தம்மிடமிருந்த ஆவணங்களையும் மற்றும் எமக்குத் தேவையான தகவல்களையும் கொடுத்துதவிய அந்தனிசில் அவர்களின் அருமைச் சகோதரி ஸ்ரீமதி ஜசிந்தா பாலசுப்பிரமணியம் (28, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.) அவர்களுக்கும், அந்தனிசில் அவர்களின் அரும்புதல்வியர்களான திருமதி கவிதா ராஜேந்திரன், திருமதி யாழினி வப்றிஸ் (614, வெளிச்சவீட்டு வீதி, மட்டக்களப்பு.) ஆகியோருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

**அந்தனிசிலின் தந்தை அமரர் க. அந்தோனிப்பிள்ளை**



**மகள் அருள்மொழியுடன் அந்தனிசில்**



**மகள் யாழினியுடன் அந்தனிசில்**




**அருட்தந்தை செல்வராஜாவுடன் அந்தனிசில்**



# யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியா? சங்கிலிகுமாரனா?

ம. க. அ. அந்தனிசில்



வீரகேசரி 23.03.1980 ஞாயிறு வாரவெளியீடு ஆறாம் பக்கத்தில் "சங்கிலி குமாரன் தன் இறுதிநாட்களில் கிறிஸ்தவனாக வாழ்ந்தான்" என்ற தலைப்பிலான கட்டுரையில் அதன் கட்டுரையாளர் முன்னுக்குப்பின்முரணான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அக்கட்டுரையில் முதலாம் பந்தியில் "யாழ்ப்பாண மன்னர்களுள் மக்களின் மனதில் இன்றும் நிலைபெற்றுள்ள பெயரே சங்கிலி ஆகும். இவனை மக்கள் யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனாகவும் இந்து சமயத்திற்காக கத்தோலிக்க கிறிஸ்துவ சமயத்தை எதிர்த்த மன்னனாகவும் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடிய விடுதலை வீரனாகவும் போற்றுவர்" என்றும்,

கட்டுரையின் 7 ஆவது, 8ஆவது பந்திகளில் தமிழ் மக்கள் பெருமைப் படக்கூடிய அளவுக்கு பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்கள் வரையும் யாழ்ப்பாண இராச்சியம் நிலைபெற்றிருந்தது. இது பெருமளவிற்கு இந்துப் பிரஜைகளை உள்ளடக்கிய இராச்சியமாகவே இருந்தது. இதன் கடைசி மன்னனான சங்கிலி குமாரன் கோவாவில் பின்பற்றிய நடவடிக்கைகள் போர்த்துக்கேயர் வாயிலாக அறியவரும்போது வியப்பூட்டுவதாகவே உள்ளது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலி மன்னனா அல்லது சங்கிலிகுமாரனா என்று மக்கள் மனக்குழப்பம் அடையும் அளவிற்கு மேற்படி கட்டுரை அமைந்திருக்கிறது! சங்கிலி மன்னனின் வீர வாழ்க்கை சரித்திரத் திரிப்புகளால் மறைக்கப்பட்டுள்ளதென்பது, யாவரும் ஒத்துக்கொள்ளவேண்டிய விடயமாகும். தம்மை எதிர்த்து வீராவேசத்துடன் போரிட்ட ஒரு விடுதலைவீரனை அந்நிய ஆட்சியினர் சரித்திரத்திலும் இருட்டடிப்புச் செய்யவே செய்வர். இது சாதாரணமாக எல்லோராலும் புரிந்துகொள்ளக் கூடியதாகும்.

உண்மைச் சரித்திரத்தில் இருட்டடிப்புச் செய்யப்பட்டு பொய்ச் சரித்திரத்தால் கறை பூசப்பட்டவனே சங்கிலி மன்னன். விடுதலைக்குப் போராடிய பாஞ்சாலங்குறிச்சியின் சிங்கம் கட்டபொம்மனை "கொள்ளைக்காரன் கெட்டிபொம்மு" என்று வெள்ளைக்காரன் குறிப்பெழுதி வைக்கவில்லையா?

இதேபோல் போர்த்துக்கேயரின் குறிப்புகளைக் கண்ணை மூடிக்கொண்டு புனிதமானதென நம்பினால் சரித்திர முரண்பாடுகளே ஏற்படும். சிக்கலும் குழப்பமும் நிறைந்த சூழ்நிலையிலேயே சங்கிலி ஆட்சிபீடமேறினான். அதன்பின் வந்த போர்த்துக்கேயருடன் உள்ளூர் சதிக்கூட்டமும் சேர்ந்து கொண்டால் சொல்லவும் வேண்டுமோ?

இருசாராரும் சேர்ந்து சங்கிலி மன்னன் மீது சுமத்தாத குற்றங்களில்லை. அவனின் வீரநாமம் காலாகாலாமாக மக்கள் மனதினில் நிலைத்து நீடிக்கக்கூடாதென்பதற்காகவே இச்செயல்புரிந்தனர்.

நாடு பிடிக்க வந்தவர்களின் பாபக்குறிப்புகள் பரிசுத்தானவையாகி விடமாட்டா. ஆங்கிலமொழியில் எழுதப்பட்டிருப்பதால்

மட்டும் சரித்திரத் திரிப்புகள் உண்மையாகி விடமாட்டா. பொய் சரித்திரமானால் சரித்திரம் பொய்யாகிவிடுமல்லவா?

மேலும் அக்கட்டுரையாளர் "யாழ்ப்பாணத்தில் சங்கிலி என்ற பெயருடன் இரண்டு மன்னர்கள் ஆட்சி செய்தார்கள் என்றும் முதலாமவன் தனியே சங்கிலி எனப்பட, இரண்டாமவன் சங்கிலி குமாரன் என அழைக்கப்பட்டானென்றும் இந்த இரு மன்னர்களுக்குமிடையில் வேறுபல மன்னர்கள் ஆட்சி பீடமேறியுள்ளனர் என்றும் இரண்டாவது சங்கிலி மன்னன் என்ற சங்கிலிகுமாரன் போர்த்துக்கேயரால் கைதுசெய்யப்பட்டு கோவாவுக்குக் கொண்டு செல்லப்பட்டான் என்றும் அங்கே அவன் தன் இறுதிநாட்களில் கிறிஸ்துவ நெறியைப் பின்பற்றிக்கொண்டதுடன் அவனது பூதவுடலும் கிறிஸ்துவ முறைப்படியே நல்லடக்கம் செய்யப்பட்டதென்றும் போர்த்துக்கேயரின் குறிப்புகள் கூறுவதாகவும் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இவையனைத்தும் ஒரே குளறுபடியாகவே இருக்கிறது.

இந்தச் சங்கிலிகுமாரனைப் பற்றி நாம் ஆராயப்புறப்படு முன் இங்கே இந்துமத ஆலயங்களைத் தரைமமட்டமாக்கிய போர்த்துக்கேயர்கள் அங்கே கோவாவுக்குக் கைதியாகக் கொண்டு சென்ற சங்கிலிகுமாரனின் இறுதிச்சடங்கை இந்து சமயமுறைப்படி நடத்த விரும்பியிருக்க மாட்டார்கள் என்பது உண்மையிலும் உண்மைதான். இதற்காகவே கோவாவில் அவன் இறுதி நாட்களில் மதம் மாறினான் என்றும் அவனது பூதவுடல் கிறிஸ்துவ முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டதாகவும் போர்த்துக்கேயர் குறிப்பெழுதி வைத்திருப்பதும் புரியக்கூடிய விஷயம்தான்.

இந்தச் சங்கிலிகுமாரன் யார்? அவன் கோவாவில் மதம் மாறியதற்கு யார் சாட்சி? போர்த்துக்கேயர்கள்தான் சாட்சி! கோவாவில் கொடுஞ்சிறையில் கைதியாக வைக்கப்பட்ட சங்கிலிகுமாரன் பற்றி எப்படிப்பட்ட குறிப்பையும் எழுதி வைக்கலாம்தான். அதிலும் சங்கிலி குமாரன் மதம்மாறினான் என்று கூறும்போது அச்செய்தி பரவலாக்கப்படும்போது மதம் மாறாத மக்களின் மனதையும் தளர்ச்சி அடையப்பண்ணலாம் என்பது போர்த்துக்கேயரின் எண்ணமாக விருந்திருக்கவேண்டும்.

இப்போதும் சரி, முன்னெப்போதும் சரி, அந்நியரின் குறிப்புகளை, அதன் உள்நோக்கங்களை, ஆழமாக ஆராயாமல் கண்ணை மூடி நம்பிக்கொண்டு சரித்திரம் சொல்லப் புறப்படுவது அல்லது சரித்திரம் படைக்கப் புறப்படுவது சரித்திரப்படைப்பாக அல்லாமல் சரித்திரச் சிதைப்பாகவே முடியும்.

ஆங்கிலக் குறிப்புகளை தமிழில் தருவதால் மட்டும் மக்களை சரித்திர அறிவில் முன்னேற்றம் காணச்செய்துவிட முடியாது. சரித்திரக் குறிப்புகளைச் சொல்லப் புறப்படுமுன் அவற்றிற்கான காரண காரியங்களை ஆராய்வதுடன் பின்னோக்கிய தொடர் நிகழ்ச்சிகளையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் எக்காலத்திலும் இரண்டு சங்கிலி மன்னர்கள் இருந்ததில்லை. அப்படிப் போர்த்துக்கேயரின் குறிப்புக் கூறினால், அக்குறிப்புகளை அடிப்படையாக வைத்த வேறு சுதேச குறிப்புகளில் அவ்விதம் கூறப்பட்டிருந்தாலும் அவை தவறானவையே.

யாழ்பாடி வீரராகவனுக்குப் பின்பு யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டவர்கள் சிங்கையாரியன் பரம்பரையினராகும். சிங்கையாரியனுக்கு ஒரு கை கூழங்கையானதால் கூழங்கைச் சக்கரவர்த்தி என்றும் அழைக்கப்பட்டான். இவனுக்குப் பின் இவன் வழித்தோன்றல்களான குலசேகர சிங்கையாரியன், குலோத்துங்க சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரின், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூஷண சிங்கையாரியன், விரோதய சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன், பரராஜசேகரன், பண்டாரம், சங்கிலி போன்றோரே யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டமன்னர்களாவர்.

சங்கிலியின் தந்தை பரராஜசேகரன் ஆகும். அவன் முடிசூடிக்கொண்டதும் தன்னை சிங்க பரராஜசேகரன் என அழைத்துக் கொண்டான். மன்னன் சிங்க பரராஜசேகரனுக்கு மூன்று மனைவியர். முதலாவது மனைவியான சோழ வம்சத்தைச் சேர்ந்த பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாளுக்கு சிங்கவாகு, பண்டாரம் என்ற இரு குமாரர்களும், இரண்டாம் தேவியான பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த வள்ளியம்மைக்கு பரநிருபசிங்கன் முதலான நான்கு பிள்ளைகளும், மூன்றாவதாக மணற்குடியிருப்பாளாகிய மங்கத்தம்மாளுக்கு சங்கிலி என்ற ஒரேயொரு மகனும், மகளுமிருந்தனர்.

மங்கத்தம்மாள் மன்னன் சிங்கபரராஜசேகரனின் வைபாட்டியென அழைக்கப் பட்டாள். மனைவிகளையும் பிள்ளைகளையும் கூடுதலாகக் கொண்ட மன்னன் சிங்கபரராஜசேகரன் குடும்பத்தில் பதவிப்போட்டி காரணமாக கொலைகள் விழும் அளவிற்கு குழப்பங்கள் நிறைந்திருந்தன. பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாளின் மூத்த குமாரன் சிங்கவாகு அரண்மனையில் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டான். சிங்கவாகு இறந்த பின்னர் அவன் தம்பி பண்டாரத்துக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்தான் சிங்க பரராஜசேகரன். அதன் பின்னர் சங்கிலியையும் அழைத்துக்கொண்டு, கும்பகோணத்துக்குச் சென்று வந்த பரராஜசேகரன் தன் இரண்டாம் தேவி வள்ளியம்மையின் மூத்தகுமாரன் பரநிருசிங்கனுக்கு கள்ளியங்காடு, அச்சுவேலி, உடுப்பிட்டி, மல்லாகம், கச்சாய், சண்டிலிப்பாய், அராலி ஆகிய ஏழு கிராமங்களை அவனுக்குச் சொந்தமாக்கி செப்புத்தகட்டில் பட்டயம் எழுதிக்கொடுத்ததுடன் இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாகவும் ஆக்கினான்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் அதிபதியாகப் பண்டாரமும், இரண்டாம் அதிபதியாக பரநிருபசிங்கனும் ஆட்சி செலுத்தி வருகையில் ஓர் நாள் நந்தவனத்துக்கு வேட்டையாடச் சென்றிருந்த பண்டாரம் வாளினால் வெட்டிக் கொலையுண்டு இறந்திருக்கக் காணப்பட்டான். மேற்படி இருகொலைகளுக்கும் சங்கிலி மீது வதந்திபரவியிருந்தாலும் பரராஜசேகரன் அதை நம்பியதாகத் தெரியவில்லை.

அதேசமயம் பண்டாரத்தின் கொலைக்குப்பின் சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசாகவிருந்த பரநிருபசிங்கனுக்கு பட்டம் சூட்டிவைக்கவும் பரராஜசேகரன் முன்வரவில்லை. நீண்ட மௌனம் பூண்டுகொண்டான். இந்தக் குழப்பகரமானநிலையில் தான் சங்கிலி ஆட்சிப்பீடம் ஏறினான். சங்கிலி ஆட்சிபீடமேறியதைப் பரராஜசேகரன் எதிர்த்ததாகவும் தெரியவில்லை.

சிம்மாசனத்துக்கு வாரிசான பரநிருபசிங்கன் உயிருடனிருக்க அவனின் தம்பியான சங்கிலி சுலபமாக ஆட்சிப்பீடமேறியதற்கு இராச்சியத்தின் நானாவித சேனைகளும் சங்கிலிக்கு ஆதரவாகவிருந்திருக்கின்றன என்பது எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகும். தன் தந்தை தனக்குப் பட்டம் சூட்டிவைக்க முன்வராமல் மௌனம் பூண்டதும் தம்பியான சங்கிலி ஆட்சிப்பீடமேறிக்கொண்டதும் பரநிருபசிங்கனுக்கு மிகுந்த ஆத்திரத்தையே தந்திருக்கும். சங்கிலி யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனானதும் தன் அண்ணனான பரநிருபசிங்கனுக்கு மந்திரிபதவி தர முன் வருகிறான். பரநிருபசிங்கனும் தன் தம்பியான சங்கிலியின் கீழ் மந்திரியாகவிருக்க ஒப்புக்கொண்டு பதவியைப் பெறுகிறான்.

ஆட்சியுடன் ஒட்டியிருந்தவாறே சங்கிலியின் ஆட்சிக்கு குழிபறித்து தன்னை அரசனாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் பரநிருபசிங்கனுக்கு! யாழ்ப்பாண இராச்சியத்தின் நிலை இவ்வாறிருக்க, கோட்டே இராச்சியத்தின் மன்னனாக விஜயபாகுவின் மகன் புவனேகபாகு இருந்தபோது (கி.பி. 1534 - 1542) தன் சகோதரர்களான சீதாவாக்கை மன்னன் மாயதுன்னையுடனும் றைகம் சிற்றரசனாகவிருந்த றைகம் பண்டாவுடனும் போர்புரிய போர்த்துக்கேயரின் துணையையும் தயவையும் அவன் இரு தடவைகள் கி.பி. 1538 இலும் கி.பி. 1540 இலும் நாடியதால் போர்த்துக்கேயருக்கும் தம் நோக்கங்களில்

வெற்றிபெறவும் தம் வர்த்தகத்தைப் பெருக்கவும் தம் மதத்தைப் பரப்பவும் வாய்ப்புக் கிட்டிற்று!

அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் சங்கிலி மன்னனும் மத்திய பகுதியில் பலந்தையில் புவனேகபாகுவின மருகனான லெதய என்பானும் செங்கடல நகரில் வீரவாகு என்பவனும் ஆண்டு வந்தனர். பரநிருபசிங்கனோ பதவிப்பித்து தலைக்கேறியவனாய் சங்கிலி மன்னனை வீழ்த்தவேண்டுமென்ற விபரீத எண்ணம் கொண்டு போர்த்துக்கேயரின் துணையை நாடவிளைகிறான். பரநிருபசிங்கனும் காக்கை வன்னியனும் செய்த கூட்டுச்சதியின் முதற்கட்டமே போர்த்துக்கேயர் பண்ணைத் துறையில் வியாபாரிகள் போல் வந்திறங்கிய நிகழ்ச்சியாகும்.

வியாபார நோக்குடன் வந்ததாகக் கூறிய போர்த்துக்கேயர் பண்ணைக் காட்டில் மண்கோட்டை கட்டி ஆயுதங்கள் சேகரித்து நாடு பிடிக்கத் திட்டம் தீட்டுவதை நேரிலே சென்றறிந்த சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரைப் போருக்கு அழைக்கிறான். யாழ்ப்பாணம் வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்னுள்ள பரந்தவெளியில் பதினொரு நாட்கள் நடைபெற்ற போரில் போர்த்துக்கேயர் ஆயிரக்கணக்கில் மடிந்ததுடன் வலுவிழந்து தோற்றோடினர்.

போர்த்துக்கேயர் தோற்றுப்போனது கண்டு மனக்கலக்கமும் துக்கமும் அடைந்த பரநிருபசிங்கன் இனி வெளிப்படையாகவே போர்த்துக்கேயருக்கு உதவி செய்ய வேண்டுமெனக் கருதி அப்பாமுதலி மூலம் காக்கைவன்னியனுக்கு ஓலையனுப்புகிறான். பரநிருபசிங்கனின் ஓலைகண்ட பின் அதற்கான ஏற்பாடுகளை போர்த்துக்கேயருடன் செய்து கொண்ட காக்கை வன்னியன் ஊர்காவற்று றையிலிருந்து இரவோடிரவாக யாழ்ப்பாணம் வந்து, பரநிருபசிங்கனைச் சந்திக்கிறான். புதிய சதித்திட்டம் தீட்டப்படுகிறது.

ஏலவே நடந்த ஏற்பாட்டிற்கிணங்க புதிய பறங்கிச்சேனை நல்லூர் அரண்மனையை முற்றுகையிடுகிறது : இதைக்கண்டு யுத்த சன்மாத்தனாகி சிங்க ஏறுபோல் வீறு கொண்டெழுந்த சங்கிலியனை காக்கை வன்னியன் ஓடோடிச்சென்று அன்பின் நிமித்தம் கட்டியரவணைணப்பது போல் அரவணைக் கிறான். சங்கிலியனும் பதிலுக்குக் கட்டி அரவணைக்கிறான்.

ஆனால் காக்கை வன்னியனோ பிடித்தபிடி விடாமல் இறுகக் கட்டிப்பிடிக்கவே அப்பிடியிலிருந்து விடுபட சங்கிலி எத்தனிக்ககை யில் இருவரும் தரையில் வீழ்ந்து புரள்கின்றனர்! இச்சமயம் பார்த்து பறங்கிச் சேனையினர் பாய்ந்து சங்கிலி மன்னனைக் கைதுசெய்து கைகளிலும், கால்களிலும் சங்கிலி மாட்டுகின்றனர். சதித்திட்டத்துக்குத் தலைமை தாங்கியவன், டொன் கொன்ஸ்டன்டைன் டி பிறகான்ஸா என்ற பறங்கித் தளபதியாவான்.

போரிலே வெல்ல முடியாத சங்கிலி மன்னனைப் போர்த்துக்கேயப் பறங்கியரும் உள்ளூர் சதிக்கும்பலும் சதியிலே வெல்கின்றனர். கைதியாக்கப்பட்ட சங்கிலி மன்னன் நீதாசனத்தின் முன் நிறுத்தப்பட்டு நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சிரம் கொய்யப்படுகிறான்! இதையறிந்த மன்னனின் மனைவி பெரியநாச்சியார் உடன் தற்கொலை புரிந்து கொள்கிறாள். இது நிகழ்ந்தது. கி.பி. 1580 இல் இதனுடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் தமிழராட்சி முடிவெய்திற்று. இதிலிருந்து நாமறிவது என்ன? போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்பு கொண்ட நாள் முதல் யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியடையும்வரை ஒரேயொரு சங்கிலி மன்னன் தான் இருந்திருக்கிறான்.

இரண்டு சங்கிலி மன்னர்கள் இருந்தார்க ளெனப்படுவது ஒரு குழப்பவாதமே! இந்த இரண்டு சங்கிலி மன்னர்களுக்கும் இடையில் வேறு பல மன்னர்கள் ஆட்சி பீடமேறியுள்ளனர் என்று போர்த்துக்கேயர்களின்

குறிப்புகள் கூறுகிறபோது, முதலாம் சங்கிலி மன்னனைச் சிரச்சேதம் செய்தும், இரண்டாம் சங்கிலி மன்னன் என்ற சங்கிலிகுமாரனைக் கைதியாக்கி கோவாவுக்கு இழுத்துச் சென்றும் பொல்லாப்புச் செய்த போர்த்துக்கேயர் இந்த இரு சங்கிலி மன்னர்களுக்குமிடையில் ஆட்சிப்பீடமேறியிருந்த "வேறு பல மன்னர்களை" நண்பர்களாக்கிக் கொண்டனரா?

போர்த்துக்கேயரின் குறிப்புகள் எவ்வளவு முரண்பாடானவையென்று இப்போது தெரிகிறதா? இரண்டாவது சங்கிலி மன்னன் என்றால் அவன் முதலாம் சங்கிலி மன்னனுக்குப் பிந்தியவனாகவே இருக்க வேண்டும். அப்படியென்றால் கி.பி. 1580 இல் சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்ட பின்னர், யாழ்ப்பாண அரசும் வீழ்ச்சியுற்ற பின்னர் வேறொரு மன்னன் தோன்றவில்லையே. அப்படியிருக்க இந்த இரண்டாவது சங்கிலி மன்னன் எப்படித் தோன்றியிருக்க முடியும்?

**கி.பி. 1580 இல் யாழ்ப்பாண அரசு, போர்த்துக் கேயர்களிடம் வீழ்ச்சியுற்ற பின்னர் நடந்ததென்ன?**

தாம் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற றவும் சங்கிலி மன்னனைக் கொலைசெய்யவும் உடந்தையாகவும் உதவியாகவும் இருந்த பரநிருபசிங்கனுக்கு அவனுக்கு ஏற்கனவேயிருந்த ஏழு கிராமங்களுடன் நல்லூரையும் மாதகலையும் பெருந்தொகைத் திரவியங்களையும் தந்து முன்னிருந்த மந்திரிப்பதவியையும் தந்ததுடன் இராச்சிய ஆட்சிப் பொறுப்பைப் போர்த்துக்கேயர் தமதாக்கிக் கொண்டனர்.

காக்கை வன்னியனுக்கும் அவன் செய்த கைங்கரியங்களுக்குப் பெருந்தொகைத் திரவியங்களைத் தந்த போர்த்துக்கேயர் பரநிருபசிங்கனின் மகன் பரராஜசிங்கத்துக்கு கிராம அதிகாரப் பதவியையும் தந்தனர். பின்னர் கி.பி. 1589 இல் பரநிருபசிங்கன் இறந்ததும் அவன் மகன் பரராஜ சிங்கத்துக்கு அரசாட்சி ஆலோசனைத் தலைவன் என்ற பதவியைத் தந்தனர் போர்த்துக்கேயர். அப்பதவியுடன் அவன் பரராஜசிங்க முதலி எனவும் அழைக்கப்பட்டான்.

பரராஜசிங்கமுதலி தன் இறுதிக்காலத்தில் ஏழு குமாரர்களையும் அழைத்து நல்லூரையும் கள்ளியங்காட்டையும் அழகாண்மைவல்ல முதலிக்குக் கொடுத்து நல்லூரில் தன் மாளிகையில் இருத்தியதுடன், தனபாலசிங்கமுதலிக்கு மல்லாகத்தையும் வெற்றிவேலாயுத முதலிக்குச் சண்டிலிப்பாயையும் விஜயதெய்வேந்திர முதலிக்கு அராலியையும், திடவீரசிங்க முதலிக்கு அச்சுவேலியையும் சந்திரசேகர மாப்பாண முதலிக்கு உடுப்பிட்டியையும், இராசரத்தின முதலிக்கு கச்சாயையும் கொடுத்ததுடன், தன் ஒரேமகள் வேதவல்லிக்கு மாதகலையும் கொடுத்து பின் மரணத்தைத் தழுவிக்கொண்டான்.

இப்படிச் சங்கிலி மன்னனின் கொலைக்குப் பின்னர் பரரூநிபசிங்கனின் பரம்பரையினர் தான் சிற்சில அதிகாரங்களுடன் போர்த்துக்கேயப் பறங்கியரின் பொம்மைகளாக இயங்கி வந்தனர். எனவே சங்கிலி மன்னனுக்குப் பின் இரண்டாவது சங்கிலி மன்னன் தோன்றுவதற்கு இடமேயில்லை! ஆனாலும் இந்தச் சங்கிலிகுமாரன் யார்? சங்கிலியின் மகனைத்தான் சங்கிலிகுமாரன் என அழைத்து போர்த்துக்கேயர் தம் குறிப்புகளில் ஆள்மாறாட்டம் செய்யத் தலைப்பட்டார்களா என்பதையும் நாம் அலசிப்பார்க்க வேண்டும்.

ஒரு விடுதலை வீரன் எதிராளிகளிடம் மாட்டிக் கொண்டால் அவனின் இரத்த உறவினர்களையும் எதிராளிகள் அழிப்பது வழக்கம். அதேபோல் சங்கிலி மன்னனின் தலை கொய்யப்பட்டவுடன் சங்கிலியின் மகள், சங்கிலியின் சகோதரி, சகோதரியின் மகன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு கோவாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். இன்னும் சங்கிலியின் நெருங்கிய இன பந்துக்களும் ஆதரவாளர்களும் யாழ்ப்பாணத்திலேயே போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டார்கள். பரநிருபசிங்கனே அவர்களை இனம்காட்டிக் கொடுத்தான்.

சங்கிலி தன் மூத்த மகனை மதம் மாறியதற்காக வெட்டிக் கொன்றானென்றும் சங்கிலி இரண்டாவது மகனும் சங்கிலியின் சகோதரியும் அவளது மகனும் மதம்மாறி கோவாவுக்கு ஒளித்தோடிப் போனார்களென்றும் கூட போர்த்துக்கேயர்களின் குறிப்புகள் கூறுகின்றன.

போர்த்துக்கேயருடன் ஒத்து உறவாடி அவர்களுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்து அவர்களிடம் பதவிப்பிச்சை பெற்று வாழ்ந்த பரநிருபசிங்கமும் அவனது மகன் பரராஜசிங்கமும், அவனது 8 பிள்ளைகளும் மதம் மாறவில்லை. போர்த்துக்கேயரை எதிர்த்து நாட்டைக் காக்கப் போரிட்ட சங்கிலி மன்னனின் மக்களும். சகோதரியும் மருகனும் மதம் மாறினார்களாம். இவையனைத்தும் நம்பக்கூடிய குறிப்புகளா?

சங்கிலி மன்னனின் இரத்த உறவினர்களை கைதிகளாக்கிச் சங்கிலியில் பூட்டிக் கோவாவுக்கு இழுத்துச் சென்று அவர்களை அழிக்கத் தலைப்பட்ட போர்த்துக்கேயர்கள் சங்கிலியின் பரம்பரைக்கு கரி பூசவும், தமக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கவுமே அப்படியான குறிப்புக்களை எழுதி வைத்தார்களென்றால் மிகையாகாது. நல்லவேளையாக சங்கிலி மன்னனின் மனைவியான பெரிய நாச்சியார் சங்கிலி மன்னனின் சிரம் கொய்யப்பட்டவுடன் தற்கொலை புரிந்திருக்காதிருந்தால் நாச்சியாரும் கோவையில் இறுதிக் காலத்தில் மதம் மாறியதாகவே போர்த்துக்கேயர் குறிப்பெழுதி வைத்திருப்பர்.

எனவே கோவாவுக்குக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட சங்கிலி மன்னனின் மகனைத்தான் "சங்கிலிகுமாரன்" என்ற இரண்டாவது சங்கிலி மன்னனாக்கினார்களோ என்பது போர்த்துக்கேயர்களுக்கே வெளிச்சம். மற்றப்படி போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்புகொண்டது முதல் யாழ்ப்பாண இராச்சியம் அவர்களிடம் வீழ்ச்சி அடையும் வரை ஒரே ஒரு சங்கிலி மன்னன் தான் இருந்தான். அவனேதான் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனாவான்.

- உலகத்தைத் துறக்க முடியாவிட்டால் பலாத்காரமாக அதை அடக்கு.
- நோயுள்ள சீவன் தனக்குத்தானே வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.
- உலகம் முரண்பாடுகள் நிறைந்தது.
- உண்மையின் மொழி எளிமையானது.
- உண்மை எழுத்தாளர்களுக்கு மிக்க மனவுறுதி வேண்டும்.
- குருவை விட்டால் கடவுள் இல்லை.

**தொகுப்பு - நளினிதேவி கதிரவேல், நடனத்துறை**

# ஆரியச் சக்கரவர்த்திகள்

**அரசியின் வழக்குரைஞர் மு. திருச்செல்வம்,**
வரலாற்றுப் பேராசிரியர் இரா. பத்மநாதன்,
அறிவியல், அரசியல், மற்றும் தமிழாராய்ச்சியாளர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்

பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டிய அரசு சீர்குலைந்து 60 ஆண்டுகள் வரை முசுலிம்களின் ஆட்சியில் வந்தது. அக்காலத்தில் தமிழ் ஈழ அரசு தன்னாட்சி பெற்ற அரசாக, ஆட்சியுரிமையுடைய அரசாக, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இறைமையுடைய அரசாக எழுந்தது.

திரு. இபன் பற்றுற்றா நாடுகள் பல கண்ட பெரியார், அறிஞர். கி.பி. 1344இல் இவர், தமிழ் ஈழ மன்னனுடைய 100 கப்பல்கள் கூட்டாக அராபிய நாட்டுக்குப் பயணமானதைக் கண்டார். 100 கப்பல்களும் ஒரே நேரத்தில் வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் சென்றன. தனது பயணக் கட்டுரையில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

பதினான்காம் நூற்றாண்டின் தமிழ் ஈழ மன்னர்களான ஆரியச் சக்கரவர்த்திகள், செல்வம் செழித்த, வலிமை வேரூன்றிய, படை பெருகிய ஆட்சியாளராகினர். கண்டி அரசரும், கீழ்நாட்டுச் சிங்கள அரசர்களும் தமிழ் ஈழ மன்னர்களின் மேலாணையை ஏற்றுக்கொண்டனர். திறை செலுத்தினர். இதைச் சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

மன்னார் வளைகுடாவில் ஈழத் தமிழர் முத்துக்குளித்தனர். தமிழ் ஈழ மன்னர்களின் ஆணையின் கீழ் முத்துக்குளித்தனர். இதனால் தமிழ் ஈழ மன்னர்கள் செல்வம் மிகையாகப் பெற்றிருந்தனர். நூற்றுக்கணக்கான கப்பல்களை வைத்திருந்த வணிகர், தமிழ் ஈழ அரசர்களின் ஆணையை ஏற்றனர். ஏமாங்கதம், அராபியம், கடாரம், சாவகம் போன்ற கடல் கடந்த நாடுகளுடன் தொடர்புகொண்டிருந்தனர்.

கி.பி. 1327இல் பாண்டியரின் ஆட்சி முழுமையாக முசுலிம்களிடம் வீழ்ச்சியுற்றது. தமிழ் ஈழத்தில் மட்டுமே தமிழரசர்கள் ஆட்சி செய்தனர். இதனால், வாழ்வாதரத்துக்கு அரசர்களின் மானியங்களை நம்பியிருந்த தமிழ்நாட்டுத் தமிழ்ப் புலவர்களும், வட கடலைக் கடந்து தமிழ் ஈழ மன்னர்களை நாடி வந்தனர். தமிழ் ஈழத்தில் தங்கினர். தமிழ் ஈழ மன்னர்கள் பன்மொழிப் புலமை பெற்றும், மருத்துவ விற்பன்னர்களாகவும் இருந்தனர். சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். முசுலிம் படையெடுப்பினால் தமிழ்க் கலாசாரம் அழியாமலிருக்கப் பல்துறை வல்லுனர், புலமையாளர், தமிழ்க் கலாசாரப் பேழைகளுடன் தமிழகத்திலிருந்து கடல்கடந்து யாழ்ப்பாண அரசிடம் தஞ்சம் புகுந்தனர்.

ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரயைச் சேர்ந்த கடைசி மன்னனே சங்கிலி. 1619 யூனில் தமிழ் ஈழத்தின் இறைமையையும் ஆட்சியுரிமையையும் தனது கடைசி மூச்சுவரை விட்டுக்கொடுக்க முடியாது என்றான் இம்மன்னன். ஈழத் தமிழ் மக்களின் இறைமையையும் ஆட்சியுரிமையையும் இடையீடின்றித் தமிழ் மன்னர்கள் எடுத்தாண்டு வந்தமையைச் சங்கிலி உணர்ந்திருந்தான்.

**சங்கிலி மன்னன்**

தமிழ் ஈழ அரசை எதிர்த்து உள்நாட்டில் கலகம் நடைபெற்றது. 1618 ஆவணி புரட்டாதி மாதங்களில் இந்தக் கலகம் நடைபெற்றது. சங்கிலி மன்னன் அப்பொழுது தமிழ் ஈழத்தின் தன்னிகரற்ற மன்னனாக ஆட்சி செய்தான்.

போர்த்துக்கேயப் பாதிரியார் பீதுறு பொட்டன்கொன் தலைமையில் கலகம் நடைபெற்றது. தமிழ் ஈழ அரசைக் கவிழ்க்க வேண்டும், போர்த்துக்கேயரின் ஆட்சியை அங்கு நிறுவவேண்டும். இதுவே கலகக்காரரின் நோக்கம். மன்னாரில் படைகளுடன் இருந்த போர்த்துக்கேயர் இதற்கு மறைமுக ஆதரவு தந்தனர்.

சங்கிலி மன்னன் தனது படைபலத்தைப் பயன்படுத்தினான். மேலதிக உதவி கேட்டுத் தஞ்சாவூர் இரகுநாத நாயக்க மன்னருக்குச் செய்தி அனுப்பினான்.

"தமிழ் நாட்டுக்கும் தமிழ் ஈழத்துக்கும் உள்ள தொடர்புகள் வெறும் சொல்லளவுத் தொடர்புகளல்ல. இதோ செயலில் காட்டுகிறோம். வருணகுலத்தானையும் ஐயாயிரம் வீரர்களையும் அனுப்புகிறோம்" என்று தஞ்சை இரகுநாத நாயக்க மன்னன் செயலில் காட்டினான்.

தமிழ் ஈழ அரசு தொல்லைக்குள்ளாகின்றது, துன்புறுகின்றது, அல்லற்படுகின்றது என்றால் தமிழ்நாட்டில் உள்ள அரசுகள் அக்கறை காட்டுகின்றன. கடலைத்தாண்டி உள்ள ஒரே தமிழ் அரசு, தமிழ் ஈழ அரசே. தமிழ் ஈழ அரசுக்கு உதவுதல், ஒத்தாசைபுரிதல் தமிழ்நாட்டு அரசுகளின் கடனல்லவா? சங்கிலி மன்னனுக்குப் பக்க பலமாக இருக்குமாறு வருண்குலத்தானிடம் கூறிப் படையை அனுப்பினான் தஞ்சை இரகுநாத நாயக்க மன்னன்.

சங்கிலி மன்னனின் படைகள் கலவரத்தை அடக்கின. தஞ்சைப் படைகளையும் மன்னன் பயன்படுத்தினான். நாட்டில் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டுவது மன்னனின் கடன் அமைதியையும் கட்டுப்பாட்டையும் நடைமுறைப்படுத்துவதும் மன்னனின் கடன் சங்கிலி மன்னன் தன் உயர்ந்த கடமையைச் செய்தான். அவ்வாறு செய்வதற்குரிய ஆட்சியுரிமை அவனிடம் இருந்தது. ஒப்பாரும் மிக்காரும் இல்லா இறைமை அவனுடையதாக இருந்தது.

தமிழ் ஈழ அரசைக் கைப்பற்றுக

போர்த்துக்கேயரின் தொல்லைகளைச் சங்கிலி மன்னன் அறிவான். வாய்ப்புக் கிடைத்ததால், செண்பகப் பெருமாள் ஆகிய சப்புமால் குமரையா போன்றவர்களை அனுப்பித் தமிழ் ஈழ அரசை அடக்கி ஆளச் சிங்கள அரசரும் முயல்வர் என்பதையும் சங்கிலி மன்னன் அறிவான்.

"யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்ட தமிழ் ஈழ அரசைக் கைப்பற்றுக" என்ற ஆணையை 1617இல் கோவாவில் இருந்த தனது இந்திய ஆளுநருக்குப் போர்த்துக்கேய மன்னன் அனுப்பியிருந்தான். அந்த ஆணையை நடைமுறைப்படுத்தும்வாய்ப்பை எதிர்நோக்கிப் போர்த்துக்கேயர் இருந்தனர். இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள போர்த்துக்கேயப் படைத் தளபதிகள் காத்திருந்தனர். 1619 சனவரி வரை அந்த ஆணையை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையைத் தமிழ் ஈழ மன்னன் சங்கிலியன், போர்த்துக்கேயருக்கு அமைத்துத்தரவில்லை.

தமிழ் ஈழ அரசுக்கும் அகன்ற போர்த்துக்கேய அரசுக்கும் போர்கள் பல நடந்துள. போர்களில் மாறி மாறி இரு அரசுகளும் வெற்றி ஈட்டியுள. திறைப்பணம் கொடுக்கும் அளவிற்குத் தமிழ் ஈழ அரசு போர்த்துக்கேய அரசிடம் சரணாகதியடையவில்லை, அடிமைப்படவில்லை.

ஈராண்டுகளாகச் சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு எதுவும் கொடுக்கவில்லை. வலுக்கட்டாயமாகச் சன்மானம் கொடுப்பதுகூடச் சங்கிலி மன்னனின் தன்மான உணர்வுக்கு ஒப்புவதாக இல்லை. எதுவும் பெறாத நிலையில் திறையைக் கேட்டு

எழுதினான் போர்த்துக்கேயன். போருக்கு மீண்டும் போர்த்துக்கேயர் தயாராவதைச் சங்கிலி மன்னன் உய்த்துணர்ந்தான்.

திறைகேட்டு எழுதிய ஓலைக்குச் சங்கிலி மன்னன் பதில் அனுப்பவில்லை. பதில் அனுப்பத் தேவையில்லை என எண்ணினான்.

**ஒல்லாந்தர்**

சங்கிலி மன்னன் இரண்டு வழிகளைத் தேர்ந் தெடுத்தான். ஒல்லாந்தர் மேலை நாட்டவர். சிறிது சிறிதாகக் கீழைநாடுகளில் காலடி எடுத்துவைக்க முனைந்து வந்தனர்.

தமிழ் நாட்டில் பழவேற்காட்டில் ஒல்லாந் தார், படையும் பாசறையுமாக இருந்தனர். கோட்டை கொத்தளம் அமைத்திருந் தனர். நறுமணப்பொருள் வாணிபத்தில் நேரடிப் பங்குகொள்ள ஒல்லாந்தர் விரும்பினர். போர்த்துக்கேயரின் செல்வாக்கைப் போக்க விரும்பினர். ஒல்லாந்தரிடம் போர்த்துக் கேயரைத் தாக்கி முறியடிக்கக்கூடிய கப்பற்படை இருந்தது. ஆயுதங்கள் இருந்தன.

சென்னைப் பட்டினத்துக்கு வடக்கேயுள்ள பழவேற்காட்டுப் பாசறையிலுள்ள ஒல்லாந்தருக்குச் சங்கிலி மன்னன் செய்தி அனுப்பினான். போர்த்துக்கேயருக்கு எதிராகத் தனக்கு உதவும்படிக் கேட்டிருந்தான்.

**குஞ்சலி வீரர்**

இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் உள்ள மலையாளப் பட்டினம் கோழிக் கோடு. இங்கேயுள்ள மலையாளிகள் போர்த்துக் கேயரின் கொள்கைகளை விரும்பாதவர்.

குஞ்சலி வீரர் இவர்களுள் முதன்மையானவர். கடலிலேயே போர்த்துக்கேயரின் கடற் படைக்கும், வாணிபக் கப்பல்கட்கும் தொல்லை கொடுப்பவர். குஞ்சலி வீரர்களின் கடற் படையை அடக்கப் போர்த்துக்கேயர் பலமுறை முயன்றனர் முடியவில்லை. கடைசியாக அவர்களில் சிலரைச் சிறையில்வைத் தனர் மதமும் மாற்றினர்.

சிறையில் மதம் மாறிப் பின்னர் சிறையிலிருந்து தப்பி ஓடியவன் டொம் பீதுறுரொட்றிகசு. தப்பி ஓடியவன் தனக்கென ஒரு கப்பற்படையை அமைத்தான். ஆறு ஏழு கப்பல்களுடனும் வீரர்களுடனும், போர்த்துக்கேயருக்குத் தொல்லைகொடுத்தான். சங்கிலி மன்னன், டொம் பீதுறுரொட்றிகசுக்குச் செய்தி அனுப்பினான். 1619 மார்ச்சு மாதத்தில் டொம் பீதுறு ஆறு கப்பல்களில் மலையாளப் படைகளை அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணக் கடற்கரைக்கு வந்தான். சங்கிலி மன்னனைக் கண்டான். சங்கிலி மன்னனின் ஆணையை எதிர்பார்த்து யாழ்ப்பாணத்தை ஒட்டிய கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்றான்.

**உட்பகை**

1618 ஆவணி - புரட்டாதியில் நடைபெற்ற உள்நாட்டுக் கலகத்தைத் தூபம் போட்டு வழி நடத்தியோர் அந்நிய கத்தோலிக்கப் பாதிரிமார்களே. வருணகுலத்தான் தலைமையில் ஐயாயிரம் வீரர்களைச் சங்கிலி மன்னன் அழைத்துக் கலவரத்தை அடக்கியதை இவர்கள் உள்ளூர ஆதரிக்கவில்லை.

காக்கை வன்னியன் என்பானும் சங்கிலி மன்னனுக்கு நண்பனாய் நடித்துத் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறும்.

1619 பங்குனியில் டொம் பீதுறுவின் கடற்படையையாழ்ப்பாணக்கரையோரங்களில் கண்டதும் பாதிரிமார் உடனடியாகக் கொழும்புக்குச் செய்தி அனுப்பினர். சங்கிலி மன்னன் ஒல்லாந்தருடன் தொடர்புகொள்ள முயன்று அவர்களின் படையையும் அழைக்க

முயல்கிறான் எனவும் பாதிரிமார் செய்தி அனுப்பினர்.

1619 பங்குனியில் கொழும்பில் தளபதியாக இருந்தவன் கொன்சுடாண்டின் டிசா. இவன் சங்கிலியின் படைப்பெருக்கு நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்தான். டொம் பீதுறுவின் கடற்படை வருகை அவனுக்கு மேலும் கோபத்தை ஊட்டியது.

**படை பயணித்தது**

1619 பங்குனியில் படைத்தொகுதிகள் இரண்டை யாழ்ப்பாணத்துக்குப் போகுமாறு கட்டளையிட்டான். கடல் வழியாக நூறு போர்த்துக்கேய வீரர்களுடன், சில நூறு சிங்களக் கூலிப் படைகளும் ஆறு கப்பல்களில் மன்னாரை நோக்கிப் பயணமாயின.

பிலிப்பு டி. ஒலிவேரா தலைமையில் நூற்றிமுப்பது போர்த்துக்கேயரும் இரண்டாயிரத்துக்கும் கூடுதலான சிங்களக் கூலிப்படைகளும் கரையோரப் பாதையால், புத்தளம் - சிலாபம் - முள்ளிக்குளப்பாதையால் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்தன.

இவை தவிர, நாகப்பட்டினத்தில் முகாமிட்ட போர்த்துக்கேயருக்குக் கடற் படைக் கப்பல்களையும் படைகளையும் அனுப்புமாறு தளபதி டிசா செய்தி அனுப்பியிருந்தான். போர்த்துக்கேயரின் போர் ஆயத்த நடவடிக்கைகளைச் சங்கிலி மன்னன் ஒற்றர் வழியாக உடனுக்குடன் தெரிந்து கொண்டான். டொம் பீதுறுவின் வருகையே போர்த்துக்கேயரைக் கோபத்துக்குள்ளாக்கி உடனடி நடவடிக்கைக்கு வழிசெய்தமையைத் தெரிந்துகொண்டான்.

டொம் பீதுறுவுக்குச் சங்கிலி மன்னன் செய்தி அனுப்பி அரச அவைக்கு அழைத்தான். யாழ்ப்பாணக் கடலில் நில்லாது எட்டத்தள்ளி நிற்குமாறு கேட்டுக்கொண்டான். டொம் பீதுறு யாழ்ப்பாணக் கடலை விட்டு நீங்கியமையால் போர்த்துக்கேயக் கடற்படைக்குப் பணி குறைந்தது.

பிலிப்பு டி ஒலிவேரா தனது தரைப் படைகளுடன் புத்தளம், மன்னார் வழியாகப் பூநகரியை வந்தடைந்தான். 1619 பங்குனியில் கொழும்பை விட்டுப் பயணிக்கத் தொடங்கிய படைகள், 1619 வைகாசியிலேயே பூநகரியை வந்தடைந்தன. வழியில் படை வீரர் நோயுற்றனர். வெயிற்காலமானதால் களைப்புற்றும் இருந்தனர். காட்டு வழியாதலால் பயணம் கடுமையானதாக இருந்தது.

இவர்களிடம் நவீன படைக்கலன்கள் இருந்தன. பீரங்கி வெடிகள், துப்பாக்கிகள், வாள், ஈட்டி என்பன மிகையாக இருந்தன.

தமிழ் ஈழ அரச படைகளும் துப்பாக்கிகளை வைத்திருந்தன. சுடப் பயின்றிருந்தன. வாட்படை, வேற்படை, குதிரைப்படை, யானைப்படை என்பன சங்கிலி மன்னனிடம் மிகையாக இருந்தன. வருணகுலத்தான் தலைமையில் ஐயாயிரம் வீரர்களும் சங்கிலி மன்னனின் சில ஆயிரம் படை வீரர்களும் தமிழ் ஈழப் படையணியாகத் திரண்டனர்.

பூநகரியில் இருந்து டி ஒலிவேரா சங்கிலி மன்னனுக்குச் செய்தி அனுப்பினான். “குடாக் கடலைத் தாண்ட வேண்டும். படைகள் குடா நாட்டுக்குள் வரவேண்டும். மன்னனின் ஓடங்களை அனுப்புக.”

சங்கிலி மன்னன் பதில் அனுப்பவில்லை. ஓடங்களையோ நாவாய்களையோ அனுப்பவி ல்லை. இவற்றை அனுப்ப இசையவில்லை. காக்கை வன்னியன் போன்ற துரோகிகள்

உதவினர். சில பாதிரிமார் உதவினர். படகுகளையும் நாவாய்களையும் பூநகரிக்கு அனுப்பினர்.

துரோகிகளை முதலில் ஒழிக்க சங்கிலி மன்னன் கருதினான். எனவே போர்த்துக் கேயரின் முயற்சியை, அவர்கள் குடாக் கடலைக் கடக்கும் முயற்சியைப் படை கொண்டு தடுக்கவில்லை.

ஆனாலும் அவன் வாளா இருக்கவில்லை. படகோட்டிகளையும் வஞ்சகர்களையும் மறை முகமாக அச்சுறுத்திச் செய்தி அனுப்பினான். பயத்தினால் பலர் அரசனின் பக்கம் சார்ந்தனர். படகுகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது.

1619 மே மாதக்கடைசியில் குடாநாட்டுக்குள் படைகள் வந்து சேர்ந்தன. வந்து சேர்ந்த பின்பு யாழ்ப்பாணக் குடாநாடு பலவிதமான படை வீரர்களின் உலாக்களமாயிற்று. சங்கிலி மன்னனின் படைகள், தஞ்சை நாயக்கரின் படைகள், போர்த்துக்யேப் படைகள், சிங்களக் கூலிப் படைகள் எனப் பலவகை வீரர் அங்கு உலாவினர்.

குடாநாட்டுக்குள் டி ஒலிவேரா வந்ததும் சங்கிலி மன்னனுக்குத் தூதுவன் வழியாக இரண்டு முக்கிய கோரிக்கைகளை அறிவித் தான். முதலாவது கோரிக்கை, “திறை செலுத்துக.” இரண்டாவது கோரிக்கை, “வருண குலத்தானையும் ஐயாயிரம் வீரர்களையும் போர்த்துக்கேயரிடம் சரணடைய உத்தரவிடுக.”

சங்கிலியன், தமிழ் ஈழத்தின் தன்னிகரற்ற வேந்தன். மான உணர்வு உள்ளவன். தமிழுரை, தமிழ் ஈழ அரசை ஆளப் பிறந்தவன். தமிழ் ஈழத்தின் இறைமை, ஆட்சியுரிமை உடையவன். திறை கொடுப்பதா? தமிழ் ஈழ மன்னன் திறை கொடுப்பதா?

சன்மானம் என்ற பெயரிலே சங்கிலி மன்னனின் முன்னோர் போர்த்துக்கேயர்கட்கு ஏதோ கொடுத்தனர். அரசன் விரும்பிக் கொடுக்கும் சன்மானத்தை அந்நியர் வலிந்து கேட்கின்றனர் - கொடுக்கலாமா?

இப்பொழுது அதையே திறையாகக் கேட்கிறான் போர்த்துக்கேயன். சங்கிலி மன்னனின் நல்லாட்சியிலே தமிழ் மக்கள் ஈழத்திலே செம்மையுடனும் செழிப்புடனும் செல்வத்துடனும் வாழ்கின்றனர். எதற்காகப் போர்த்துக்கேயனுக்குக் கொடுக்க வேண்டும் திறை? சங்கிலி மன்னன் திறை கொடுக்க மறுத்தான்.

சங்கிலி மன்னனின் அழைப்பை ஏற்று வந்தவர்கள் வருணகுலத்தானும் வீரர்களும். அவர்களை அந்நியன் முன் சரணடையச் சங்கிலியன் சொல்வானா? ஒரு தமிழ் மன்னன், மற்றொரு தமிழ் மன்னன் மீது நம்பிக்கை வைத்து அனுப்பிய வீரர். அவர்களைச் சரணாகதி அடையச் சொல்ல முடியாது. அவர்கள் தமிழ் நாட்டுக்குத் திரும்பவேண்டியவர். உரிய காலம் வரும்போது திரும்புவர். அதுவரை தமிழ் ஈழத்திலேயே தங்குவர்.

வருணகுலத்தானையும் வீரர்களையும் போர்த்துக்கேயரிடம் சரணடைய உத்தரவிடச் சங்கிலி மன்னன் மறுத்தான்.

ஒலிவேராவின் இரு கோரிக்கைகளும் சங்கிலி ம்ன்னனின் ஆட்சியுரிமையில் தலையிட்டன. சங்கிலி மன்னன் தன் ஆட்சியுரிமையை விட்டுக்கொடுக்க மறுத்தான். இரு கோரிக்கைகளையும் நிராகரித்தான்.

**ஒப்பந்தம்**

ஒலிவேராவின் வீரர்கள் களைப்புற்றிருந்தனர். அவர்களின் உணவு, உடைத் தேவைகளைக் கவனிக்க வேண்டியது படைத் தலைவனின் கடன். நீண்டநாட் பயணத்தால், கொணர்ந்த

பொருள் யாவும் முடிவடையும் தறுவாயில் இருந்தது.

ஒலிவேரா மீண்டும் தூதனுப்பினான். திறைகொடுக்க மறுத்த சங்கிலி மன்னன், ஒலிவேராவின் படைகளுக்குரிய பொருள்கள் வாங்கப் பணம் கொடுக்கச் சம்மதித்தான். அதற்கும் ஒரு நிபந்தனை விதித்தான். பணத்தை வாங்கியதும், நகரில் பொருள்களை வாங்கிக்கொண்டு ஒலிவேராவின் படைகள் அனைத்தும் குடாக் கடலைத் தாண்டிப் பூநகரிக்குப் பின்வாங்க வேண்டும்.

ஒலிவேரா நிபந்தனையை ஏற்றுக் கொண்டான். ஐயாயிரம் பகோடாகளைக் கொடுக்கச் சங்கிலி மன்னன் சம்மதித்தான். அதன்படி ஒலிவேராவிடம் பணத்தை அனுப்பினான். தான் சொன்ன சொல்லைச் சங்கிலி மன்னன் காப்பாற்றினான். ஒலிவேரா தன் சொல்லைக் காப்பாற்றினானா?

இல்லை! ஒலிவேரா சொன்னா சொல்லைக் காப்பாற்றவில்லை. பணத்தை வாங்கியபின் பூநகரிக்குப் பின்வாங்க மறுத்தான். தமிழ் ஈழ அரசின் துரோகிகளின் உதவியுடன் தொடர்ந்தும் குடாநாட்டிலே தங்கினான். படைகளுடன் வண்ணார்பண்ணையை நோக்கி முன்னேறினான்.

சங்கிலி முரசறைந்தான். போர் முரசறைந்தான். படைகளை அணிவகுத்தான். வருணகுலத்தானின் படைகளையும் தயார் நிலைக்குக் கொணர்ந்தான். மானம் காக்க முனைந்த மறவனாம் மன்னனுக்கு உறுதுணையாகப் போரிட மக்கள் திரண்டனர். சங்கிலி போருடை அணிந்தான். போர்க் குதிரையில் அமர்ந்தான். ஏந்திய வாளுடன் வீரமாகாளி அம்மன் கோவிலுக்குச் சென்றான். வெற்றி காணும் உறுதி, வெற்றி அடையும் திண்மை, தமிழரின் மானம் காக்கும் வலிமை, தனக்கும் தன் வீரர்க்கும் - இவை கேட்டு வீரமாகாளி அம்மனை வழிபட்டான்.

**வண்ணார்பண்ணைப் போர்**

பூநகரியை நோக்கிப் பின்வாங்குவோம் என உறுதி கூறியவர், சொல்லை மீறினர், ஏமாற்றினர், தந்திரோபாயம் செய்தனர்.

தமிழர்களோடு ஒப்பந்தங்கள் செய்பவர், தமிழர்களை எப்பொழுதும் ஏமாற்றியே உள்ளனர். மாற்றானையும் நம்பும் பண்பு தமிழரில் மேலதிகமாக உண்டு. இதனால் தமிழர்களை ஏமாற்றுவது எளிதாக இருந்தது. தமிழர் தம் சொல்லைக் காப்பாற்றியுள்ளனர்.

பின்வாங்க வேண்டிய படைகள் முன்னேறிக்கொண்டு வண்ணார்பண்ணையை நோக்கி வந்தன. வண்ணார்பண்ணையைப் போர்க்களமாக்கச் சங்கிலியன் முடிவெடுத்தான். முதலில் சிங்களக் கூலிப் படைகள் வந்தன. இவற்றைச் சங்கிலி மன்னனின் உள்ளூர்ப் படைகள் சந்தித்தன. சிங்களப் படைகள் புறமுதுகு கண்டன. போரின் வேகம் கூடக் கூடச் சங்கிலியன் வெற்றி பெறுவது சாத்தியமாவது போல அமைந்தது.

போரின் நிலை குறித்துத் தஞ்சை மன்னனுக்கும் கண்டி மன்னனுக்கும் செய்தி அனுப்பினான். கண்டி மன்னன் எவ்வித உதவியும் வழங்கவில்லை. ஒல்லாந்தப் படைகள் எந்நேரமும் வரலாம் என எதிர்பார்த்தான். டொம் பீதுறுவின் கடற்படை வருவதற்குரிய காலம் இதுவெனச் செய்தி அனுப்பினான்.

புறமுதுகு காட்டி ஓடும் சிங்களக் கூலிப்படைகளைக் கண்டு ஒலிவேரா துணுக்குற்றான். மன்னாரில் இருந்த கடற்படைக்குச் செய்தி அனுப்பினான்.

நாகப்பட்டினத்துக்கும் கொழும்புக்கும் செய்திகள் அனுப்பினான். ஊர்காவற்றுறையில் இருந்துகொண்டே சில போர்த்துக்கேயப் படைத் தலைவர்கள் காக்கை வன்னியனுடன் கலந்துரையாடினர். நேரடிப் போரில் சங்கிலி மன்னனை வெல்ல முடியாது. போரின் கால எல்லையும் நீடிக்கும். சங்கிலி மன்னனைச் சிறை பிடித்தால், தமிழர் படை சீர்குலைந்துவிடும். இவ்வாறு திட்டம் தீட்டினர். காக்கை வன்னியனை இத்திட்டத்தில் ஈடுபடக் கேட்டனர். சங்கிலி மன்னனைச் சிறை பிடித்தால் காக்கை வன்னியனைப் போர்த்துக்கேய அரசின் கீழுள்ள தமிழ் ஈழ அரசின் ஆட்சித் தலைவன் ஆக்குவதாகக் கூறினர்.

காக்கை வன்னியன் துரோகம் இழைக்க முற்பட்டான். தனது இனத்தை விற்க முன்வந் தான். தனது நன்மைக்காகத் தமிழி னத்தை, அதன் மானத் தலைவனை விற்க முன்வந்தான். தமிழ் ஈழ அரசைக் கலைத்து, நாட்டை அடிமை நாடாக்க ஒப்பினான்.

தமிழருக்குத் துரோகிகள் தமிழரிடையே இருந்தமையாலன்றோ தமிழர்கள் அடிமை வாழ்வு வாழ நேரிட்டது? இது வரலாறு காட்டும் பாடம்.

சங்கிலி மன்னனின் படைகள் போர்த்துக் கேயப் படைகளைப் புறமுதுகு காண வேண் டிய காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. போர்த்துக்கேயப் படைகள் உணவு முதலிய அடிப்பைடத் தேவைகட்காக அல்லலுற்றனர். இழந்த ஆயுதங்களை மீட்க நெடுந்தொலைவில் இருந்துவரும் மீட்புப் படையை எதிர்பார்த்து இருந்தனர்.

இந்த நேரத்திலே, காக்கை வன்னியன் புறப்பட்டான். காக்கை வன்னியனின் செயற்பாட்டையாழ்ப்பாண வைபவ மாலையில் விரிவாகக் காணலாம். மாற்றுடையில் தமிழ்ப் படைகளூடே சென்றான். சங்கிலி மன்னனின் பக்கம் சேர்ந்து போராட விருப்பம் தெரிவித்தான்.

"காக்கை வன்னியனும் மனம் மாறினான். உட்பகையின் பலம் குறைந்ததே" எனச் சங்கிலி மன்னனும் மகிழ்ந்தனன். காக்கை வன்னியனைக் கட்டித் தழுவினன். "இப்பொழுதுதான் உன் மனதில் என்மேற் தயவு பிறந்து எனக்கு உதவி செய்ய வந்தாயோ" எனக் கேட்டான்.

தழுவியமன்னனைக்கொழுவியசிக்குப்போல் காக்கை வன்னியன் பிடித்துக்கொண்டான். விடுவதாக இல்லை. காக்கை வன்னியனுடன் மாற்றுடையில் வந்த ஏனையோர் சங்கிலி மன்னனைப் பிடித்துக் கொண்டனர். தனது படைகளால் காப்பாற்றப்படுமுன்பே சங்கிலி மன்னனைச் சிறைபிடித்தனர்.

சங்கிலி மன்னனைச் சிறை வைத்த செய்தி காட்டுத் தீ போல் தமிழ் ஈழமெங்கும் பரவியது. மக்கள் அழுதனர். மானம் காத்த தலைவன் மாற்றானின் சிறைக்கோட்டத்தில் கொடுமைக்குள்ளாவானே எனக் கதறினர். சங்கிலி மன்னனைச் சிறை மீட்க ஆயத்தஞ் செய்தனர்.

தமிழ் ஈழ மண்ணில் சங்கிலி மன்னன் இருந்தால் தமக்கு ஆபத்து என உணர்ந்த போர்த்துக்கேயர் அவனை இரவோடு இரவாகக் கொழும்புக்கு அனுப்பினர். டி. மோத்தா என்ற போர்த்துக்கேயப் படைத் தலைவனின் கண்காணிப்பில், சங்கிலியையும் அவனது இரு மருமக்களையும் கொழும்புக்கு அழைத்துச் சென்றனர்.

சங்கிலி மன்னனைக் கொழும்புக்குக் கொண்டு சென்றதை வருணகுலத்தான் தெரிந்துகொண்டான். தனது படை வீரர்களை அழைத்தான். தமிழ் ஈழ மன்னனின் வீழ்ச்சியால்

தமிழ் ஈழம் அந்நியருக்கு அடிமைப்பட்டதை அறிவித்தான். தமிழ்நாட்டுக்கு மீளுமாறு பணித்தான். வருணகுலத்தானும் தமிழ் நாடு சென்றான்.

1619 சூன் 5இல் தமிழ் ஈழம் அடிமை நாடாகியது. தமிழ் ஈழத்தின் இறைமை போர்த்துக்கேயரிடம் சென்றடைந்தது.

சங்கிலி மன்னனைச் சிறைப்பிடித்தபோது அவன் வாள் அவனுடன் இல்லை. சங்கிலி மன்னின் வலிவு ஆணைக் கருவியான வாள், இன்றும் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் உள்ளதாகக் கூறுவர்.

சங்கிலி மன்னனைக் கொழும்பில் இருந்து இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள கோவாவிற்குக் கொண்டுசென்றனர். தமிழ் ஈழத்தைப் பாதுகாக்க முயன்றமைக்காகத் தமிழ் ஈழ மானம் காத்த பணிக்காக அவன் பெற்ற பரிசு, தூக்குத் தண்டனை.

கோவாவில், நீதிமன்றத்தில், இராசத் துரோகக் குற்றத்துக்காக விசாரித்தபோதும் வீரனாக நின்றான். தமிழரின் மான உணர்வுக்கு எடுத்துக்காட்டாக நின்றான். தமிழுக்காக, தமிழரசுக்காகச் சுடுகாடு செல்வதானால் அச்சுடுகாடும் பூஞ்சோலையாக அமையும் எனக் கருதினான்.

ஒலிவேரா, யாழ்ப்பாண ஆட்சிப் படைத் தலைவனானான். போர்த்துக்கேய மன்னன் தமிழ் ஈழ அரசின் மன்னனானான். சங்கிலி மன்னனிடம் இருந்த தமிழ் ஈழ இறைமையும் ஆட்சி உரிமையும் போர்த்துக்கேய மன்னனைச் சென்றடைந்தன. காக்கை வன்னியனையும் போரத்துக்கேயர் கைகழுவிவிட்டனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மீண்டும் எழுந்த தமிழ் ஈழ அரசு, பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயரிடம் அடிமையானது.

- யோக்கியன் பிறர் அவதூறுகளுக்கு அஞ்சமாட்டான்.
- நோயைத் தீர்க்காமல் பணத்தைப் பறிப்பவன் வைத்தியன் அல்லன், கொள்ளைக்காரன்.
- ஒரு பக்கம் கேட்டால் இருளாயிருக்கும், இருபக்கங்களையும் கேள் வெளிச்சமாக இருக்கும்.
- வைத்தியன் விஞ்ஞானம் அறிந்திருப்பின் புகையும் தூசும் அடிக்கும் இடத்தில் நெடுஞ்சாலையில் மருத்துவ மனையைத் திறக்கமாட்டான்.
- ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் மற்றொரு உண்மையான மனிதன் குடியேறினான், அவன்தான் அசல் மனிதன்.

**தொகுப்பு – கிறிஸ்ரி ஜோய் டெமிக்**
**ஆரம்பக்கல்வி**

# TAMIL-HINDU KING SANKILI OF JAFFNA IN GOA

**Maravanpulavu K. Sachithananthan**

I am in Goa.

Nostalgic memories of King Sankili of Jaffna plagued my mind.

During 1977, I was initiated by Prof. Dr. Pathmanathan's (now Chancellor, University of Jaffna) narrations into the Kingdom of Jaffna.

Mr. M. Tiruchelvam Q. C., had earlier asked Prof. Dr. Pathmanathan to educate me on the fall of the Kingdom of Jaffna and the transfer of Tamil sovereignty to the Portuguese, to facilitate the Tamil translation of his arguments on Tamil sovereignty at the Trial at Bar (1976).

Sitting at the dining table of my newly built house at Edmonton Road, Kiriloppone, Colombo, I was tape-recording his lecture series. Prof. Dr. Pathmanathan was amazed. He told me that it was the first time someone was recording his lectures.

Even though it was a series of lectures, I was experiencing a movie. Scene after scene, event after event (De Livera crossing the lagoon at Poonakary, war at Nallur, departure from Kayts), characters after characters (Kunj Ali, Ragunatha Nayakar, Varunakulathathan, De Livera, Kaakkai Vanniayan) with King Sankili as the hero or the main player, I visualized every scene. These scenes, events and characters got carved into my read only memory to this day.

I was in tears, when Prof. Dr. Pathmanathan told me about the sordid *finale*, when King Sankili was caught alive, transferred from Nallur to Kayts with his family and retinue, to be taken to Goa by Captain De Livera. Sankili was put to the gallows in Goa, Prof. Dr. Pathmanathan said.

I am in Goa for a Hindu Awakening Conference (11th to 18th June, 2015) attended by Hindu Stalwarts from 19 states in India along with delegates from Bangladesh and Nepal. I am representing Eezham.

When I spoke on the 14th evening to this august audience of 400 delegates, I mentioned about the lost Hindu Kingdom of Eezham whose King was arrested on 1619 June 5th to be brought to Goa to be sent to the gallows.

For many it was news. Many Goan Hindus became inquisitive. We decided to explore Goan archeological sites to learn more. The organizers facilitated me with a car and a guide Mr. Amith Pokre (0091 9404956275, dsppanaji@gmail.com) a very inquisitive, vibrant, tireless worker and journalist. He is familiar with places. He has useful contacts and is well versed in Konkani (mother tongue), Marathi and English.

I went to the Goan state archives, met the Director, Ms. Blossom Mendira and the officer in charge of archival documents, Mr. Sheik Mohamed. I do not know Portuguese language. That was a major impediment. A publication of the list of documents in the archives was made available (Roteiro dos Arquivos da India Portuguesa by Panduronga S S Pissurlencar, 1955). I bought two copies.

I went to the library. Titles on Ceylon were mostly by authors from Sri Lanka. An 1836 publication (Ceylon, Pearl of the East by Harry Williams) indicted that the conquest of Jaffna by Portuguese was in 1560.

I met the Chairperson of the Goa Heritage Action Group, Mr. Prajal Sakhardande (Department of History, Dempo College) and his wife Ms. Anju. They are friends of my guide Mr. Amirth Pokre. Prajal is a very lively person. His interest in Goan heritage is immense. He had researched on the remains of two queens from Portugal. My information on King Sankili was news to him. He directed me to the three possible places where King Sankili would have been put to death. 1. Pillar Hathkatro; 2. Archbishop's prison or Aljuvar (on the banks of River Medowi); 3. Goraksamutt gallows up in the hill (now) inside thick woods. He told me that it was the period of Inquisition in Goa and the possibility of burial in a grave for heretics like King Sankili was remote. He suggested that I visit the 3 places and talk to experts in the Archeological Department of India.

My guide Mr. Amirth Pokre had a friend, (Mr. Ambekar) in the Archeological Department. To avoid problems, we went through the Director and met Mr. Ambekar. He gave me a copy of an archival map on Old Goa, directed me to the Archbishop's Prison (Aljuvar). It was destroyed during 1778 he said. He also suggested that I meet 1. Mr. Pereival Noronha, the 92 year old veteran in Goan archeology and history; 2. Mr. Sanjeev V. Sardesai, the informative young man (Hands on Historians: Goa).

The wharf on the river Madowi, the transit prison area, the ammunition dump area, a water hole, all were in shambles. The old wharf is now a pier ferrying cars and passengers across the 500 m. broad Medowi river. This wharf was the major landing area for Old Goa. There were no other. This wharf could have been the most possible landing point for King Sankili and his retinue in 1619.

They could have been kept in the transit prison alongside the ammunition dump, if they neither had by that time surrendered, nor converted to Christianity, nor sought pardon.

My guide Mr. Amirth Pokre, the driver and myself gave ourselves a sumptuous vegetarian meal in the most popular vegetarian eat out in Panjim, before heading for an appointment with Mr. Pereival Noronha, the 92 year old veteran in Goan archeology and history at 1600 hrs.

All what I said was news to Mr. Pereival Noronha. Sharp in intellect, vivid in his memories, fluent in history and archeology, he told me with modesty that had not heard about this aspect of Goan history.

He brought a title on Sri Lanka authored by Tikka, (National Book Trust publication), which had a paragraph, that Cinkam, a king of Jaffna was killed by the Portuguese and the Kingdom was conquered in 1590 or so. Mr. Pereival Noronha also mentioned of his friendship with a family in Jaffna.

We proceeded to meet Mr. Sanjeev V. Sardesai, Chief Promoter, Hands on Historians: Goa. He told me that he had not heard about the King of Jaffna being brought to Goa. Also he said that the Archbishop's prison was only a transit point and main prison, a 3 tier structure with more than 200 rooms now lie buried in sand opposite the present office of the Archeological Department. He said that the Goan archives mainly stored thombus (land deeds) and christening details. Most of the material on Sri Lanka is available in the museums in Portugal. I mentioned to him that I have heard about the burning of the Lisbon museum. He said that many other museums had duplicates. He directed me to Fundacao Oriente, near the house of Mr. Pereival Noronha. Fundacao Oriente, he said, is an NGO that helps researchers with copies of archival material from the museums of Portugal, and provides translations of such material to researchers. He also said that most archival material is in Old Portuguese, reading of which is limited to a few scholars in Portugal. We rushed to Fundacao Oriente. We were received cordially by Ms Yvonne Rebello, Delegate for India. She promised full support in providing details on the subject.

During our return to Ponda from Panjim, my guide Mr. Amith Pokre assured me that he will support any further enquiry on the subject.

■

# கோவாவில் உள்ள வீரசங்கிலி மன்னன் தொடர்பான பதிவுகள்












# கோப்பாய்ப் பழைய கோட்டையின் கோலம்!

வ.ந.கிரிதரன்,

நல்லூர் நகர் பற்றி ஆராய விழைந்த போது, விஞ்ஞான மாணவனான நான் கலாநிதி கா. இந்திரபாலாவை நாடிய போது தான், அவர் தனது சிரமத்தைப் பொருட்படுத்தாது தனது வேலைகளுக்கு மத்தியில் எனக்கு உதவினார். அப்போதுதான் அவர் கோப்பாயில் அமைந்திருந்த தமிழ் மன்னர்களின் கோட்டையைப் பற்றியும் அது பற்றிய சுவாமி ஞானப்பிரகாசரின் கட்டுரை பற்றியும் கூறினார்.

தமிழரின் பழமை வாய்ந்த சின்னங்களின் பரிதாப நிலை கண்டு மனம் நொந்திருந்த எனக்கு அந்தக் கோட்டையின் இன்றைய நிலையைப் பார்க்க வேண்டும் போலிருக்கவே, கோப்பாய் விரைந்தேன். கோப்பாய் பொலிஸ் ஸ்டேஷனுக்கு முன்பாயுள்ள சேர்ச்சைச் சேர்ந்த சற்குணசிங்கம் என்பவர் எனக்கு அப்பகுதியினைக் காட்டி உதவினார்.

மானிப்பாய், கைதடிச் சந்திக்கு சற்று அப்பால் வீதியின் வலதுபுறமாக இருந்த ஒரு பழமையான வாயில் முகப்பைக் காட்டிய அவர், "இது தான் பழைய கோட்டை" என்ற போது தனிமையான நிலையில் நீண்ட காலமாக அமைதியுடன் காத்து நிற்கும் ஒரு மனிதனைப் போன்று அந்தப் பகுதி எனக்குத் தோன்றியது.

அந்த வாசலைக் கடந்து சென்றோம் சற்குணசிங்கம் சொன்னார்:

"அருகிலுள்ள எல்லாக் காணிகளுமே பழைய கோட்டை என்று தான் அழைக்கப் படுகின்றன. ஆனால் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொருத்தரின் கைக்கு மாறி காலத்தின் கோலத்திற்கேற்ப வெகுவாக மாறிவிட்டது. கடைசியாக உள்ள காணி மட்டும் இன்னும் விற்கப் படா மலுள்ளது...."

அந்தப் பின்புறக் காணித் துண்டை அடைந் ததுமே ஒருவித பழமை வாய்ந்த சூழலின் இனிமையில் மனது மூழ்கிவிடுகின்றது. புதுமையான ஒரு உலகிற்கு வந்துவிட்டது போன்ற தொரு உணர்ச்சி தோன்றுகின்றது.

சற்குணசிங்கம் மேலும் சொல்லலானார்:

"இந்தக் காணியில் முன்பொருமுறை நான் வேம்பொன்றை வெட்டிய போது எலும்புத் துண்டுகள் அகப்பட்டன. நிலத்திற் செங்கற்களே குவிந்து கிடக்கின்றன. அதோ அங்கே நிலத்தைப் பாருங்கள்"

பார்த்தேன். அவர் காட்டிய இடத்தில் பூமியினூடு எட்டிப் பார்த்தபடி செங்கற்கள் சிரித்தன.

அவரே தொடர்ந்தார்.

"நிலத்தின் அமைப்பைப் பாருங்கள் தம்பி. ஒரு பக்கம் பதிந்தும் இன்னொரு பக்கம் உயர்ந்தும் கிடப்பதை. உயர்ந்து கிடக்கும் பகுதி யைத் தோண்டிப் பார்ப்போமாயின் பழைய கோட்டையின் சரித்திரம் தெளி வாகலாம்."

எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. மனுஷன் எவ்வளவு ஆழமாகச் சிந்தித்திருக்கிறார். அத்துடன் அவர் ஒரு கதையும் சொன்னார்.

"நல்லூர் கோட்டையையும், இந்தக் கோட் டையையும் இணைக்கும் ஒரு சுரங்கப் பாதை இருந்ததாக ஒரு கதை உள்ளது.

அப்போது தான் சுவாமி ஞானப்பிரகாசர் தனது கட்டுரையில் எழுதியிருந்த கோட்டை வாய்க்கால் பற்றி நினைவிற்கு வரவே கோட் டை வாய்க்காலைப் பற்றி வினாவினேன். அந்தப் பழைய கோட்டை எனப்படும்

காணித்துண்டுகளின் அருகாகச் செல்லும் சிறிய ஒழுங்கையையே கோட்டை வாய்க்கால் என்கிறார்கள். அந்த ஒழுங்கையானது பழைய கோட்டை எனப்படும் நிலப் பகுதியிலும் தாழ்வானதாக அமைந்துள்ளது. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் இந்தக் கோட்டை வாய்க்காலையே பழைய கோட்டையின் அகழியாகக் கருதுகின்றார்.

கோட்டை வாய்க்கால் என்னுமிப் பகுதி வயலுடன் முடிவடைகின்றது. பழைய கோட்டையின் பின்புறமாக உள்ள வயற் பகுதியும் வெகு தாழ்வானதாக உள்ளது. அவ் வயலில் பயிர் விளைவிக்கும் விவசாயியும் தான் மண்ணைக் கொத்துகையில் எலும்புகள் கிடைத்ததாகக் கூறினார்.

ஒரு காலத்தில் தனிச் சிறப்புப் பெற்று விளங்கிய அப்பகுதியின் இன்றைய பரிதாப நிலைகண்டு வயிறுபற்றி எரிந்தது.

சற்குணசிங்கம் கூறினார் :

"இப் பகுதியில் கட்டாயம் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும்."

அவரது குரலில் அப்பகுதியின் இன்றைய நிலை கண்டு படர்ந்த கவலை நியாயமானது தான்.

வரலாற்றில் ஒரு தெளிவின்றிக் கிடக்கும் இலங்கைத் தமிழினத்திற்கு இன்றைய நிலையில் தேவையானது வெறும் வாய்ச் சவடால்களல்ல. ஆக்கபூர்வமான ஆய்வுகளே. இதற்கு தமிழ்ப்பகுதிகளில் காணப்படும் பழைமையான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள், அழிபாடுகள் என்பவை பேணிப் பாதுகாக்கப்படல் மிகவும் அவசிய மானதொன்றாகும்.


இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் புகழ் பெற்ற இராஜதானியாக விளங்கிய நகர் தான் நல்லூர். இன்றோ அது காலத்தின் கோலத்திற்கேற்ப வெகுவாக மாறிக்கொண்டு வருகின்றது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய அந்நகரின் சரித்திரத்தை விளக்கும் பழைமையின் சின்னங்களைக் காண்பதே அரிதாகிக் கொண்டு வருகின்றது. பொது மக்களோ, அரசியல் வாதிகளோ இது பற்றிக் கவனிக்காமல் இருப்பது வருத்தத்திற்குரியது. யமுனா ஏரி செல்லும் மண் பாதையில் நிலத்தினுள் காணப்படும் செங்கற்களை ஆராய்ந்து பார்ப்பின் அவை எத்தனையோ கதைகளைக் கூறக்கூடும்.

தமிழ் இனத்தின் சரித்திரத்தை விளக்கக்கூடிய சின்னங்களே அரிதாகக் காணப்படும் இன்றைய காலகட்டத்தில், காணப்படும் ஒரு சில சின்னங்களையாவது பேணிப் பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும். இதையாவது நாம் செய்யாதுவிடின் வருங்காலச் சந்ததியினர் நம்மை என்றுமே மன்னித்துவிட மாட்டார்கள்.

**கோட்டை இருந்ததாகக் கருதப்படும் நிலப்பரப்பு**



**"பழைய கோட்டை" என அழைக்கப்படும் காணித்துண்டு**



# தமிழக அரசரும் தேவியரும் நீராடி மகிழ்ந்த ஜமுனாரி

**ச. சபாரத்தினம்**
திருநெல்வேலி, கிழக்கு

இற்றைக்கு ஏறக்குறைய 500 வருடங்களுக்கு முன் நல்லூரை இராசதானியாகக் கொண்டு அரசோச்சிய சிங்காரிய சக்கரவர்த்தி நல்லையம்பதியினை, புதுக்கியும், திருத்தியும் கூடகோபுரங்களுடன் கூடிய மாடமாளிகைகளை நகரின் மையத்தில் நிர்மாணித்தான். செந்நெல் கழனிகளையும் கனிதரு சோலைகளையும் நகரின் நான்கு புறங்களிலும் அமைத்தான். அவற்றிற்கு நீர்ப்பார்ச்சுவான் வேண்டி என்றும் நீர் வற்றாத பூதவராயர் குளத்தினையும் உணவுப்பண்டங்கள் நெற்குவியல்கள் சிறுதானியக் குவியல்கள் சேமித்து வைக்கும் பண்டாரங்களுக்கு அண்மையில் பண்டாரக்குளத்தினையும் பரவர்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் பரவக்குளத்தினையும் நகரின் கீழ்ப்புறத்தில் பூமாலையும் பாமாலையும் புனைந்து இறைபணிபுரியும் நாயன்மார்கள் வாழ்ந்த மடாலயக் கட்டுக்களுக்கு அருகாமையில் பாரிய கட்டுகளுடன் கூடிய நாயன்மார்குளத்தினையும் இன்னும் பல குளங்களையும் துரவுகளையும் குன்றுகளையும் வெட்டியும், கட்டியும், மதவுகளையும் துரிசுகளையும் அமைத்த இராசதானியைச்சுற்றி நன்னீர் பாயும் வசதிகளை ஆக்கி நாட்டை வளமுறச் செய்து தனது மக்களை ஒரு குறையுமின்றி செங்கோலோச்சி வரலாயினான், சோழ நாட்டிலிருந்து தன்னை வரவழைத்து முடிசூட்டிய மாமன்னனது நீண்டநாளைய ஆசைப்படியும் நல்லைவாழ் மக்களின் வேண்டுகோட்படியும் நல்லூரின் மையத்தில் நல்லைநாதருக்கும் பெருமாட்டி நல்லைநாயகிக்கும் நான்மாடக் கூட கோபுரங்களுடன் கூடிய பாரிய ஆலயத்தினை அழகுற நிர்மாணித்தான். நான்கு புறங்களிலும் பெரிய வீதிகளை ராஜதானியை உள்ளடக்கக்கூடியதாக அமைத்து, சட்டநாதசிவன் என்னும் நாமமிட்டு ஆலயத்திற்கு நான்கு திசைகளிலும், கிழக்கில் வெய்யிலுகந்த பிள்ளையாரினையும் மேற்கில் தலங்காவற் பிள்ளையாரினையும் கைலாசப்பிள்ளையாரையும், வடக்கில் சந்திரசேகர் சிவஞான முக்குறுணிப் பிள்ளையாரையும் கோவிலமைத்து காவல்தெய்வங்களாக அமைத்து, யுத்த காலங்களில் களப்பலி கூட்டுவதற்கும் அனுமதியும், ஆசியும் பெறுவதற்குமாக தென்திசையில் வீரமாகாளிக்குப் பாரிய அகன்ற களத்துடன் கூடிய ஆலயத்தினைக் கட்டுவித்தான். எம்பெருமான் சட்டநாதருக்கு வடபாரிசத்தில் பூசைக்குரிய நறுமலர்களைப் பறிப்பதற்காக மாதவி, பாதிரி, தாதவிழ், கூவிளம், மந்தாரம், இலஞ்சி, கோங்கு, முல்லை, மல்லிகை இன்னோரன்ன மரங்களையும் செடிகளையும் நாட்டி நந்தவனங்களை அழகுபெற அமைத்தும் ஒரு குறையுமின்றி இனிது ஆண்டுவந்தான்.

ஒரு நாள் இறைவனுக்கு மலர் சாத்தி வணங்குவான் வேண்டி மன்னனும் தேவியும் நந்தவனம் சென்றனர். 'மன்னவா அன்று நிலாமுற்றத்தில் தாங்கள் கொடுத்த வாக்கை இறைவன் திருப்பணியில் மறந்து விட்டீர்களோ என தேவி சிணுங்க 'ஓகோ, அதுவா, அதோ செங்களி நீர்த்தொட்டியில் செங்கால் அன்னங்கள், தோய்ந்து துளாவி ஒன்றையொன்று கொஞ்சிக்குலாவி இருப்பதைக் கண்டவுடன் தேவிக்கும் யமுனை நல்லாளின் ஞாபகம் வந்துவிட்டது போலும். இதோ யமுனாவை ஈழவள நாடு கொண்டுவருகின்றேன்' எனக் கூறி, பக்கலில் மனைவியுடன் நின்ற அமைச்சரை விளித்து!, புவனேயவாகு, நீர் தக்கதுணையுடன் சென்று யமுனாநதியினை

நல்லைக்குக் கொணர்க என்றார். அமைச்சரும் சேனாதிபதி வீரவாகுவுடன் சென்றார். மன்னர் தேவி எனக்குமுன் யமுனா நல்லாளுடன் விளையாடிய விளையாட்டுக்கள் ஞாபகம் வருகின்றது. அவள் வந்தவுடன் இருவரும் மூவராசி விளையாடுவோம் என்றதும் 'கணார், கணார்' என சட்டநாதர் ஆலய கோபுரமணி ஓசையைக் கேட்டு நல்ல சகுனம் எனத்துதித்து இறைவனைத் தரிசிக்கச் சென்றனர்.

**யமுனையின் வருகை**

மாசி, மாமாங்க நன்நாளில் அமைச்சரும் சேனாதிபதியும், புரவிகளில் ஆரோகணித்து முன்வர குன்றனைய யானைகளின் மேல் தங்கக்கலசங்களில் யமுனைநங்கை, பொங்கித் ததும்பி, சிரித்துக் குலுங்கி அசைந்து ஆடி ஆடி வந்தாள். வீதிகள் தோறும் மக்கள் வெள்ளம் திரண்டு, பூரண கும்பங்கள் வைத்து, மாவிலை தோரணங்கட்டி வரவேற்றார்கள். மன்னனும் தேவியும் எதிர்கொண்டு சென்று யமுனாநதிநீர் நிறைந்த பொற்கும்பங்களை மங்கல வாத்தியத்துடன் அழைத்துவந்து அதற்கென அமைந்த தங்கத்தவிசில் வைத்தனர். அரண்மனைச் சிற்பிகளினால் நல்லைநாதர் ஆலயத்திற்குத் தென்மேற்கு மூலையில் சங்கிலி தோப்புஎனஅழைக்கப்படும்தமிழ்மன்னர்களின் இராசதானியாம் குமரகோட்டத்தில் பல இரவு பகலாக வெட்டப்பட்டு இன்றும் வற்றாத நன்னீர் நீர் ஊற்றாகத் திகழும் ஏரியில் யமுனாநதி நீரினை இரண்டறக்கலக்கும் விழாவெடுத்தான் மாமன்னன். தமிழ் ஈழம் வாழ் மாந்தர் அனைவரும் சனசமுத்திரம் போலத்திரண்டிருந்தனர். நல்லூரைச் சூழ்ந்து புரவி வீரர்கள் சனநெரிசலையும் கொந்தளிப்பினையும் சமன் செய்தனர். தொண்டர் படையினர் நீரும் மோரும் உணவும் கொடுத்து மக்களை இளைப்பாற்றினர். மாமன்னர் உட்பட விழாக்காணத் திரண்ட மக்கள் யாவரும் மகாராணியார் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

**மகாராணி தோன்றினார்**

பாங்கியர் புடைசூழ கந்தர்வ லோக மங்கையோ என அதிசயிக்கும் வண்ணம் கலீர் என நகைத்துக் கொண்டு பட்டத்துத் தேவியர் யமுனா நதி தீரத்தில் பளிங்குப் படித்துறையில் திடீரெனத் தோன்றினார். மன்னர் உட்பட யாவரும் அதிசயித்தனர். தேவி எவ்விதம் இங்கு தோன்றினார். ஆகாய மார்க்கமாக வந்தாரே? அவ்விதமாயின் அவர் வந்த புட்பக விமானம் எங்கே? எல்லோரது கண்களையும் கட்டிவிட்டு எவ்விதம் தோன்றினார் என விழித்தனர். மன்னர் பக்கலில் ஸ்தபதியாருடன் அளவளாவிக் கொண்டு நின்ற அமைச்சரைப் பார்த்து உருட்டி விழித்தார் மன்னர்.

மன்னரின் விழிப்பின் உட்பொருளை உணர்ந்த அமைச்சர், 'மன்னர் பெருமானே! தங்கள் தேவியார் எவ்விதம் எந்த வழியால் இந்தத் தீர்த்தக்கரைக்கு வந்தார். உட்பிரவேசிப்பதற்கு நான்கு மகர தோரணங்கள் தாம் நாம் அமைத்துள்ளோமே. அதன் ஒன்றின் மூலமும் வரவில்லையே. பின் எவ்விதம் வந்தார் என்று தானே யோசிக்கின்றீர்கள்? தாங்கள் சட்டநாதருக்கு சித்திரத்தேர் சமைப்பதற்கு உரிய மாமரங்களை ஆய்ந்து தேர்ந்து எடுப்பதற்காக ஸ்தபதியாருடன் வன்னிவள நாட்டிற்குச் சென்றிருந்த போது தேவியாருடைய உத்தரவுப்படி நானும் சிற்பியாருமாகச் சேர்ந்து அரண்மனை அந்தப்புரத்திலிருந்து இந்த யமுனா நதிக் கரைவரை ஓர் சுரங்கப் பாதை அமைத்துள்ளோம். அதன்மூலம் தான் தேவியும் பாங்கியரும் இங்கு வந்துள்ளார்கள். தங்களை அதிசயத்தில் ஆழ்த்திப் பரிகசிப்பதற்காக அதனைத் தங்களுக்கு வெளியிட வேண்டாம் என என்னையும் சிற்பியாரையும் தேவியார் பணித்தார்கள். அதன்படி நாங்கள் வெளியிடவில்லை. என்னசிற்றம்பலத்தாரே என விழித்து, மன்னவா எங்களை மன்னித்தருளும் எனப் பணித்து நின்றனர். மன்னர் 'அதில் என்ன தவறு அமைச்சரே! அரண்மனை, நிதிப்பண்டாரங்களும், பணிமனைகளும்

நல்லைக்குக் கொணர்க என்றார். அமைச்சரும் சேனாதிபதி வீரவாகுவுடன் சென்றார். மன்னர் தேவி எனக்குமுன் யமுனா நல்லாளுடன் விளையாடிய விளையாட்டுக்கள் ஞாபகம் வருகின்றது. அவள் வந்தவுடன் இருவரும் மூவராசி விளையாடுவோம் என்றதும் 'கணார், கணார்' என சட்டநாதர் ஆலய கோபுரமணி ஓசையைக் கேட்டு நல்ல சகுனம் எனத்துதித்து இறைவனைத் தரிசிக்கச் சென்றனர்.

**யமுனையின் வருகை**

மாசி, மாமாங்க நன்நாளில் அமைச்சரும் சேனாதிபதியும், புரவிகளில் ஆரோகணித்து முன்வர குன்றனைய யானைகளின் மேல் தங்கக்கலசங்களில் யமுனைநங்கை, பொங்கித் ததும்பி, சிரித்துக் குலுங்கி அசைந்து ஆடி ஆடி வந்தாள். வீதிகள் தோறும் மக்கள் வெள்ளம் திரண்டு, பூரண கும்பங்கள் வைத்து, மாவிலை தோரணங்கட்டி வரவேற்றார்கள். மன்னனும் தேவியும் எதிர்கொண்டு சென்று யமுனாநதிநீர் நிறைந்த பொற்கும்பங்களை மங்கல வாத்தியத்துடன் அழைத்துவந்து அதற்கென அமைந்த தங்கத்தவிசில் வைத்தனர். அரண்மனைச் சிற்பிகளினால் நல்லைநாதர் ஆலயத்திற்குத் தென்மேற்கு மூலையில் சங்கிலி தோப்புஎனஅழைக்கப்படும்தமிழ்மன்னர்களின் இராசதானியாம் குமரகோட்டத்தில் பல இரவு பகலாக வெட்டப்பட்டு இன்றும் வற்றாத நன்னீர் நீர் ஊற்றாகத் திகழும் ஏரியில் யமுனாநதி நீரினை இரண்டறக்கலக்கும் விழாவெடுத்தான் மாமன்னன். தமிழ் ஈழம் வாழ் மாந்தர் அனைவரும் சனசமுத்திரம் போலத்திரண்டிருந்தனர். நல்லூரைச் சூழ்ந்து புரவி வீரர்கள் சனநெரிசலையும் கொந்தளிப்பினையும் சமன் செய்தனர். தொண்டர் படையினர் நீரும் மோரும் உணவும் கொடுத்து மக்களை இளைப்பாற்றினர். மாமன்னர் உட்பட விழாக்காணத் திரண்ட மக்கள் யாவரும் மகாராணியார் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

**மகாராணி தோன்றினார்**

பாங்கியர் புடைசூழ கந்தர்வ லோக மங்கையோ என அதிசயிக்கும் வண்ணம் கலீர் என நகைத்துக் கொண்டு பட்டத்துத் தேவியர் யமுனா நதி தீரத்தில் பளிங்குப் படித்துறையில் திடீரெனத் தோன்றினார். மன்னர் உட்பட யாவரும் அதிசயித்தனர். தேவி எவ்விதம் இங்கு தோன்றினார். ஆகாய மார்க்கமாக வந்தாரே? அவ்விதமாயின் அவர் வந்த புட்பக விமானம் எங்கே? எல்லோரது கண்களையும் கட்டிவிட்டு எவ்விதம் தோன்றினார் என விழித்தனர். மன்னர் பக்கலில் ஸ்தபதியாருடன் அளவளாவிக் கொண்டு நின்ற அமைச்சரைப் பார்த்து உருட்டி விழித்தார் மன்னர்.

மன்னரின் விழிப்பின் உட்பொருளை உணர்ந்த அமைச்சர், 'மன்னர் பெருமானே! தங்கள் தேவியார் எவ்விதம் எந்த வழியால் இந்தத் தீர்த்தக்கரைக்கு வந்தார். உட்பிரவேசிப்பதற்கு நான்கு மகர தோரணங்கள் தாம் நாம் அமைத்துள்ளோமே. அதன் ஒன்றின் மூலமும் வரவில்லையே. பின் எவ்விதம் வந்தார் என்று தானே யோசிக்கின்றீர்கள்? தாங்கள் சட்டநாதருக்கு சித்திரத்தேர் சமைப்பதற்கு உரிய மாமரங்களை ஆய்ந்து தேர்ந்து எடுப்பதற்காக ஸ்தபதியாருடன் வன்னிவள நாட்டிற்குச் சென்றிருந்த போது தேவியாருடைய உத்தரவுப்படி நானும் சிற்பியாருமாகச் சேர்ந்து அரண்மனை அந்தப்புரத்திலிருந்து இந்த யமுனா நதிக் கரைவரை ஓர் சுரங்கப் பாதை அமைத்துள்ளோம். அதன்மூலம் தான் தேவியும் பாங்கியரும் இங்கு வந்துள்ளார்கள். தங்களை அதிசயத்தில் ஆழ்த்திப் பரிகசிப்பதற்காக அதனைத் தங்களுக்கு வெளியிட வேண்டாம் என என்னையும் சிற்பியாரையும் தேவியார் பணித்தார்கள். அதன்படி நாங்கள் வெளியிடவில்லை. என்ன சிற்றம் பலத்தாரே என விழித்து, மன்னவா எங்களை மன்னித்தருளும் எனப் பணித்து நின்றனர். மன்னர் 'அதில் என்ன தவறு அமைச்சரே! அரண்மனை, நிதிப்பண்டாரங்களும், பணிமனைகளும்

# தமிழக அரசரும் தேவியரும் நீராடி மகிழ்ந்த ஜமுனாரி

**ச. சபாரத்தினம்**
திருநெல்வேலி, கிழக்கு

இற்றைக்கு ஏறக்குறைய 500 வருடங்களுக்கு முன் நல்லூரரை இராசதானியாகக் கொண்டு அரசோச்சிய சிங்காரிய சக்கரவர்த்தி நல்லையம்பதியினை, புதுக்கியும், திருத்தியும் கூடகோபுரங்களுடன் கூடிய மாடமாளிகைகளை நகரின் மையத்தில் நிர்மாணித்தான். செந்நெல் கழனிகளையும் கனிதரு சோலைகளையும் நகரின் நான்கு புறங்களிலும் அமைத்தான். அவற்றிற்கு நீர்ப்பார்ச்சுவான் வேண்டி என்றும் நீர் வற்றாத பூதவராயர் குளத்தினையும் உணவுப்பண்டங்கள் நெற்குவியல்கள் சிறுதானியக் குவியல்கள் சேமித்து வைக்கும் பண்டாரங்களுக்கு அண்மையில் பண்டாரக்குளத்தினையும் பரவர்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் பரவக்குளத்தினையும் நகரின் கீழ்ப்புறத்தில் பூமாலையும் பாமாலையும் புனைந்து இறைபணிபுரியும் நாயன்மார்கள் வாழ்ந்த மடாலயக்கட்டுக்களுக்கு அருகாமையில் பாரிய கட்டுகளுடன் கூடிய நாயன்மார்குளத்தினையும் இன்னும் பல குளங்களையும் துரவுகளையும் குன்றுகளையும் வெட்டியும், கட்டியும், மதவுகளையும் துரிசுகளையும் அமைத்த இராசதானியைச்சுற்றி நன்னீர் பாயும் வசதிகளை ஆக்கி நாட்டை வளமுறச் செய்து தனது மக்களை ஒரு குறையுமின்றி செங்கோலோச்சி வரலாயினான், சோழ நாட்டிலிருந்து தன்னை வரவழைத்து முடிசூட்டிய மாமன்னனது நீண்டநாளைய ஆசைப்படியும் நல்லைவாழ் மக்களின் வேண்டுகோட்படியும் நல்லூரின் மையத்தில் நல்லைநாதருக்கும் பெருமாட்டி நல்லைநாயகிக்கும் நான்மாடக் கூட கோபுரங்களுடன் கூடிய பாரிய ஆலயத்தினை அழகுற நிர்மாணித்தான். நான்கு புறங்களிலும் பெரிய வீதிகளை ராஜதானியை உள்ளடக்கக்கூடியதாக அமைத்து, சட்டநாதசிவன் என்னும் நாமமிட்டு ஆலயத்திற்கு நான்கு திசைகளிலும், கிழக்கில் வெய்யிலுகந்த பிள்ளையாரினையும் மேற்கில் தலங்காவற் பிள்ளையாரினையும் கைலாசப்பிள்ளையாரையும், வடக்கில் சந்திரசேகர் சிவஞான முக்குறுணிப் பிள்ளையாரையும் கோவிலமைத்து காவல்தெய்வங்களாக அமைத்து, யுத்த காலங்களில் களப்பலி கூட்டுவதற்கும் அனுமதியும், ஆசியும் பெறுவதற்குமாக தென்திசையில் வீரமாகாளிக்குப் பாரிய அகன்ற களத்துடன் கூடிய ஆலயத்தினைக் கட்டுவித்தான். எம்பெருமான் சட்டநாதருக்கு வடபாரிசத்தில் பூசைக்குரிய நறுமலர்களைப் பறிப்பதற்காக மாதவி, பாதிரி, தாதவிழ், கூவிளம், மந்தாரம், இலஞ்சி, கோங்கு, முல்லை, மல்லிகை இன்னோரன்ன மரங்களையும் செடிகளையும் நாட்டி நந்தவனங்களை அழகுபெற அமைத்தும் ஒரு குறையுமின்றி இனிது ஆண்டுவந்தான்.

ஒரு நாள் இறைவனுக்கு மலர் சாத்தி வணங்குவான் வேண்டி மன்னனும் தேவியும் நந்தவனம் சென்றனர். 'மன்னவா அன்று நிலாமுற்றத்தில் தாங்கள் கொடுத்த வாக்கை இறைவன் திருப்பணியில் மறந்து விட்டீர்களோ என தேவி சிணுங்க 'ஓகோ, அதுவா, அதோ செங்களி நீர்த்தொட்டியில் செங்கால் அன்னங்கள், தோய்ந்து துளாவி ஒன்றையொன்று கொஞ்சிக்குலாவி இருப்பதைக் கண்டவுடன் தேவிக்கும் யமுனை நல்லாளின் ஞாபகம் வந்துவிட்டது போலும். இதோ யமுனாவை ஈழவள நாடு கொண்டுவருகின்றேன்' எனக் கூறி, பக்கலில் மனைவியுடன் நின்ற அமைச்சரை விளித்து!, புவனேயவாகு, நீர் தக்கதுணையுடன் சென்று யமுனாநதியினை

இதற்குச் சான்றாகக் காற்றுக்காலங்களில் வல்லிபுர மணற்கும்பிகளுள் அகப்படும் பழம் பொருட்களும், கரையோரமாகப் போன பெருவீதியின் அடையாளங்களும், பெருங்கடற் சமீபம், சிறந்த துறை முகப்பொலிவு என்பன இருக்கின்றன.

இச்சர்ச்சையை இத்தோடு விட்டுவிட்டு, நல்லூர்க் கோட்டை அமைப்பைப் பற்றிப் பார்ப்போம். யாழ்ப்பாண வைபவமாலை போன்ற பழைய நூல்களையும், போர்த்துக் கேயர் குறிப்புக்களையும், சரித்திர அறிஞர்களின் நூல்களையும் பார்க்கும் போது நல்லூர்க் கோட்டை அமைப்பானது ஒருவித ஒழுங்கில் இருந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாகவிருக்கும்.

'சப்புமல்குமாரய'வினால் கந்தசுவாமி ஆலயம் கட்டப்பட்டு, (இவ்வாலயம் தற்போது முத்திரைச் சந்தைக்கண்மையிலுள்ள சேர்ச் இருக்குமிடத்தில் இருந்தது.) இராசதானியாக்கப்பட்ட நல்லூர், அவனுக்குப் பின் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கனகசிங்கையாரியன், பரராஜசேகரன் காலத்தில், நாலு திசைகளிலும் கோயில்களெடுக்கப்பட்டு, கீர்த்திமிக்கதாக விளங்கியது.

இவற்றை நோக்கும் போது நல்லூர்க் கோட்டையானது, சுற்றுமதிலுடன் கூடியதாகவும், அதன் கண்ணே வடக்கு, தெற்கு , கிழக்கு, மேற்கு வாசல்களைக் கொண்டதாகவும், இவ்வாசல்களிற்கண்மையில் முறையே சட்டநாதர் கோவில், கைலாசநாதர் கோவில், வெயிலுகந்தபிள்ளையார் கோவில், வீரமாகாளியம்மன் கோவில் முதலான ஆலயங்களைக் கொண்டதாகவும் விளங்கியிருக்க வேண்டும்.

யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்களிலிருந்தும், போர்த்துக்கேயரின் நூல்கள் வாயிலாகவும், வீரமாகாளியம்மன் கோவிலிற்கண்மையில் மேற்கு வாசலும், சட்டநாதர் கோவிலிற்கண்மையில் வடக்கு வாசலும் இருந்ததை அறியக்கூடியதாக உள்ளது. எனவே கைலாசநாதர் கோவிலிற்கண்மையில் தெற்குவாசலும், வெய்யிலுகந்தபிள்ளையார் கோவிலிற்கண்மையில் கிழக்கு வாசலும் இருந்திருக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் நோக்கும் போது நல்லூர்க் கோட்டையானது வடதென், கிழக்கு மேற்கு வாசல்களை இணைக்கும் பிரதான வீதிகளைக் கொண்டுள்ளதாக இருந்திருக்க வேண்டும். அப்படியென்றால் நல்லூர்க் கோட்டையின் வடக்கு தெற்கு வாயிலை இணைக்கும் வீதி எதுவாக இருக்கும்? அவ்வீதி தற்போதுள்ள சங்கிலித்தோப்புக்கு அண்மையில் செல்லும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியேயாகும். அவ்வீதியானது தற்போதுள்ளதுபோல் திரும்பாமல் நேராகச் சென்றிருக்க வேண்டும். நேராகவே இவ்வீதி செல்லுமாயின் கச்சேரி நல்லூர் வீதியுடன் பொருந்துவதைக் காணலாம். இதுபோல் நல்லூர்க் கோட்டையின் கிழக்கு மேற்கு வாயில்களை இணைக்கும் வீதியானது, தற்போதைய நல்லூர் ஆலயத்திற்கருகில் செல்லும் வீதியாக இருந்திருக்க வேண்டும். இவ்வீதியானது தற்போது முத்திரைச்சந்தையை நோக்கி வளைவதைப் போல் வளையாமல் நேராகச் செல்லுமாயின் வெய்யிலுகந்தபிள்ளையார் ஆலயத்திற்கண்மையில் செல்லும் வீதியுடன் பொருந்துவதைக் காணலாம்.

நான் சட்டநாதர், வெயிலுகந்தபிள்ளையார் ஆலயங்களுக்கருகாகச் செல்லும் வீதிகளையே நல்லூர்க் கோட்டையின் பிரதான வீதிகளாக எடுத்ததற்குக் காரணம், இவ்விரு ஆல போதைய கைலாசநாதர், வீரமாகாளியம்மன் ஆலயங்கள் பழைய இடங்களில் கட்டப்படவில்லை என்பதை விளக்குவேன்.

தற்போதைய நல்லூர் ஆலயம் 1734 ஆம் ஆண்டளவிலேயே புனருத்தாரணம் செய்யப்பட்டாலும், மணிக்கூட்டுக் கோபுரம், சுற்றுப்பிரகார மண்டபங்களென்பவை பின்னரே கட்டப்பட்டன. இப்புதிய ஆலயத்தின் பின்னரே வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்கள் கட்டப்பட்டன. ஆனால் சட்டநாதர் ஆலயமோ புதிய நல்லூர் ஆலயம் கட்டப்பட முன்பே கட்டப்பட்டது. இதனை இதன் கட்டத்தோற்றத்திலிருந்தும் அறியலாம். யாழ்ப்பாண வைபவமாலை இதனை உறுதிப்படுத்துகின்றது.

இனிப்பழையபடி நல்லூர்க் கோட்டைக்கே செல்வோம் வாருங்கள். நல்லூர்க் கோட்டையின் கிழக்கு மேற்கு, வடக்கு தெற்கு வீதிகள் சந்திக்கும் (தற்போதைய யாழ்ப்பாண... பருத்தித்துறை வீதி முத்திரைச்சந்தையில் திரும்புமிடம்) இடத்திலிருந்து சட்டநாதர், வெயிலுகந்தபிள்ளையார் ஆலயங்கள் ஏறத்தாழச் சமமான தூரத்திலிருப்பதை அறியலாம். இதுபோல் வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்களும் ஏறத்தாழச் சமமான தூரத்தில் இருந்திருக்க வேண்டும்.

அதாவது வீரமாகாளியம்மன் கோவில் உண்மையில் போர்த்துக்கீசரின் படையெடுப்பால் அழிவதற்கு முன்னர் தற்போதைய நல்லூர் ஆலயத்திற்கண்மையிலெங்கோயிருந்திருக்க வேண்டும். கைலாச நாதர் கோவிலும் தற்போதைய நல்லூர் றோட்டும், கச்சேரி - நல்லூர் றோட்டும் சந்திக்கும் இடத்திற்கண்மையிலெங்கோயிருந்திருக்க வேண்டும். இவ்வாறு ஆலயங்கள் ஒரு ஒழுங்கில் கட்டப்பட்டிருந்த வீதியும், பருத்தித்துறை - யாழ்ப்பாண வீதியிரண்டும் சந்திக்கும் இடத்திலிருந்து ஏறத்தாழ சமமான தூரத்தில் கட்டப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி இந்தத் தூரங்களானது ஏறத்தாழ, நல்லூர்க்கோட்டையின் கிழக்கு மேற்கு, வடக்கு தெற்கு வீதிகளின் சந்தியிலிருந்து சட்டநாதர், வெயிலுகந்தபிள்ளையார் ஆலயங்களின் தூரங்களிற்குச் சமமாயிருப்பதைக் காணலாம். இவற்றிலிருந்து நாம் வரக்கூடிய முடிவு இதுதான். நல்லூர்க் கோட்டையானது கோட்டையின் மையத்திலிருந்து நான்கு திசைகளிலும் சமமான தூரங்களில் நான்கு வாசல்களிற்கும் வெளிப்புறமாக மேற்கூறிய நான்கு ஆலயங்களைக் கொண்டதாகவும் விளங்கியிருக்க வேண்டும். பின்னர் போர்த்துக்கேயர் ஆலயங்களை இடித்துவிடவே முதலில் கட்டப்பட்ட சட்டநாதர் ஆலயம் பழைய இடத்திலும், புதிய நல்லூர் ஆலயம் கட்டப்பட்டபின் கட்டப்பட்ட வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்கள் புதிய ஆலயத்தை மையமாக வைத்துப் புதிய இடங்களில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்பதேயாகும்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது நல்லூர்க் கோட்டையானது நான்கு வாசல்களையும் அவ்வாசல்களை இணைக்கும் பிரதான வீதிகளையும், அவ்வீதிகளின் சந்திப்பிலிருந்து கோட்டைவாசல்கள் ஏறத்தாழ சமதூரத்திலும், ஒவ்வொரு வாசலிற்கும் வெளிப்புறமாகவும் வாயிற்சாப்பாகவும் சட்டநாதர், வெயிலுகந்த பிள்ளையார், வீரமாகாளியம்மன், கைலாசநாதர் ஆலயங்களையும் கொண்டதாக விளங்கியிருக்கவேண்டுமென்று படுகின்றது.

**மாலைநேரச் சந்தை**

இப்பொழுது தற்போதைய நல்லூர் வரைபடத்தைப் பார்ப்போமாயின் பலவிஷயங்களை அவதானிக்கக்கூடியதாயிருக்கும், அவ்விஷயங்கள் ஆச்சரியமூட்டுவனவாகவுமிருக்கும். அதாவது மேலே நான் கூறியிருப்பதுபோல் நல்லூர்க் கோட்டையின் வடக்கு - தெற்கு, கிழக்கு - மேற்கு வாசல்களை இணைக்கும் வீதிகளான நான்கு பகுதிகளாகப் பிரித்து விட்டிருப்பதை அறியலாம். (இந் நான்கு பகுதிகளுள் உள்ள பகுதி,) யமுனா

முதலியவற்றையும், தென்கிழக்குப்பகுதி சாயாக்காரத்தெரு, டையர்ஸ் தெரு - தட்டாதெரு, கொப்பர்ஸ்மித் தெரு ஆகியவற்றையும், தென் மேற்குப்பகுதி செட்டித்தெருவையும், வடமேற்குப் பகுதி பண்டாரக்குளம், அரசவெளி, தென்னந்தோப்பு முதலியவற்றையும் உள்ளடக்கியிருப்பதை அவதானிக்கலாம். அத்தோடு நல்லூர்க் கோட்டையின்பிரதானவீதிகள்சந்திக்கும்மிடம் முத்திரைச்சந்தையென்றும் கூறப்படுவதையும் அவதானிக்கலாம். நல்லூர் கோட்டையின் உள்ளமைப்பிலொருவித ஒழுங்கு இருப்பதை இப்பொழுது அவதானிக்கக்கூடியதாக இருக்கிறதல்லவா?

இந்நல்லூர்க் கோட்டையின் நடுப்பகுதியில் மாலை நேரத்தில் கூடுமொரு சந்தை இருந்ததைப் போர்த்துக்கேயரின் நூல்கள் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. அதனால்தான் அப்பகுதி முத்திரைச்சந்தை எனப்படுகிறது போலும். அச்சந்தைக்கண்மையில் அரசனது மாளிகையிருந்தது; அரசன் தனதிருப்பிடத்திலிருந்து சந்தை நடைமுறைகளைப் பார்க்கக்கூடியதாகப் பல யன்னல்களுடன் கூடியதொரு அமைப்பாக அச்சந்தை விளங்கியது. இதிலிருந்து சந்தைக்கண்மையில் அரச மாளிகையிருந்திருக்க வேண்டும்.

இனி, நல்லூர்க் கோட்டையினுள் வீதிகளால் பிரிக்கப்பட்ட நான்கு பகுதிகளையும் பார்ப்போமாயின், தென்கிழக்குப் பகுதியில் நிச்சயமாக அரசனது மாளிகை இருந்திருக்கமுடியாது, அப்பகுதி பொற்கொல்லர், கன்னார், நெசவாளர் முதலிய மக்களிற்கான இருக்கை.

எஞ்சிய மூன்று பகுதிகளில் தற்போது காணப்பெறும் அழிபாடுகள் என்பவற்றைக் கொண்டு ஆராய்கையில் வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளிலொன்றிலேயே அரச மாளிகையிருந்திருக்க வேண்டும்.

**நீராடும் கேணியா?**

முதலில் சங்கிலியன் தோப்பு பழைய நல்லூர் ஆலயம், யமுனாரி முதலியவற்றை உள்ளடக்கிய வடகிழக்குப் பகுதியைப் பார்ப்போம். பெரும்பாலான சரித்திர அறிஞர்கள் சங்கிலித்தோப்பு எனத் தற்போதழைக்கப்படும் பகுதியிலேயே அரசனது அரண்மனை இருந்ததாகக் கருதுகின்றார்கள். 1903 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராயிருந்த திரு. ஜே. பி. லூயி (J.P. Lewis) என்பவரும் சங்கிலித் தோப்பிலேயே அரசனது அரண்மனை இருந்ததாகவும், யமுனாரி அரசர்களும் அரசிகளும் நீராடிய ஏரியெனவும் கருதுகின்றார்.

யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்களிலிருந்து புண்ணிய யமுனையிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தம் விடப்பட்ட காரணத்தினாலேயே யமுனாரி எனப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இப்பகர வடிவக்கேணி அரசர்களும் அரசிகளும் நீராடுதற்கு உபயோகப்படுத்தப்பட்டதாயின் அருகிலிருந்து பழைய கந்தசுவாமி ஆலயத்தைச் சேர்ந்த தீர்த்தக் கேணி எங்கிருந்ததாம்? எந்தப் பெரியதொரு இந்து ஆலயமாவது தீர்த்தக் கேணியின்றிக் கட்டப்பட்ட துண்டா? அரசனும், அரசியும் நீராடும் கேணியில் எதற்காகப் புனித யமுனையின் தீர்த்தம் கொண்டுவரப்பட்டது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது யமுனாரி அரசன் அரசிமார் நீராடியதற்குப் பயன்படுத்தப்பட்டதென்பதற்கான சான்றுகளைவிட கந்தசுவாமி (பழைய) ஆலயத்திற்குரிய தீர்த்தக் கேணி என்பதற்கே சான்றுகளுள.

மேலும் பழைய நல்லூர் ஆலயமானது சுற்றுமதில்களுடன் கூடிய பெரியதொரு ஆலயமாகவிருந்ததென அறியப்படுகின்றது.

சங்கிலித் தோப்பெனப்படும் பகுதியானது பழைய கந்தசுவாமி ஆலயத்தைச் சேர்ந்த பூங்காவாகவும் அதன் நடுவிலமைந்திருக்கும் யமுனாரி கோயிலின் தீர்த்தக் கேணியாகவும் இருந்திருக்க வேண்டுமென்றே படுகின்றது.

ஒல்லாந்தர் இந்தப் பூங்காவின் அழகையும், யமுனாரியையும் கண்டு தங்கள் அரசாங்க மாளிகையை இப்பகுதியில் அமைத்தார்கள் போலும். அவ்வரசாங்க மாளிகையின் முகப்பே தற்போது காணப்படும் பழமை வாய்ந்த அழிபாடாகும். இதன் அமைப்பு ஒல்லாந்தரின் கட்டடக்கலை வகையைச் சேர்ந்ததென்பதே சுவாமி ஞானப்பிரகாசர், லூயி போன்றோரின் கருத்தாகும்.

அப்படியாயின் பழைய தமிழ் மன்னரின் அரண்மனை எங்கிருந்தது என்றொரு கேள்வி எழுகின்றதல்லவா? நிச்சயமாகச் சந்தைக்கண்மையில் அமைந்திருக்க வேண்டும். அப்படியானால் வடமேற்குப் பகுதியிலேயே அரசமாளிகைகள், பொய்கைகள் அமைந்திருக்க வேண்டும். இப்பகுதியில் அரசமாளிகைகள், நீராடப்பொய்கைகள், அமைந்திருக்கலாமென்பதற்குச் சான்றுகள் உள. பழைய நல்லூர்க் கோட்டை என என்னால் மேற்கூறப்பட்ட பகுதியில் யமுனாரியைத் தவிர எஞ்சியிருக்கும் ஒரே குளம் இப்பகுதியிலுள்ள பண்டாரக்குளமே. இக்குளத்திற்கண்மையில் பழைய கட்டடச் சிதைவுகளுள்ளன. மேலுமிதற்கருகாமையில் அரசவெளியெனப்படும் வெளியும், அரச வீதியும், தற்போதைய ஆலயத்திற்குச் சொந்தமான ஆறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள தென்னந்தோப்பும் உள்ளன. அத்தோப்பின் வாயிற்றூணில் 'பண்டார மாளிகை' என்ற பெயரைக் காணலாம். இது பரராசசேகர பண்டாரத்தைக் குறிக்குமெனக் கருதுகின்றார் திரு. குல. சபாநாதன் அவர்கள்.

இவற்றைப் பார்க்கும் போது இப்பகுதியிலேயே அரசனது அரண்மனை நீராடும் பொய்கை (பண்டாரகுளம்), என்பன இருந்திருக்க வேண்டுமெனப்படுகின்றது. மேலுமிப்பகுதியிலேயே அமைச்சர், அந்தணர் முதலியோரின் இருக்கைகளும் இருந்திருக்க வேண்டும் என்று படுகின்றது. எஞ்சிய தென்மேற்குப் பகுதியிலேயே படைவீரர், வணிகர் முதலானோரின் இருக்கைகள் இருந்திருக்க வேண்டும். செட்டிவீதி இப்பகுதியிருப்பது இதற்காதாரமாகவுள்ளது.

இவ்வாறு வெகு நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்த நல்லூர்க் கோட்டையின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு வாசல்களிற்கண்மையில் மடங்கள் காணப் பட்டன. கந்தர்மடம், நாயன்மார்க் கட்டுப் பகுதிகள் இவற்றிற்குச் சான்று பகர்கின்றன. இம்மடங்களிற்கண்மையில் குளங்களும் வெட்டப்பட்டிருந்தன. மேலும் தமிழ் மக்கள், உழவுத்தொழில் புரிபவர்கள் தங்கள் காவல் தெய்வமாக விநாயகரையே வணங்குவார்கள். அதனால்தான் போலும் வயல்களிற்கண்மையிலுள்ள கிழக்கு வாசலில் வெய்யிலுகந்த பிள்ளையார் ஆலயத்தை மன்னர் நிறுவினான் போலும். இதேபோல் தமிழ் மக்கள் வீரத்திற்குக் கொற்றவையையே, காளியம்மனையே வணங்குவது வழக்கம். ஆனைக்கொட்டாரங்கள் முதலிய போருடன் சம்பந்தப்பட்ட பகுதிகள் அடங்கிய மேற்கு வாயிற்காப்பாக வீரமாகாளியம்மன் ஆலயத்தை மன்னன் நிறுவினான் போலும். இதுவரை நான் கூறியவை நல்லூர்க் கோட்டையின் அமைப்புப் பற்றிய எனது முடிவுகள். இதனை முதற்படியாக வைத்து இன்னும்பலர் நல்லூர்க் கோட்டை அமைப்பு முறை பற்றியும், நகர் அமைப்பு முறை பற்றியும் ஆய்வுகள் செய்து உண்மைகளை வெளிக்கொணர முயல்வார்களென எதிர்பார்ப்போம்.

# வீர சங்கிலியனின் அரும்பணிகள்

**பொ.அபிராமி,**
ஆரம்பக்கல்வித்துறை.

சங்கிலியன் 1519 இல் இருந்து 1561 வரை 42 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலியனின் தந்தையார் பெயர் ஆறாம் பரராசசேகரன். தாய் மங்கத்தம்மாள். ஏழாம் செகராசசேகரன் எனவும் அழைக்கப்பட்டான். செகராசசேகரன் எனும் திருநாமத்தைக் கொண்ட இவன் ஆரியச் சக்கரவர்த்திகளின் வம்சத்தவன்.

சங்கிலியன் வீரத்துடன் மக்கள் பணியிலும், கல்விப் பணியிலும் முன்னின்று உழைத்தான். "சரஸ்வதி மகால்" எனும் நூல் நிலையத்துடன் "நாயன்மார்கட்டில்" வைத்தியசாலையும் அமைத்தான். சிறந்த இலக்கிய முயற்சிகளையும் மேற்கொண்டான். இவ்வாறான சமூகப் பணிகளையும் மேற்கொண்டான்.

சங்கிலியன் மொழிக்கும், சமயத்துக்கும் மட்டுமல்ல, கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்துவீரகாவியம்படைத்தமன்னனாவான். அத்தோடு நாட்டிற்கு அவசியமான விவசாயத்தையும் மேம்படுத்துவதில் வெற்றி கண்டவன். இதன் காரணமாகத்தான் பல குளங்களைக் கட்டுவித்துப் பலவற்றைப் புனருத்தாரணம் செய்தான். "வயல் செறி நல்லூர்" என்பதும் "யமுனா ஏரி" என்பதும் அவன் விவசாயத்தில் கொண்டிருந்த அர்ப்பணிப்பை உணர்த்தி நிற்கின்றன.

சங்கிலிய மன்னனின் சமயப் பணியினை எடுத்து நோக்கினால், வடக்கே சட்டநாதர் ஆலயம், தெற்கே கைலாயப் பிள்ளையார் ஆலயம், கிழக்கே வெயிலுகந்தப் பிள்ளையார் ஆலயம், மேற்கே வீரமாகாளியம்மன் ஆலயம் அமைந்துள்ளதாக வைபவமாலை கூறும்.

மேலும் இவ்வாலயங்கள் இன்று வரையிலும் பேணப்பட்டு, வழிபடப்பட்டு வருகின்ற போதிலும் விவசாயத்திற்காக அமைத்த யமுனா ஏரி உரிய வகையில் பராமரிக்கப்படாது அழுக்கடைந்தும், சிதைவடைந்தும் கவனிப்பாரற்று இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும். மேலும் விவசாய நடவடிக்கைகளும் குறைவடைந்து கட்டடங்களும், கடைகளும் கட்டப்பட்டு நகரமயமாதலுக்கு உட்பட்டுக் காணப்படுகின்றமை அவதானித்துச் செயற்படவேண்டிய விடயமாகும்.

- ஒருவனைக் கல்லூரி மூலமாயா வெளிவந்தாய் என்று கேட்காதே, கல்லூரி உன் மூலம் பேர் பெற்றதாவென்று கேள்.
- இரகசியமென்று ஒன்று உலகத்தில் கிடையாது, அதைக்கேட்கும் ஒருவன் எங்குமிருக்கிறான்

# வீரசங்கிலி மன்னன்

ம.சிவயோகன், இசைத்துறை.

ஆசியாவின் முத்தாகத் திகழும் இலங்கையின் வடமுனையான யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்களுள் நாட்டுணர்வு மிக்கவனான சங்கிலி மன்னன் பரராசசேகரன், மங்கத்தம்மாள் என்போருக்கு மகனாகப் பிறந்தான். இவனுடைய சகோதரியின் பெயர் 'பரவை' என்பதாகும். சங்கிலியன் சிறுவயதிலிருந்தே நாட்டுப்பற்று மிக்கவனாய்த் தனது வாழ்வை நெறிப்படுத்தி வளர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பரராசசேகரனுடைய புத்திரர்களுள் சங்கிலியன் "கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" என்ற பழமொழிக்கிணங்க, தான் சிறியவ னாக இருந்த போதிலும் ஆண்மையிலும் படைக்கலப் பயிற்சியிலும் சிறந்து சாதுரியம் மிக்கவ னாய் விளங்கியமை அவனுடைய எதிர்கால ஆட்சி யமைப்புக்கு ஏதுவாக அமைந்தது எனலாம்.

குறிப்பாக சங்கிலி மன்னன் இராசகுடும்பத் தவனேயாகவும், அரசாளுவ தற்கோ உரிமையில்லாதவனெனவும் முந்திய அரசின் ஊழியனும் மகாதந்திரியுமாவான் என அக்கால நுலா சிரியர்கள் கருத்து முரண்பாடுகளை முன்வைக்கின்ற போதும் யாழ்ப்பாணத்தை நாற்பத்திரண்டு வருடங்கள் "சுதந்திர வீரனாக" இருந்து ஆட்சி செய்தமை பெருமைக் குரியதாகும்.

அதாவது ஒல்லாந்த அரசினர் குறித்து வைத்த விபரமொன்றைக் கொண்டு இவன் சிங்காசனமேறிய காலம் ஒருவாறு நிச்சயிக்கப்படுவதாக "அரசுரிமை கொண்ட பழைய இராசகுடும்பத்தின் தோன்றலான சியங்கெரி எனும் ஒர் அஞ்ஞான அரசனால் 42 வருடத்திற்கு மேல் ஆளப்பெற்றிருந்தது" எனக் குறிப்பிடப்படுகின்றது.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு 1505 ஆம் ஆண்டு கோட்டை இராச்சியத்திற்கு வந்து பின் யாழ்ப்பாண இராச்சியத்தைப் படையெடுத்துக் கைப்பற்ற முயன்ற போது "கிபி 1519 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகத்" திகழ்ந்து சிறப்பாகத் தனது நாட்டுணர்வுடன் அவர்களை எதிர்த்து ஆட்சி புரிந்தவனாக சங்கிலி மன்னன் காணப்படுகின்றான்.

சுபதிருஷ்ட முனிவர் சபைக்கு வந்து திருவாய் மலந்தருளிய விடயம் யாதெனில் பரராசசேகரனுக்குப் பின் சங்கிலியே அரசனாவான் என்பதாகும். இதன்படி சங்கிலி மன்னன் யாழ்ப்பாண இராச்சியத்தை நீண்ட வருட காலமாக அந்நியர்களிடமிருந்து பாதுகாத்து தற்துணிவோடு வீரமன்னன் எனும் பெயருடன் ஆட்சி செய்தான்.

சங்கிலி மன்னன் குடிகளுடைய துன்பத்தை நிவிர்த்தி செய்கின்ற போதிலும் சில குடிகள் "கொடுங்கோன் மன்னன் வாழும் நாட்டிற் கடும்புலிவாழுங் காடுநன்றே" என்று அவனது சிறப்பை அறியாது அவனது நாட்டை விட்டு பாண்டிய நாட்டிற்குச் சென்றனர். பிறகு பாண்டிய நாட்டிற் கொடிய பஞ்ச மொன்று உண்டாயிற்று என்று அநேக குடிகள் யாழ்ப்பாணத்தையடைந்து சங்கிலி மன்னன் அனுமதியோடு குடியேறியமை சங்கிலி மன்னனின் ஆட்சிச் சிறப்பினை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

சங்கிலி மன்னன் வீரத்தில் மட்டுமல்லாது தனது இரக்க குணங்களை சந்தர்ப்பத்திற்கேற்ப வெளிப்படுத்தியமைக்குச் சான்றாக பறங்கிகள் யாழ்ப்பாண நகரத்திற்கு வந்து வர்த்தகம் செய்ய அனுமதி கேட்டபோது "நீங்கள்

கூறுவதுண்மையானால் பகற் காலத்தில் மாத்திரம் எனது நகரத்தில் வர்த்தகஞ் செய்து பின்னர் பொழுதுபடுமுன்னே உங்கள் மரக்கலத்திற்கு மீளுதல் வேண்டும். பொழுதுபட்ட பின்னர் எமது நாட்டிலே தங்கக் காணில் கொடிய தண்டம் பெறுவீர்" என்று அனுமதி வழங்கியமையாகும்.

குறிப்பாக பறங்கிகளுடன் பிற்பட்ட காலத்தில் யுத்தத்தை மேற்கொள்ளும் போது, அவர்கள் துப்பாக்கிக் குண்டுகளைப் பயன்படுத்திய போது சங்கிலியன் கண்கள் தீயெனச் சிவந்திருக்க குதிரையிலேறி அம்புகளையும் கவண்கல்லையும் வைத்துப் பறங்கிகளை தோல்வியடையச் செய்தமையும் வாளேந்திய தோற்றமும் அவனின் வீரத்தைப் பறைசாற்றுவன.

எனவே, மாமன்னன் சங்கிலியன் யாழ்ப் பாணத்தை நாற்பத்து இரண்டு வருடம் செய்த வீர ஆட்சியானது இன்றும் அவனது பெருமைகளையும் வீரச் செயல்களையும் பறைசாற்றுவதாக அமைகின்றது. மேலும் திருவள்ளுவர்

"பெருமையுடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை உடைய செயல்"

என்று கூறுவது போல, சங்கிலி மன்னன் பெருமையுடன் ஆட்சி புரிந்துள்ளான். ஆகையினால் இன்றும் சங்கிலி மன்னனின் புகழ் தமிழ் மக்களிடையே வேரூன்றிக் காணப்படுகின்றமையும் இன்று குதிரையேறிய வீரசங்கிலியனின் உருவச்சிலை யாழ்ப்பாண மண்ணில் அவனது வரலாற்றை எடுத்துரைப்பதாகவும் அமைகின்றன.

"சுதந்திரவீரன் சங்கிலியனின் புகழைப்
பறைசாற்றுவோமாக!"

- மனிதனுக்கு இரண்டு கண்ணாடிகள் உள்ளன, ஒன்று உடலைப் பார்ப்பது மற்றொன்று உள்ளத்தைப் பார்ப்பது.
- சுயநலமில்லாமல் ஒருவன் மற்றொருவனுடன் சேர மாட்டான்.
- அரசு மக்களுக்காக உள்ளது, அரசியல்வாதி தனக்காக வாழ்கிறான்.
- பெரும்பாலும் அரசு என்பதற்குப் பொருள் தெரியாதவனே அரசியல் வாதி.

# வெற்றியாளனாய் வீரம் நிகழ்த்தினாய்!

துரை. மனோகரன்

*யாழ்மண் தந்த சங்கிலி மன்னவ!*
யாவரும் உன்னைப் போற்றிடும்
செயலது
ஆச்சரியம் அன்று
அது உனக்கு இயல்புதான்
நீ ஒரு வீரன்
தமிழன் பெருமையைத்
தலையை நிமிர்த்தியே
சொல்லிட வைத்தவன்.

அந்நியர் தம்மை
எதிர்த்து நீ நின்றமை
என்றும் உனக்கொரு பெருமை
மன்னனே!
வீழ்ந்திடுவாய் என மற்றவர் எவரும்
விரும்பிடும் பொழுதெலாம்
எழுந்திடுவாய் நீ!
அது உன் திறமைதான்.

வெற்றியை என்றும்
மனத்தில் விதைத்து நீ
வென்றிடும் செய்திகள் வெளிவரும் போதினில்
வேற்றுநாட்டினர் மனங்களில்
தீச்சுழல்
பற்றி எரிந்தது
யாழ்மண் செழித்தது.

சுந்தரத் தமிழையும்
சோதிவானவன் சைவ மரபையும்
முன்னிலைப் படுத்திய
செந்தமிழன் நீ!
அந்தரம் தரும் அந்நியர் படைகளை
தந்திரமாகத் துரத்தியடித்தவன்
சுடர் எனத் துலங்கும்

துணிவு வல்லமை
என்றும் வாய்த்தவன் நீயே!

கற்றவர் மனங்களில்
அவர்களின் கனவினில்
நிற்கிறாய் என்றும்
சங்கிலி நீயே!
கல்லாதவரும் கனிவுடன்
என்றும் உனையே போற்றுறார்.
வீரம் விளைந்த நாட்டினில்
வந்த நீ
வினைத்திறன் கொண்ட வெற்றியாளனாய்
விவேகம் நிறைந்த வீரம் நிகழ்த்தினாய்!

வீரன்
உன்காலம் முழுவதும் முயன்றுமே
யாழின் அரசினை
அந்நியர் பெற்றிலர்
தவறுகள் எதுவும் உன்னிடம் இலை என
நான்
சத்தியம் செய்திடேன்
ஆயினும்
நம் நிலம் காக்க
நீ
ஆற்றிய சேவைகள் அளவிடற்கரியன.

இன்றும் உன் புகழ்
நாட்டவர் மனங்களில் நலமாய்த் துலங்குது
பாட்டினில் கதைகளில் நாட்டியம் நாடகம்
என்னும் இவைகளில்
பாத்திரமாகத் திகழ்ந்து வருகிறாய்
உன்புகழ் பெரிது
உனக்கு நாம் செயும்
நன்றிகள்
இவைகள்.

அன்று நீ செய்த அனைத்தும்
மன்னனே!

இன்றுனை
எவரும் போற்றும் நிலைதனை
உனக்கு நல்கின
மக்களே
வீரசங்கிலி என்னும் பெயரினை
விருப்புடன் உனக்கு வழங்கி மகிழ்ந்தனர்
சிலையினில் உன்னைச் செதுக்கி
வீதியில் என்றும் நிலைபெற வைத்தனர்
வீரத்திலகமாம் சங்கிலி மன்னனே!
நின் புகழ்
என்றும் நிலைபெற வாழ்த்துதல் செய்குவோம்!

■

- வெளியில் சாப்பிட்டால் பின் வீட்டில் பட்டினி கிடந்து சாகும் நிலை உருவாகும்.
- பிறருடைய தவறுகளைப் பார்த்து அறிவாளி தன்னைத்தான் திருத்திக் கொள்வான்.
- முட்டாள்களைத் தூரத்தில் வைப்பதற்காக அறிவாளிகள் சடங்குகளை உண்டாக்கினர்.
- சூழ்நிலையா! அதை நானே உண்டாக்கிக் கொள்கிறேன்.
- ஆனந்தமென்பது ஆண்டிக்கும் அரசனுக்கும் ஒரே மாதிரித்தான்.
- இதயத்தில் பேயும் கையில் பூமாலையும் என்பதை உணர்வாய்.

# சங்கிலி மாமன்னனின் வரலாற்றுப் பாடம்

**செல்வி த.கார்த்திகா,**
விஞ்ஞானத்துறை

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி எங்கே?
முத்தமிழை வடிவமைத்த புலவர் எங்கே?
யுத்த களம் மெத்தையெனும் சங்கிலியனை
வழியெங்கும் தேடினோமே காணலையே.

அகிம்சைக்கு வித்திட்ட மகாத்மாவுடன் - ஏழை
கல்விக்கு வழிசமைத்த முன்னோரில்லை
யாழ் வேந்தன் சங்கிலியன் அழகைக் காணோம்
வாள் கொண்டு பரியேறிவரும் எழிலைக் காணோம்.

மார்தட்டி வாழ்ந்த சங்கிலிய மன்னன் முதல் இரந்துண்ட ஆண்டிவரை
நீர்க்குமிழி வாழ்வு தனில் அஸ்தமித்த காட்சி கண்டாய்
வீரத் தமிழனே விழித்தெழு
தோல்விதான் வெற்றியின் ஏணிப்படிகள்

சாம்பலில் மீண்டெழும் பீனிக்ஸ் பறவைகளாய்
மாணவ சமூகமே விரைந்தெழுந்து வா
மாமன்னன் சங்கிலியன் தனித்துவம் போலவே
மாமக்கள் வாழ்வுதனில் தமிழ் எழுச்சி காண்.

சமத்துவம் வேண்டுமெனில் கல்வி ஒன்றே கைகொடுக்கும்
கல்விச் சமர் புரிய சீறும் பாணமாய் பறந்து வா
இழந்த உரிமைகளை வெற்றிக் கேடயங்களால் நிரப்பிவிடு!
அணுவாயுதம் தோற்கலாம் பேனா முனை தோற்காது.

# நம் வீர மன்னன் சங்கிலியன்

**K. தனுசியா,**
ஆரம்பக்கல்வித்துறை

பரராசனின் புகழ் பரப்பிடவே
பாரிற்கு வந்தவன் சங்கிலியன்
யாழ் மண்ணிற்கு சிறப்பினையே
வாள் கொண்டு காட்டியவன்

அனல் பறக்கும் கண்ணுடனே
அன்னியரை எதிர்த்திட்டான்
அஞ்சா நெஞ்சம் கொண்ட - அரசை
ஆளுமையாய் ஆட்சி செய்தான்

சைவம் தழைத் தோங்கிடவும்
தமிழை வளர்த்திடவும்
தன் வீர வாள் கொண்டு
தலைவனாய் முன்னின்றான்

நாட்டுப் பற்றையும் தற்துணிவோடு
தீர்க்க தரிசனத்தையும் கொண்டே
நம்மவர் நெஞ்சங்களில்
நீங்கா இடம் பதித்தவனே
நம் வீரமா மன்னன் சங்கிலியன்

- ஈயாத உலோபி இருந்தென்ன, இறந்தென்ன?
- உன் நண்பனைப் பற்றி உயர்வாய்ப் பேசு; விரோதியைப் பற்றி நாக்கை மடக்கி வைத்துக் கொள்.
- மூட பக்தி அம்மதத்தை அழித்துவிடும்.

# நம் வீர சங்கிலியன்

K. தனுசியா,
ஆரம்பக்கல்வித்துறை

பரராசனின் புகழ் பரப்பிடவே
பாரிற்கு வந்தவன் சங்கிலியன்
யாழ் மண்ணிற்கு சிறப்பினையே
வாள் கொண்டு மீட்டியவன்

அனல் பறக்கும் கண்ணுடனே
அன்னியரை எதிர்த்திட்டான்
அஞ்சா நெஞ்சம் கொண்ட - அரசை
ஆளுமையாய் ஆட்சி செய்தான்

சைவம் தழைத் தோங்கிடவும்
தமிழை வளர்த்திடவும்
தன் வீர வாள் கொண்டு
தலைவனாய் முன்னின்றான்

நாட்டுப் பற்றையும் தற்துணிவோடு
தீர்க்க தரிசனத்தையும் கொண்டே
நம்மவர் நெஞ்சங்களில்
நீங்கா இடம் பதித்தவனே
நம் வீர சங்கிலியன். ■

- வரலாற்றை உண்மையுடன் எழுதினால் அதைக் காட்டிலும் உயர்ந்த நூல் எதுவும் இராது.

- முட்டாளுடன் வீட்டினுள் விளையாடினால் அவன் தெருவில் உன்னுடன் விளையாடுவான்.

# வீரா! நம் சங்கிலியனே!

**எம்.ஐ.எப்.ரிகாஷா,**
ஆரம்பக் கல்வித்துறை

நேரிய பார்வை கொண்ட மன்னா!
உன் வீரத்தை உலகினுக்கு அறிய வைக்கப்
புரிந்தாய் வீர ஆட்சி!
யாழ் இராச்சிய ஆட்சி உன் வீர
வரலாற்றிற்கு அழியாத ஒரு சின்னம்!
கம்பீரம் பொருந்திய உன் ஆட்சியால்
பெருமை கண்டது யாழ் மண்ணும்!
குதிரை மீது உசாராக உட்கார்ந்து செல்லும் உன் கம்பீரத் தோற்றம்
எம்மவர் கண்மணியில் எந்நாளும் ஆடிக்கொண்டிருக்கும்

சிரந்தாழ்த்தாது யாழை ஆண்டாய் இறுதி முத்திரையாய்
இன்றும் உன் புகழ் மணம் எங்கும் வீசுகிறது

சங்கிலியனே உனக்கு மரணம் ஒரு
முற்றுப்புள்ளியல்ல அது
தமிழினத்தின் ஆட்சிக்கான ஏணிப்படி

மண்ணுக்காய் வாழ்ந்த நீயும்
நல்லாட்சி புரிந்து
சரித்திரத்தில் உன் பெயரை
நிலைநாட்டி விட்டாய்

சிந்தும் கண்ணீர்த்துளி
கண்களை மட்டுமல்ல இதயத்தையும்
உருக்குலைய வைக்கிறது உன்னைச்
சிறைப்பிடித்த ஈனர் செயல்!

- "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேரும் சிலப்பதிகாரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் நிதம்
ஓதியுணர்ந்தின் புறுவோமே"
- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

# வீர சங்கிலி செகராசசேகரன்

**தனுசிகா குலநாயகம்,** ஆரம்பக் கல்வித்துறை

**காட்சி I**

**(வாளுடனும் வீர நடையுடனும் சங்கிலியன் காட்சி அளிக்கின்றான்.)**

**பாத்திரங்கள் : சங்கிலியன், ஒற்றன், பரநிருபசிங்கன், சேவகன்**

**சங்கிலியன் :**
பண்டார இளவரசனையும் கொலை செய்துவிட்டார்கள். அரசரும் மௌனமாக உள்ளார். இந்த இக்கட்டான நிலையில் யாழ்ப்பாண இராச்சியத்தைக்காப்பாற்ற வேண்டிய நேரம் இது. இதோ அவன் குருதியில் நனைந்த வாள். இன்று முதல் இந்த யாழ்ப்பாண இராச்சியம் என்னுடையதே. நானே இராசா...

(இராஜ நடைபோட்டு மேடையினின்றும் விலகுகிறான். பரநிருபசிங்கன் அவைக்கு வருகிறான்.)

**ஒற்றன் :**
(ஓடி வந்து) சங்கிலி இராச்சியம் தன்னுடையதென்று இறுமாப் படைகிறானாம். பரராசசேகர மன்னனும் உயிருக்குப் பயந்து மவுனமாயொதுங்கிவிட்டாராம்!

**பரநிருபசிங்கன் :**
அப்படியா? சங்கிலியனா? நான் இருக்கும் போது அவனுக்கு இராச்சியம் எப்படிக்கிடைக்கும்? யாரங்கே? (பணிவுடன் சேவகன் வருகிறான்) உடனடியாகச் சேனையைப் போருக்குத் தயார் செய்யும்படி சேனாதிபதியிடம் கூறு.

**சேவகன் :**
அப்படியே ஆகட்டும். (சேவகன் வெளியேறுகிறான்)

**பரநிருபசிங்கன் :**
நாளையே அவன்மீது போர் தொடுப்போம். (சேனைகளோடு யுத்தத்திற்கு பரநிருபசிங்கன் புறப்பட்டான். இது அறிந்த சங்கிலியன் நேரில் சந்திக்க வருகின்றான்)

**சங்கிலியன் :**
கேளும் அண்ணாவே. நாங்களிருவரும் சகோதரராகவும் சரிவந்த பங்குக்கார ராகவும் இருந்துகொண்டு ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளும் பட்சத்தில் வன்னியர்கள் இராச்சியத்தைக் கவர்ந்து கொள்வார்களாகையால் இப்போதைக்கு நான் இராசாவாகவும் நீர் மந்திரியாகவும் இருந்து எங்கள் பிதாவினால் உமக்குக் கிடைத்த அதிகாரத்தை உமது மகன் பரராசசிங்கத்திற்குக் கொடுத்து வேறு ஒழுங்குகள் பண்ணும் வரையில் இராச்சிய வருமானங்களை இருவரும் பகிர்ந்துகொண்டு ஒத்திருந்தால் எவ்வளவோ காரியங்களெல்லாஞ் செய்து முடிக்கலாமே. (வாய்ப்பேச்சினால் மயங்கினான் பரநிருபசிங்கன்)

**பரநிருபசிங்கன் :**
நீர் கூறுவதும் சரியாகவே தெரிகின்றது. ம்... அப்படியே செய்வோம். நான் மந்திரியாக இருப்பதற்கு ஒத்துக்கொள்கின்றேன். (சங்கிலியன் நினைத்ததை சாதித்த பெருமையில் சிரிக்கிறான்)

## காட்சி II

**பாத்திரங்கள் : சங்கிலியன், பரநிரு பசிங்கன், சேவகன்**
**(சங்கிலியன் அவையின் மன்னனாக வீற்றிருக்கிறான்)**

**சங்கிலியன் :**
எமக்குத் தேவையான சேனைகளை நாம் சேர்த்துவிட்டோம். இனி தேவையில்லாமல் அடுத்தவரை ஏன் கூட்டுச்சேர்க்க வேண்டும். யாரங்கே? (பணிவுடன் சேவகன் வருகிறான்) இன்று முதல் பரநிருபசிங்கத்திற்குக் கொடுக்கப்படும் வருமானப் பங்கையும் தேசவதிகாரத் தலைமையையும் நிறுத்துகிறேன். இனி மந்திரி உத்தியோகத்திற்கான சம்பளம் மாத்திரமே கொடுக்கப்படும் என்பதை அறிவியுங்கள்.

**சேவகன் :**
அப்படியே ஆகட்டும் மன்னா.

**பரநிருபசிங்கன் :**
(சேதி அறிந்தவனாக) சதிகாரச் சங்கிலியன் அப்படியா கூறினான். அவனுக்கு நான் நல்ல பாடம் புகட்டுகிறேன். சோழராசனுக்கு இன்று முதல்த் திறை கொடுக்க வேண்டாமென பாசுரம் அனுப்புகிறேன். திறையைத் தடைசெய்கிறேன்.

## காட்சி III

**இடம் : வீதியோரம்**
**(வடமராட்சியில் கலகத்தை அடக்கி வருகையில் இருபாலை எல்லை சமீபித்தவுடன் சேவகர்களும் சேனையும் வாத்தியத் தொனியை நிறுத்துகின்றனர்)**

**பாத்திரங்கள் : சங்கிலியன், சேவகர், கலைஞர்**

**சங்கிலியன் :**
எதற்காக வாத்தியத்தை நிறுத்தினீர்கள்?

**சேவகர்கள் :**
இராசா... இது பரநிருபசிங்கத்திற்குரிய இடமாயிருப்பதால்.

**கலைஞர்கள் :**
உத்தரவின்றித் தொனி செய்யப் பயந்து விட்டோம். அதனால்தான். (என்று பயத்துடன் கூறினர்.)

**சங்கிலியன் :**
(இதற்காகவா. ம்ம்... பரநிருபசிங் கத்திற்குரிய கள்ளியங்காடு முதலிய ஏழு கிராமங்களையும் முதலில் கவர்ந்து கொள்ள வேண்டும். (தனக்குள்ளே கடுமையாகச் சிந்திக்கிறார்) செப்புப் பட்டயம், முடி, செங்கோல் முதலியவை அவன் கையில் இருக்கவே நான் அதிகாரஞ் செய்கிறேன். வேறு முடி தேடித் துட்டிக் கொண்டால் கலகம் நேரிடும். தக்க சமயம் வரும்போது பார்த்துக் கொள்வோம். (என விலகிச் செல்ல திரை மூடப்படுகிறது)

## காட்சி IV

**இடம் : அரச சபை**
**பாத்திரங்கள் : சங்கிலியன், சபையோர், சேவகன்**
**(பரநிருபசிங்கன் வன்னியருடன் திரிவதை சங்கிலியன் அறிந்து அவர்களுடனான தொடர்பைத் துண்டிக்கத் திட்டம் ஒன்றைத் தயார் செய்கின்றான்)**

**சங்கிலியன் :**
இன்று முதல் நான் நிறுத்தி வைத்த வருமானப் பங்கைப் பரநிருபசிங்கத்திற்கும், கிராம அதிகாரத்தை பரராசசிங்கத்திற்கும் கொடுக்கச் சம்மதிக்கிறேன். (என சமாதானப்படுத்தினான்)

**சங்கிலியன் :**
அதுமட்டுமல்ல அவர்கள் இருவருடைய திருநாமங்களிற்கும் புதிய பட்டத்தையும் சேர்க்கப் போகின்றேன். இதில் உங்கள் அனைவருக்கும் சம்மதமா?

**அவையோர் :**
சம்மதம். சம்மதம் மன்னா... எங்களுக்குப் பூரண சம்மதம் மன்னா...

**சங்கிலியன் :**
வடதிசை வேளாளரின் முதலிப் பட்டத்தை அவர்கள் பெயரின் இறுதியில் சேர்த்துப் பரநிருபசிங்கமுதலி, பரராசசிங்கமுதலி என்றுரைப்போம். சேவகனே... (பணிவுடன் சேவகன் வருகிறான்) சென்று பரராசசிங்கத்தை அழைத்து வா.

**சேவகன் :**
அப்படியே ஆகட்டும் மன்னா. (சேவகன் வெளியேறுகிறான்)
**(பரராசசிங்கன் அவைக்கு வருகிறான். மன்னனைப் பார்த்து)**

**பரராசசிங்கன் :**
தாங்கள் அழைத்ததற்காக வந்தேன்.

**சங்கிலியன் :**
உன் பிதாவுக்கும் உனக்குஞ் சகல கிராமங்களும் மேலதிகாரங்களும் கிடைத்திருக்கின்றது. உங்களுக்குப் பின் உங்கள் சந்ததியாருக்கும் தலைமுறை தலைமுறையாக இவ்வதிகாரம் நிலையாக நிற்குமாகையால் உங்கள் சந்ததியாருக்கும் ஒரு பட்டஞ்சூட்டி வைக்க விரும்புகிறேன்.

**பரராசசிங்கன் :**
அது என்ன பட்டம் மன்னரே?

**சங்கிலியன் :**
மடப்பம் ஐந்நூறு கிராமத்திற்குத் தலைமை பெற்றது. அளித்தல், காத்தல் ஆகவே மடப்பத்தை அளிப்பது மடப்பளி என்பது தான்.

**பரராசசிங்கன் :**
நான் தந்தையிடம் இதைக் கூறுகிறேன் (இதை அறிந்த தந்தை)

**பரநிருபசிங்கன் :**
அவன் எப்படிப் பிதற்றினாலும் பிதற்றட்டும். அவரவர் இருந்து அறியலாம். நீ உன் அலுவலைப் பார். உன் பணியைச் சரியாகச் செய். (என்றார்)

■

## காட்சி V

**(சங்கிலியன் தன் மந்திரிமாருள் ஒருவனாகிய அப்பாமுதலி என்பவன் மகள் பேரில் மோகங்கொண்டு மணக்கத் துணிய அவளது பிதா பரநிருபசிங்கத்திடம் வந்து)**

**அப்பாமுதலி :**
நீங்கள் எனது மகளைக் காப்பாற்றித் தரவேண்டும். சங்கிலிய இராசன் என் மகள் மீது மோகங் கொண்டுள்ளான். எப்படியாவது அவளைக் காப்பாற்றித் தாருங்கள். (எனக் கதறி அழுதார்)

**பரநிருபசிங்கன் :**
பயப்படாதே நான் உன் மகளைக் காப்பாற்றித் தருவேன். (எனத் திடஞ்சொல்லி உடனே ஒரு காகிதம் எழுதி) ஊர்காவற்றுறையில் காக்கை வன்னியன் வந்திறங்கி யிருக்கிறான். இதை அவனிடத்திற் கொண்டு போய்க் கொடு (எனக் கூறி அனுப்பினான்)

**அப்பாமுதலி :**
அப்படியே செய்கிறேன் (வெளியேறுகின்றனர்)

**(அப்பாமுதலியும் காக்கைவன்னியனும் காகிதத்துடன்)**

**அப்பாமுதலி :**
இக்காகிதம் தங்களுக்காக அனுப்பப் பட்டது. (வாங்கி வாசிக்கிறான்)

**காக்கைவன்னியன் :**
உன்மகளை பரநிருபசிங்கன் வீட்டில் அடைக்கலமாக வைத்துவிட்டு உன் பணிகளை மேற்கொள். நான் சற்றிடம் போய் வந்து எல்லாம் பார்த்துக்கொள்வேன். (என்று கூறி பரநிருபசிங்கத்திற்குப் பதிலோலையும் கொடுத்தனுப்பினான்)

**அப்பாமுதலி :**
உங்களை நம்புகிறேன். நீங்கள் கூறியபடியே செய்கிறேன். வருகிறேன்.

■

## காட்சி VI

**(காக்கைவன்னியன் தரங்கம்பாடியில் பறங்கியரைச் சந்திக்கிறான்)**

**காக்கைவன்னியன் :**
நான் உங்களுக்கு யாழ்ப்பாணம் முதலிய இடங்களைப் பிடித்துத் தருவேன் வாருங்கள். இது சத்தியம். (இதை நம்பி பறங்கியர் வியாபாரி போல வந்து சங்கிலியனைச் சந்தித்தனர்)

**பறங்கியர் தலைவன்:**
மன்னரே நாங்கள் வியாபாரிகள். தங்கள் நாட்டில் வியாபாரஞ் செய்ய எமக்கு உத்தரவு தரவேண்டும்

**சங்கிலி :**
முடியாது. அந்நிய வியாபாரம் எமக்குத் தேவையில்லை.

**பரநிருபசிங்கன் / மந்திரிமார் :**
மன்னிக்கவும் மன்னா. இப்படியான வர்த்தகத் தொடர்பு எம்நாட்டிற்கு நிச்சயமாகத் தேவையான ஒன்று. கட்டாயமாக நாம் இதை எம்நாட்டில் அனுமதிக்க வேண்டும். (அனைவரும் கூற சங்கிலியன் ஒருவாறு உடன்படுகின்றான்)

**சங்கிலியன் :**
ஆ... அப்படியா? நாட்டுக்கு அவசியமானதை நான் நிராகரிக்கக் கூடாது. ஆனாலும் (பறங்கியரை நோக்கி) நீங்கள் பகற்காலத்தில் அன்றி இராக்காலங்களில் ஊருக்குள் நில்லாமல் உங்கள் தோணிகளில் தங்கி வியாபாரஞ் செய்து கொள்ளுங்கள். (என உத்தரவு பிறப்பித்தான்)

**பறங்கியர் தலைவன் :**
மிக்க சந்தோஷம். நாம் அவ்வாறே செய்கிறோம்.

■

## காட்சி VII

**(பறங்கியர் பெரிய பரிசுப்பொதியுடன் சங்கிலி யனைக் காண அரண்மனைக்கு வருகின்றனர்)**

**சேவகன் :**
(பணிந்து) இராசாவே உங்களைக்காண பறங்கியர் சிலர் கைகளிலே பொதியுடன் வந்துள்ளனர்.

**சங்கிலியன் :**
அவர்களை உள்ளே வரச்சொல்லு. (சேவகன் பணிந்து வெளியேற பறங்கியர்கள் உள்ளே வருகின்றார்கள்)

**பறங்கியர் தலைவன் :**
இராசாவே உங்கள் கருணையாலேயே நாங்கள் எமது வியாபாரத்தை நல்லபடியாகச் செய்து கொண்டிருக் கிறோம். அதனால் உமக்கு நன்றி கூறும் பொருட்டு சில பரிசுப் பொருட்களை உமக்காகக் கொண்டு வந்துள்ளோம். அதை மறுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும்.

**சங்கிலியன் :**
(சிறிது நேரம் சிந்தித்துவிட்டு) ம்... என்ன கொண்டுவந்தீர்?

**பறங்கியர் தலைவன் :**
இவையெல்லாம் எம் தேசத்தில் இருந்து எடுத்துவரப்பட்டவை. விலையுயர்ந்த நவரத்தினங்களும் பட்டுப் புடவைகளும், சில நூதனப் பொருட்களுமே.

**சங்கிலியன் :**
அப்படியா? மிகவும் சந்தோஷம் (பறங்கியரைப் பார்த்துப் புன்னகைக்கின்றார்)

**பறங்கியர் தலைவன் :**
மகாராசாவே நாங்கள் தோணிகளில் இருந்து சமையல்,போசனம், நித்திரை முதலியவற்றைச் செய்வது மிக வருத்தம். ஆகையால் கடலோரத்தில் தங்கி இருக்கவும் வியாபாரப் பொருட்களை வைத்துக்கொள்ளவும் ஒரு வீடு கட்டும் பொருட்டு உத்தரவு தந்துதவ வேண்டும்.

**சங்கிலியன் :**
(மனமிரங்கி) கடலோரத்தில் ஒரு சிறு வீடு கட்டிக் கொள்ளுங்கள். அங்கிருந்து உங்கள் வியாபாரத்தை மேற்கொள்ளுங்கள்

**பறங்கியர் தலைவன் :**
மிகவும் நன்றி மன்னரே.

■

## காட்சி VIII

**(பறங்கியர் தாம் கட்டிய பெருங்கோட்டையில்)**

**பறங்கியர் தலைவன் :**
சங்கிலியன் தந்த அனுமதியைச் சாட்டாக வைத்து மண்ணினால் ஒரு பெரிய கோட்டையைக் கட்டி விட்டோம். தேவையான சேனைகளையும் ஆயுதங்களையும் கூட நிறைத்துவிட்டோம். நாம் இப்போது பலமிக்கவர்கள் ஆகிவிட்டோம்.

**ப. சேனைத்தளபதி :**
ஆம் சேர். இவ்விடம் பெருங் காடாகையால் மனிதர் போக்குவரத்து மிகக் குறைவாகக் காணப்படுகிறது. சங்கிலி மன்னனுக்கும் இச்செய்தி தெரிய வாய்ப்பில்லை.

**பறங்கியர் தலைவன் :**
ஆம் ஆம். (இருவரும் மேடையை விட்டு விலக சங்கிலியன் வேட்டையாட வந்தபோது கோட்டை, கொத்தளங்கள், கொடிகள், சேனைகள், ஆயுதங்கள் யாவும் இருப்பதைக் கண்டு கோபமுடன் வருகிறான்)

**சங்கிலியன் :**
என் அனுமதி இன்றி இக் கோட்டை, கொத்தளங்கள், கொடிகள், சேனைகள், ஆயுதங்கள் முதலியவற்றை யார் இங்கே வைத்திருப்பது? (பறங்கியரைக் காண்கின்றான்)

**பறங்கியர் தலைவன் :**
வாருங்கள் இராசாவே! என்ன இந்தப்பக்கம் திடீரென்று!

**சங்கிலியன் :**
(கோபமாக) நீங்கள் இவ்வாறு செய்ய அனுமதிகொடுத்தது யார்?

**பறங்கியர் :**
நீர் தானே...

**சங்கிலியன் :**
(சங்கிலியன் அதிக கோபங் கொண்டு) உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்.

**(சங்கிலியன் அரண்மனைக்குக் கோபத்துடன் வருகிறான்)**

**சங்கிலியன் :**
யாரங்கே...? உடனடியாகச் சேனாதிபதியை அழைத்து வாருங்கள்.

**சேவகன் :**
(பணிவுடன்) அப்படியே ஆகட்டும் மன்னா. (சங்கிலியன் கோபத்துடன் அங்குமிங்குமாக நடக்கிறான். அவைக்கு சேனாதிபதி ஓடி வருகின்றான்.)

**சேனாதிபதி :**
அழைத்தீர்களா அரசே!

**சங்கிலி :**
ஆம். கரையோரத்தில் பறங்கியர் ஒரு பெருங்கோட்டைகட்டி அதிலே சேனைகளையும் ஆயுதங்களையும் நிறைத்து வைத்துள்ளதை இனியும் அவர்களை விட்டுவைக்கக்கூடாது. உடனடியாகச் சேனையைத் திரட்டி யுத்தம் மேற்கொண்டு பறங்கியரை விரட்ட வேண்டும். இப்போதே ஏற்பாடு செய்யுங்கள்.

**சேனாதிபதி :**
அப்படியே ஆகட்டும் மன்னா.

**(திரை மூடப்படுகிறது. துப்பாக்கிசூடும் வாள் வெட்டுமாக போர் இடம்பெற்றது. சேனைகளின் வீரக் குரலும் வீர மரண ஒலிகளும் கேட்கின்றது. சங்கிலியன் வெற்றிக்களிப்பில் வீரனாகக் காட்சிதர பறங்கியர் கொலை செய்யப்பட்டுக் கிடக்கின்றனர். பறங்கியர் தலைவர் தப்பியோடிவிட்டார்.)**

## காட்சி IX

**(பரநிருபசிங்கன் பறங்கியர் தோற்றதையிட்டு விசனமடைந்தான். வன்னியனை உதவி செய்யும்படி ஓலை அனுப்பினான். இந்நேரம் ஓடிச்சென்ற பறங்கியர் காக்கைவன்னியனைச் சிறைப்பிடித்தனர்)**

**பறங்கியர் தலைவன் :**
உன்னை நம்பிப் போரிட்டு பதினாலாயிரத்துக்கு மேற்பட்ட மக்களை இறக்கக் கொடுத்தோம். நீ எங்களை அழைத்து வந்து ஒருதவியுஞ் செய்யாததினால் உன்னைக் கொலை செய்வதே எங்கள் தீர்மானம். (எனத் துப்பாக்கியுடன் வன்னியனை நெருங்கினர்)

**ஒற்றன் :**
மன்னிக்க வேண்டும். (காக்கை வன்னியனை நோக்கி) இந்த ஓலை தங்களுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**பறங்கியர் தலைவன் :**
அதை இங்கே கொடு (பறித்தெடுத்துப் படிக்கிறான்) பறங்கிகளுக்காக வெளிவெளியாக நின்று உதவி செய்ய வேண்டும். அதற்கு உங்களுடைய உதவியும் நிச்சயம் அவசியமாகிறது. (என வாசித்ததும் சந்தோசமடைந்தனர். வன்னியனை மன்னித்து விடுவித்தனர்)

**பறங்கியர் தலைவன் :**
இப்போது நாங்கள் என்ன செய்வது?

**வன்னியன் :**
மறுபடி போர் செய்ய அதிகாலை வாருங்கள். நான் பரநிருபசிங்கனுடன் காத்திருப்பேன். (அவசரமாக வெளியேறினர்)

**(காக்கைவன்னியன் பரநிருபசிங்கத்தைக் காணவந்தான்)**

**பரநிருபசிங்கன் :**
வாருங்கள் வாருங்கள். தங்களுக்காகவே நெடுநேரமாகக் காத்திருக்கிறேன்.

**வன்னியன் :**
ம்... உங்கள் ஓலையால்த்தான் என்னுயிர் இப்போது ஊசலாடுகிறது.

**பரநிருபசிங்கன் :**
(அதிர்ச்சியுடன்) ஏன் என்னவாயிற்று

**வன்னியன் :**
அதைப் பிறகு பேசுவோம் நாளை காலை மேற்கு வாசலில் (என இரகசியமாக ஏதோ கலந்தாலோசித்து திட்டம் தீட்டுகின்றனர்)

### காட்சி X

**(பறங்கியர் அணிவகுத்து மேற்குவாசலை வளைத்து நிற்க சங்கிலி இராசன் இதை அறிந்து சேனைகளுடன் மேற்கு வாசற்புறத்தே தைரியங் கொண்டு நிற்கின்றான்)**

**வன்னியன் :**
(இரகசியமாக ஒருவனிடம்) வாய்ச்சாமர்த்தியமுள்ள ஒருவன் போர்க்காரியத்தின் அந்தரங்கஞ் சொல்லும்படி உம்மை இவ்விடத்தில் தேடிக் கொண்டு நிற்கின்றான் என உங்கள் சேனாதிபதியிடம் கூறுங்கள் (ஒருவன் சேனாதிபதியிடம் ஓடிச்செல்கிறான்.)

**சேனாதிபதி :**
(ஆவலுடன்) அப்படியா? இதோ வருகிறேன். (அவனிடம் செல்ல அங்கு நின்றவன் தன் சாமர்த்தியத்தால் மனம் கவரப் பேசித் தடுத்து நிற்கும் சமயம் வன்னியன் அரசனை எதிர்கொண்டான்)

**வன்னியன் :**
அரசே... (என அவன் ஓடிவர)

**சங்கிலியன் :**
என்மேல் தயைகூர்ந்து, உதவி செய்வதற்கு இப்பொழுதுதான் வந்தாயா? (கட்டி முத்தமிட சதிகார வன்னியன் விடாது இறுகக் கட்டி விழுந்து சங்கிலியைக் கைக்குள் சிறையிட்டான்)

**பரநிருபசிங்கம் :**
சேனாதிபதி உத்தரவின்றி ஒருவரும் ஆயுதம் ஏந்தக்கூடாது. அனைவரும் கலைந்து செல்லுங்கள். (என்றதும் அனைவரும் பிரிந்தோடினர்)

**(இந்நேரம் பறங்கியர் சங்கிலியைச் சிறையிட்டதோடு சேனாதிபதியையும் கொலை செய்தனர்)**

### காட்சி XI

**(சங்கிலியன் நீதாசனம் கண் நிறுத்தப்படுகின்றான்)**

**நீதாசனம் :**
நீர்முடிசூட்டி அரசுசெய்யாமையினாலும் பிதா உயிருடன் இருக்க பிதாவின் சம்மதத்திற்கு விரோதமாய்க் கலகத்தை உண்டாக்கியதாலும் முடிக்குரிய இராசகுமாரனைக் கொலை செய்த பாதகத்தாலும் நீதி தவறி அநேக கொடுமைகளைச் செய்ததாலும் இவனைக் கொலை செய்யும்படி உத்தரவிடுகிறேன்.

**(சங்கிலியன் கொலை செய்யப்படுகிறான்)**

**முற்றும்**

**உசாத்துணை நூல்கள்**
- யாழ்ப்பாண வைபவமாலை ஒரு மீள் வாசிப்பு
- கலாநிதி க. குணராசா

# ச ங் கி லி

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர்
க. கணபதிப்பிள்ளை

பேராதனை, 1964.

## சங்கிலி
## நாடகத்தில் வரும் ஆடவர் அரிவையர்

| | | |
|---|---|---|
| 1. | பரராசசேகரன் | யாழ்ப்பாணத்தரசன், பரராசசேகரன் மகன், |
| 2. | சங்கிலி | யாழ்ப்பாணத்தரசன் |
| 3. | தனிநாயக முதலி | முதன் மந்திரி |
| 4. | அரசகேசரி | அவைக்களத்துப் புலவர் |
| 5. | அப்பா முதலி | மந்திரி, வடிவழகியின் தகப்பன் |
| 6. | முத்துலிங்க முதலி | மந்திரி |
| 7. | அடியார்க்கு நல்லான் | மந்திரி |
| 8. | வீரமாப்பாணன் | சங்கிலியின் நண்பனும், மெய்காப்பாளனும் |
| 9. | இமையாணன் | தளபதி |
| 10. | பரநிருபசிங்கன் | சங்கிலியின் அண்ணன் |
| 11. | கட்டியகாரன் | |
| 12. | பணியாள் | |
| 13. | வாயிற்காவலன் | |
| 14. | வடிவழகி | அப்பாமுதலி மகள், சங்கிலியின் காதலி |
| 15. | செங்கமலம் | வடிவழகியின் தோழி |
| 16. | கனகம் | வடிவழகியின் தாய் |
| 17. | இராசமாதேவி | சங்கிலியின் மனைவி |
| 18. | அங்கயற்கண்ணி | இராசமாதேவியின் தோழி |
| 19. | சண்முகம் | பொதுமக்கள் |
| 20. | கந்தையா | பொதுமக்கள் |
| 21. | உதுமான் இலெப்பே | பொதுமக்கள் |
| 22. | அந்தோனி | பறங்கிய வியாபாரிகள் |
| 23. | ஆந்திரே | பறங்கிய வியாபாரிகள் |
| 24. | பேதுரு | பறங்கிய வியாபாரிகள் |
| 25. | சூசை | பறங்கிய வீரர் |
| 26. | உலோப்பே | பறங்கிய வீரர் |
| 27. | மிக்கேல் | பறங்கிய வீரர் |
| 28. | தொம்பிலிம்பு | பரங்கியர் கோட்டைத் தலைவன் |
| 29. | பிரகன்சா | பறங்யகிர் தளபதி |
| 30. | காக்கை வன்னியன் | ஊர்காவற்றுறைத் தலைவன் |
| 31. | வள்ளுவர் தலைவன் | பறையறைவோன் |

**இடம் :**

**நல்லூர் யாழ்ப்பாணத்து அரசன் அவைக்களம்**

**(அரசு கட்டிலில் யாழ்ப்பாணத்தரசன் பரராசசேகரன் வீற்றிருக்கின்றான். அருகில் சங்கிலி ஓர்இருக்கையில் அமர்ந்திருக்கின்றான். தனிநாயகமுதலி, அரசகேசரி, முத்துலிங்கமுதலி, அப்பாமுதலி, அடியார்க்குநல்லான், இமையாணன், வீரமாப்பாணன் ஆகியோர் அவனைச் சூழ்ந்திருக்கின்றனர்.)**

**சங்கிலி:**

(எழுந்து அரசனை வணங்கிவிட்டுத் தனிநாயகமுதலியை நோக்கி) அமைச்சரவர்களே! என் அண்ணனார் இளவரசர் பண்டாரத்தைக் கொன்றவனைப் பிடித்து விட்டீர்களோ? அப்படு கொலை எவ்வாறு நடந்ததென்று யாமறிய விரிவாய்ச் சொல்லுங்கள்.

**தனிநா மு:**

(எழுந்து நின்று அரசனை நோக்கி) வேந்தரே! ஓம், அவனை எம்முடைய தளபதி இமையாணனார் தம் படைவீரர் சிலரின் உதவியோடு கைப்பற்றிக் கோட்டையில் காவலில் வைத்திருக்கின்றார். யாம் ஆராய்ந்து பார்த்ததில் அவன் எங்கள் பகைவராகிய வன்னியரேவலால் இங்கு வந்து காவலாளருக்குத் தெரியாது அரசமாளிகைப் பூங்காவில் களவாக உட்புகுந்து ஒளித்திருந்தான் எனத் தெரியவந்தது. இளவரசர் மாலைப் பொழுதில் தம்முடைய அரசபணிகளை முடித்துவிட்டுச் சிறிது நேரம் ஒய்வெடுத்துக்கொள்வதற்காக அங்கு உலாவப் போனார். அப்பொழுது அப்படுபாவி, படைக்கலம் இல்லாது தன்னந்தனியே அமைதியாய் உலாவிக்கொண்டு இளம்பிறையின் அழகில் ஈடுபட்டு நின்ற அவர் பின்புறமாக மெல்லச் சென்று தனது உடைக்குள் ஒளித்து வைத்திருந்த கட்டாரியை எடுத்து அவர்முதுகில் ஓங்கிக் குத்தினான். உடனே எங்கள் இளவரசர் அலறிக்கொண்டு மண்ணிற் சாய்ந்தார். அந்த அலறலைக் கேட்ட காவலாளர் அவ்விடத்திற்கு விரைந்தோடினர். அப்பொழுது இளங்கோ வீழ்ந்து கிடப்பதையும் அவர் அருகிலிருந்து ஒருவன் ஓடுவதையும் கண்டனர், உடனே காவற்காரர் “கொலை! கொலை!! இதோ ஓடுகின்றான் பிடியுங்கள்” என்று கூச்சலிட்டனர். அதைக் கேட்டுக் கோட்டை வாயிலில் நின்ற தளபதி இமையாணனார் ‘இங்கிருந்து ஒருவரும் வெளியேறாமற் பாருங்கள்’ என்று படையினருள் ஒரு பகுதியினரை ஏவினர். ஏவிவிட்டு மற்றொரு பகுதியினரைப் பூந்தோட்டம் முழுவதும் சல்லடை போட்டுப் பார்க்கும்படி கட்டளையிட்டனர். அவருட் சிலர் அகழியின் ஒரு பக்கத்தில் ஒருவன் பதுங்கியிருக்கக் கண்டனர். அவன் கையிலும் உடையிலும் இரத்தம் தோய்ந்திருந்தது. உடனே அவனைப் பிடித்துத் தளபதியிடம் கொண்டுபோய் ஒப்படைத்தனர். அவர் உண்மையைக் கூறுமாறு நெருக்கினர். வன்னியரேவலால் அங்கு வந்ததாக அக்கொலையாளி ஒப்புக் கொண்டான். ஆனால் தன் ஊர்பெயரைத் தெரிவிக்க மறுத்து விட்டான். என்றாலும் அவன் ஒட்டிசுட்டான் காட்டிலிருக்கும் கொள்ளைக்கூட்டத்தலைவன் கரடியன்

கந்தன் என்று எம்போர்வீரர்கண்டு பிடித்து விட்டனர்.

**சங்கிலி :**

(சீறி எழுந்து நின்று தன் வாளை உறையினின்றும் சிறிது உருவிய வண்ணம்) சங்கதி அப்படியும் ஆகிவிட்டதோ?

**(அப்பொழுது அரசன் சங்கிலியை இருக்கும்படி கையமர்த்துகின்றான். சங்கிலி பொங்கிய சினத்துடன் பல்லை நெறுமிக்கொண்டு விருப்பின்றித் தன் இருக்கையில் அமருகின்றான்)**

**அரசகேசரி :**

அரசிளங்குமரா, ஆத்திரப்பட வேண்டாம். நன்கு விசாரணை செய்து நீதியெனக் கண்டதையே செய்தல் வேண்டும். கோபத்தினால் ஆத்திரப் பட்டு எதையும் செய்தல் கூடாது. அப்பொழுது குற்றமற்றவர்களும் தண்டனையுறுதல் கூடும். அதனால் பெருந்தீங்கு உண்டாகும்.

"மனுமுறை நெறியின் வழக்கிறந்தவர்தா
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளாகும்மே."

**அரசன்:**

(பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தனிநாயக முதலியை நோக்கி) புலவர்பெருமான் கூறுவது முற்றிலும் உண்மை. இதுவோ படுகொலை. என்றாலும் நீதிமன்றத்தில் தீர விசாரணை செய்த பின்பு தான் ஒருவனைக் குற்றவாளி என்று முடிவாக்க வேண்டும். ஆகையால் இவனை நீதிமன்றத்திற்கு அனுப்பி விசாரணை நடத்தித் தீர்ப்பை எனக்குத் தெரிவியுங்கள். இளவரசரைக் கொன்றது இராசத் துரோகம். என்றாலும் நெறிமுறையிலிருந்து நாம் சற்றேனும் தவறலாகாது. அது நீதி தவறுதலாய் முடியும்.

**சங்கிலி :**

அரசே! இந்த அற்ப பதரைத் தண்டிப் பதோடு மட்டும் நாம் நின்று விடக்கூடாது. இக்கொலைகாரனோ ஏவற்பேய். இவனை ஏவிய வன்னியரையும் நாம் கட்டாயம் தண்டிக்கவேண்டும். (ஒரு பக்கம் திரும்பி வாளை உருவிக் கையில் உயர்த்திப் பிடித்துக் கொண்டு) இவர்களுக்குத் தக்க பாடம் படிப்பிக்காவிட்டால் நான் சங்கிலியல்லன், என் குலதெய்வத்தின் மேல் ஆணை!

**(அப்பொழுது பரநிருபசிங்கன் அவைக்களத்திற்கு வருகின்றான். அவன் தாடி வளர்ந்திருக்கின்றது. எங்கேயோ தொலைப் பயணத்திலிருந்து வந்தவன் போலக் காணப்படுகின்றான். அவனைக் கண்டதும் அரசனைத் தவிர ஏனையோர் எழுந்து நிற்கின்றனர். பரநிருபசிங்கன் ஓர் இருக்கையில் அமருகின்றான். பின் யாவரும் தத்தம் இருக்கைகளில் அமருகின்றனர். சங்கிலி தொடர்ந்து பேசுகிறான்.)**

அண்ணனாரும் கண்டியிலிருந்து சரியான தரு
ணத்தில் வந்துசேர்ந்து விட்டார். அண்ணா!
எமது தமையனார் இளவரசர் நயவஞ்சக ரால் கொலையுண்டார்....

**பரநிருப:**

(இடைமறித்து) தம்பி, அதை நான் வரும் வழியிற் கேள்விப்பட்டேன். இச்செய்தியைக் கேட்டதும் என்மனம் துடிதுடித்தது. அப்பழிகாரனைப் பிடித்துவிட்டீர்களோ? கண்டியரசன்

தேவிக்கு மருந்து செய்வதற்கு எமது தந்தையார்என்னை அங்கு அனுப்பியது தான் வந்த கேடு. நான் அங்கு போனதால் கண்டியரசன் தேவி உயிர் பிழைத்தாள்; இங்கு இல்லாததால் எமது அருமை அண்ணனார்உயிர்இழந்தார். எல்லாம் சரி. மெத்தப்பேசி என்ன? இறப்பும் பிறப்பும் ஊழ் வினைப்பயன். யார்தான் அதனைத்தடுக்கமுடியும்? அப்பழிகாரன் எங்கே?

**தனிநா மு:**

கையும் மெய்யுமாய்ப் பிடித்து விட்டோம்.

**சங்கிலி :**

அண்ணா, உண்மைக் கொலைகாரன் இவனல்லன், வன்னியரே இக் கொலையைச் செய்தவர், அவரைத் தகுந்த முறையிலே தண்டிப்பது எமது கடன். அப்படிச் செய்தாலன்றி எமது நகரத்தின் காவற்தெய்வமும் எமது அண்ணனாரின்ஆவியும்சாந்தமடையா. ஆகையால் வன்னி நாட்டின் மீது படையெடுக்கத் துணிந்து விட்டோம். நல்ல நேரத்தில் நீங்களும் வந்து விட்டீர்கள். அண்ணனார் பண்டாரம் இறந்த படியால் நீங்களே இளவரசர். ஆகையால்நான்செய்யும்இம்முயற்சிக்கு உங்கள் அநுமதியும் ஆசீர்வாதமும் வேண்டும். அவற்றை அடியேனுக்கு ஈந்தருளும் படி வேண்டுகின்றேன். (சங்கிலி குனிந்து பரநிருபசிங்கனை வணங்குகின்றேன்.)

**பரநிருப :**

(சங்கிலி நிற்கும் இடத்திற்குப்போய் அவனைத் தழுவி) தம்பி இப்படி இரு. உனக்கு சில சங்கதிகள் சொல்ல விரும்புகிறேன். ஆறுதலாக இருந்து கேள்.

**சங்கிலி :**

(தனது இருக்கையில் அமர்ந்த வண்ணம்) உங்கள் கட்டளை எதுவுங் கேட்பேன் ஆனால் வன்னியரோடு சமாதானம் மட்டுங் கேட்க ஒருப்படேன். (தன் நெஞ்சிலே தட்டி) என்னுடம்பில் ஒருதுளி இரத்தம் இருக்க மட்டும் வன்னியரை - இந்தப் படுகொலைக் காரரை கொன்றே தீருவேன் இது சத்தியம், சத்தியம்.

**பரநிருப :**

(தன் தாடியை உருவிவிட்டு) தம்பி நான் அதற்குத் தடை சொல்லவில்லை. உனது வஞ்சினப்படியே செய்து கொள். ஆனால் உனக்கும் இந்தச்சபையிலுள்ளோருக்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எமது அண்ணனார் இறந்த செய்தியைக் கண்டியிலிருந்து வரும்வழியிற் கேட்ட நேரந் தொடக்கம் இதைப்பற்றி மிகவும் அலசி ஆலோசித்துள்ளேன்.

**அரசன் :**

(நிமிர்ந்து பரநிருபசிங்கனைப் பார்த்து) எதைப்பற்றி?

**பரநிருப:**

அரசே, என் மனநிலை வரவர மாறிக் கொண்டு வருகின்றது. ஆன்ம ஈடேற்றத்திற்கு வேண்டிய வழியையே என் மனம் நாடுகின்றது. அவ் வழியில் நின்று ஒழுகவே பெரிதும்விரும்புகிறேன். அரசபாரம் அதற்குத் தடையாக இருக்கும். ஆகையால் இந்த இளவரச பாரத்தைத் தம்பி சங்கிலியே ஏற்றுத் தங்களுக்குப்பின் அரசபாரத்தையும் கொண்டு நடத்த வேண்டும் என்பதே என் எண்ணம்.

(அவைக்களத்திலுள்ளோர் யாவரும் வியப்போடு ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர்)

**சங்கிலி :**

(எழுந்து நின்று மிகவும் தாழ்மையாக) அண்ணா! தமையன் இருக்கத் தம்பி அரசாள்வது எப்படி? அண்ணன் அரசைத் தம்பி எடுத்தாளுவது தவறு; அது அரச முறையும் அன்று...

**பரநிருப :**

இளவரசுப் பட்டத்திற்கு நீயே தகுந்தவன். ஆண்டில் யான் உனக்கு மூத்தவன் தான்; என்றாலும் அரசியல் அறிவிலும் ஆற்றலிலும் நீயே மூத்தவனாகி விட்டாய். இதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். ஆகையால் நானே மனம் மகிழ்ந்து தரும் பதவியை ஏற்றுக்கொள். நான் உன் அண்ணன் அல்லவோ? உன் அண்ணனார் சொல்லுக்கு அட்டி சொல்லாதே.

**சங்கிலி :**

(தயக்கத்துடன் கம்மிய குரலில்) அண்ணா.... எ....ன் அண்ணா.... இ.....து எங்......

**அரசகேசரி :**

இளவரசரே, அண்ணன் சொல்லைக் கேட்டு அரசை ஏற்றுக்கொள்வதிலும் குற்றமில்லை. மூத்தோன் இருக்க இளையோன் ஆட்சி புரிதல் பண்டைக் காலத்திலும் நிகழ்ந்தது தானே. வீட்டுமன் தன் அரசியலைத் தம்பியர்க் குக் கொடுக்கவில்லையோ? இராமன் கானகம் செல்லப் பரதன் அயோத்தியை ஆளவில்லையோ?

**அப்பா மு :**

(செருமிக் கொண்டு அரசனை நோக்கிக் கைகளை விரித்து நீட்டிய வண்ணம்) இது எனக்கு ஒன்றுமாகத் தெரியவில்லை.

**அரசன் :**

என் புதல்வரின் கருத்து எதுவோ அதுவே என் கருத்தும்; ஆனால் எனக்கோ வயதாகி விட்டது. அரசபாரத்தைத் தாங்கி நடத்த என்னால் இனிமுடியாது. பரநிருபசிங்கா! உன்னிடமே அதை ஒப்படைத்தல் அரச முறை. இப்பொழுதே ஒப்படைக்கிறேன். ஏற்றுக்கொள்.

**பரநிருப:**

(வணங்கி அரசனை நோக்கி) ஏற்றுக்கொண்டேன். (திரும்பிச் சங்கிலியை நோக்கி) தந்தேன் உனக்கே.... (தன் இரு கைகளையும் உயர்த்தி) யாழ்ப்பாணத்தரசே வாழ்க! சங்கிலி வாழ்க!! (எல்லோரும் எழுந்து நிற்கின்றனர்) சட்ட நாதர் உனக்குத் திருவருள் புரிவாராக. யாழ்ப்பாணத்தரசின் புகழும் வீரமும் குறையாத வகையில் பரிபாலிப்பது உன் கடன்.

**சங்கிலி:**

அண்ணா! இது என்ன, கனவோ நனவோ தெரியவில்லை. இந்தப் பதவியை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. உங்கள் கட்டளையை மறுக்கவும் முடியாது. சரி, அப்படியானால் நன்மையிலும் தீமை யிலும் நீங்களே எனக்கு வழிகாட்டியாய் இருப்பதாக வாக்குறுதி தந்தால் நான் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்வேன்.

**பரநிருப:**

துணைவனுக்குத் துணைவனாகவும் மந்திரிக்கு மந்திரியாகவும் இருந்து எல்லாவற்றையும் நானே நடத்துவேன். நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. தம்பி,

என் சொல்லைத் தட்டாதே. அரசை ஏற்றுக்கொள்.

**அரசன்:**

என் பொறுப்பு நீங்கியது. (அரச கட்டிலிலிருந்து இறங்கி இருவருக்கும் நடுவில் நின்று இடது கையாலே பரநிருபசிங்கனை அணைத்துக்கொண்டு அவனை நோக்கி) அன் அறிவை மெச்சினேன். (வலதுகையைச்சங்கிலியின் தலைமேல் உயர்த்தி) உன் ஆண்மையை வாழ்த்தினேன். யாழ்ப்பாணத்தரசனே வாழ்க! தமிழ்க் குடிகளோங்குக. (அவைக்களத்திலிருந்தோரை நோக்கி) இத்துடன் அரசசபை கலைந்தது.

உறுப்பு 1

களம் 2

**இடம் :**

**நல்லூர், அரசன் அவைக்களம்.**

**(சங்கிலி தனியே கைகட்டிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவண்ணம் அங்கும் இங்கும் உலாவுகின்றான். அவனுடைய நண்பனும் மெய்க்காப்பாளனுமாகிய வீரமாப்பாணன் அவன் அருகே வருகின்றான்.)**

**வீரமா:**

(சற்று நின்று அவனைக் கூர்ந்து பார்த்து விட்டு) அரசே! இவ்வளவு ஆழ்ந்த யோசனைக்குக் காரணம் என்ன?

**சங்கிலி:**

ஒன்....று...ம்..... இல்...லை

**வீரமா:**

என்ன ஒன்றுமில்லை என்கிறீர்கள்? அகத்தில் நிகழ்வதை முகத்திலே காணலாம். உங்கள் மனம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் யோசிப்பதை எனக்குச் சொன்னால் நானும் அதைப்பற்றி ஆலோசித்து உங்கள் கவலையைப்போக்க வழி தேடுவேன்.

**சங்கிலி:**

எனது கவலையை ஒருவரும் தீர்க்கமுடியாது. கனவிலும் எதிர்பாராத சுமை இன்று என் தலைமேல் ஏறியிருக்கிறது. அண்ணனார் பரநிருபசிங்கர் அரசபொறுப்பிலிருந்தும் தப்பிவிட்டார். நான் இந்த அரசபாரத்தை எப்படிக் கொண்டு நடத்துவேன்?

**வீரமா:**

அதற்கு என்ன யோசனை? சிறந்த அறிவாளியான உங்கள் தகப்பனாரும் இருக்கிறார். பரநிருபசிங்கரும் உங்களுக்கு வழிகாட்டியாக இருப்பேன் என வாக்குறுதி தந்திருக்கிறார். அல்லாமலும் அரசனுக்கு வேண்டிய இயல்புகளெல்லாம் உங்களிடத்தே பொருந்தியிருக்கின்றன. ஆகையால் அரச பதவிக்கு நீங்களே தகுந்தவர். இதில் சந்தேகமில்லை. அதைப்பற்றி ஏன் இவ்வளவு யோசனை குடிசனங்களும் உங்களைப் பெரிதும் விரும்புகிறார்கள். ஏனென்றால் யாழ்ப்பாண அரசன்மேல் பிறநாட்டு அரசர்கள் பலர் இப்போது பொறாமை கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் இராச்சியத்தை விழுத்துவதற்குப் பல முயற்சிகள் செய்கிறார்கள். தெற்கே சிங்கள அரசரும் வன்னியரும் எம்மை அடக்கத் தருணம் பார்த்திருக்கிறார்கள். வடக்கே நாயக மன்னர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பறங்கிகளும் யாழ்ப்பாணத்தை மட்டுமல்லாமல் இலங்கை முழுவதையும் கைப் பற்றிக்கொள்ள முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந் நேரத்தில் அறிவும் ஆண்மையும் உடைய அரசனே வேண்டும். ஆகையால் நீங்களே பட்டத்திற்குத் தகுந்தவர்கள்.

**சங்கிலி:**

அதெல்லாம் சரி, நான் அரசனாக வந்தால் குடிசனங்கள் என்ன நினைப்பார்கள்?

**வீரமா:**

நீங்கள் அரசனாகும் செய்தியைக் கேட்டு அவர்கள் அடங்கா மகிழ்ச்சி யடைவார்கள். என்பது நிச்சயம். (புன்னகை புரிந்து கொண்டு குரலை மாற்றி) அரச பொறுப்பைப் பற்றியது போதும். உங்கள் வடிவழகியைப் பின்பு கண்டீர்களோ?

**சங்கிலி:**

இல்லை.... இல்லை.... நான் அவளை ஒரு கிழமையாகக் காணவில்லை.

**வீரமா:**

(தலையை அசைத்து) ஓகோ! அப்படியோ? ஏன் இன்னும் அவளைப்போய்க் காணவில்லை.

**சங்கிலி:**

கணுவேண்டுந்தான். ஆனால் எப்படிக் காணலாம் என்று தெரியவில்லை. இந்த நாட்களில் அவளைக் காவது மிகவும் வில்லங்கமாயிருக்கிறது.

**வீரமா:**

சரிதான். நான் மறந்துவிட்டேன். உங்கள் நிலையும் மாறிவிட்டதல்லவோ? இப்போது நீங்கள் அரசர். முன்போல நினைத்த படி நடக்க முடியாது.

**சங்கிலி:**

சும்மா பகிடிபண்ணுவதை நிறுத்திவிடு. அவளைக் காணுவதற்கு என் மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு வழிதேட மாட்டாயோ?

**வீரமா:**

(தலையைச் சொறிந்துவிட்டுக் கடைக்கண்ணாற் பார்த்துக் கொண்டு) கட்டாயம். எங்கள் அரசர்பெருமானுக்கு இத்தொண்டினைச் செய்யாவிட்டால் நான் இருந்தென்ன? இறந்தென்ன?

உறுப்பு 1

இடம் :

நல்லூர், அரசன் அவைக்களம்

**(அப்பாவமுதலி, தனியாகமுதலி, அரசகேசரி, முத்துலிங்கமுதலி, தளபதி இமையாணன், அடியார்க்கு நல்லான் உட்படப் பிரதிநிதிகள் யாவரும் தங்கள் தங்கள் இருக்கைகளில் இருந்து அரசனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அப்பாமுதலி தலையையும் தாடியையும் தடவிக் கொண்டிருக்கிறான். தனிநாயக முதலி பல ஏட்டுச் சட்டங்களைப் புரட்டிப் பார்க்கிறான். ஆலவட்டம் தாங்கிகயவணணம் இரு சேவகர் வருகின்றனர். அவர்களுக்குப் பின்னால் கட்டியக் கோலைத் தாங்கிக்கொண்டு கட்டியகாரன் வருகின்றான். அவனுக்குப்பின் வீரமாப்பாணன் வருகின்றான்)**

கட்டிய:

(தனது கட்டியக் கோலை உயர்த்தி) இராசாதி இராசன் இராசமார்த்தாண்டன் இராசகம்பீரகன் சங்கிலி மகாராசா சபைக்கு வருகின்றார். எச்சரிக்கை! பராக்கு!

**(உடனே அவைக்களத்தில் இருந்த யாவரும் எழுந்து அசையாது நிற்கின்றனர். சங்கிலி அரசு கட்டிலில் ஏறுகின்றான். யாவரும் தங்கள் தங்கள் இருக்கையில் அமருகின்றனர். அதன்பின் வீரமாப்பாணன். உட்புகுந்து தனது இருக்கையில் அமருகின்றான். அப்பாமுதலி வீரமாப்பாணனைக் குறிப்பாக உற்று நோக்குகின்றான். கட்டியகாரன் முதலியோர் வெளியேறுகின்றனர்)**

சங்கிலி:

(தனியாகமுதலியாரைப் பார்த்து) அமைச்சரவர்களே! இன்று நாம் விசாரிக்கவேண்டிய அலுவல்கள் என்ன? அவற்றைத் தெரிவிப்பீர்களாக.

தனிநா மு:

(எழுந்து நின்று) அரசே! இன்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டியவை பின்வருமாறு: (ஏட்டுச் சட்டத்தை எடுத்துப் படிக்கின்றான்) முதலாவதாக வடமராட்சிக் கலகம். இரண்டாவதாக மறவன்புலவில் நடந்த கொள்ளை. மூன்றாவதாக வன்னியர் புரியும் சூழ்ச்சி.

சங்கிலி:

என்ன, மறவன்புலவிற் கொள்ளையோ? எமது நாட்டிலும் கொள்ளை என்ற பெயரைக் கேட்கலாமோ? அப்படிக் கொள்ளையடித்தோர் யார்? விளங்கக் கூறுங்கள்.

தனிநா மு:

அரசே! இராமநாதபுரத்திலிருந்து மறவர் பலர் தங்கள் பேரனார் காலத்தில் மறவன் புலவிலே வந்து குடியேறினர். இது தங்களுக்குத் தெரியும். இதுவரையும் அவர் அடங்கி ஒடுங்கி நடந்து வந்தனர். ஆனால் இப்பொழுது யாழ்ப்பாண அரசுக்கு நாலா பக்கத்திலும் பகை இருப்பதால் இதுவே தகுந்த தருணம் என எண்ணி மறவருக்குரிய சுயபுத்தியைக் காட்டத் தொடங்கி விட்டனர். இந்த மறவருக்குப் பொழுதுபோக்கு களவு; விளையாட்டும் களவு; வாழ்க்கைத் தொழிலும் களவு; எப்போது பார்த்தாலும் மறவன் புலவுப் பக்கத்தில் களவும் கொள்ளையும் கொலையுந்தான். (இருக்கிறான்)

அடிநல் :

அரசே! இவர்களை அடக்காவிட்டால் நாட்டிலே கொள்ளையும் களவும் குறையமாட்டா.

**சங்கிலி :**

(தளபதி இமையாணனைப் பார்த்து) தளபதி இமையாணனாரே, இதைச் சிறிது கவனியுங்கள்.

**இமையா :**

(எழுந்து நின்று) ஓம் அரசே, கொள்ளைக்கூட்டத்தாரைப் பிடிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து விபரங்களையெல்லாம் நாளைக்கு உங்களுக்குத் தெரிவிப்பேன்.

நாளை இரவே மறவன் புலவிற்குப் படை வீரர் சிலரை அனுப்பலாம்.

**சங்கிலி :**

(தனிநாயக முதலியைப் பார்த்து) சரி, இனி வடமராட்சிக் கலகத்தைப்பற்றி என்ன?

**தனிநா மு :**

(எழுந்து நின்று) கோப்பாய்த் தலைமைக்காரனும் அவன் ஆட்களும் வடமராட்சிக் கோயிற் திருவிழா ஒன்றுக்குச் சவாரி வண்டியில் போனார்கள். புறாப்பொறுக்கி ஆலின் கீழ் மாடுகளை அவிழ்த்து ஆறக்கட்டியிருக்கும் போது அங்கே நின்ற அவ்வூர்ச் சிறுவன் ஒருவன் மாட்டின் குஞ்சமொன்றை அவிழ்த்துக் கொண்டோடினான். அதைக் கண்ட கோப்பாய்த் தலைமைக்காரன் ‘பிடியடா அவனை, மாட்டின் குஞ்சத்தை அவிழ்த்துக் கொண்டோடுகிறான்” என்று கூச்சலிட்டான். அவனுடைய ஆட்கள் சிறுவனைப் பிடித்துக் குஞ்சத்தைப் பறித்து அவனைக் குட்டிக் கலைத்தனர். சிறுவன் உடுப்பிட்டித் தலைமைக்காரனின் மருமகன். இச் செய்தியைக் கேள்விப்பட்ட உடுப்பிட்டித் தலைமைக்காரனும் அவன் கையாட்களும் விரைந்து போய்க் கோப்பாய்த் தலைமைக்காரனுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் அடித்துக் கலகம் உண்டாக்கினர். அது மட்டுமல்லாமல், கோப்பாய்த் தலைமைக்காரனைச் செருப்பைக் கழற்றும்படி சொல்லி “செருப்பைக் கையிலே தூக்கிக்கொண்டு நடவடா” என்று கட்டளையிட்டனர். கோப்பாய்த் தலைமைக்காரனும் அவன் ஆட்களும் உடுப்பிட்டியாருக்குப் பயந்து கோயிலுக்குப் போகாது திரும்பிக் கோப்பாய்க்குப் போய்விட்டார்கள். இவர்கள் அடிபிடி நாடகத்திற்கு இதுவே முதல் அங்கம். அதன்பின் உடுப்பிட்டித் தலைமைக்காரன் தன்னுடைய பரிவாரங்களுடன் கள்ளியங்காட்டிற்கு “அந்தியேட்டி வீடு” ஒன்றுக்குப் போகும் போது தண்ணீர் விடாய்த்ததினால் எல்லோரும் இருபாலையில் இறங்கி ஒரு பனங்கூடலுக்குப் போய்க் கள்ளுக்குடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்கே வந்ததை அறிந்த கோப்பாய்த் தலைமைக்காரன் தனது கையாட்களுடன் சென்று பெருங்கலகம் உண்டாக்கினான். அப்பொழுது நடந்த சண்டையில் உடுப்பிட்டித் தலைமைக்காரன் கோப்பாய்த் தலைமைக்காரனுடைய முன்வாய்ப் பல்லிரண்டை அடித்து உடைத்து விட்டான். இது இரண்டாம் அங்கம். இந்த நாடகம் தொடர்ந்து நடைபெறும் என அறியக்கிடக்கிறது. இது நடவா வண்ணம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (இருக்கின்றான்)

**அப்பா மு :**

கோப்பாயான் கள்ளன். அவனை வென்ற கள்ளன் வடமராட்சியான்.

**அடி. நல் :**

முறைக்கு முறை வடமராட்சிப் பகுதியில் இப்படித்தான் நடக்கிறது. அங்கிருப்பவர்கள் முட்டாள்கள். மேலும் மேலும் இப்படி

நடவாமல் இவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும்.

**இமையா :**

கலகம் செய்த இரண்டு தலைமைக் காரரையும் இங்கு வரும்படி கட்டளையிட்டு விசாரணை செய்ய வேண்டும்.

**சங்கிலி :**

அவ்விடங்களுக்கு விரைவில் நானே போக எண்ணியிருக்கிறேன். அப் பொழுது எல்லாவற்றையும் நேரிலே பார்த்துக் கொள்ளுவேன்.

**தனிநா மு :**

(எழுந்து நின்று) அடுத்தபடியாக நாம் எடுத்துக் கொள்வது :- கொட்டியாரத்து வன்னியன், மட்டக்களப்பு வன்னியன், பழுகாமத்து வன்னியன் ஆகிய மூவரோடுங் கூடி முள்ளியவளை வன்னியன் கரைச்சிப் பகுதியிற் புகுந்து கலகம் விளைவித்து அங்குள்ள மாடுகளைப் பிடித்து மட்டக்களப்பு கரவாகு வயலுக்கு உழவு வேலைக்குச் சாய்த்துக் கொண்டு போகின்றானாம். அன்றியும் அவ்வன்னியர் யாவரும் ஒன்று சேர்ந்து முடிக்குரிய யானைகள் பலவற்றைப் பிடித்தப் பறங்கியருக்கு விற்றுவிட்டாராம்.

**சங்கிலி :**

அதற்கு மருந்து என்கையில் இருக்கின்றது. வன்னியருக்குத் தகுந்த தண்டனையளித்தல் வேண்டும்.

**அப்பா. மு:**

அதுதான் சரி. வன்னியர்மேற் படையெடுக்கும் நாள் எந்நாளோ என்று நாங்களெல்லோரும் காத்திருக்கிறோம்.

**சங்கிலி :**

இந்த வன்னிச் சுண்டெலிகளை அடித்துத் துரத்த வேண்டும்.

**தனிநா. மு :**

அரசே! அவர்களை அப்படி வலிமை குறைந்தவர்களென்று எண்ண வேண்டாம். மீனுக்கு வாலைக்காட்டிப் பாம்புக்குத் தலையைக் காட்டுவது வன்னியர் பிறவிக்குணம். எந்தப்பக்கம் வலிமை இருக்கிறதோ அந்தப் பக்கம் திரும்புவார். கண்டி இராச்சியம் வலுவடைந்திருந்தால். கண்டி அரசனுக்குத் தாளம் போடுவார். யாழ்ப்பாணத்து அரசு வலுவடைந்தால் கண்டி அரசனைக் கைவிட்டு யாழ்ப்பாணத்தரசனை அண்டுவார். பொல்லாத வஞ்சகர்கள்.

**அப்பா. மு :**

(கைவிரலைச் சுண்டிவிட்டு) அவர்கள் படுபேயர்கள். இம்மென்னும் பொழுதில் அவர்களை மடக்கி விடலாம்.

**(அப்பொழுது வீரமாப்பாணன் அப்பாமுதலியை நிமிர்ந்து பார்க்கின்றான். பின்னர் அரசனைப் பார்த்து விட்டு நாடிக்குக் கையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான்.)**

**அரசகேசரி :**

அரசே! எதையும் தீர ஆலோசித்துச் செய்தல் வேண்டும்.

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு”

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறாரல்லவோ?

**சங்கிலி :**

புலவரே! தாங்கள் சொல்லுவதும் சரிதான். எந்தக் காரியத்தையும் நன்கு ஆராய்ந்து செய்தல்

நன்று. (தனிநாயக முதலியைநோக்கி) வேறும் ஏதாவது உண்டோ?

**தனிநா. மு :**

வேறொன்றுமில்லை.

**சங்கிலி :**

சரி, இத்துடன் மந்திராலோசனை முடிவடைந்தது.

**(சங்கிலி அரசுகட்டிலிருந்து இறங்கி வருகின்றான். யாவரும் பணிவுடன் எழுந்து நிற்கின்றனர். அப்பா முதலி உரத்த குரலில் "கட்டியகாரா!" "கட்டியகாரா!!" எனக் கூப்பிடுகின்றான். கட்டியகாரனும் ஏனையோரும் வருகின்றனர். ஆலவட்டம் முதலியவை முன்செல்ல அரசன் போகின்றான். அதன்பின் மற்றெல்லோரும் போகின்றனர்.)**

**உறுப்பு** **களம் – 4**

**இடம் :**

**நல்லூர் அரசன் அவைக்களத்து வாசற்புறம்.**

**(அப்பாமுதலி அங்கும் இங்கும் உலாவிக்கொண்டு நிற்கின்றான். முத்துலிங்க முதலியும் அவனுக்கு அருகில் நிற்கின்றான்.)**

**முத்து. மு :**

என்ன, தங்களுடைய பல்லக்கு வரப் பிந்திவிட்டதோ? என்னுடைய பல்லக்கு வந்து விட்டது. அதில் தங்களையும் ஏற்றிக்கொண்டு தங்கள் வீட்டிலே விட்டுச் செல்கிறேன்.

**அப்பா மு :**

வேண்டாம், வேண்டாம், முதலியாரே. விரைவில் எனது பல்லக்கும் வந்துவிடும். தங்கள்
பல்லக்கில் நான் வந்தால் தங்களுக்கும் தொல்லை: என் பல்லக்குக்காரரும் வந்து ஏமாந்து
திரும்பிப் போக நேரிடும்.

**முத்து மு :**

தாங்கள் சொல்வது சரிதான். நான் போய் வருகிறேன். வணக்கம்.

(போகப் புறப்படுகின்றான்.)

**அப்பா மு :**

என்ன அவசரம் முதலியார். சிறிது நில்லுங்கள். எனது பல்லக்கு வந்ததும் போகலாம்.

**முத்து. மு :**

நான் போக வேண்டும். சரி, தங்களுக்காகச் சிறிது நேரம் நிற்கிறேன்.

**அப்பா மு :**

(சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்து விட்டுத் தாழ்ந்த குரலில்) அதெல்லாம் சரி, முதலியாரே, ஆ.....னா......ல் இங்கே நடப்பதொன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. எல்லாம் தலை கீழாக நடக்கிறது.

**முத்து. மு :**

வன்னியருடைய கலகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்களோ? வன்னியன் அந்த நாள்தொடக்கம் யாழ்ப்பாணத்தானுக்கு முட்டுக்கட்டை தானே?

**அப்பா மு :**

தாங்கள் சொல்வதும் சரிதான். நான் கருதுவது அதுவல்ல. ஆருக்கோ போக

வேண்டிய அரச பதவி வேறாருக்கோ போய் விட்டது. இதெல்லாம் முறையல்ல.

**முத்து மு :**

ஓகோ! அதையோ குறிக்கிறீர்கள். நெய்க் குடம் உடைந்தது நாய்க்கு வேட்டை. அது போல பரநிருபசிங்கன் பட்டத்தை வேண்டாம் என்றது.......

**அப்பா மு :**

சங்கிலிக்கு வாய்த்தது. (முத்துலிங்க முதலி அருகில் நெருங்கி) முதலியாரே, இந்த அலுவலில் நீங்களும் நானும் ஒன்றுதான்.)

**முத்து. மு :**

இதோ பெரிய இடத்து அலுவல். இதைப்பற்றிப் பேசிப் பயன் என்ன என்று நினைத்துச் சும்மா விருந்தேன். தனக்கறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம். ஏதோ நாமுண்டு நாம்முடைய பாடுண்டு. (கையை விரிக்கின்றான்.)

**அப்பா மு :**

முதலியார், நீங்கள் சொல்வதும் சரிதான். என்றாலும் குடிகளுக்காகவே செங்கோல், செங்கோலுக்கல்ல குடிகள். செங்கோல் கோடினால் அதைத் திருத்தி வைப்பது குடிகள் கடமை. பரநிருபசிங்கன் அரசனாகாததால் அரச வழிமுறை பிழைத்துவிட்டது. இது முறையல்ல. அவன் மறுத்த பொழுது அவன் மகன் பரராசசிங்க முதலிக்கு அப்பதவியைக் கொடாதது பெருந்தவறு. அரச முறைப்படி முடியைப் பெறவேண்டியவன் அவனே.

**முத்து. து :**

அதிலே அவ்வளவு குற்றமில்லை. சங்கிலியனும் ஒரு வகையில் பட்டத்திற்கு உரிமையுடையவன் தானே. அத்தோடு அரசனாக வருவதற்கு முன்னரே நாட்டுக்காக நல்லாய் உழைத்து இருக்கிறான். இனியும் உழைக்கக் கூடிய ஆற்றல் உடையவன். என்றாலும் எனக்கு அவனிலே அவ்வளவு பிடிப்பு இல்லை.

**அப்பா மு :**

எப்படிப் பிடிப்பு வரும்.? நேற்று முளைத்த பயல் தானே. நாங்கள் சொன்னபடி அங்கும் இங்கும் போய்க் கலகங்களை அடக்கிக் கொண்டு திரிந்தவன். இப்பொழுது எங்களுக்குக் கட்டளையிடும் நிலைக்கு வந்து விட்டான். காலம் அப்படியாய் விட்டது.

**முத்து. மு:**

இவைகளையெல்லாம் பேசி வரும் பயன் என்ன? நாங்கள் அவன் காலாலிட்டதைத் தலையால் செய்து முடிக்கவேண்டியவர்கள் தானே?

**அப்பா மு :**

உங்கள் பேச்சு எனக்கு அதிசயமாக இருக்கிறது. உலகத்தில் செய்து முடிக்க முடியாதது ஏதுமிருக்கிறதோ? மனம் வைத்தால் மலையையும் பிளந்தெறியலாம். அரசன் என்றால் அரும்பெருங் கடவுளோ? அரசன் என்னும் தேர், அமைச்சன் என்னும் அச்சிலே தான் ஓடுகின்றது. அமைச்சன் நினைத்தால் எதையும் செய்யலாம். ஆக்கினும் ஆக்கலாம், அழிக்கினும் அழிக்கலாம். நாட்டைச் சுமந்து நிற்பவன் சங்கிலியல்ல. நாமிருவருமே. அரசன் தகுதியில்லாதவனானால் அவனை அழிப்பது எமது கடன். நாடும் அதனையே விரும்பும்.சங்கிலியைத் தொலைத்தாலன்றி என் மனம் சாந்தி அடையாது.

**முத்து. மு :**

அதைச் செய்து முடிப்பது எப்படி.?

**அப்பா மு :**

அண்டிக் கொடுக்கும் விஞ்ஞானக் கலையில் நான் கைதேர்ந்தவன். என்னுடன் நீயும் ஒத்துழைத்தால் சங்கிலியை இருந்த இடமும் தெரியாது தொலைத்து விடலாம். நான் இப்பொழுது செய்து வரும் வேலை எல்லாம் இதற்காகவே. ("தடார்" என ஒரு ஒலி கேட்கின்றது. இருவரும் பேசுவதை விடுத்துத் திடுக்கிட்டு ஒலி வந்த திசை நோக்கித் திரும்பிப் பார்க்கின்றனர். முத்துலிங்க முதலி அஞ்சி நடுங்குகின்றான், அப்பா முதலி குரலை மாற்றி) ஒன்றுமில்லை. பயப்படாதே பட்டுக் குடைதான் விழுந்தது. இன்று சங்கிலியை வன்னியருக்கு எதிராகத் தூ ண்டி விட்டிருக்கின்றேன். உடுப்பிட்டித் தலைமைக்காரனுக்கும், கோப்பாய்த் தலைமைக்காரனுக்கும் சங்கிலியின் மீது வெறுப்புண்டாகும்படி தூபம் போட்டு இன்னும் பகையை மூட்டு வேன். மறவன்பலவுக் கொள்ளைக் கூட்டத்தாரை அவனுக்கு மாறாக ஏவி, அடுத்துக் கெடுக்கும் ஐந்தாம் படையினராகப் பயன்படுத்துவேன். இதுவும் போதா விட்டால் என் கையில் வேறு பாணங்களும் இருக்கின்றன. வேண்டிய வேண்டிய நேரத்தில் அவை வெளிக்கிளம்பும்.

**முத்து மு :**

(தலையை அசைத்து) அருமை! அருமை!! ஆனால் இன்னுமொன்று. எமது முயற்சிக்குத் துணையாக நாம் வேறும் நம்பிக்கையான ஆட்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாதோ? முக்கியமான சிலரையாவது. நமக்கு உதவியாகச் சேர்த்துக் கொண்டால் நல்லது. புலவர் அரசகேசரியைப் பற்றி என்ன நினைக்கிறாய்? அவர் பரநிருபசிங்கரின் தாய்மாமனல்லவோ? ஆகையால் தம் இனத்தவரான பரநிருபசிங்கரிலும் அவர் மகன் பரராசசிங்க முதலியிலும் புலவருக்கு இயற்கையாகவே கரிசனை இருக்குமே.

**அப்பா மு :**

அவரோ? அவர் புத்தகப் பூச்சி. இப்படியான அலுவல்களில் தலையிடமாட்டார். அரசநீதி, அறநெறி என்றெல்லாம் பிதற்றுவார்.

**முத்து மு :**

மந்திரி அடியார்க்கு நல்லானைப்பற்றி என்ன எண்ணுகிறாய்? ஏதோ தான் சிலப்பதிகார உரையாசிரியர் பரம்பரையைச் சேர்ந்தவனென்று தன்னைப் பற்றிப் புழுகிக்கொண்டு திரிகிறான். கொஞ்சம் புத்திசாலி போலவும் தோற்றுகிறான்.

**அப்பா மு :**

அவனோ? அவன் தன்னைப் பற்றி அதிகமாகத் தம்பட்டமடிக்கிறவன். சில காரியங்களில் நல்ல ஆலோசனை சொல்லக்கூடியவன் தான். ஆனால் தான் படித்தபடி நடக்க வேண்டும் என்ற பேய்த்தனமான கொள்கையுள்ளவன். உலகத்திற் பிழைக்கும் வழி தெரியாத மூடன். அவனாலும் பிரயோசனமில்லை என்றாலும் என்ன, எமக்கு இவர்களிலும் பார்க்க அதிகமாக உதவக்கூடிய வெறு பல நண்பர்கள் இருக்கிறார்கள்.......

**(அப்பொழுது காவலாளன் உள்ளே வருகிறான். விறுக்கென இருவரும் திரும்புகின்றனர்.)**

**முத்து மு :**

என்ன சங்கதி?

**அப்பா மு :**

என்ன வேண்டும்?

காவலாளன் :

(அப்பா முதலியைப் பார்த்து) ஐயா அவர்களின் பல்லக்கு வந்திருக்கின்றது.

அப்பா மு :

ஓ! அதுவோ?

(அப்பாமுதலியும் முத்துலிங்கமுதலியும் ஐயத்தோடு காவலாளனை நோக்குகின்றனர்.)

முதலாம் உறுப்பு முற்றிற்று........

**வரலாறு**

வரலாறு என்றால் என்ன? அது மனிதர்களுடைய கதை, ஆனால், மனிதர்களைச் சடப்பொருளாகக் கருதமுடியுமே; அப்படிச் சடப்பொருளாக அவர்கள் சில அசைவுகளைச் செய்கின்றார்களே. இது வரலாற்றில் இடம்பெறவேண்டிய விஷயம் அல்ல, பௌதிகத்தில் இடம்பெற வேண்டிய விஷயம். உயிரற்ற சடப்பொருள், மிருகங்கள் ஆகியவற்றைக் கொண்ட 'இயற்கை' யிலிருந்து மனிதகுலத்தை வேறுபடுத்தும் குணங்களின் விளைவாக ஏற்படும் சம்பவங்களே வரலாற்றில் அடங்குபவை. வரலாறு என்பதும் மனிதர்களுடைய இயக்கத்தைப் பற்றிய விதி; சடப்பொருள்களாகவோ, சுவாசிக்கும் பிராணிகளாகவோ மிருகங்களாகவோ மனிதர்கள் இயங்குவத்தைப் பற்றியது அல்ல, ஆனால் இவற்றில் இருந்து திட்டவட்டமாக வேறுபடும் முறையிலே, அவர்கள் சமூக அமைப்புடைய பிராணிகளாக நடந்து கொள்வது பற்றியது.

- C . கோட்வெல் (1949),
Further Studies In a Dying Culture,
London.

இடம் :

அப்பாமுதலி வீட்டுப் பூங்கா

**(வடிவழகிதனியாகப்பூப்பறித்துக்கொண்டு நின்று பின்வரும் பாட்டைப் பாடுகிறாள்.)**

**தரவு கொச்சகக் கலிப்பா**

மல்லிகைநற் சம்பங்கி மணங்கொழிக்கு
மிருவாட்சி அல்லிகொட்டி தாமரைமே
லடர்ந்து லவும் வண்டினங்காள்
மல்லலூறு தார்வேந்தன் மாண்புசெறி
திண்புயத்தைப் புல்லிநிற்க விழைக்
கின்றேன் போந்தவற்குக் கூறீரோ?

வளமிகுந்த யாழ்ப்பாண மன்னுதமிழ் நாடதிலே
தளர்தலிலாத் தனிச்செங்கோல் தகைமையுடன் றானோச்சும்
தளவுநிறை யமுனாரி தண்மருத்து மலைக்கிறைவன்
அளகைநிகர் நல்லூரான் அருகில்வரக் கூறீரோ?

தகைமைபெறு தமிழ்ச்சங்கம் தனை நிறுவிச் சகமதனில்
வகைமையுறத் தமிழ்வளர்க்கும் வாகைசெறி வலிமிகுத்தோன்
பகடுபொலி சிங்கைநகர் பகர்கீரி மலைக்கரையன்
பகைமையிலாத் தமிழ்வேந்தன் பாங்கில்வரக் கூறீரோ?

**எண்சீர் விருத்தம்**

மண்டுபுகழ் நானில வளங்களூ மிகுந்தே
மருவரிய வழகோடு மல்கித் துலங்கும்
மிண்டரிய யாழ்ப்பாண மேன்மையுறு நாடாம்
மிறலுடைத் தமிழர்நற் றேசம் புரந்து
தொண்டுபுரி சிங்கைநக ராரியரின் தோன்றல்

துடிமறவர் சூழுபடை நாயக்கர் சிங்களர்
சண்டைபுரி வன்னியர்க ளாகியோர் காலன்
சால்புமிகு வேந்தனும் வருமோ விரைந்தே.

1. **<u>மருத்துமலை - மருத்துமாமலை; கள்ளியங்காட்டில் செகராச சேகரனால் மருந்து மூ</u>லிகைகளை வளர்த்தறகென அமைக்கப்பட்ட செய்குன்று.**

(செங்கமலம் வருகின்றாள்)

**செங்கமலம் :**

அழகு, என்ன அரசர் உன்னிடம் முன்போல அடிக்கடி வருவதில்லையோ? அவரை இந்தப் பக்கம் கண்டு நெடுநாளாகி விட்டது.

**வடிவழகி :**

அலுவல் மிகுதியாய் இருப்பதினாற்போலும் இந்நாட்களில் அவர் இங்கு வருவது குறைவு. வராத காலங்களில் தம் நண்பர் வீரமாப்பாணர் மூலம் ஓலை அனுப்புவார். நேற்றும் வீரமாப்பாணர் ஓலையொன்று கொண்டு வந்து தந்தார். அத்துடன் அரசர் முன்போல அடிக்கடி இங்கு வருவதற்கும் சில வசதிக் குறைவுகள் ஏற்பட்டுள்ளன. கட்டுக்காவலும் கண்காணிப்பும் முன்னரிலும் பார்க்கக் கூடிக்கொண்டன.

**செங்கமலம் :**
அப்படியோ சங்கதி? உதைப்பற்றி நானும் சிறிது கேள்விப்பட்டேன். உன்தந்தையார் உன்னைப் பரநிருபசிங்க முதலியின் மகன் பரராசசிங்கமுதலிக்கு மணஞ் செய்து கொடுக்க எண்ணியுள்ளாராம். அவனும் உன்னை மணமுடிக்க ஆசைகொண்டு திரிகின்றானாம்.

**வடிவழகி :**
செங்கமலம், நீசொல்வது எனக்குப்பெரும் வியப்பாகவிருக்கின்றது.

**செங்கமலம் :**
என்ன ஒரு வகையாய் ஒன்றும் தெரியாதவள் போலப் பேசுகிறாய்? உண்மையை ஒளிக்காமற் சொல்லு. இதைப்பற்றி ஊரெல்லாம் கதை பரவிவிட்டது.

**வடிவழகி :**
உன்மேல் ஆணை. (செங்கமலத்தின் தலைமீது அடித்து) செங்கமலம், இதெல்லாம் வீண் கட்டுக்கதை.

**செங்கமலம் :**
அப்படி உன் தந்தையார் பரராசசிங்க முதலிக்கு உன்னை மணம் முடித்துக் கொடுக்க எண்ணினால் சங்கிலியை மறந்து விடுவது தானே?

**வடிவழகி :**
(கோபத்துடன்) அதெல்லாம் ஒருபோதும் நடவாது.

**செங்கமலம் :**
கோபிக்காதே, இராசாத்தி! சும்மா சொன்னேன். நேற்று ஓலை வந்ததென்றாய். என்னவாம்?

**வடிவழகி :**
ஒன்றுமில்லை. இன்றைக்கோ நாளைக்கோ என்னை வந்து காண்பதாக அதில் எழுதியிருந்தது.

**செங்கமலம் :**
உதெல்லாம் பழைய செய்தி. இன்று காலை எங்கோ வெளியூருக்குப் புறப்பட்டுப்போய் விட்டாராம். திரும்பி வர மூன்று கிழமை ஆகுமாம்.

**வடிவழகி :**
பொய்! உனக்கெப்படித் தெரியும்?

**செங்கமலம் :**
என்ன பொய் என்கிறாய்? முத்துலிங்கம் முதலியோடு உன் தகப்பனார் பேசிக்கொண்டிருக்கும் போது நான் ஒட்டி நின்று கேட்டேன்.

**வடிவழகி :**
உண்மைதானோ? (செங்கமலம் உண்மையெனத் தலை அசைக்கிறாள். வடிவழகி வாட்டமடைகின்றாள்.)

**செங்கமலம் :**
(அதைக் கண்டதும் புன்னகை புரிந்து) நான் சும்மா சொன்னேன். கவலைப் படாதே. அவர் அரண்மனையிலே தான் இருக்கிறார்.

**வடிவழகி :**
என்னைத் திகிலடையப் பண்ணி விட்டாய். எங்கேயடி இந்தப் பொய்யெல்லாம் பேசப் பழகினாய்?

**செங்கமலம் :**
சரி, சரி, உனக்கு எப்போது பார்த்தாலும் அவர் எண்ணந்தான். எனக்கு வேலை இருக்கிறது. போகிறேன். (செங்கமலம் போகின்றாள்.)

**இடம் :**

**அப்பாமுதலி வீடு**

**(வெளியே போயிருந்த அப்பாமுதலி வீட்டினுள் வருகின்றான். தான் அணிந் திருந்த மேலாடை தலைப்பாகை முதலிய வற்றைக் கழற்றிக் கொண்டு தன்மனைவி கனகாம்பியைக் கூப்பிடுகின்றான்.)**

**அப்பா. மு :**

இங்கே கேட்டதோ?

**கனகம் :**

என்ன அது?

**அப்பா. மு :**

ஒருக்கால் இங்கே வந்து விட்டுப் போ.

**கனகம் :**

சற்றுப்பொறுங்கள். இதோ வருகின்றேன். (சிறிது நேரத்தில் கனகாம்பிகை ஒரு கிண்ணம் பாலோடு வருகின்றாள். வந்து அப்பாமுதலியிடம் அதை நீட்டி) காலையில் உணவு அருந்தியதும் பாலைக் குடிக்க மறந்து விரைவாய் எங்கோ போய்விட்டீர்கள். என்ன அவ்வளவு அவசரமான வேலை? என்ன வேலை இருந்தபோதும் உடம்பைக் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். சுவர் இருந்தாலன்றோ சித்திரம் எழுதலாம்.

**அப்பா . மு :**

என் நண்பன் முத்துலிங்கமுதலியைக் காண்பதற்குப் போகவேண்டியிருந்தது. அவசரத்தில் பாலைக் குடிக்க மறந்துவிட்டேன். அதனால் என்ன? அது நிற்க உன்னோடு ஒரு இரகசியம் பேச இருக்கின்றது. (அங்கும் இங்கும் பார்க்கின்றார்.)

**கனகம் :**

(சுற்று முற்றும் நோக்கிவிட்டு) இல்லை. இல்லை. இங்கு யாரும் இல்லை. பிள்ளை வடிவழகியும் செங்கமலமும் பூங்காவினுள் நிற்கின்றனர். ஏவலாளர் மடைப்பள்ளியில் சமைக்கின்றனர்.

**அப்பா மு :**

அப்படியோ? நல்லது. இங்கு என் அருகே வா. உன் மகள் வடிவழகியைப் பற்றித் தான் பேசப்போகிறேன்.

**கனகம் :**

என்ன அவளைப்பற்றி? உங்கள் கட்டளைப்படி முன்னைய சிறுபிள்ளை விளையாட்டுகளை யெல்லாம் விட்டு அடுக்களை வேலைகளைப் பழகி வருகின்றாள். அத்துடன் படிப்பையும் கவனிக்கின்றாள்.

**அப்பா மு :**

அடி மூடமே! அவைகளையல்ல நான் குறிப்பது.

**கனகம் :**

பின் வேறு என்ன?

**அப்பா மு :**

உன் மகளுக்கும் வேறு யாருக்குமிடையே ஏதும் ஓலைப் போக்குவரத்து உண்டோ? ஒளிக்காமற் சொல்லு. உனக்குத் தெரியாமல் இந்த வீட்டில் என்னவும் நடக்குமோ? பிள்ளைகளைச் சரியான முறையில் வளர்த்தால் இந்த மானக்கேடெல்லாம் வருமோ?

**கனகம் :**

இதென்ன கதை? ஓலையாம்; போக்கு வரத்தாம். ஏன் ஒளித்து மறைத்துப் பேசுகிறீர்கள்? மனதிலே உள்ளதை வெளியாகச் சொல்லுங்கள்.

**அப்பா மு :**

இன்றைக்கு என் நண்பன் முத்துலிங்க முதலியிடம் ஒரு காரியமாகப் போயிருந்தேன். பலவற்றையும் பேசிய பின்னர், கடைசியில் உன்மகள் வடிவழகியைப்பற்றியும் கதை எழுந்தது. சங்கிலிக்கும் அவளுக்கும் ஏதோ கொண்டாட்டமாம். இருவரும் ஒருவர்மேல் ஒருவர் காதல் கொண்டிருக்கின்றனராம். இதைக் கேட்டது எனக்கு நாடி விழுந்துவிட்டது. நான் கட்டிய மனக்கோட்டை முழுவதும் இவளால் இடிந்து விழப்போகிறதே! உனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாதோ?

**கனகம் :**

சீச்சீ, காரியம் அப்படி இருந்தால் உங்களுக்குச் சொல்லாமல் விட்டிருப்பேனோ? எனக்கு ஒன்றுமே தெரியாது. (சிறிது தனக்குள் ஆலோசித்துவிட்டு) ஓகோ! ஒரு வேளை இருந்தாலும் இருக்கும். சங்கிலி எங்கள் பூந்தோட்டத்துக்குப் பக்கத்திலேயுள்ள இராசமாளிகைப் பூந்தோட்டத்துக்கு இந்த நாட்களில் அடிக்கடி வந்து சுற்றித் திரிகின்றான். இவளும் அந்தப்பக்கம் போய் வட்டமிட்டுத் திரிகின்றாள். இன்னமும் என்னென்னவோ? ஆருக்குத் தெரியும்?

**அப்பா மு :**

சரி, சரி, அப்படியோ சங்கதி? அப்படியானால் என் நண்பன் சொன்னதும் மெய்தான். நெருப்பில்லாமற் புகையுமோ? (சிறிது நேரம் உதட்டைக் கடித்துக்கொண்டு நிற்கின்றான். பின்பு தாழ்ந்த குரலில்) இனி நீ கொஞ்சம் கவனமாயிரு. உவள் பூந்தோட்டப்பக்கம் போகாமற் பார்த்துக் கொள். அல்லாவிட்டால் காரியம் எல்லாம் பிழைத்துப் போய்விடும். உவளுக்கும் கூடாது. ஆகையால் உவளைக்கூப்பிட்டு ஆக வேண்டிய புத்திமதி சொல்லிவிடு. தெரிகிறதோ?

**கனகம் :**

ஓம், அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். அந்தக் கவலை உங்களுக்கு என்னத்திற்கு? (அப்பாமுதலி வீட்டினுள்ளே போகின்றான் கனகம் வீட்டினுட்புறமாகத் திரும்பி) பிள்ளை! பிள்ளை! வடிவழகி, (உள்ளிருந்து) ஏன் ஆய்ச்சி,

**கனகம் :**

இங்கே ஒருக்கால் வந்துவிட்டுபோ. வரும் போது செம்பிலே தண்ணீர் கொண்டுவா. (உள்ளிருந்து) இதோ, கொண்டு வருகிறேன், ஆய்ச்சி.

**(சிறிது நேரத்தில் வடிவழகி செம்பு நிறையத் தண்ணீர் கொண்டுவந்து கனகத்திடம் கொடுத்துவிட்டு ஓரருகில் நிற்கின்றாள்.)**

**கனகம் :**

(தண்ணீரைக் குடித்துவிட்டு அப்பாமுதலியின் உடைகளைக் காட்டி) இதோடு உன் அப்பாவின் தலைப் பாகையும் சால்வையும் கிடக்கின்றன. இவற்றைக் கொண்டுபோய் உள்ளே வைத்து விட்டு இங்கே வா. ஒரு அலுவல்.

**வடிவழகி :**

ஓம் ஆய்ச்சி. (அவற்றை எடுத்துக்கொண்டு உள்ளே போகின்றாள். பின்திரும்பிவந்து தன் தாயை நோக்கி ஏன் ஆய்ச்சி, என்னை வரச் சொன்னாய்?

**கனகம் :**

இதிலே இருபிள்ளை (வடிவழகி ஓர் இருக்கையில் அமருகின்றாள்.) பிள்ளை அழகு, எப்போதாவது நீ சங்கிலியோடு பேசியதுண்டோ?

**வடிவழகி :**

இ...ல்...லை...ஆய்ச்சி. ஏன் அப்படிக் கேட்கிறாய்?

**கனகம் :**

ஒன்றுக்கும் இல்லை. நீயும் சங்கிலியும் சிநேகமாயிருக்கிறீர்கள் எனக் கதை உலாவுகிறதாம். இதைப்பற்றிக் கொஞ்சநேரத்துக்கு முன் உன் அப்பா என்னைக் கேட்டார். அப்படி உங்களுக்குள் ஏதும் தொடர்பிருந்தால் அதனால் உனக்குப் பெரிய தீங்கு உண்டாகும். சங்கிலியோ மணம் முடிந்தவன். அவனுக்குப் பட்டத்துத்தேவி இருக்கின்றாள். நீ அவனைக் காதலித்து மணம் முடித்தால் இரண்டாம் மனைவியாவாய். இரண்டாம் மனைவியாயிருப்பது வாழ்நாள் முழுவதிலும் பெரிய தொல்லை. ஆகையால் அவன் தொடர்பை விட்டுவிடு. அது உனக்கு வேண்டாம். எல்லாவகையிலும் உந்தச் சங்கிலியிலும் பார்க்கச் சிறந்த ஒருவரை உனக்கு மாப்பிள்ளையாகப் பேசி வைத்திருக்கிறோம். அவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். அவரை நீ ஏற்றுக்கொள்.

**வடிவழகி :**

அவர் யார் ஆய்ச்சி?

**கனகம் :**

பரநிருபசிங்கரின் மகன் பரராசசிங்க முதலி.

**வடிவழகி :**

ஓகோ, அவரோ? நான் மாட்டேன்.

**கனகம் :**

ஏன் மாட்டாய்?

**வடிவழகி :**

அப்படித்தான்

**கனகம் :**

என்ன ஒரு விதமாகப் பேசுகிறாய் ? அவருக்கு என்ன குறை?

**வடிவழகி :**

குறை ஒன்றுமில்லை. நான் அவரை மணம் முடிக்கமாட்டேன்.

**கனகம் :**

என்னடி பேச்சு? இப்படியும் ஆகிவிட்டதோ? எங்கள் சொல்லைத் தட்டவும் ஆளாகி விட்டாயோ? நாங்கள் சொன்னபடி செய்யத்தான் வேண்டும்.

**வடிவழகி :**

முடியாது.

**கனகம் :**

சரி பார்த்துக்கொள்ளுகிறேன் (அப்பொழுது அப்பாமுதலியின் வாயிலாளன் வந்து பரநிருபசிங்கன் வரவைத் தெரிவிக்கின்றான். அதைக்கேட்டதும் வடிவழகியும் கனகமும் சிறிது பரபரப்படைகின்றனர். கனகம் வாயிலாளனை நோக்கி) அவரை உள்ளே வரும்படி கூறு. அமைச்சரவர்களிடம் தெரிவிக்கின்றேன்.

**(இருவரும் உள்ளே போகின்றனர். சற்றுநேரம் கழிந்ததும் அப்பாமுதலி உள்ளே வருகின்றான். அதன் பின்னர் பரநிருபசிங்கன் வருகின்றான்.)**

அப்பா மு :

(பரநிருபசிங்கனெதிரே சென்று) வாருங்கள், அரசே (ஒரு இருக்கையக் காட்டி) அமர்ந்த ருளுங்கள்.

பரநிருப :

இன்று வெள்ளிக்கிழமை. சட்டநாதர் கோயிலுக்குப் போய்விட்டு வருகிறேன். உங்கள் மாளிகைக்கருகே எமது பல்லக்கு வரும் போது பல நாட்களாக உங்க ளைக் காணவில்லை, ஒரு முறை பார்த்து விட்டுப் போகலாம் என எண்ணி இங்கு வந்தேன்.

அப்பா மு :

ஏதும் அலுவலாக வந்தீர்களோ? வேலைக்காரனை அனுப்பியிருந்தால் நானே உங்கள் மாளிகைக்கு வந்திருப் பேனே.

பரநிருப :

இல்லை, இல்லை, அலுவல் ஒன்றும் இல்லை. நீங்களும் உங்கள் சுகந்தானே?

அப்பா மு :

எம்பெருமான் திருவருளால் நாங்கள் யாவரும் நல்ல சுகமாயிருக்கிறோம்.

**(பணியாளன் ஒருவன் ஒரு தட்டத்தில் வெற்றிலை கொண்டு வர, அப்பாமுதலி அதை வாங்கிப் பரநிருபசிங்கன் முன் வைக்கின்றான்.)**

பரநிருப :

(வெற்றிலையைப் போட்டுக்கொண்டு) கண்டியிலிருந்து வந்தபின் ஆறுதலாக உங்களைக் கண்டுகொள்ள முடிய வில்லை. நான் கண்டிக்குப் போகும் போது வீரமாகாளியம்மன் கோயில் கட்டடத்தைப் புதுக்கக் கட்டி எழுப்பிக் கொண்டிருந்தீர்கள். வேலை முடிந்து விட்டதோ?

அப்பா மு :

ஓம், வேலை முடிந்து நீர்ப்படை விழாவும் நடந்தேறி விட்டது. அது நிற்க, கண்டியரசன் தேவிக்கு மருந்து செய்யப்போயிருந்தீர்கள். அவருக்கு இப்போது நல்ல சுகமோ?

பரநிருப :

ஓம், சட்டநாதர் திருவருளால் நல்ல சுகம்.

அப்பா மு :

என்ன வருத்தம்?

பரநிருப :

அவருக்கு ஒருவகையான வயிற்றுவலி இருந்தது. திறமை வாய்ந்த பண்டி தர்கள் பலர் மருந்து செய்தும் நோய் மாறவில்லை. ஆகையினாலே கண்டிய ரசர் என்னை அழைப்பித்தார். நான் அங்கு சென்றதும் தேவியின் நிலையைப் பார்த்துவிட்டு எம்பெருமான் சட்ட நாதரை மனதில் தியானித்துக் கொண்டு ஒரு மருந்து கொடுத்தேன். அதனால் அவர் குணமடைந்தார்.

அப்பா மு :

அது மிக நல்லது தான். ஆனால் வைத்தியத்திற்காகத் தாங்கள் நாட்டை விட்டுச் சென்ற பின் இங்கு நிகழ்ந்த வைகளை நினைக்கும் போது மனம் சஞ்சலமடைகின்றது.

பரநிருப :

அண்ணனார் இளவரசர் பண்டாரத்தின் கொலையைக் குறித்துப் பேசுகிறீர்கள் போலும். அது கவலைக்குரியதே.

அப்பா மு :

ஓம். அதைப்பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். அதுதான் போகட்டும். தாங்கள் அரசபதவியைத்

துறந்ததைப் பற்றியும் ஒரு கதை உலா வுகின்றது.

**பரநிருப :**
என்ன மாதிரி?

**அப்பா மு :**
தாங்கள் செய்தது முறையல்லவென்று.....

**பரநிருப :**
யான் அரசபதவியைத் துறந்தது நாட்டின் நன்மைக்காகவே. என்னிலும் பார்க்க ஆற்றலும் ஆண்மையும் வாய்ந்தவன் சங்கிலி. அதனாலேயே அவனுக்கு அப்பதவியைக் கொடுத்தேன்.

**அப்பா மு :**
உங்கள் தம்பியார் ஆற்றலும் ஆண்மையும் வாய்ந்தவர் தான். ஆனால் வேறுவகையில் அவர் அப்பதவிக்குத் தகுந்தவரோ என ஐயப்படவேண்டியிருக்கின்றது.

**பரநிருப :**
ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

**அப்பா மு :**
என்ன இருந்தாலும் அரசனுக்கு ஒழு.....க்கம்.....

**பரநிருப :**
என்ன? என்ன? சங்கிலி ஒழுக்கத்தில் தவறினானோ?

**அப்பா மு :**
அப்படித்தான் உலகத்தார் பேசுகிறார்கள்.

**பரநிருப :**
என்ன பேசுகிறார்கள்?

**அப்பா மு :**
அவர் மூர்க்கர் என்றும் ஒழுங்கற்றவர் என்றும் .....

**பரநிருப :**
பூ, அவ்வளவு தானே? அதனாலென்ன? தனது நிலைக்குத் தக்கவாறு இனித் திருந்தி நடப்பான். அவன் புத்திசாலி.

**அப்பா மு :**
அவ்வளவில் நின்று விட்டாற் போதாதோ? (குரலைத் தாழ்த்தி) அவருடைய நடத்தையும் நல்லாயில்லை. அரசர் பெருமானே, நான் சொல்லுவதை மன்னித்துக்கொள்ள வேண்டும். நாட்டில் குலங்குடியிலுள்ள பெண்களைக்கூட அவர் தொல்லைப்படுத்தித் திரிகின்றாராம். அது மட்டுமல்லாமல் என் குடும்பத்துக்கும் தீங்கு செய்ய முயன்று வருகிறார். அவர் எண்ணம் நிறைவேறினால் நானும் என் குடும்பமும் இந் நிலவுலகில் வாழமுடியாது. (அப்பாமுதலி அழுகிறான்.)

**பரநிருப :**
(குரலை உயர்த்தி) என்ன முதலியாரே! அப்படி என்ன தீங்கை உமது குடும்பத்தாருக்குச் செய்ய முயலுகிறான்.

**அப்பா மு :**
எம்பெருமானே! நானோ ஏழை சொல்லப் பயமாயிருக்கிறது.

**பரநிருப :**
பயப்படாதே, வெளியாய்ச் சொல்லு.

**அப்பா மு :**
என் மகள் வடிவழகியில் கண் வைத்துத் திரிகிறார். அவர் எண்ணம் கைகூடுமேயானால் நானும் கெட்டேன். என் குடியும் கெட்டது. (அதைக்கேட்டதும் பரநிருபசிங்கன் திகைத்துப் போயிருக்கின்றான்.

அப்பா முதலி அவன் காலில் வீழ்ந்து) சுவாமி! திக்கற்ற இந்த அடிநாயும் அதன் குடும்பமும் தங்களுக்கு அடைக் கலம். (பரநிருபசிங்கனின் காலைப்பிடித்துக்கொண்டு) இந்தத் துன்பத்திலிருந்து எங்களைக் காத்தருளல் வேண்டும்.

**பரநிருப :**
(அப்பா முதலியைக் கையினாற் பிடித்துத் தூக்கி) முதலியாரே, பயப்படவேண்டாம். நான் (மார்பைத் தட்டி) உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றுவேன். சங்கிலியின் மற்றைய குற்றங்களை யெல்லாம் பொறுத்தேன். ஆனால் இந்தக் கொடுமையை மட்டும் பொறுக்க மாட்டேன்.

**அப்பா மு :**
நீங்கள் அரச பதவியை ஏற்றிருந்தால் இந்தக் கெடுதி ஒன்றும் வந்திராது. என்ன செய்வது? எங்கள் தவப்பயன் அவ்வளவுதான்.

**பரநிருப :**
போனதைப் பற்றிக் கவலைகொள்வதிற் பயனில்லை. உன் மகள் வடிவழகியை எனது மாளிகைக்குக் கொண்டு வந்து எனது பாதுகாப்பில் விடு. அவளுக்கு ஒரு துன்பமும் வராது.

**அப்பா மு :**
(முகம் மலர்ந்து) எம்பெருமானே, அப்படியே செய்வேன்.

**பரநிருப :**
(ஆழ்ந்த யோசனையுடன் வெற்றிலையை மென்று கொண்டு) சரி, முதலியாரே! நேரமாகிறது. போய் வருகிறேன்.

**அப்பா மு :**
(எழுந்து நின்று) போய் வாருங்கள். தாங்கள் இங்கு வந்தது நான் செய்த புண்ணியந் தான்.

**(பரநிருபசிங்கன் எழுந்து செல்கின்றான். அப்பாமுதலி அவனுடன் சிறிது தூரம் சென்று வழியனுப்பிவிட்டு வருகின்றான்.)**

(தனிமொழி)
என் மகள் வடிவழகியைப் பரநிருபசிங்கன் வீட்டில் கொண்டுபோய் விட்டால் அவளை அவன் மகன் பரராசசிங்கமுதலிக்கு மணம் முடித்துக் கொடுத்தல் இலகு. சங்கிலியைத் தொலைத்தால் பரராசசிங்கமுதலியை அரசனாக்கலாம். அவன் அரசனானால் என் மகள் பட்டத்தரசியாவாள். (தன்கைகளைப் பின்புறமாகக் கட்டியபடி சிறிது உலாவிவிட்டு) இப்படி நிகழ்ந்தால் பரராசசிங்கமுதலியையும் தொலைத்து விட்டு நானே அரசனாகலாம்.

**இடம் :**

**அப்பாமுதலி வீட்டுப் பூங்கா**

**நேரம் :**

**இருண்மாலை.**

**(வடிவழகியும் அவள் தோழி செங்கமலமும் பூங்காவில் நின்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு பூக்கொய்கின்றனர்.)**

**செங்கமலம் :**

அழகு, இருண்டுகொண்டு வருகிறது. பொழுதுபட்டு ஒரு நாழிகைக்கு மேலாய் விடும்.

**வடிவழகி :**

இருக்கும். எங்கும் வீடுகளில் விளக்கேற்றி விட்டார்கள். (டங்..... டங்) என்று மணியோசை கேட்கிறது.) அதோ! கேட்டதோ கோயில் மணி? மாலைப் பூசையாகிறது.

**செங்கமலம் :**

உனக்கு எழுதிய ஓலையில் அரசர் எப்பொழுது வருவதாக எழுதியிருந்தார்?

**வடிவழகி :**

பொழுதுபட்டு இருண்டதும்.

**செங்கமலம் :**

நல்லாய் இருண்டுவிட்டது. இன்னும் காணவில்லையே?

**வடிவழகி :**

வந்து விடுவார். வருவேன் என்று சொன்னால் அவர் தவறுவதில்லை.

**செங்கமலம் :**

(புன்முறுவலோடு) காரியத்தை அறிந்து ஒருவேளை அவர்தேவி அவரை இங்கு வரவிடாது மறித்துவிட்டாரோ?

**வடிவழகி :**

சும்மா உனக்கு என்னோடு கேலி தான்.

**(அப்பொழுது சங்கிலி வீரமாப்பாணனோடு பூங்காவின் படலை அருகில் வருகின்றான்.)**

**சங்கிலி :**

(அங்கு நின்று கொண்டு வீரமாப்பாணனை நோக்கி) சரி, மாப்பாணா, போய்வா. அழகு அதோ தன் தோழியுடன் பூப்பறித்துக் கொண்டு நிற்கின்றாள். சிறிதுநேரம் அவளோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு மாளிகைக்குத் திரும்புவேன். நீ வீட்டுக்குப் போ.

**வீரமா :**

சரி, போகிறேன். உங்கு நெடுநேரம் நில்லாது மாளிகை போய்ச் சேருங்கள். சிறிது கவனமாய் இருந்து கொள்ளல் வேண்டும்.

**சங்கிலி :**

ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

**வீரமா :**

காலம் அப்படியான காலம். எப்பொழுது அபாயம் வருமென்று கூறமுடியாது. அதனாலேதான் கவனமாயிருக்க வேண்டுமென்று சொன்னேன்.

**சங்கிலி :**

நீ கூறுவதும் சரிதான். அதோ எமது மாளிகை இந்தப் பூஞ்சோலைக்கு அருகிலேதான் இருக்கிறது. அஞ்சினவன்

கண்ணுக்குத்தான் ஆகாசமெல்லாம் பேய். ஒன்றுக்கும் யோசிக்காதே போய் வா.

**வீரமா :**

சரி, அப்படியே போய்வருகிறேன்.

**(வீரமாப்பாணன் போகின்றான். பெண்களிருவரும் நிற்கும் இடத்தை அரசன் அடைகின்றான்.)**

**சங்கிலி :**

(அவரருகு சென்று) நெடுநேரம் காத்து நிற்க வைத்து விட்டேன் போலிருக்கிறது. அவசியமான வேலை ஒன்று இருந்தபடியால் சிறிது சுணங் கிவிட்டேன்.

**செங்கமலம் :**

சொன்ன நேரத்திற்கு நீங்கள் வராமல் விட்டது இதுவல்ல முதல் முறை. எவ்வளவு நேரத்திற்கென்று தனிமை யான இடத்தில் காத்து நிற்பது? இதனாலேதான் அழகுக்கு உங்கள் மேல் கோபம்.

**சங்கிலி :**

அப்படியோ? நான் முன் ஒரு போதும் உங்களை இப்படிக் காக்க வைக்கவில்லையே? ஏதோ கோபிக்க வேண்டுமென்று கோபிக்கிறீர்கள் போலும். ஆணாய்ப் பிறந்தது பெண் களிடம் ஏச்சு வாங்கத்தானே! என்ன செய்வது? முன் செய்துகொண்ட வினைப்பயன்.

**செங்கமலம் :**

இப்பொழுது உப்படிச் சொன்னால் அழகைக் கலியாணஞ் செய்தபின் என்ன நடக்கும்? இராசமாதேவியும் பெரிய கோபக்காரி. இவளும் அவருக்குக் குறைந்தவளல்லள். உங்கள்பாடு நல்ல வேடிக்கையாய்த்தான் வரப்போகிறது.

**சங்கிலி :**

என்றாலும் அதற்கு நான் பயப்பட வில்லை.

**செங்கமலம் :**

ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள். வீட்டில் மனைவியர் போடும் சண்டை போர்முனையில் உங்கள் பகைவர் போடும் சண்டையைப் போலல்ல. அதிலும் பார்க்க மும்மரமாய் இருக்கும்.

**வடிவழகி :**

சும்மா இரு, செங்கமலம்.

**செங்கமலம் :**

போர்முனைச் சண்டை போர் முடிந்த அன்றைக்கே தொலைந்துபோம். இதுவோ வாழ்நாள் முழுவதும் நடக்கும்.

**சங்கிலி :**

என்றாலும் இச்சண்டையில் இன்பமும் உண்டு.

**செங்கமலம் :**

இன்பமும் துன்பமும் உங்களோடு. எனக்கு நேரமாய் விட்டது. இதோ போகிறேன்.

**வடிவழகி :**

செங்கமலம், நின்றுகொள். நானும் வருகிறேன். பயமாய் இருக்கிறது. என்னைத் தனியே விட்டுச் செல்லாதே.

**செங்கமலம் :**

அரசர்பெருமான் பக்கத்தில் நிற்கும்போது என்ன பயம்?

**(செங்கமலம் போகின்றாள், அப்பொழுது வடிவழகியும் அவளோடு போக முயலுகின் றாள்.)**

**சங்கிலி :**

(அவளைத் தடுத்து) ஏன் போகிறாய்? நில்; பிறகு போகலாம், (வடிவழகி நாணத்தோடு தலை குனிந்து நிற்கின்றாள்.) நீ இப்பொழுது முன் போல இல்லை. நல்லாய் மாறிவிட்டாய். என்னுடன் ஏன் அளவளாவிப் பேசுகின்றாயில்லை?

**வடிவழகி :**

ஒன்றுமில்லை. வீட்டிலே எல்லாம் கட்டுப்பாடு.

**சங்கிலி :**

என்ன சங்கதி?

**வடிவழகி :**

இனி உங்களைக் காணமுடியாது போலிருக்கிறது. உங்களை நான் சந்திப்பது எப்படியோ என் பெற்றோருக்குத் தெரிந்துவிட்டது. ஆய்ச்சி இதைப்பற்றி என்னோடு பேசி உங்களைச் சந்திக்க வேண்டாமென்று கட்டளையிட்டுள்ளார்.

**சங்கிலி :**

அப்படியோ காரியம்? சரி, வேறு, வழிவகைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**வடிவழகி :**

(சிறிது பரபரத்து) அப்படியென்றால்?

**சங்கிலி :**

(சிறிது நேரம் ஏதோ எண்ணிவிட்டு) உன் பெற்றோருக்குத் தெரியாமல் உன்னை என் மாளிகைக்குக் கூட்டிப்போவது தான்.

**வடிவழகி :**

அப்படியானால் வேறு சங்கடம் ஏற்படாதோ?

**சங்கிலி :**

அதற்கு நான் ஆயத்தம். பயப்படாதே. (அப்பொழுது ஒரு மணி ஓசை கேட்கின்றது. சங்கிலி அதை உற்றுக்கேட்டு) சரி, நேரமாகி விட்டது. கோயிலில் அர்த்த சாமப் பூசைக்கு மணியடித்து விட்டது. நான் போய் வருகின்றேன். (அரசன் புறப்படுகின்றான்.)

**வடிவழகி :**

(அவனுடன் தொடர்ந்து நடந்து கொண்டு) இனி, எப்பொழுது இந்தப் பக்கம் வருவீர்கள்? எப்படித்தான் கட்டுக் காவலாக இருந்தாலும் நான் உங்களை வந்து காணாமலிருக்கமாட்டேன்.

**சங்கிலி :**

எல்லாவற்றிற்கும் ஓலை எழுதி அனுப்புகிறேன்.

**வடிவழகி :**

ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்.

**(இருவரும் பூங்காவில் படலையருகு வந்துவிட்டனர். அப்பொழுது இராசமாதேவியும் அங்கயற்கண்ணியும் அவ்விடத்திற்கு வந்து அவர் இருவரையும் காணுகின் றனர்.)**

**இராசமாதேவி :**

என்ன இது? இதைப் பார்க்கப் பெரிய விந்தையாக இருக்கிறதே. (அரசன் அச்சத்தோடு நிற்கின்றான். வடிவழகி தலை குனிந்து நிற்கின்றாள்.) இதுதானோ அவசரமென்று சொல்லிப்புறப்பட்ட அரசாங்க அலுவல்? (அங்கயற்கண்ணியைப் பார்த்து) ஏதோ அரசாங்க வேலையாகப் போகிறேனென்று சொல்லிவிட்டு வெளியே போனார். இப்பொழுது பார்த்தியே அவர் செய்கிற

அவசரவேலையை! (வடிவழகியைப் பார்த்து) நீயும் ஒரு பெண்ணாகப் பிறந்தவளோ? (விக்கி விக்கி அழுகின்றாள். அரசன் சால்வையைப் பிசைந்தவண்ணம் நிற்கின்றான். அங்கயற்கண்ணி நடந்ததைக் கண்டு அச்சத்தோடு நிற்கின்றாள். வடிவழகி காற் பெருவிரலாலே நிலத்தைக் கிளைத்துக் கொண்டு நிற்கின்றாள். ஒரே அமைதி. இராசமாதேவி விரைவாய்க் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) சரி, வந்த காரியத்தை மறந்து விட்டேன். (அரசனைப் பார்த்து) மாளிகையில் ஒற்றர் தலைவன் உங்களைக் காணக் காத்திருக்கிறான். ஏதோ அவசரமான அலுவலாம் நின்று பதறுகிறான். விரைவாய் வாருங்கள். (வடிவழகியைப் பார்த்து இழிவுக் குறிப்பாய்) மகாராணி, குழப்பியதற்கு மன்னிக்கவும்.

**(இராசமாதேவி போகின்றாள். அவளைப் பின்தொடர்ந்து அரசன் போகின்றான். அங்கயற்கண்ணியும் அவரைப் பின்தொடர்கின்றாள்.)**



**இடம் :**

**(அரசன் ஒரு கட்டிலில் இருக்கின்றான். அவனுக்கருகே வேறு பல இருக்கைகளில் தனிநாயகமுதலி, அரசகேசரி, வீரமாப்பாணன், இமையாணன், முத்துலிங்கமுதலி, அடியார்க்கு நல்லான் ஆகியோர் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அரசன் மிகவும் சீற்றத்துடன் இருக்கின்றான். அப்பொழுது அப்பாமுதலி அங்கு விரைந்து வருகின்றான்.)**

**அப்பா. மு :**

(தனது சால்வையால் வியர்வையைத் துடைத்துக் கொண்டு) மகாராசாவே மன்னிக்கவும். தாங்கள் அனுப்பிய ஆள் வரும்போது நான் வீட்டிலில்லை. அதனாலே தான் வரப்பிந்திப் போனேன்.

**சங்கிலி :**

அதனாலொன்றுமில்லை. இருங்கள். (அப்பா முதலி ஒரு இருக்கையில் அமருகின்றான்.) சபையோர்களே! எமது ஒற்றர் தலைவன் மன்னாரிலிருந்து சில செய்திகளைக் கொண்டுவந்திருக்கிறான். பறங்கியர் மன்னாரில் கப்பலால் வந்திறங்கி அந்நாட்டின் ஒரு பாகத்தைச் சில துரோகிகளின் உதவியாலே கைப்பற்றி விட்டார்களாம். அதுவுமல்லாமல் அவர் சமயக்குருமாரில் ஒருவரான சவுரியார் என்பவரும் அங்கு வந்திறங்கியுள்ளாராம். அவர் முயற்சியால் எமது குடிகளிற் பலர் எங்கள் பழைய சமயமாகிய சைவத்தை விட்டுக் கத்தோலிக்க மதத்திற் சேர்ந்துவிட்டார். அது மட்டுமோ? மதம் மாறியவருட் சிலர் பறங்கியரின் உதவியால் எமது புண்ணிய தலமாகிய திருக்கேதீச்சரத்தை இடித்துத் தரைமட்டமாக்கி இருக்கின்றனராம். அதிலிருந்த அழகிய கற்களை எடுத்துக்கொண்டுபோய் ஒரு மாதா கோயிலையும் கோட்டையையும் கட்டுகிறார்களாம். பறங்கியருக்கு ஆக்கிரமிப்பு வெறியும், மத வெறியும் தலைக்கேறிவிட்டன. மதம் மாறிய எம்மவருட் சிலர் துரோகிகளாய்ப் பறங்கியர் அட்டூழியங்களுக்குத் துணை புரிகிறார்கள். இச் செய்தியைக் கேட்ட

நேரம் தொடக்கம் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. பறங்கிகளை உடனேயே நாட்டிலிருந்து ஓட்டிக் கலைத்தல் அவசியம். அவருக்குத் துணை புரிந்த துரோகிகளையும் தகுந்தபடி தண்டித்தல் வேண்டும். அப்படிச் செய்தாற்றான் நமது நாட்டில் இராசத்துரோகமென்ற பேச்சை இல்லாமற் செய்யலாம். ஆகையால் நாம் இப்பொழுதே சேனைகளோடு மன்னாருக்குப் புறப்படவேண்டும். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

**தனிநா. மு :**

(எழுந்து நின்று) மகாராசா, பறங்கிகளுக்கு மாறாய் மன்னாரில் நாம் போர் செய்வதானால் நல்லாய் ஊன்றி ஆலோசித்துவிட்டுச் செய்தல் வேண்டும். அவசரப்பட்டுச் செய்யக்கூடாது. பறங்கிகள் இந்தியாவிலே கோவையில் மிகுந்த பலத்தோடு இருக்கிறார்கள். அல்லாமலும் தென்னிலங்கையில் கோட்டை இராச்சியத்தைத் தங்கள் கைக்குள்ளே வைத்துக்கொண்டு கொழும்பிலே கோட்டை கொத்தளங் களோடு இருக்கிறார்கள். அவர்கள் கடற்படையும் அதிக பலமுள்ளது.

**(ஒரே அமைதி நிலவுகின்றது. அரசன் ஆழ்ந்து எண்ணுகின்றான்.)**

**அரசகேசரி :**

அரசே! முதன் மந்திரியார் கூறுவதை ஊன்றி ஆலோசித்துக் கருமத்தைத் தொடங்குதல் வேண்டும்.

'வினைவலியுந் தன்வலியு
மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்'

என்பது பொய்யில் புலவர் பொருளுரையாகும்.

**அடியா நல் :**

(எழுந்து நின்று) முதன் மந்திரியாரும் புலவர் பெருமானும் கூறியவை முழுதும் உண்மை. பறங்கியருக்கு மாறாய் நாம் போர் செய்ய எண்ணினால் அதற்கு முன்பு சில ஆயத்தங்கள் செய்ய வேண்டும்.

**சங்கிலி :**

என்ன ஆயத்தங்கள்?

**அடியா. நல் :**

பறங்கியருக்கு நாலு பக்கத்திலும் தொல்லை கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் இங்கு எங்களோடு போர் செய்யும் போது அவர்கள் தங்கள் முழுப்பலத்தோடும் போர் செய்ய முடியாது. அவர்கள் சேனைகள் பல இடங்களிலும் சிதறி இருக்கும். அப்போது நாம் இலகுவில் வெற்றியடையலாம்.

**சங்கிலி :**

எப்படி அவருக்கு நாம் தொல்லை கொடுக்க முடியும்? சொல்லுங்கள் பார்ப்போம்.

**அடியா. நல் :**

வடக்கே தஞ்சை நாயக்கருக்கு ஓலை அனுப்பி அவர்களோடு சண்டை செய்யப் பண்ண வேண்டும். கள்ளிக்கோட்டைச் சமோரினையும் அப்படியே செய்யும்படி தூண்ட வேண்டும். தெற்கே கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றி விட்டார்கள். அங்கே நீர் கொழும்பு, சிலாபம் முதலிய பகுதிகளில் உள்ள சனங்களை அவர்களுக்கு மாறாய் எழுந்து கலகம் பண்ணும்படி தூண்டி விடலாம். அங்கிருக்கும் புத்தர்களும் சைவர்களும் பறங்கியர் செய்துவரும் மதமாற்றத்திற்கு மாறாய் மனம் புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள். பறங்கியர் செய்துவரும் அட்டூழியங் களையும் முறைகேடு களையும் கண்டு

எல்லோரும் அவர்களை வெறுக்கிறார்கள். ஆகையால் அவருக்கு மாறாய் எல்லாப் பக்கங்களிலும் தொல்லைகளைக் கிளப்புவது இலகு.

**சங்கிலி :**

மந்திரியாரே, நீங்கள் சொல்லுவதும் உண்மைதான். சபையோர்களே, இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அடியார்க்கு நல்லார் சொன்னபடி பறங்கியருக்கு மாறாய்க் கலகம் மூட்ட வழிவகை எடுப்போமா?

**அப்பா மு :**

அரசர் பெருமானே, பறங்கியருக்கு மாறாக உவ்வளவு நடவடிக்கை எடுக்கவேண்டுமோ? அவர்களோ வயிற்றுப் பிழைப்புக்காக வியாபாரம் பண்ணவந்த ஐந்நூறு பேர். நான் அறிந்தமட்டில் இங்கே சொன்னபடி அவர்களுக்கு அவ்வளவு வலிமை இல்லை. போன போன இடத்திலே தமது வியாபாரப் பொருள் பண்டங்களைப் பதனமாய் வைப்பதற்குப் பலமான வீடுகளைக் கட்டிக்கொண்டார்களேயல்லாமல் கோட்டை கொத்தளமொன்றையும் கட்டவில்லை. அல்லாமலும் அவர்கள் கடற்படையைப் பற்றியும் ஏதோ கதை வந்தது. அவர்களிடம் இருப்பவை போர்க்கப்பல்களல்ல; வியாபாரக் கப்பல்களே. ஒருவேளை சில ஆயுதங்களும் சண்டைக்காரரும் அந்தக் கப்பல்களில் இருக்கலாம். ஆனால் அதெல்லாம் போருக்கல்ல. நடுக்கடலில் தங்கள் வியாபாரப் பொருட்களைக் கொள்ளையடிக்க வரும் கப்பற் கொள்ளைக்காரரை எதிர்த்துப் போராடவே வைக்கப்பட்டிருக்கின்றன. உம்! யாழ்ப்பாணத் தரசுக்கிருக்கும் கடற்படையின் வலியை மறந்து விட்டீர்களோ? நாயக்கரின் கடற்படையோடு எங்கள் கடற்படை திருவடி நிலைக்கப்பாற் சண்டை செய்து பெற்ற வெற்றியை மறந்து விட்டீர்களோ? இவ்வளவு வலியுள்ள கடற்படையை பறங்கியரின் வியாபாரக் கப்பல்கள் எப்படி எதிர்க்க முடியும்? ஆகையால் அரசே, அதிகம் எண்ணுவதைவிட்டுச் சூட்டோடே சூடாய்ப் பறங்கியருக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும். நாம் மன்னாருக்குப் படையெடுத்துச் செல்லுவதே சரி.

**(அவைக்களத்துள்ளோர் ஒன்றும் பேசாதிருக்கின்றனர்.)**

**சங்கிலி :**

(அமைதி நிலவுவதைக் கண்டு) என்ன, ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்கள்? நீங்கள் எல்லோரும் அப்பா முதலியார் சொன்னதைச் சரியென்று ஏற்றுக்கொள்ளுகிறீர்கள் போலத் தோற்றுகிறது. இப்பொழுதே பறங்கிகளோடு சண்டை செய்து அவர்களை நாட்டிலிருந்து துரத்தவேண்டுமெனவே நானும் எண்ணுகிறேன். இமையாணனாரே, பறங்கியரோடு சண்டை செய்யத்தான் வேண்டும்.

**இமையா :**

(இடைமறிக்கும் நோக்கத்துடன்) அரசே ............

**சங்கிலி :**

யாழ்ப்பாண அரசு இப்பொழுது தங்களையே எதிர்பார்க்கின்றது. மன்னாருக்குப் படையெடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை விரைவில் முடியுங்கள். எப்பொழுது

நீங்கள் ஆயத்தமாவீர்கள்?

**இமையா :**

நாளைக் காலையிலேயே படையுடன் புறப்பட்டுவிடலாம் அரசே!

**சங்கிலி :**

சரி, அப்படியே ஆகட்டும் வீரமாப்பாணரே!

**வீரமா :**

அரசே!

**சங்கிலி :**

எனது பஞ்சகல்யாணிக் குதிரையை ஆயத்தம் பண்ணும்.

**வீரமா :**

(தலையசைத்து) ஓம் அரசே!

**உறுப்பு II**

**களம் 5**

**இடம் :**

**அரசமாளிகை**

**(இராசமாதேவியும் ஒரு கட்டிலில் இருக்கின்றாள். அவள் தோழி அங்கயற்கண்ணி ஒரு தாம்பாளத் தைக் கொண்டுவந்து அவளருகு வைக்கின்றாள். அதற்குள் பூ, திருநீறு, சந்தனம் முதலியவை இருக்கின்றன.)**

**அங். கண். :**

தேவி, இப்பொழுதுதான் வீரமாகாளி அம்மன் கோயிலிற் பூசை முடிந்தது. கோயிற் பூசாரி திருநீறு, சந்தனம் முதலியவற்றை இத்தாம்பாளத்திற் கொண்டுவந்து என்னிடம் தந்துவிட்டுப் போகின்றார். அம்மனுக்குமுன் பூசையில் வைக்கும்படி நீங்கள் கொடுத்த பூக்கட்டுகள் இங்கே இந்தத் தொன்னையில் இருக்கின்றன. கற்பூரம் கொளுத்துகிறேன். ஒரு பூக்கட்டை எடுங்கள், பார்ப்போம். இராசாவுக்கு மன்னார்ப் போரில் வெற்றியோ இல்லையோ என்று தெரிந்துவிடும்.

**இராசமாதேவி :**

**(எழுந்து அத்தாம்பாளத்தைத் தன் கையால் எடுத்துக்கொண்டு போய் அங்கு எரியும் விளக்கருகே வைத்துப் பின்வரும் பாட்டைப் பாடித் தோத்திரம் செய்கின்றாள்.)**

**விருத்தம்**

தஞ்சமென் றுன்னடிகள் தாயேய டைந்தனன்
  தருணமிதி லன்பு பொழியும்
தண்மைசேர் கண்களால் தமியேனை நோக்கியே
  தந்தருளு நின்கருணையை
அஞ்சலென் றடியேனை ஆதரிக் காவிடின்
  ஆரெனைக் காக்க வல்லார்
அருமைமிகு மன்னையர் மகவுசெய் குற்றங்க
  ளன்புடன் பொறுத்திடுவரால்
வஞ்சனை மிகுந்துள வைரிகள் புரிந்திடு
  மறுக்கஞ் சகிக்ககில்லேன்
வாதோடு சூதுபுரி மாந்தர்கைத் தப்பிடும்
  வகைதனைக் கூறியருளாய்

மிஞ்சழகு மாடங்க ளானவை மிளிர்ந்துமே
மேவிடும் காமர் பதியாம்
வீசுபுக ழோங்குநல் லூர்தன்னி லுறைகின்ற
வீரமா காளி யம்மே.

வீரமாகாளி அம்மாளே! எங்களுக்கு வெற்றி தந்தருளவேண்டும். (கும்பிட்டுத் திருநீறு, சந்தனம், குங்குமம், பூ முதலியவற்றை அணிகின்றாள். அங்கயற்கண்ணியும் அவற்றை அணிந்து பின் அத்தாம்பாளத்துள்ளிருக்கும் தொன்னையை எடுத்து இரு கையிலும் ஏந்திய வண்ணம் நிற்கின்றாள். இராசமாதேவி அம்மனை வழிபட்டு) தாயே, இக்கட்டுகளில் ஒன்றை எடுக்கின்றேன். எங்களுக்கு வெற்றி யென்றால் அதை எனக்கு இதன் மூலம் காட்டு. (பின் அச்சத்தோடும் அன்போடும் அத்தொன்னைக்குள் இருந்த இரு கட்டுகளில் ஒன்றை எடுத்துத் தோழியிடம் கொடுத்து) கண்ணு, இக்கட்டை அவிழ்க்க எனக்குப் பயமாய் இருக்கிறது. நீதான் அவிழ்த்து அதற்குள் என்ன என்ன நிறப் பூ இருக்கிறது என்று பார். சிவத்தப் பூவாயின் எங்களுக்கு வெற்றி.

**(அங்கயற்கண்ணி அதை வாங்கிப் பயபக்தியோடு மெதுவாய் அவிழ்க்கின்றாள். அவிழ்த்தவுடன் அவள் முகம் மலருகின்றது.)**

**அங். கண். :**
(புன்னகையுடன்) தேவி, இதோ பாருங்கள். சிவத்தப் பூ வீரமாகாளி எங்களைக் கைவிடாள்.

**இராசமாதேவி :**
(மலர்ந்த முகத்துடன்) முன்பே நான் சொல்லவில்லையோ. எல்லாம் அம்பாளின் அருள்.

**அங். கண். :**
இனியாவது அரசரை நினைந்து கலங்குவதை விட்டுவிடுங்கள். எமக்கு வெற்றியென்று பூக்கட்டும் காட்டி விட்டது. அரசரின் ஆண்மையும் போர்வன்மையும் உங்களுக்குத் தெரிந்த காரியந்தானே?

**இராசமாதேவி :**
ஓம், ஓம், போரில் அவருக்குச்சமமானவர் ஒருவருமில்லைத்தான்.

**அங். கண். :**
அப்படியானால் ஏன் மனம் பதைக்கிறீர்கள்? இனி ஆறுதலாய் இருங்கள். எங்களுக்குத் தான் வெற்றி நிச்சயம்.

**இராசமாதேவி :**
நானும் அப்படியே நினைக்கிறேன். அரசர் எல்லாவற்றிலும் கெட்டித்தனமுள்ளவர். மிக நல்லவரும். ஆனால் ........................ (ஏதோ மனதில் எண்ணுகிறாள்.)

**அங். கண். :**
(பரபரத்து) ஆனால் என்ன?

**இராசமாதேவி :**
ஆனால் ஒன்றிலேதான் கூடாதவர்.

**அங். கண். :**
எதிலே?

**இராசமாதேவி :**
பிற பெண்களை விரும்புவதில்

**அங். கண். :**
ஓ, அதுவோ? பெண்கள் என்று ஏன் சொல்லுகிறீர்கள்; வடிவழகி ஒருத்தியைத் தானே.

**இராசமாதேவி :**

கண்ணாற் கண்டது அது. அதுபோற் காணாதவை எத்தனையோ?

**அங். கண். :**

விடுங்கள், விடுங்கள். எல்லோரும் உப்படித்தான் ஆண்கள் இயல்பே அது. இப்படியான காரியங்களில் குறையை ஆண்களிலே சுமத்துதல் ஆகாது.

**இராசமாதேவி :**

பின்னர்? ...................

**அங். கண். :**

அவர்களுக்கு இடம் கொடுக்கும் பெண்களிலே தான். ஒரு பெண் இடங்கொடாது விட்டால் ஆணாய்ப் பிறந்தவன் கண்ணெடுத்தும் பாரான்.

**இராசமாதேவி :**

அப்படியானால் இக்காரியத்தில் அரசர் மேற் குற்றமில்லையென்று சொல்லுகிறாயோ.

**அங். கண். :**

நிச்சயமாய். வடிவழகி மேலேதான் குற்றமென்று சத்தியம் பண்ணுவேன்.

**இராசமாதேவி :**

அவள் கூடாதவள் என்று இதுவரையும் நான் கேள்விப்படவில்லையே.

**அங். கண். :**

எல்லோரும் நல்லவர் போலத்தான் நடிப்பது. ஆனால் தருணம் வரும் போதல்லவோ அவரவரின் உண்மைக் குணம் தெரியும். பெண்களின் ஆசைக்கும் ஒரு அளவு இருக்க வேண்டும். என்ன, கட்டிய மனைவி இருக்கும் ஒருவன் மேலும் ஆசைப்படுவதோ? அப்படிச் செய்பவளும் ஒரு பெண்ணோ?

**இராசமாதேவி :**

அவளை ஏசி என்ன? இதெல்லாம் அப்படிப்பட்ட பெண்களை வளர்த்த முறையால் வந்த பிழை.

**(அப்பொழுது வடிவழகி அங்குமிங்கும் பார்த்துவிட்டு மெல்லென உள்ளே வருகின்றாள்.)**

**இராசமாதேவி :**

(சினத்தோடு) ஆரங்கே? அப்பாமுதலி மகள் வடிவழகியோ? இங்கே மாளிகைக்குள் எப்படி வந்தாய்? காவற்காரன் மாளிகை வாயிலில் இல்லையோ? ஒழுக்கங்கெட்ட பதரே! என்னருகில் வர உனக்கென்ன துணிவு? இது முதற் குற்றம்: மன்னித்தேன். இனி இந்த மாளிகைக்குக் கிட்டவும் கால் வைக்கக் கூடாது. தெரிகிறதோ அங்கயற்கண்ணி, இந்தச் சிறுக்கியை எனக்கு முன்னே நிற்கவிடாதே. வெளியே போகச் சொல்லு.

**(அங்கயற்கண்ணி வடிவழகி அருகே போகின்றாள்.)**

**வடிவழகி :**

(அப்பால் விலகி இராசமாதேவியைப் பார்த்துப் பணிவோடு) தேவி, நான் செய்தது குற்றந்தான். என் மேற் கோபிக்க வேண்டாம். தெரியாமற் செய்து விட்டேன். பொறுத்தருளுங்கள். இப்போது நான் இங்கு வந்தது வேறு காரியமாய். அது இரகசியம். நீங்கள் அதைக் கட்டாயம் அறிதல் வேண்டும்.

**இராசமாதேவி :**

சரி, கண்ணு, அவளை விடு. இரகசியத்தைக் கூறட்டும். பார்ப்போம்.

**வடிவழகி :**

தேவி, (அங்கும் இங்கும் பார்த்துவிட்டு) மகாராசாவுக்கு மாறாய்ச் சூழ்ச்சிகள்

பல நடக்கின்றன. அவரைக் கவனமாய் இருக்கச் சொல்லுங்கள். அவர் நன்மைக்காகப் பாடுபடுபவர் போலப் பலர்காட்டித் திரிகிறார்கள். அவர்களை நம்பவேண்டாம். படுமோசம் பண்ணி விடுவார்கள்.

**இராசமாதேவி :**
(மிகக் கவனமாய்) அழகு, பயப்படாதே, இங்கேகிட்டவா. ஏன் அப்படிச்சொல்லு கிறாய் இந்த வஞ்சகச் சூழ்ச்சிகளைப் பற்றி உனக்கு ஏதும் தெரியுமோ? அஞ்சாமற் சொல்லு.

**வடிவழகி :**
ஓம், தேவி, (சிறிது தயங்கி தாழ்த்திய குரலில்) எல்லாம் எங்கள் வீட்டிலே தான் நடக்கின்றன.

**இராசமாதேவி :**
(திகிலடைந்து) அப்படியோ?

**வடிவழகி :**
தேவி, உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் இங்கு வந்தது ஒருவருக்கும் தெரியக்கூடாது. என்னைக் கடுங்காவலில் வைத்திருக்கிறார்கள். என்றாலும் ஒருவகையாக ஒளித்து வந்தேன். நான் வந்ததை அவர்கள் அறிந்தால் என் உயிருக்கே ஆபத்து.

**இராசமாதேவி :**
தெரியும், ஒன்றுக்கும் பயப்படாதே.

**வடிவழகி :**
தேவி, நான் இனி நிற்க முடியாது. வீட்டுக்குப் போய்ச்சேர வேண்டும்.

**இராசமாதேவி :**
சரி (அங்கயற்கண்ணியை விளித்து) கண்ணு. அழகைக் கவனமாய் மாளிகையின் பின்பக்கத்துக் கதவாற் கொண்டுபோய், அவள் வீட்டுப் பூஞ்சோலை வாயிலில் விட்டுவா. ஒருவருக்குந் தெரியாமல் பதனமாய்ப் போங்கள்.

**அங். கண். :**
ஓம் தெரியும்.

**வடிவழகி :**
நான் போய் வருகிறேன், தேவி.

**இராசமாதேவி :**
(அவள் தோளிலே தன் கையை வைத்து) போய்வா, அழகு.

**(இருவரும் போகின்றனர். இராசமாதேவி ஆழ்ந்த எண்ணத்தோடு அங்குமிங்கும் உலாவுகின்றாள். சிறிது நேரம் சென்றபின் அங்கயற்கண்ணி திரும்பி வருகின்றாள்.)**

**இராசமாதேவி :**
போய்ச் சேர்ந்து விட்டாளோ?

**அங். கண். :**
ஓம், போய் விட்டாள்.

**இராசமாதேவி :**
நாம் அழகைப்பற்றி எண்ணியவை யெல்லாம் பிழை. அவள் அவ்வளவு கெட்டவள் அல்லள்.

**அங். கண்.**
அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.

**இடம் :**

**அரசமாளிகை**

**(இராசமாதேவியும் அவள் தோழி அங்கயற் கண்ணியும் அரச மாளிகையில் இருந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்)**

**இராசமாதேவி**

அரசர் மன்னாருக்குப் படையெடுத்துச் சென்று (கைவிரலால் எண்ணியபடி) திங்களோடு திங்கள் எட்டு, அடுத்த திங்கள் ... இன்றைக்குச் சரியாய்ப் பதினைந்து நாள். முதல் மந்திரியார் தனிநாயக முதலியாருக்கு ஒரு செய்தியும் வரவில்லையாமோ?

**அங். கண். :**

மன்னார் யாழ்ப்பாணத்திலிருந்து மிகத் தூரமல்லவோ. செய்தி அனுப்பினாலும் விரைவில் வரமாட்டாது. அதைக் கொண்டு வருகிறவன் இந்தக் காடுமேடெல்லாம் தாண்டிக் கடல் கடந்து வந்து சேரவேண்டும்.

**(அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது வெளியே மணி கேட்கின்றது. வாயில் காவலன் உள்ளே வருகின்றான்.)**

**வாயிலகாவலன் :**

தேவி, கட்டியகாரன் வாயிலில் வந்து நிற்கின்றான். தங்களுக்கு அறிவிக்க ஏதோ செய்தி கொண்டு வந்திருக்கிறானாம்.

**இராசமாதேவி :**

(பரபரத்து) கட்டியகாரனோ? என்ன, மன்னாரிலிருந்து வந்து விட்டானோ? உடனே கூட்டிவா.

**(வாயில் காவலன் வெளியே போந்து கட்டியகாரனை அழைத்து வந்து இராசமாதேவி முன்னிலையில் விட்டுப் போகின்றான்)**

**கட்டியகாரன் :**

(வணங்கிக்கொண்டு) தேவி, வணக்கம்.

**இராசமாதேவி :**

(பரபரப்புடன்) கட்டியகாரா, சண்டை முடிவென்ன? எங்களுக்கு வெற்றிதானே?

**கட்டியகாரன் :**

எங்கள் மகாராசா போயிருக்கும் போது அதைச் சொல்லவும் வேண்டுமோ?

**(எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சிக்குறிகள் தோன்றுகின்றன.)**

**இராசமாதேவி :**

நீ கொண்டு வந்த செய்தியை விபரமாய்ச் சொல்லு. கேட்க விரும்புகின்றோம்.

**கட்டியகாரன் :**

தேவி, நாம் மன்னாருக்குச் சென்றபோது அங்கே பறங்கியர் கோட்டை கட்டிக் கொண்டிருப்பதைக் கண்டோம். அவர்கள் கப்பல்கள் மன்னார்க் கடலில் நங்கூரமிட்டிருந்தன. எங்கள் கடற்படையும் அப்பொழுதுதான் கடல் வழியாக மன்னாரை அடைந்தது. அதைக் கண்டவுடன் மகாராசா பறங்கிக் கப்பல்களைத் தாக்கும்படி எங்கள் கடற்படைத் தலைவருக்குச் செய்தி அனுப்பினார். உடனே எங்கள் கடற்படை பறங்கியர் கப்பல்களைத் தாக்கிச் சிதற அடித்துத் துரத்தியது. அதே நேரத்தில் எங்கள் தரைப்படை பறங்கியரின் தரைப்படையோடு போர் செய்தது. உயிரைத் துரும்பெனவும் மதியாது வேகமாய்ப் போர் புரிந்த எங்கள் படைவீரர் தாக்குதலுக்கு எதிர் நிற்க முடியாது பறங்கிப்படை வெருண்டு ஓட்டமெடுத்தது. பறங்கியரைத் துரத்தியபின் அவருக்கு உளவாய் நின்று உதவி புரிந்து திருக்கேதீச்சர ஆலயத்தையும் அழித்த

துரோகிகளுக்கும் தக்க தண்டனை விதித்தோம். அதன்பின் மன்னாருக்குக் காவலாக அங்கேயுள்ள கோட்டையில் ஒரு தரைப்படையையும் மாந்தைக் கடலில் ஒரு கடற்படையையும் நிறுத்தி விட்டுத் திரும்பி வந்திருக் கின்றோம்.

**இராசமாதேவி :**

அரசர் நல்ல சுகந்தானே? சண்டையில் எதிரிகளால் அவர் உடம்புக்கு ஒருவகையான தீங்கும் வரவில்லை. அப்படித்தானே?

**கட்டியகாரன் :**

இல்லை, இல்லை, மகாராணி. அப்படி யொன்றும் இல்லை. நல்ல சுக மாகத் தம்முடைய சேனைகளோடு பஞ்சகல் யாணியில் உல்லாசமாகத் திரும்பி வருகிறார்.

**இராசமாதேவி :**

அவரை எங்கே விட்டுப் பிரிந்து வந்தாய்?

**கட்டியக்காரன் :**

தனங்கிளப்புக்குக் கிட்ட. நான் அவரைப் பிரிந்து வந்து அதிக நேரமாய் விட்டது. இதுவரையில் அவர் நகர எல்லைக்குள் வந்திருப்பார். நான் வரும்போது முதல் மந்திரியார் தனிநாயகமுதலியாரும் அங்கே வந்திருந்தார்.

**இராசமாதேவி :**

அப்படியோ? (தோழியைப் பார்த்து) கண்ணு, அரசரை வரவேற்பதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்.

**(உடனே தோழி உள்ளே சென்று மாலை தட்டம் முதலியவற்றைக் கொண்டு வந்து வாயில் விளக்கேற்றி நிறைகுடம் வைக்கின்றாள். சிறிது நேரத்தில் அரசனும் மெய்க்காப்பாளன் வீரமாப்பாணனும் முதலமைச்சர் தனிநாயக முதலியும் வீரர் சிலரும் வருகின்றனர். அவர் வந்து வாயிலில் நிற்க இராசமாதேவி அரச னெதிரே சென்று அவனுக்கு ஆலாத்தி எடுத்துப் பொட்டிடுகின்றாள். பின் அரசன் போய் இருக்கையில் அமர, போர்வீரர் ஒழிந்த ஏனையோரும் அங்குள்ள இருக்கைகளில் அமருகின்றனர். அதன்பின் போர்வீரர் வெளியே போகின்றனர்.)**

**இராசமாதேவி :**

தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று முன்னரே எங்களுக்குத் தெரியும். வீரமா காளி அம்மன் கோயிலில் பூக்கட்டி வைத்துப் பார்த்தோம். எங்களுக்கு வெற்றி என்று தெரிந்தது.

**சங்கிலி :**

(அன்புடன் அவளைப் பார்த்து புன்னகை புரிந்து விட்டு தனிநாயகமுதலியை நோக்கி) இந்த வெற்றியைக் குறித்து வீரமாகாளி அம்மனுக்கு வழக்கம் போல் வேள்வி செய்ய வேண்டும். அதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்ய மறந்துவிடக் கூடாது. தெரிகிறதே?

**தனிநா. மு :**

ஓம், ஓம், கட்டாயம் செய்வேன். இப்பொழுதே போய் அதைப்பற்றிக் கவனிக்கின்றேன். (போகின்றான்)

**இராசமாதேவி :**

காலைச் சாப்பாட்டைப் பற்றிக் கவனிக்க மறந்து விட்டேன். (தோழியைப் பார்த்து) அடி கண்ணு, வா, போய் அதனை ஆயத்தப்படுத்துவோம்.

**அங். கண். :**

சரி. வருகிறேன்.

**(அங்கயற்கண்ணியும் தேவியும் உள்ளே போகின்றனர்)**

**சங்கிலி :**

மாப்பாணா, எல்லாம் செவ்வையாய் முடிந்து விட்டன., ஆனால் வடிவழகி யைப் பற்றித்தான் கவலையா யிருக்கிறது. இனி அவளைச் சந்திப்ப தென்றால் முடியாத காரியம் தேவி மிகவும் கவனமாய் இருப்பாள்.

**வீரமா :**

சங்கடம் தான்.

**சங்கிலி :**

நான் வடிவழகியோடு அவள் கையில் அகப்பட்ட செய்தியை இப்பொழுது மறந்திருப்பாளோ?

**வீரமா**

மறந்திருக்க மாட்டார். பார்க்கிற அளவில் உங்களை மன்னித்து விட்டார் போல இருக்கிறது. தேவி பெருங்குணம் படைத்தவர் என்று உங்களுக்குத் தெரியுந்தானே.

**சங்கிலி :**

ஓம், ஓம், அது கிடக்க, என்னால் வடிவழகியைச் சந்திக்காமல் இருக்கவும் முடியாது, தேவி கட்டளையை மீறி அவள் மனதைப் புண்படுத்தவும் முடியாது. இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறேனப்பா. இதற்கு என்ன செய்யலாம்? சொல்லு.

**வீரமா**

செய்கிறதென்ன? ஒருவகையாகத் தேவிக்கு இதைத் தெரியப்பண்ண வேண்டியது தான்.

**சங்கிலி :**

என்ன வகையாகத் தெரிவிக்கலாம்?

**வீரமா :**

தேவியின் தோழி அங்கயற்கண்ணியாலே தான்இது ஆகவேண்டும். நான்அவளிடம் சொல்லி ஒருவகையாக ஒழுங்குபடுத்தி விடுகிறேன். இப்பொழுது தேவி நல்ல மனப்பூரிப்பாக இருக்கிறார். ஆகையால் இன்றைக்கு இதைப்பற்றி ஏதும் செய்தால் எல்லாம் நாங்கள் நினைத்தபடி முடியும். இன்றிரவே நீங்கள் வடிவழகியைக் காணவும் கூடும்.

**சங்கிலி :**

அப்படியானால் நல்லது., மாப்பாணா (வீரமாப்பாணன் முதுகில் தட்டி) எல்லாம் உன்னாலே தான் ஆகவேண்டும்.

**வீரமா :**

அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

**இரண்டாம் உறுப்பு முற்றும்**

### இடம் :

### நல்லூர்த் தெரு

**(நல்லூர்த் தெருவொன்றில் சண்முகம், கந்தையா, உதுமான் இலெப்பை ஆகிய மூவர் நின்று பேசுகின்றனர்.)**

**சண்முகம் :**
என்ன கந்தையா, உன்னை நெடுநாளாய்க் காணவில்லை. என்ன சங்கதி?

**கந்தையா :**
நெடுந்தீவுக்குப் போயிருந்தேன்.

**சண்முகம் :**
ஏன் அங்கே?

**கந்தையா :**
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலே அடுத்த சனிக்கிழமை தேர். அன்றைக்கு நாங்கள் மோர்ப்பந்தல் போடுவது வழக்கம். அதற்குத் தயிர் எடுப்பதற்காக அங்கே போயிருந்தேன்.

**சண்முகம் :**
கிடைத்ததோ?

**கந்தையா :**
அதிகம் கிடைக்கவில்லை. முந்தி முந்திப் போல இப்பொழுது மாடுகள் அங்கு தொகையாய் இல்லை.

**சண்முகம் :**
ஏன் அப்படி?

**கந்தையா :**
இந்தப் பறங்கிக்காரன் இடையிடை அங்கே போய் ஆட்களை வெருட்டி மாடுகளையெல்லாம் இறைச்சிக்குப் பிடித்துக்கொண்டு போய் விடுகிறான். அதனால் இப்பொழுது அங்கேயும் பால் மெத்தக் குறைவு. அதனோடு அங்கேயிருந்து இராமேசுரக்கோயிலுக்கு அந்த நாள் தொட்டு ஒவ்வொரு நாளும் பால் கொண்டு போவது வழக்கம். அதற்குக்கூடப் பால் தட்டுப்பாடாய் இருக்கிறதாம். அவ்வளவு மோசமாய் இருக்கிறது இந்தப் பறங்கிப் படையின் அநியாயம்.

**உதுமான் :**
மெய்தான் காணும். இந்தப் பறங்கிகளாலே பெரிய தொல்லையாய் இருக்கிறது. இந்த அநியாயப்படுவாரை எங்கள் இராசா இந்த நாட்டில் ஏன் விட்டுக்கொண்டிருக்கிறார். எப்படிக் காணும் இவர்கள் இங்கே வந்து சேர்ந்தார்கள்?

**சண்முகம் :**
ஒரு நாள் பறங்கிக்காரர் சிலர் கப்பலால் பண்ணைத் துறையில் வந்திறங்கி இராசசபைக்கு வந்தனர்; வந்து ‘நாங்கள் வியாபாரிகள், பல நாடுகளுக்கும் போய் வியாபாரம் செய்து வருகிறோம். இங்கேயும் வியாபாரம் செய்யலாம் என்று நினைத்து வந்திருக்கிறோம். மகாராசா உத்தரவு தரவேண்டும்’ என்று அரசரை மன்றாடிக் கேட்டனர். அதற்கு அவர் ‘நீங்கள் சொல்லுவதை நம்பமுடியாது. வேறேதோ எண்ணத்தோடு வந்திருக்கிறீர்கள் போலத் தோற்றுகிறது’ என்று சொல்லி மறுத்து விட்டார்.

**உதுமான் :**
அப்படியானால் அவர்கள் இங்கே வந்தது எப்படி?

**சண்முகம் :**

அரசர் இப்படி மறுத்துவிட, சபை யில் இருந்த பரநிருபசிங்கரும் மந்திரிமார் சிலரும் ஒருமித்து 'இவர்கள் உண்மை யாகவியாபாரிகள்தான். வேறொருவகை யான எண்ணத்தோடும் வரவில்லை. மன்னாரைப் பிடிக்க வந்த பறங்கிக்காரர் வேறு; இவர்கள் வேறு. இவர்களை வியாபாரம் பண்ணவிட்டால் எங்கள் நாட்டுக்கு நன்மையாய் இருக்கும். இங்கே கிடையாத எத்தனையோ வகையான நூதனப் பொருள்களை நாங்கள் இவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்' என்று சொன்னார்கள். இப்படிப் பர நிருபசிங்கரும் சில மந்திரி மாரும் திருப்பித் திருப்பிச் சொல்ல அரசர் வேண்டா வெறுப்பாகச் சம்மதித்தார்.

**கந்தையா :**

இவர்களை இங்கே நுழையவிட்டது தவறு என்று நினைக்கிறேன். முந்திமுந்தி ஒரு மாதிரி அடக்க ஒடுக்கமாய்த் திரிந்தார்கள். இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாய் அடம்பண்ணத் தொடங்கி விட்டார்கள்.

**உதுமான் :**

மெய்தான் சண்முகம். நேற்றும் ஆரியகுளத்தடியில் இவர்கள் கலகம் செய்தார்களாம். இவர்களாலே இந்த நாட்டுக்குப் பெரிய தொல்லை வரப்போகிறது.

**சண்முகம் :**

சரிதான். இவைகளுக்கெல்லாம் காரணம் எங்கள் அரசர் வைத்திருக்கும் மந்திரிமார் களிற் சிலர் தான் என்று கேள்வி. அரசர் கெட்டித்தனம் உள்ளவர். ஊர் நன்மைக்காகப் பாடுபடுகிறவர். ஆனால் மந்திரிமார்களோ தங்கள் தங்கள் நன்மையையே கருதும் சுயநலப் புலிகள். இவர்கள் எங்கள் அரசருக்கும் நாட்டுக்கும் என்ன தீமை செய்வார்களோ தெரியவில்லை.

**உதுமான் :**

(அச்சத்தோடு அங்கும் இங்கும் பார்த்துத் தாழ்ந்த குரலில்) ஏதோ சூழ்ச்சி நடக்கிறதாகத் தான் நானும் கேள்விப் பட்டேன்.

**சண்முகம் :**

(தலையை அசைத்து) மெல்லப் பேசு எங்களுக்கேன் இந்தத் தொல்லை. பெரிய இடத்து அலுவல்.

**(அப்பொழுது தெருத்தோறும் சென்று சேலை, ஊசி. பாசிமணி முதலிய பொருட்களை விற்கும் அந்தோனி, ஆந்திரே, பேதுரு என்னும் பறங்கி வியாபாரிகள் மூவர் தம் பொட்டளிகளைத் தலையிலும் தோளிலும் சுமந்து கொண்டு வருகின்றனர். அவர்கள் தம் பொருட்களை ஓர் இடத்தில் இறக்கி, ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு பொட்டளிகளிலிருந்த பொருட்களை நிலத்தில் பரப்புகின்றார்கள்.)**

**அந்தோனி :**

அப்பப்பா, (தனது வியர்வையைத் துடைத்து ஒரு துணியால் விசுக்கிக் கொண்டு) ஆந்திரே. என்ன செல்வமப்பா இந்த ஊரிலே.

**ஆந்திரே :**

இவ்வளவு செல்வம் எங்கள் போத்துக் கலில் இருந்தால் நாங்க ளெல்லாம் இப்படி ஊரூராய் அலைய வேண்டிய தில்லையே.

**பேதுரு :**

சிஞ்ஞோர், இந்த நாட்டை எப்படியாவது பிடித்து விட்டால் இங்கேயுள்ள செல்வங்களையெல்லாம் எங்கள் நாட்டுக்குக்கொண்டு போய்விடலாம்.

**அந்தோனி :**

**அந்தோனி :**

பிடிப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இங்கே உள்ள அரசனோ மெத்தக் கெட்டிக்காரன். எங்கள் ஊரவர் தான் சண்டையிலே சூரர் என்றிருந்தேன். ஆனால் இங்கே வந்து பார்த்தால் ஒவ்வொருவனும் சண்டையிற் புலியாய் இருக்கிறான். அரசனோ என்றால் அவர்களுக்குத் தகுந்தவன். சண்டையிற் பெரிய சிங்கம்.

**ஆந்திரே :**

அப்படியென்று தான் மன்னார்ப் போருக்குப் போன பிலிப்பும் சொன்னான். அரசன் போர்க்களத்தில் வந்திறங்கினது தானாம். எங்கள் பறங்கிப் பட்டாளமெல்லாம் தப்பினோம் தப்பினோம் என்று குடல் தெறிக்க ஓடிவிட்டனவாம்.

**அந்தோனி :**

ஓம் கடற்போரிலும் எங்களுடைய ஆட்களுக்குப் படுதோல்வியாம். ஆக மூன்று கப்பல்தான் தப்பிக் கோவைக்குப் போயினவாம்.

**பேதுரு :**

என்ன, போருக்குப் போன நாற்பத் தெட்டுக் கப்பலிலேயோ?

**அந்தோனி :**

ஓம், சிஞ்ஞோர்

**பேதுரு :**

பொல்லாத பயல்களாய் இருக்கிறார் களே.

**அந்தோனி :**

இவர்களோடு கவனமாய்ப் புழங்க வேண்டும்

**(பறங்கியர் இவ்வாறு பேசிக்கொண்டு தம் பொருட்களைப் பரப்பியதும் மக்கள் வந்து அவற்றைப் பார்த்து விலை கேட்கின்றனர். சண்முகம், கந்தையா, உதுமான் இலெப்பை ஆகிய மூவரும் எட்டத்து நின்று பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். அப்பொழுது உதுமான் இலெப்பை பின்வரும் பாட்டை அதற்கு வேண்டிய சைகைகளோடு பாடுகிறான்.)**

**உதுமான் :**

என்ன பிடிக்கிறாய்? அந்தோனி
எலிப் பிடிக்கிறேன் சிஞ்ஞோரே
பொத்திப் பொத்திப்பிடி அந்தோனி
பூறிக் கொண்டோடுது சிஞ்ஞோரே.

**(அதைக் கேட்டு மூவரும் சிரிக்கின்றனர். அதன்பின் கந்தையா பாடுகிறான்.)**

**கந்தையா :**

சுன்னாகச் சந்தையிலே - பறங்கி
சுங்கானைப் போட்டுவிட்டான்
பார்த்துக் கொடுப்பவர்க்குப் - பறங்கி
பாதிச் சுங்கான் கொடுப்பான்.

**(மூவரும் கைகொட்டி நகைக்கின்றனர்.)**

**சண்முகம் :**

அவர்கள் என்னென்ன பொருள் விற்கிறார்களென்று கொஞ்சம் போய்ப் பார்ப்போமோ?

**கந்தையாவும் உதுமானும் :**

ஓம், ஓம்.

**(மூவரும் பறங்கியர் இருக்கும் இடத்திற்குப் போகின்றனர். சிறிது நேரம் அங்கிருக்கும் பொருட்களை உற்றுப் பார்த்துவிட்டுச் சண்முகம் பாசிமணிக்கோவை யொன்றை எடுத்து விலை கேட்கின்றான்.)**

**சண்முகம் :**

சிஞ்ஞோரே! இதற்கு விலை என்ன?

**பேதுரு :**

அதுவா? பதினெட்டு இறசால்.

**சண்முகம் :**

(உதுமான் இலெப்பையை நோக்கி) காக்கா, இவன் என்ன பதினெட்டு இறசால் என்கிறான். இது பெறுமா?

**உதுமான் :**

பெறாது, இவை எல்லாம் பொய் வேலை காணும். இவைகளுக்கு ஏன் இவ்வளவு காசு? ஊர்ப்பணத்தை வீணாய்ப் பறங்கிக் குக் கொட்டிக் கொடுப்பது தான். அவன் காசுகளை யெல்லாம் மூட்டை கட்டி நாளைக்குத் தன்னூருக்குக் கொண்டு போய் விடுவான்.

**பேதுரு :**

(உதுமான் பேச்சைக் கேட்டுச் சினந்து) உமக்கு ஏன் காணும், இந்தத் தொளாபாரம் எல்லாம்? வாங்க விரும்பினால் வாங்கும். இல்லா விட்டால் வந்த வழியைப் பார்த்து நடவும்.

**உதுமான் :**

என்ன ஒருவகையாய்ப் பேசுகிறீர்? எங்கேயிருந்து பேசுகிறீர் என்று தெரியுமோ?

**பேதுரு :**

ஓம், தெரியும், நாங்கள் ஆர் என்று தெரியுமோ?

**உதுமான் :**

உங்களையோ தெரியாது. பாசாங்கு பண்ணிப் பணத்தைப் பறிக்கும் ஏமாற் றுக்காரர். உங்கள் வீம்புகள் எல்லாம் உங்கள் ஊரிலே, சங்கிலியன் சீமையிலே இந்தப் பருப்பெல்லாம் வேகாது.

**சண்முகம் :**

ஏன் காணும் உவனோடு உந்தக் கதையெல்லாம்?

**உதுமான் :**

இல்லை அண்ணே, இவன் எங்களூரிலே வந்து எங்களுக்கல்லோ நாட்டாண்மை காட்டப் பார்க்கிறான்.

**பேதுரு :**

பொத்தடா வாயை.

**உதுமான் :**

என்னடா சொன்னாய்? மன்னாரிலே எங்கள் இராசாவிடம் வாங்கியது போதாதோ? என்ன, மறந்து விட்டீர் களோ?

**(பேதுரு உதுமான் இலெப்பைக்கு அடிக்கிறான். சண்முகம் பேதுருவுக்கு அடிக்கிறான். பக்கத்து நின்ற பறங்கியரும் அங்குள்ள வரோடு கைகலக்கின்றனர். ஈற்றில் பறங்கியர் தம் பொருட்களெல்லாவற்றையும் விட்டு ஓட்டமெடுக்கின்றனர்.)**

**இடம் :**

**அரசன் அவைக்களம்**

**(பரநிருபசிங்கன், தனிநாயகமுதலி, அரசகேசரி, அப்பாமுதலி, முத்துலிங்கமுதலி அடியார்க்கு நல்லான், தளபதி இமையாணன், வீரமாப்பாணன் ஆகியோர் தங்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்திருக்கின்றனர்.)**

**சங்கிலி :**

சபையோரே, சிலகாலத்திற்கு முன்பு பறங்கி வியாபாரிகள் சிலர் இங்கே வந்து இந்த நாட்டிலே தாங்கள் வியாபாரஞ் செய்வதற்கு எம்மிடத்திலே உத்தரவு கேட்டனர். அது எனக்கு விருப்பமில்லாதபோதிலும் உங்கள் எண்ணத்திற்கு இசைந்து உத்தரவு கொடுத்தேன். அவ்வாறு கொடுக்கும் பொழுதும் இவர்கள் பகற்காலத்தில் நாட்டினுள் வந்து வியாபாரம் பண்ணலாம். ஆனால் இராக்காலத்தில் ஊரினுள் தங்கக்கூடாது. அவர்கள் தோணிகளுக்கே போய்விட வேண்டும் என்ற கட்டுப்பாட்டோடேயே அவ்வுத் தரவைக் கொடுத்தேன். சில நாளாக வியாபாரம் அப்படியே நடந்து வந்தது. பின்பு அவர்கள் இரந்து கேட்டபடியால் வியாபாரப் பொருட்களைச் சேகரித்து வைப்பதற்கு கடலோரத்தில் பண்டகசாலை ஒன்று கட்ட உத்தரவு கொடுத்தேன். அவைகளத்தோரே! இவைகளெல்லாம் உங்கள் நினைவில் இருக்கும்.

**தனிநா. மு :**

அரசே, பறங்கியர் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் துரோகிகள் என்பதை நாம் அப்பொழுதே அறிந்திருக்க வேண்டும்.

**சங்கிலி :**

பண்டகசாலை கட்ட நாம் கொடுத்த உத்தரவைச் சாட்டாகக் கொண்டு இவர்கள் கடற்கரைக்கு அருகிலுள்ள பண்டகசாலைக்குப் பதிலாகக் கோட்டை ஒன்று கட்டி எழுப்பி யிருக்கிறார்கள். இச் செய்தியை அறிந்து கோட்டையை இடித்தெறிதல் வேண்டும் என்று கட்டளை விடுத்தேன். அதற்குப் பறங்கியர் 'கோட்டையை இடிக்க முடியாது, போருக்கு ஆயத்தம்,' என்று இன்று காலை ஓலை விடுத்திருக்கின்றனர். இப்படி அவர்கள் எம்மைப் போருக்கு அறைகூவி அழைக்கும் போது நாம் சும்மாவிருத்தல் சரியன்று. பறங்கிகள் எம்மைக் கோழை கள் என்று நினைத்தார்களோ? சரி, அவர்களை ஒருகை பார்க்கத்தான் வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?

**(அப்பொழுது பரநிருபசிங்கனும் அப்பாமுதலியும் ஒருவரை ஒருவர் கடைக்கண்ணாற் பார்க்கின்றனர். ஏனையோர் பிரமித்துப் போய் இருக்கின்றனர்.)**

**தனிநா. மு :**

அரசே, யாம் ஒன்றை நினைத்துச் செய்ய இது வேறொன்றாய் விளைந் திருக்கின்றது. அன்று பறங்கியர் வியாபாரஞ் செய்ய உத்தரவு கேட்ட பொழுது தாங்கள் அவரைப் பார்த்து 'நீங்கள் இங்கு வந்த நோக்கம் வியாபா ரமன்று. வேறேதோவாய் இருக்க வேண்டும்' என்று கூறி உத்தரவு கொடுக்க மறுத்தீர்கள். அதுவே சரியென யானும் எண்ணினேன். ஆனால் இங்கிருந்த மற்றையோர் பறங்கியரின் சார்பாய்ப் பேசினர்.

அதனால் நான் வாளா இருந்தேன். தாங்கள் அன்று சொன்னது முழுவதும் சரியென்று இப்பொழுது நிச்சயமாய்த் தெரிகின்றது. பறங்கியர் இங்கு வந்தது வியாபாரத்துக்கன்று. எமது நாட்டைப் பிடித்து எம்மை அடிமைகளாக்கவே. அவர்கள் தந்திரத்தை முன்னரே அறியாதுபோனோம்.

**அடியா. ந.**

எம்மைப் பறங்கியர் பேயர் ஆக்கி விட்டார்.

**தனிநா. மு.**

முற்றிலும் உண்மை. அவர்கள் நெஞ்சுத் துணிவுதான் என்ன? (பல்லை நெறுமுகிறான்)

**சங்கிலி :**

அவையோரே! போரே பறங்கியரின் திமிர்ப்பிற்கு மருந்து.

**அடியா. ந :**

அதுவே சரி. இம்முறை அவருக்கு மன்னாரிலே கொடுத்த குளிகை யிலும் காரசாரமான குளிகை கொடுக்க வேண்டும்.

**அரசகேசரி :**

அரசே, தாங்கள் போரே நிகழ்த்துவதாகத் தீர்மானித்தால், பகைவர் வலுவடையுமுன் அவரை விரைந்து தாக்குதல் வேண்டும்; அப்பொழுதுதான் இலகுவாக வெற்றி கொள்ளலாம்.

"இளைதாக முண்மரங் கொல்க களையுநகர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து."

**சங்கிலி :**

புலவர் சிகாமணியே, இனி நடப்பதை இருந்து பாருங்கள் தமிழரைப் பேடிகள் என்று நினைத்தானோ பறங்கி. யாழ்ப் பாணத்தானின் கையுரம், மல்லி விற்கும் மடையருக்கு விளங்கவில்லை. கடல் கடந்து கடாரங்கொண்ட வீரத்தமிழன் வழித் தோன்றல்கள் நாம். இந்த மேனாட்டு மிலேச்சப் பயல்களைக் கலக்கி அடித்துத் துரத்தாவிடில் நான் தமிழனல்ல, தளபதி இமையாணனாரே!

**இமையா :**

அரசே.

**சங்கிலி :**

உமது படைவீரரின் ஆண்மையைக் காட்டும் நேரம் வந்துவிட்டது. ஆயத்தம் பண்ணும் தமிழன் கைவரிசையின் உருசியைப் பறங்கி ஒரு சிறிது உணரட்டும்.

**இடம் :**

**யாழ்ப்பாணம் பறங்கியர் கோட்டை.**

**(சூசை, உலோப்பே, மிக்கேல் ஆகிய மூவரும் போர்முனையினின்றும் வந்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு தமது போருடையைக் கழற்றுகின்றனர்.)**

**சூசை :**

இன்றைக்கு நடந்த சண்டையிலேதான் நான் மிகவும் களைத்துப்போனேன். சூ, சண்டை தொடங்கிப் பத்து நாட்களாகிவிட்டன. இன்னும் ஒரு முடிவையுங்காணவில்லை.

**உலோப்பே :**

இந்தச் சண்டை முடிந்துவிட்டால் நாம் ஆறுதலாகப் படுத்துறங்கலாம். கோவையிலிருந்து வந்த நாள்தொடக்கம் ஒரே சண்டையாகத் தானிருக்கிறது.

**மிக்கேல் :**

இன்றைக்கு நடந்த போரில் எதிரிகளை ஒருவகையாகத் தோற்கடித்து விட்டோம். இவ்வளவு காலமும் தொல்லைப்பட்டாலும் இன்றைய முடிவு எங்களுக்கு உற்சாகமூட்டக் கூடியதுதானே. நாளைக்குக் கட்டாயம் தமிழ்ச்சேனை முழுவதும் ஓட்டம் எடுக்கும். அப்பொழுதுதான் நமக்கு விளையாட்டு. கொள்ளையடிக்க நல்ல வசதி.

**உலோப்பே :**

நாளைக்கு வருவது நாளைக்கு இப்போது களைத்துப் போனேன். இந்தக் களை நீங்க ஏதும் குடிக்க வேண்டும்.

**மிக்கேல் :**

இந்த நேரம் குடிக்காது போனால் வேறெந்த நேரம் குடிப்பது? (உரக்க) மத்தியாசு மத்தி யாசு.

**உள்ளே :**

ஏன் சிஞ்ஞோர்?

**மிக்கேல் :**

எடே, அந்தச் சாராயப் போத்தலைக் .......... கொண்டுவா.

**சூசை :**

தமிழர் தளபதி இமையாணன் சண்டை போட்டதைப் பார்த்தீர்களோ? என்ன மாதிரி நின்று போர் செய்தான்! அவனுக்கு எதிரே நிற்கமுடியாது எங்கள் தளபதி தொம்பிலிப்புக்கூடப் பின்வாங்கி விட்டார். அவன் போட்ட சண்டை அவ்வளவும் சண்டைதான். என்ன வீரம்! என்ன ஓர்மம்!

**(அப்பொழுது மத்தியாசு சாராயப் போத்தலையும் தமிழரையும் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போகின்றான். யாவரும் சாராயத்தை வார்த்து வார்த்துக் குடிக்கின்றனர்.)**

**மிக்கேல் :**

(செருமிவிட்டு) சாய், கொள்ளையடிக்கிறதைப் பற்றிப் பேசினீர்கள். திருக்கோணாமலையில் நடந்த போரில் நான்சண்டை செய்தேன். போரில்வெற்றி கிடைத்ததும் கொள்ளையடிப்பதற்கு நாங்கள் கூட்டங்கூட்டமாகப் பிரிந்து போனோம். நானும் என் கூட்டத்தாரும் இந்தத் தமிழருடைய கோயிலொன்றுக்குள்ளே போய்ச் சேர்ந்தோம். அங்கே நாங்கள் கண்டதை என்னவென்று சொல்வது! பொன்னாலும் வெள்ளியாலும் உருவங்கள் செய்து வைத்திருந்தார்கள். முத்துக்களாலும் இரத்தினங்களாலும் செய்த நகைகள் எத்தனை! அடடா! அன்றைக்கு அங்கு சென்ற எங்கள் அதிட்டமே அதிட்டம்.

**சூசை :**

உதைச்சொல்லுகிறாய். நீஒருகோயிலைக் கொள்ளையடிப்பதைப் பற்றிப் பெரிதாகப் பேசினாய். நான் எத்தனை கோயில்களில் நடந்த கொள்ளைகளில் பங்குபற்றியிருக்கிறேன் தெரியுமோ? அவ்வளவு பொருளும் இப்பொழுது என் கையில் இருக்குமேயானால் நான் இப்படியெல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காகச்சண்டை செய்து திரியத் தேவையில்லை. போத்துக்கல்லிலே ஒரு கோடிசீமானாய் எல்லாச் சுகங்களோடும் நாட்டு மாளிகையொன்றில் உல்லாச மாகக் காலங் கழிப்பேன்.

**(அப்பொழுது பிரகன்சாவும் யாழ்ப்பாணக் கோட்டைத் தளபதி தொம்பிலிப்பும் வருகின் றனர். அங்கிருந்த மூவரும் எழுந்து மரியாதை செய்கின்றனர்.)**

**பிரக :**

(தொம்பிலிப்பை நோக்கி) சிஞ்ஞோர், இன்றைக்கு ஒருவகையாய்த் தமிழர் படையைத் தோற்கடித்து விட்டோம். யாழ்ப்பாணத்தை முற்றாகக் கைப்பற்றி விடலாம் போல் இருக்கிறது. என்றாலும், என்மனம் மகிழ்ச்சியடையவில்லை.

**தொம் :**

ஏன் சிஞ்ஞோரே?

**பிரக :**

சங்கிலியைச் சண்டையிற் பிடித்து அவனுக்குத்தக்க தண்டனை விதித்தாலே யொழிய என்மனம் ஆறுதல் அடையாது.

**தொம் :**

இவ்வளவெல்லாம் செய்து முடித்து விட்டோம். இனி அவனைப் பிடிப்பது ஒரு காரியமோ? நாளைக்கே அவனைப் பிடித்து உங்கள் கையில் ஒப்படைத்து விடுவேன். அப்பொழுது நீங்கள் அவனை விரும்பிய விதமாகத் தண்டியுங்கள்.

**பிரக :**

அவன் மிகுந்த வீரமுள்ளவன். அதுமட்டுமல்லாமல் மிகுந்த தந்திர புத்தியுமுள்ளவன். ஆகையால் அவனைப் பிடிப்பது நீ எண்ணுவது போல அவ்வ ளவு இலகுவல்ல.

**தொம் :**

அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். புத்திமான் பெலவான் அல்லவோ? எங்களுக்குக் கிடைக்கும் வெற்றிகளுக் கெல்லாம் சரீர பலம் மாத்திரந்தானா காரணம்? ஒரு ஐந்நூறு பறங்கியர் பல ஆயிரக்கணக்கான இந்த நாட்டு மக்களை எப்படி அடக்கி ஆள முடியும்? எங்கள் தந்திர புத்தியினால் தான் இவைகளெல்லாம் வெற்றிகரமாக நிறை வேறுகின்றன. சங்கிலிக்கு மாறாக அவன் சபையிலேயே ஐந்தாம் படையினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உதவியால் பல அலுவல்களை நடத்தி வருகிறோம். நாளைக்குச் சங்கிலியைப் பிடிப்பதற்கும் சூழ்ச்சி செய்திருக்கிறோம்.

**பிரக :**

சங்கிலி நம்முடைய சூழ்ச்சிகளையும் வெல்லக் கூடிய தந்திரசாலி, கவனம். இக்காரியத்தை எப்படிச் செய்து முடிப்பீர்கள்?

**தொம் :**

(அவனுடைய காதுக்குள் ஏதோ சொல்லுகிறான்) தெரிந்ததோ?

**பிரக :**

(தலையை அசைத்துப் புரிந்து) மெத்தச் சரி.

### இடம் :

அரசமாளிகை

**(சங்கிலி கவலையோடு தன் கைகளை முதுகுப் புறமாகக் கட்டிக்கொண்டு அங்கும் இங்கும் உலாவுகின்றான். இராசமாதேவி ஒரு பக்கத்தே நிற்கின்றாள்.)**

**சங்கிலி :**

(இராசமாதேவியைப் பார்த்து) பறங்கியர் என்ன வகையாய்ச் சண்டை செய்கிறார் களப்பா? இப்படியான போரை நாம் முன்பு பார்த்ததில்லை. இப்போது பிரகன்சா என்ற ஒருவன் கோவையிலிருந்து ஒரு புதிய பறங்கிப் பட்டாளத்தோடு வந்திருக்கின்றான். அந்தப்பட்டாளத்தார்கையாளும்போர் முறைகள் மிகவும் புதுமையானவை. இனி யாழ்ப்பாண எப்படித் தப்பப் போகிறதோ? கடவுளுக்குத்தான் தெரியும்.

**இராசமாதேவி :**

என்றாலும் மனத்தைரியத்தைக் கைவிடக்கூடாது. வீரமாகாளி கட்டாயம் துணை செய்வாள். இறுதியில் வெற்றி எங்களுக்கே.

**(அப்பொழுது அங்கயற்கண்ணி ஓலைச்சுருள் ஒன்றுடன் வருகின்றாள்.)**

(ஓலைச்சுருளை இராசமாதேவியிடம் கொடுத்து) இந்த ஓலைச்சுருளைத் தங்களிடம் கொடுக்கும்படி வடிவழகி தந்துவிட்டுப் போகின்றாள்.

**இராசமாதேவி :**

என்ன? ஓலைச் சுருளோ? (அதை வாங்கித் தனக்குள்ளே படிக்கின்றாள். அப்பொழுது அவள் முகத்தில் வாட்டமும் வெகுளியும் கலந்து தோற்றுகின்றன. உடனே அரசன் கையில் அச்சுருளைக் கொடுக்கின்றாள். அவன் அதைத் தனக்குட் படிக்கின்றான். அவன் முகத்தில் வெகுளிக்குறிகள் தோற்றுகின்றன. ஒன்றும் பேசாது அங்கும் இங்கும் உலாவுகின்றான். அப்போது வீரமாப்பாணன் உள்ளே வருகின்றான். இருவரையும் குறிப்பாய் நோக்குகின்றான்.)

**வீரமா :**

ஏன் ஒருவகையாய் இருக்கிறீர்கள்? என்ன சங்கதி?

**(அரசன் ஒன்றும் பேசாது அவனிடம் ஓலைச்சுருளைக் கொடுக்கின்றான். அவன் அதைக் கூர்ந்து படிக்கின்றான்.)**

**வீரமா :**

(ஆறுதலாய்) இதைப்பற்றி ஏன் கவலை? வேண்டிய நடவடிக்கை எடுத்தால் எல்லாம் சரியாய்ப் போகும். அந்த வேலையை என்னிடம் விடுங்கள். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். (திரும்பி இராசமாதேவியைப் பார்த்து) தேவி, கவலை வேண்டாம்.

**இடம் :**

**நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசற்புறம்.**

**(யாழ்ப்பாணத்து நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசற்புறத்துப் பலவீரர் போருக்கு ஆயத்தராய் அணிவகுத்து நிற்கின்றனர். தமிழ்ப்படையின் முன்னணியில் சங்கிலி, இமையாணன், அப்பாமுதலி, அடியார்க்கு நல்லான், தனிநாயகமுதலி, வீரமாப்பாணன் ஆகியோர் நிற்கின்றனர். ஒருபுறத்தே தொம்பிலிப்பும் வேறு பறங்கியர் நால்வரும் நிற்கின்றனர். அப்பொழுது காக்கை வன்னியன் போர்க்கோலமின்றிச் சாதாரண உடையோடு அங்கு வருகின்றான். அரசனைக் கண்டதும் அவன் விரைந்து செல்கின்றான்.)**

**சங்கிலி :**

(காக்கைவன்னியனைக் கண்டதும் அவனைத்தழுவுபவன்போலப்பாசாங்கு செய்து) வன்னியனாரே, இப்போதுதான் ஊர்காவற்றுறையிலிருந்து வந்தீரோ? நல்ல தருணத்தில் வந்துவிட்டீர். உமது படைவீரர் எங்கே?

**காக்கைவன்னியன் :**

அரசே, தீவுப்பகுதியில் விடாமழையும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டபடியால் நான்வரப்பிந்திவிட்டது. என்சேனைகள் யாவும் ஆனைக்கோட்டைக்கு இப்பால் வந்துவிட்டன.

(வன்னியன் அரசனைக் கட்டியணைப் பவன் போல் இறுகப் பிடித்துக் கொள் கிறான். சங்கிலி அவன் பிடியினின்றும் விலகப் பார்க்கிறான். இவர்களிருவரும் இவ்வாறு மல்லுக்கட்டும் போது பறங்கிவீரர் ஓடி வருகின்றனர். அவருள் ஒருவன் கையில் விலங்கொன்று இருக்கின்றது.)

**இமையா :**

(அதைக் கண்டு) பிடியடா பறங்கிகளை.

**(ஒரே குழப்பம். இமையாணன் பறங்கியர் தளபதி தொம்பிலிப்பைப் பிடித்துத் தளையிடு கின்றான். வீரமாப்பாணன் காக்கைவன்னியன் பிடியினின்றும் அரசனை விடுவிக்கின்றான். பின் காக்கை வன்னியனோடு சண்டையிட்டு அவனை நையப்புடைத்துப் பற்றித் தளையிடுகின்றான். அதைக்கண்ட பறங்கியர் பயந்து ஓடுகின்றனர். அவரைத் தமிழர் வீரர் சிலர் விரட்டிக் கலைக்கின்றனர்.)**

**சங்கிலி :**

(காக்கைவன்னியனை நோக்கி) காக்கை வன்னியனாரே! நீர் உமது நண்பனாகிய எனக்கும் உமது நாட்டிற்கும் செய்த தொண்டு மிக மெச்சத்தக்கது. (காக்கைவன்னியன் தலைகுனிந்து நிற்கின்றான். சங்கிலி அங்கு நின்றவரைப் பார்த்து) இத்தமிழர் பெருந்தகையும், இந்த யாழ்ப்பாணத்திலே உயர் குடியிற் பிறந்து உயர் நிலையில் அமர்ந்திருக்கும் பெரியார் பலரும் எமது நாட்டுக்கும் எமது மக்களுக்கும் ஆற்றிய தொண்டு நன்று! நன்று!! கடந்த பத்து நாளாகப் பறங்கியரோடு கடும்போர் புரிந்தோம். வீரமாகாளி அம்மன் கோயிலின் முன்னே உள்ள வெளியிலே மக்களின் இரத்தம் ஆறாய்ப் பெருகியது. ஏன்? எமது நாட்டிலிருக்கும் யோக்கியர் சிலர் தம்மையும் தமது குடும்பங் களையும் உயர்த்துவதற்கு எடுத்த முயற்சியாலன்றோ? இந்த யோக்கியர் தமது நலத்துக்காக எமது நாட்டைப் பறங்கிக்கு விற்க முயன்றனர். ஆனால் இறைவனருளால் எமது வீரர்கள் அவர்கள் முயற்சியைத் தடுத்து விட்டனர்.

(அப்பொழுது அப்பாமுதலி அவ்விடத் திலிருந்து நழுவப் பார்க்கின்றான். ஆனால் இமையாணன் அவனைப் போகவிடாது தடுக்கிறான்.) நம் நாட்டு மக்களைக் கொன்றவர் பறங்கியரல்லர். (அப்பா முதலியைச் சுட்டிக் காட்டி) இந்தத் துரோகியும் இவனைச் சேர்ந்த வர்களுமே. இவர்களைப் பிடித்து விசாரணை செய்தல் எம் கடன். மேலும் இந்த நாட்டின் நலத்தைப் பாதிக்கும் வகையில் ஏதோ சூழ்ச்சி நடந்து வருவதாக நான் நெடுநாளாக ஐயுற்றிருந்தேன். நேற்று இரவு எனது கைக்கெட்டிய ஓலை ஒன்றால் சூழ்ச்சிகளெல்லாம் வெளியாயின. அப்பாமுதலியும் பரநிருபசிங்கரும் இச் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர் இருவரும் இவன் (காக்கைவன்னியனைச் சுட்டிக்காட்டி) உதவியினால் பறங்கிப் படை இங்குவர ஒழுங்கு செய்தனர். யாழ்ப்பாண மக்களின் வீரத்தாலும் அவர்களின் சுயநல மற்ற தியாகத்தாலும் பறங்கியர் கையினின்றும் எமது நாடு தப்பியது. யாழ்ப்பாணம் ஓங்குக! தமிழ் மக்கள் வாழ்க!

**(அப்பாமுதலிக்கும் தளையிடுகின்றனர்.)**

**வீரமா :**

பரநிருபசிங்கரையும் கைது செய்தல் வேண்டும், அரசே!

**சங்கிலி :**

அவரோ என் அண்ணனார். முடிக்கு ரியவர். அதைப்பற்றி யான் ஒன்றும் கூறேன். உங்கள் விருப்பம்.

■

**உறுப்பு III**

**களம் 6**

**இடம் :**

**நல்லூர்த் தெரு**

**(நல்லூர்த் தெருவில் மக்கள் குழுமி நிற்கின்றனர். வள்ளுவர் தலைவன் அங்கு வந்து பறையறைந்து பின்வருமாறு விளம்பரம் செய்கின்றான்.)**

அகோ கேளும், மகாசனங்களே!

பூதலத்து வேந்த ரெல்லாம் பணியுஞ் சீலன்
பொங்கி வரும் பகையரசர்க் கால காலன்
மாதவர்கள் புகழ்ந்துமிக வாழ்த்தும் வள்ளல்
மருவுகலை யானவெல்லா மறிந்த மேலோன்
ஆதுலரை அளியுடனே புரக்கும் கோலோன்
அன்புடனே குடிகளெல்லாம் போற்று மண்ணல்
தீதிலறம் யாவையுமே புரந்து போற்றித்
திண்மையொடு தமிழ்மக்கள் திறமைகாத்த

இராசாதி ராச இராச கம்பீர
இராச உத்தண்ட இராச மார்த்தாண்ட
பராரி கேசரி பறங்கிசன கோளரி
ஈண்டு புகழ் வான்மதி
ஈழமண்டல பூபதி
சகராச சேகரன்
தமிழர் தங் கோமகன்
சங்கிலி மகாராச நிருபேந்திரனுக்கு
வெற்றி வெற்றி!

**(நிறுத்திப் பறை அறைகின்றான்)**

மன்னர்க்கு மன்னவன் மகிபாலர் சேகரன்
மகிமையொடு மேதினியை மாண்பாய்ப் புரப்போன்
தருமமிகு செகராச சேகர னெனும் பேர்
மண் மீது கொண்டவன் மருவரிய சங்கிலி
மகாராசன் ஈண்டு
பொன்னாட்டிற்குவமைபெறு புனிதநன் னாடாம்
மன்னுபுகழ் யாழ்ப்பாண மருவு மாந்தர்க்குக்
கொண்ட பெருமன்போடு கொடுப்பனிச் செய்தி.

**(நிறுத்திப் பறை அறைகின்றான்)**

**மக்கள் :**

அஃதென்ன?

**வள்ளுவர் தலைவன் :**

அஃதெப்படி யென்றால்.,
மன்னுமெம் நாட்டில் வாழ் மாண்புடைக்குடிகாள்!
துன்னியே புவியினிற் றுகளிலீர் வாழி,
அண்டியென் னவைக்களத் தளியுட னுமையான் கண்டுசில செய்திகள் கழறிட விழைந்தேன்.

அதனால்,
ஆருயிர் போலுமென் னன்புடை மாந்தர்காள்
நாளையெம் மலைக்களம் நாடுவீர் விழைந்தே.

**(நிறுத்திப் பறை அறைகின்றான்)**
**(அதைக்கேட்டு)**

**முதலாம் ஆள் :**

என்ன சங்கதியோ?

**இரண்டாம் ஆள் :**

ஏதோ பறங்கியரைப் பற்றி இருக்கலாம்.

**மூன்றாம் ஆள் :**

இருக்காது, பறங்கிதான் தொலைந்து விட்டானே, வேறென்னவாயிருக்கும்?

**நான்காம் ஆள் :**

சரி, நாளைக்குப் போய்ப் பார்க்கலாம் அரசன் அவைக்களத்தில்.

**உறுப்பு III**

**களம் 7**

**இடம் :**

**நல்லூர் அரசன் அவைக்களம்**

**(தனிநாயக முதலி, அடியார்க்கு நல்லான், இமையாணன் ஆகியோர் தங்கள் வழக்கமான இடங்களில் அமர்ந்திருக்கின்றனர் பொதுமக்கள் அங்கு கூடி நிற்கின்றனர். யாவரும் அரசன் வரவை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.)**

**கட்டிய :**

(அங்கு வந்து) இராசாதிராசன், இராசமார்த்தாண்டன், இராசகம்பீரன், சங்கிலி மகாராசா சபைக்கு வருகின்றார். எச்சரிக்கை, பராக்கு.

**(அதைக் கேட்டதும் அங்குள்ளோர் யாவரும் அவைக்கள வாயிலை நோக்குகின்றனர். சங்கிலி அரச உடையின்றிப் பொதுவான உடையில் வருகின்றான். அரசன் அங்ஙனம் வருவதைக் கண்டதும் அங்குள்ளோர் யாவரும் மிகுந்த வியப்பெய்தி நிற்கின்றனர். அவைக்களத்தே அமர்ந்திருந்தோர் எழுந்து பணிவோடு நிற்கின்றனர். சங்கிலி அரசுகட்டிலின் அருகு போய் நிற்கின்றான். வீரமாப்பாணனும் வந்து நிற்கின்றான்.)**

சங்கிலி :

(நின்ற வண்ணம் தலை சாய்த்து அவைக்களத்தோரையும் அங்கு கூடி நிற்கும் மக்களையும் வணங்கிவிட்டு) அவைக்களத்துப் பெரியோரே! அன்பார்ந்த முதுகுடி மக்களே! நாட்டை நீதிமுறை தவறாது ஆளுதலே அரசராயினோர் கடன். அதற்கிணங்கவே நானும் பெருமையும் தொன்மையும் வாய்ந்த இவ் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பல ஆண்டுகளாக என்னால் இயன்ற வரை நீதி வழுவாது ஆண்டு வந்துள்ளேன்'. பெருங்குடி மக்களே! உங்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்றதினாலேயே யாழ்ப்பாணத்தரசன் ஆணைச்சக்கரம் செவ்வனே உருண்டு செல்லக்கூடியதாக இருக்கின்றது. 'பகைமை என்னும் சேற்றில் அகப்பட்டுத் தவிக்கிறேன் உதவி புரியுங்கள்' என அலறினேன். அதனைக் கேட்டு உள்ளம் உவந்து எனக்கு உதவி புரிந்தீர்கள்.

வாழ்க நும் தடந்தோள்!

அவைக்களத்துப் பெரியோரே! அரசாங்க அலுவல்களில் எனக்குத் துணை புரிபவர் போல நடித்த சான்றோர் பலரை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் எத்தகைய சான்றோர்களென்பதையும் தம் சூழ்ச்சிகளால் எம் நாட்டை விற்று எவ்வகையில் பெருமையடைந்திருக்கிறார்களென்பதையும் உலகறிய எடுத்துக் கூறுவதற்கே இந்த அவையை முரசறைந்து கூட்டினேன். நான் கூறப்போகும் வார்த்தை களைக் கூர்ந்து கவனித்துக் கேளுங்கள். உங்கள் அமைச்சர்கள் இராசவிசுவாசம் பொங்கி வழியும் அமைச்சப் பெருந்தகையினர் - ஆற்றிய அரும்பணிகளை நீங்கள் கட்டாயம் அறிதல் வேண்டும். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறுகின்றேன், கேளுங்கள். முதலாவதாக யாழ்ப்பாண நாட்டின் பண்டைப் பகைவராகிய வன்னியரை எமக்கு மாறாகக் கிளம்பும்படி தட்டி விட்டார்கள். இரண்டாவதாக நமது இராச்சியத்திலே உள்நாட்டுக் கலகங்களை மூட்டுதற்குச் சூழ்ச்சி புரிந்தார்கள். அம்முயற்சிகள் யாவும் கல்லிலே போட்ட மட்கலம் போலத் துண்டுதுண்டாகச் சிதறிப் போயின; அங்ஙனம் சிதறவே 'அஞ்சி வந்தோம், தஞ்சம், எம்மைக் காத்தருள்க' என்று கூறிப் பறங்கியரின் காலிலே போய் வீழ்ந்தார்கள். அதன் பின் நடந்ததை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் கபட நாடகத்தால் சொல்லொணாத் துன்பம் அடைந்தோம், ஆயினும் ஒருவாறு பறங்கியரைத் துரத்தி விட்டோம், இப்பெரியார்கள் செய்த சூழ்ச்சியைப்பற்றி நான் மனம்போனவாறு கூறுகின்றேன் என எண்ண வேண்டாம். இதோ என் கையிலிருக்கும் ஓலைச்சுருளே யாவற்றிற்கும் சான்று. இது பரநிருபசிங்கர் அப்பாமுதலிக்கு எழுதியது. பறங்கியருக்கு எம்மையும் எமது சுதந்திரத்தையும் விற்பதற்கும், வன்னியரை அதற்குப் பக்கபலமாக அமைப்பதற்கும் இவர்கள் செய்த சூழ்ச்சிகள் இதில் அடங்கியுள்ளன. நீங்களே படித்துப் பாருங்கள். (ஓலையைத் தனிநாயக முதலியின் முன்னே வைக்கிறான்.)

யாழ்ப்பாணத்தரசு இப்பொழுது மீண்டும் வெற்றியுடனும் பெருமையுடனும் தலை தூக்கி நிற்கின்றது. இங்ஙனமே இவ் அரசு என்றும் பெருமையோடு திகழவேண்டும் என்பதே எனது வேணவா. நாட்டில் அமைதி நிலவும் இவ்வேளையில் நான் நெடுங் காலமாக என் மனதிற் கொண்டிருந்த ஆவலை நிறைவேற்ற விரும்பிகின்றேன். அதற்கு உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன். இப் போதே இவ்வரச பாரத்தை என் தலையினின்றும் இறக்கி ஓய்வெடுக்கின்றேன். எனக்குப் பதிலாக என் மகன் புவிராச பண்டாரத்தை அரசனாக ஏற்றுக் கொள்ளுங்கள். யாழ்ப்பாண அரசு நீடூழி வாழ்க!

**(சங்கிலி போகின்றான். அங்குள்ளோர் யாவரும் திகைத்துப் போய் நிற்கின்றனர்.**

**தனிநாயக முதலியும் வீரமாப்பாணனும் தலைகுனிந்த வண்ணம் வெளியே போகின்றனர். ஏனைய மந்திரி பிரதானிகள் அவரைத் தொடர்கின்றனர். அங்கு நின்ற பொதுமக்கள் கலங்கி நிற்கின்றனர்.)**

**முதலாம் ஆள் :**

எங்கள் அரசன் போய்விட்டான். எங்களைத் தாய்போற் பாதுகாத்த பெருந்தகை போய் விட்டான். இந்நாட்டை இனி யார் அவனைப் போல ஆளப்போகின்றார்?

**இரண்டாம் ஆள் :**

தமிழரைக் காத்த தமிழர் பெருமகன்.

**மூன்றாம் ஆள் :**

இனி எம் கதி என்னவாகுமோ? தெற்கே வன்னியரும் சிங்களவரும்., வடக்கே நாயக்கர்., நாலாப்பக்கமும் பறங்கியர்; இந்நிலையில் காலைக் கையை நீட்டி உறங்குவதெப்படி?

**நான்காம் ஆள் :**

நிறத்து. என்ன பயம். தமிழன் வீரமரபில் தோன்றியவன். அச்சம் என்பதை அறியான். போர் என்றால் தோள் புடைத்துக் களித்து நிற்பவன். பொருதுவதற்குப் பகைவரில்லா விட்டால் உள்ளம் கவலுகின்றவன். அம்மரபிலே தோன்றிய யாழ்ப்பாணத் தவரும் பகைவருக்கு அஞ்சுபவரோ?

**முதலாம் ஆள் :**

உண்மைத் தமிழன் தன் நலம் கருதி யாரை யாவது பின் சென்று தொழுது நின்றவனோ? யாழ்ப்பாண நாட்டுக்கு வந்த கேடு யாரால் வந்தது? இத்துரோகிகளே யாழ்ப்பாணத்துக்கு வந்த அல்லல் யாவற்றிற்கும் காரணர்.

**இரண்டாம் ஆள் :**

நீ சொல்வது உண்மையே. இவர்கள் போன்றவரால் யாழ்ப்பாணம் இன்னும் என்ன என்ன இன்னலை எய்துமோ? பறங்கியருக்கு மட்டுமன்று; இன்னும் எத்தனை சாதியினருக்குத் தம் நலத்திற்காக எம் நாட்டை விற்க இருக்கின்றாரோ? நாம் அறியோம். என்றாலும் (தன் கையை இறுகப்பொத்தி உயர்த்திக்காட்டி) எமது உடலில் ஒரு துளி! இரத்தம் இருக்கும்மட்டும் எமது நாட்டைப் பிறர் கையிற் போக விடமாட்டோம். இந் நயவஞ்சகரை முறியடிப்போம். இறுதியில் வெற்றி காண்போம்.

வீரத்தமிழன் வாழி.
யாழ்ப்பாணம் வாழி.

**திரை**
**மூன்றாம் உறுப்பு முற்றும்**

நாமகள் நலன்கள் நல்க நல்லிசைப் புலவ ரோங்க
பூமகள் பொலிந்து பொங்கப் பொருவில்யாழ்ப்பாணம் வாழ்க.

கோமகன் சிங்கையார்யன் குரிசில்சங் கிலிதன் கூத்தை
ஏமமாய்ப் பார்ப்போர் கேட்போர் இன்புற்று வாழ்க மாதோ.

**சங்கிலி முற்றும்**

# முத்தமிழ் விழாவின் பிரதமவிருந்தினர்கள்

**பேராசிரியர் முனைவர் சி. பத்மநாதன் அவர்கள்**

(வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**திருமதி பத்மலீலா பத்மநாதன் அவர்கள்**



பேராசிரியர் கலாநிதி பத்மநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் அராலியிலே பிரபல்யம் பெற்ற "எம். எஸ். மாஸ்ரர்" என்று அழைக்கப் பெற்ற மார்க்கண்டபிள்ளை சிவசுப்பிரமணியம் பி. ஏ. (லண்டன்) அவர்க ளுக்கும் சிவபாக்கியம் அவர்களுக்கும் மகனாக 1940 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 20 ஆம் நாள் பிறந்தார். ஆரம்பக்கல்வியை ஊரிலுள்ள சரஸ்வதி வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்று இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று அங்கே வரலாற்றுப் பாடத்தைச் சிறப்புப்பாடமாகக் கற்று 1963 இல் முதல் வகுப்பில் சித்திபெற்றார். இலண்டன் பல்கலைக்கழகம் சென்று 1969 இல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே 1986 - 1994 காலகட்டத்திலும் 1999 - 2006 காலகட்டத்திலே பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணி புரிந்தார். 1994 - 1999 காலகட்டத்தில் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவராகப் பணியாற்றியுள்ளார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழான புலமைவாய்ந்த பேராசிரியர் இரண்டு மொழிகளிலும் எழுதினார். The kingdom of Jaffna Part 1 (1978), வன்னியர் (1970), இலங்கையில் இந்து கலாசாரம் (2000), இலங்கையில் வன்னியர் (2003), ஈழத்து இலக்கியமும் வரலாறும் (2004), இலங்கையில் இந்துசமயம் (2004), இலங்கையில் இந்து ஆலயங்கள் (2006), இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் (2006), யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்கவரலாறு (2011) என்பன நூல்கள் எனும் வகையிற் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டவை. ஏனையவை இந்து கலாசாரத் திணைக்களத்தினால் வெளியிட்டவை.

'தொகுப்பும் செவ்விதாக்கமும்' என்ற வகையில் இந்துக் கலைக்களஞ்சியங்கள் பன்னிரண்டு தொகுதிகளும், இந்து கலாசாரக் கட்டடங்களும் சிற்பங்களும் பாகம் I (2002), இந்து கலாசார நடனங்களும் ஓவியங்களும் பாகம் II (2003), இந்து ஆலய கட்டடங்களும் சிற்பங்களும் (2010), அடங்குகின்றன. இந்துக் கலைக் களஞ்சியங்கள் 1992 ஆம் ஆண்டிற்கும் 2014ஆம் ஆண்டிற்கும் இடையில் வெளிவந்தவை. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இவற்றை வெளியிட்டது. இவற்றின் பிரதம பதிப்பாசிரியர் பேராசிரியர் பத்மநாதன் அவர்களாவார்.


பேராசிரியர் பல்கலைக்கழக மாணவராக இருந்த காலத்திலேயே தமது எழுத்துப் பணியைத் தொடங்கியமைக்கான சான்றுகளாக "இந்து சமயமும் சமரசமும் (1960 - 1961)", "Hinduism and Indian Renaissance (1961 - 1962)", "Hindu Civilization in the Gupta Period ((1962 - 1963)" என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை அக்கால 'இந்து தர்மம்' என்ற ஆண்டிதழில் வெளிவந்தவை. அக்கால சுதந்திரன் பத்திரிகையிலும் 'அசோக தர்மம்' என்ற

தலைப்பில் எழுதியிருக்கிறார். 1969 ஆம் ஆண்டு 'மோரியர் கால கலாசாரம்' பற்றித் தினகரன் பத்திரிகையில் எழுதியுள்ளார். இவை போல பிற்காலத்தில் எழுதப்பட்டவற்றையெல்லாம் தொகுத்து வெளியிடுவது பயனுள்ள முயற்சியாகும்.

### திருமதி பத்மலீலா பத்மநாதன்

தற்போது தகைசார் பேராசிரியராகவும் கிழக்குப் பல்கலைக்கழக வருகைதரு பேராசிரியராகவும்கல்விசார்மதியுரைஞராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நான்காவது வேந்தராகவும் உயர்மட்ட நிலையில் பணியாற்றும் பேராசிரியர் கலாநிதி பத்மநாதன் அவர்களின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் பல்லாண்டுகளாகப் பக்கபலமாக இருப்பவர் அவரின் அருமைப்பாரியாராகிய ஸ்ரீமதி பத்மலீலா பத்மநாதன் அவர்களாவர். இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நவராசா நாகேஸ்வரி தம்பதியினர்க்குப் புதல்வியாக 1947 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் முதலாம் நாள் பிறந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர் தரம் வரை கற்றவர். ஹரிஹரன், சுதர்ஷினி, சிவதர்ஷனி, ஸ்ரீஹரன்,சிவசங்கர் ஆகிய ஐவரும் இவர்களது நன்மக்கள். இவர்கள் துணையிருக்க பேராசிரியருக்கு ஒரு குறையுமில்லை. 2004 இல் வெளிவந்த "பத்மம்" பணிநயப்புமலர் (Felicitation volume) பேராசிரியருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஓர் அரிய பொக்கிஷம். பிரதம விருந்தினர்கள் பல்லாண்டு உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து பணிபல புரிய இறையருள் கிட்டுவதாக.

**பேராசிரியரின் பணிநயப்பு மலரும் அவரது பதிப்பு முயற்சிகளில் சிலவும்**












## முத்தமிழ் விழாச் சிறப்பு விருந்தினர்

**செல்வி சவுந்தராம்பிகை கணபதிப்பிள்ளை,**

ஆசிரியை, பெல்வோர் (Belvoir) சர்வதேசப் பாடசாலை, பம்பலப்பிட்டி



சவுந்தராம்பிகை ஆசிரியை அவர்கள் பேராசிரியர் கணபதிப் பிள்ளை மனோன்மணி தம்பதியினர்க்கு இரண்டாவது புதல்வியாக 1943 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 22 ஆம் நாள் மட்டக்களப்பில் பிறந்தார். தமது முதலாவது புதல்வருக்குப் புதல்வரின் பாட்டனாரின் பெயரை வைத்த பேராசிரியர், இரண்டாவது புதல்விக்குத் தமக்கிருந்த கலைகளின் மீதான ஈடுபாடு காரணமாக இப் பெயரை வைத்திருக்கலாம் என்று தெரிகிறது. சவுந்தராம் பிகையவர்கள் கொழும்பு - 07 இல் உள்ள மகிளிர் கல்லூரியில் பயின்று, 1963 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, 1967 ஆம் ஆண்டு தமிழ் சிறப்புக் கலைப்பட்டதாரியானார். ஆங்கிலம் இவரின் துணைப்பாடம். பல்கலைக்கழகத்திலே பேராசிரியர்களான வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், ஆ. சதாசிவம், ச. தனஞ்சயராசசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை, பொ. பூலோகசிங்கம் ஆகியோரிடம் கற்றார். தாம் கல்வி கற்ற பாடசாலையிலேயே கற்பித்து இளைப்பாறினார். தற்போது பம்பலப்பிட்டியில் உள்ள பெல்வோர் சர்வதேசப் பாடசாலையில் (Belvoir, International School) ஆங்கில இலக்கியம் கற்பித்து வருகின்றார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் காலஞ்சென்று அரை நூற்றாண்டு கடந்த நிலையில் அவரையும் அவரது பணிகளையும் எம்மவர்க்கு நினைவுபடுத்தும் சந்தர்ப்பம் பேராசிரியரது அரும்புதல்வியாகிய சவுந்தராம்பிகை மூலமாக ஏற்பட்டமையினைப் பெரும்பேறாகக் கருதி அவர் பல்லாண்டு ஆரோக்கியமாக வாழ்ந்து பணி பல ஆற்ற எமது பிரார்த்தனைகளும் வாழ்த்துக்களும்.

- முன்னோரை மறவாதிருப்போம்; ஏனெனில் அவர்களின் தோள்களிலே தான் நாங்கள் நிற்கின்றோம்.
- உன்னைப்பற்றி அடிக்கடி விசாரித்துக்கொண்டிருப்பவன் உன் வளர்ச்சியில் துவேஷம் கொண்டவன்.

# முத்தமிழ் விழா சிறப்பு விருந்தினர்

**திரு. தம்பு சிவசுப்பிரமிணயம் (தம்பு சிவா), தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்**



ஆற்றல் மிக்க படைப்புலக மேதையும் சிறந்த இடது சாரிச் சிந்தனையாளருமான திரு தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாணத் திலுள்ள இணுவில் கிராமத்தில் 1944ஆம் ஆண்டுமாசித்திங்கள்24ஆம் நாள் தம்பு - தையல் நாயகி தம்பதியினரின் மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையிலும் இடைநிலைக்கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றார். கற்கும் காலத்திலேயே பேச்சுக்கலையையும் வளர்த்துக் கொண்டார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் எழுது வினைஞராகத் தொழிலை ஆரம்பித்த இவர் தம்மை அரசாங்க இலிகிதர் சேவைச் சங்கத்தில் சேர்த்துக்கொண்டு தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர். அரச சேவையில் இருந்து கொண்டு பொதுச் சேவையிலும் தம்மை இணைத்துக் கொண்டார். இவர் தில்லைநாயகம் பாக்கியலட்சுமி தம்பதியினரின் மகளான ராதாரதேவி அவர்களை மணம்செய்தார். மாதுமை, மாதங்கி இவரது புதல்வியர்.


இவர் தலைசிறந்த பேச்சாளர் மாத்திரமின்றி எழுத்தாளரும்கூட 1970 ஆம் ஆண்டு 'கற்பகம்' என்னும் இலக்கியச் சஞ்சிகைமூலம் எழுத்துலகில் கால் பதித்த தம்பு சிவா அன்று தொடக்கம் இன்றுவரை தமது எழுத்துப் பணியைத் தொடர்ந்துகொண்டிருக்கின்றார். சிறுகதை, கட்டுரை, கவிதை, பத்தி, திறனாய்வு என்று பல துறைகள் சார்ந்து எழுதி வருகின்றார். அரும்பு, அருச்சுனா, மல்லிகை, ஞானம், ஜீவநதி, தமிழ்த் தென்றல் முதலான சஞ்சிகைகளிலும் இலங்கையிலுள்ள அனைத்துப் பத்திரிகைகளிலும் எழுதி வருகின்றார். 'தம்பு சிவா' என்ற பெயரில் பிரபல்யமாகிய இவர் தேடலோன் இணுவை வசந்தன், சிவசிவா, செங்கோடன், அருந்தவன் ஆகிய புனை பெயர்களிலும் எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் சிறுகதைத் தொகுப்புக்களாகவும் கட்டுரைத் தொகுப்புக்களாகவும் வெளிவந்துள்ளன. இந்திய நியூபுக் சென்சுரி நிறுவனத்தினர் இவரது 'சொந்தங்கள்' (சிறுகதைத் தொகுதி), முற்போக்கு இலக்கியச் செம்மல்கள் (கட்டுரைத் தொகுதி) எனும் இரண்டு நூல்களையும் மீள்பதிப்புச் செய்து வெளியிட்டுள்ளனர். 'முதுசம்' என்பது இவரது இன்னொரு சிறுகதைத் தொகுதி.

1985 ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அவர் அக்காலத்தில் இருந்து முன்னரை விடத் தம்மை பொது சேவையில் ஈடுபடுத்தி மனித நேயம்மிகுந்தவராக நம் மத்தியில் திகழ்கின்றார். மல்லிகை சஞ்சிகை 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் தம்பு சிவாவை அட்டைப்படத்திற் போட்டுக் கௌரவித்துள்ளது. 'இணுவில் ஒலி' எனும் பெயரில் சஞ்சிகையை வெளியிட்டு அதிலே இலங்கை, இந்திய எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் சர்வதேசப் பெரியார்களையும் நம்மவர்க்கு அட்டைப்படங்களிலும் அறிமுகம் செய்தும் தமது ஆசிரியப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். பல எழுத்தாளர்கள் இவரது சஞ்சிகையினைக் களமாகக் கொண்டு இலக்கியப் பணிகளை மேற்கொள்கின்றனர். இதுவரை 30 இவரது தாயக ஒலிகள் வெளிவந்துள்ளமை தம்பு சிவாவின் அரிய சாதனையே எனலாம். கொழுத் தமிழ்ச்சங்கத்தின் தலைமைப்பதவியில் இருந்து கொண்டு தமது பொதுப்பணிகளை ஆற்றிவரும் தம்பு சிவாவின் பணிகளுக்கு எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# முத்தமிழ் விழாவில் கௌரவிக்கப்பெறுபவர்

**பேராசிரியர் முனைவர் துரை. மனோகரன் அவர்கள்**

(மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்)



முனைவர் துரை. மனோகரன் அவர்கள் யாழ் உரும்பிராயில் துரை ராஜா அருந்தவமணி தம்பதியினரின் தலைமகனாக 1947 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 28 ஆம் நாள் பிறந்தார். மனோகரன் என்பது இவரின் இயற்பெயர். தந்தையாரின் பெயரின் முன்னொட்டான 'துரை' என்பதினைத் தமது பெயரின் முன்னால் வைத்து வழங்கிவருபவர். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உயர்தரம் வரை கற்றுத் தேறி, பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி அங்கு தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுச் சிறப்புச் சித்தி பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது முதுகலைமாணி. பின்னர் 'பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும்' எனும் பொருளில் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றவர். யாழ் பல்கலைக்கழகத் தற்காலிகத் துணைவிரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழக நிரந்தரத் துணைவிரிவுரையாளர், விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், பேராசிரியர், துறைத்தலைவர் என்று பதவி உயர்வு பெற்றவர். பதவி ஓய்வு நிலையில் தற்போது பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பனவற்றின் வருகைதரு பேராசிரியராக (Visiting Professor) பணியாற்றுகின்றார்.

இவர் சிறந்த பேச்சாளர், கவிஞர், சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர், நாடகாசிரியர், பத்தி எழுத்தாளர், ஆய்வாளர், ஞானம் இதழில் கடந்த 17 ஆண்டுகளாக "எழுதத்தூண்டும் எண்ணங்கள்" எனும் தலைப்பில் எழுதி வருகின்றார். இலங்கை வானொலி மலையக சேவையில் பல ஆண்டுகள் வாரந்தோறும் 'கலையமுதம்' என்ற கலை இலக்கிய நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர். இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வாளராகக் கலந்து ஆய்வுக்கட்டுரைகள் வாசித்தவர்.


பாவையின் பரிசு (நாவல்), இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி (இலக்கிய வரலாற்று நூல்), ஈழத்து இலக்கிய தரிசனம், பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும், பழம்புனலும் புதுவெள்ளமும் எனும் நூல்களின் ஆசிரியர். பேராசிரியரின் பணிகளுக்குப் பக்கபலமாக இருக்கும் இவரின் பாரியார் திருமதி கனகாம்பிகை துரை. மனோகரன் அவர்கள் பற்றியும் கூறுவது சிறப்பானது யாழ்ப்பாணம் - ஊரெழுவில் சதானந்தன் இலட்சுமிப்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வியாகப் பிறந்த யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானார். அங்கே பொருளியலைச் சிறப்புப் பாடமாகக் கற்றுச் சிறப்புச் சித்தி பெற்றார். கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். தமது கணவரதும் மகனான நவீனன் அவர்களதும் உயர்வுகளுக்கு




மிகவும் உறுதுணையாக இருந்துவருகின்றார். இவர்களின் ஏகபுதல்வரான நவீனன் அவர்கள் கண்டி திரித்துவக் கல்லூரியின் பழைய மாணவர். ஊவாப் பல்கலைக்கழக விஞ்ஞானமாணிப்பட்டதாரி. நோர்வேப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை மேற்கொள்கின்றார்.

இவர்களின் துணையுடன் பேராசிரியர் துரைமனோகரன் அவர்கள் குடும்ப சேமத்துடன் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப் பணியாற்ற எல்லாம்வல்ல வித்தக விநாயகர் அருள்புரிவாராக.


## பேராசிரியரின் நூல்கள் சில










# முத்தமிழ் விழாவில் கௌரவிக்கப் பெறுபவர்

**பேராசிரியர் முனைவர் சி. சிவலிங்கராஜா**

(மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



யாழ் கரவெட்டி கிழக்கிலே சிதம்பரப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாலவது புதல்வராக 16.12.1945 இல் பிறந்தவர். ஆரம்பக்கல் வியை கரவெட்டி யார்க்கரு விநாயக வித்தியாசா லையிலும், இடைநிலைக் கல்வியை கட்டைவேலி மெதடிஸ்தமிஷன் கல்லூரியிலும் மேல்நிலைக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். தமிழறிஞர் கந்தமுருகேசனார், பண்டிதர் க. வீரகத்தி ஆகியோரிடம் மரபுவழிக்கல்வி பயின்றவர். சைவப் புலவர் பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தி பெற்றவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப்பாடமாக எடுத்து பேராசிரியர்களான சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், நா. சுப்பிரமணியம் ஆகியோரிடம் கற்று தமிழில் முதல் வகுப்பில் சித்தி பெற்றவர். இப்பல்கலைக்கழகத்திலேயே 1981 இல் உதவிவிரிவுரையாளராகி விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர் என உயர்ந்தவர் நுண்கலைத்துறைத் தலைவர், கிறிஸ்தவ, இஸ்லாமியத் துறைத்தலைவர் பதிவிகளும் வகித்தவர். முப்பத்தொரு ஆண்டுகள் பலகலைக்கழகப் பணியாற்றி ஓய்வு பெற்றுத் தற்போது வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனும் கல்வி நிறுவனங்களுடனும் பல்வகையிலும் தொடர்புடையவர்.

**நூற்பணி**

இவரது எழுத்தாக்கப்பணிகளில் நூற்பணியெனும் வகையில் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் (1984), வித்துவ சிரோமணி கணேசயரின் வாழ்க்கையும் பணியும் (1989), சி. வை. தாமோதரம்பிள்ளை வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் (1983), யாழ்ப்பாணத்து வாழ்வியற் களங்கள் (2003), ஈழத்து இலக்கியச் செல்நெறி (2001, 2003, 2009, 2013, 2015), ஈழத்துத் தமிழ் உரைமரபு (2004), சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் வாழ்வும் பணியும் (2012), யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும் (2014, 2016) மேடையில் பேசுவோம் (2017) என்பன திகழ்கின்றன.

**பதிப்புப்பணி**

தமிழியற் கட்டுரைகள் (எஸ். சிவலிங்கராஜா, மயிலங்கூடலூர் பி. நடராசன்), அகநானூறு - கணேசையர் உரை, ஐங்குறுநூறு, மங்களநாயகம் தம்பையா அவர்களின் நொருங்குண்ட இதயம் என்பன இவரது பதிப்பு முயற்சி.

**நினைவுப் பேருரை**


'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதை, '19 ஆம் நூற்றாண்டில் இந்திய இலங்கைத் தமிழ்ப்புலவர் தொடர்புகள்', ஈழசேகரியும் குழந்தை இலக்கியமும், 'அச்சுவேலி தம்பி முத்துப்பிள்ளை வாழ்வும் பணியும், அரைவாய் மொழிப் பாடல்கள், யாழ்ப்பாணப் பண்டிதர் பாரம்பரியம் எனும் தலைப்புகளிலும் எமது கல்லூரியில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ள காட்டும் யாழ்ப்பாணப் பண்பாடு - காதலியாற்றுப் படையைத் துணையாகக்




கொண்ட ஆய்வு எனும் தலைப்பிலும் நினைவுப் பேருரைகள் நிகழ்த்தியுள்ளார். பேராசிரியரின் உற்ற துணையாளரான திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா அவர்கள் யாழ்ப்பாணம் நெடுந்தீவில் சங்கரப்பிள்ளை செல்லம்மா தம்பதியினரின் இரண்டாவது புதல்வியாக 08.04.1956 இல் பிறந்தவர். யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுச் சிறப்புச் சித்திபெற்றவர். கல்வி டிப்ளோமாவும் கூட யாழ் உடுவில் மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பிற்கு தமிழ், நாடகமும் அரங்கியலும் பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்தவர். 32 ஆண்டுகள் அங்கே பணியாற்றி ஓய்வு பெற்றுத் தமது கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் நலனில் அக்கறை கொண்டு பாடுபட்டுவருபவர். ஆசிரியை சரஸ்வதி, பேராசிரியர் சிவலிங்கராஜா இருவரினதும் இல்லறவாழ்வின் பேறு சிவதி, ரகுராமன் எனும் இரு நன்மக்கள். இருவரும் வைத்திய கலாநிதிகள். பேராசிரியரும் ஆசிரியையும்' இணைந்து 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கல்வி' எனும் நூலினை எழுதி மிலேனியம் ஆண்டில் வெளியிட்டனர். இதனைவிடத் தனியாகவும் சரஸ்வதி சிவலிங்கராஜா அவர்கள் சிலப்பதிகாரம் கடலாடு காதை, கானல் வரி என்பவற்றுக்கு உரைக்குறிப்பு (1988, 1990, 1999) எழுதியுள்ளார். 'யாழ்ப்பாணம்; மொழியும் வாழ்வும்' சிவலிங்கராஜா - சரஸ்வதி தம்பதியினரின் 2006 வரைக்கான ஒரு அறிமுகக் கையேடே எனலாம்.

பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளுடன் நலமாகப் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப்பணியாற்ற எல்லாம் வல்ல வித்தக விநாயகன் அருள்புரிவாராக.


### பேராசிரியரின் நூல்கள் சில





















என்றும் தமிழ் வரலாற்றுப்
பாரம்பரியத்துடன்

# கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

**#681, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**
+94 21 222 2717 |18
+94 21 222 2737
print@harikanan.com
www.harikanan.com